2862

J.N.C.A Debates

Official Report

Vol XCIII No 2

12th July 1985

(C)

D
V211,31 N85
N85.13.2;1
136423

675/86

வெளியீடு 4-4-1986

Issued 4-4-1986

2882

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜூலை 12, 1985-தொகுதி XIII எண் 2

Friday the 12th July 1985-Volume XIII No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

[விலை ரூ 3-00 பைசா]

[Price Rs 3-00 paise

1·36423
600 008

## உள்ளடக்கம்.

12—7—1985


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்— விடைகள் : | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 277-327 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 327-341 |
| 2. அறிவிப்புகள் : | |
| (அ) தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல் .. .. | 341 |
| (ஆ) நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு, 1985 .. .. .. .. | 137 |
| 3. கவன ஈர்ப்புகள்: | |
| (அ) திருப்பத்தூர், வாணியம்பாடி வட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு .. .. | 342-344 |
| (ஆ) காவிரி டெல்டாப் பகுதி பாசனத்திற்குத் தண்ணீர் விடுவது | 344-347 |
| 4. அறிக்கை அளித்தல் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் .. | 347 |
| 5. வரவு—செலவுத் திட்டம், 1985—86, வாக்கெடுப்பு : | |
| (அ) கோரிக்கை எண். 7 —மாநிலச் சட்டமன்றம் | 348-413 |
| (ஆ) கோரிக்கை எண். 8 —தேர்தல்கள் | |
| (இ) கோரிக்கை எண். 43—பல்வகை | |
| (ஈ) கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு | |
| (உ) கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் .. | |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 349-352 |
| | 397-411 |
| திரு. கோ. வீரய்யன் | 352-356 |

| | பக்கங்கள் |
|---|---|
| திரு. கே. குப்புசாமி | 357—364 |
| திரு. கு. சுப்பராயன் | 364—369 |
| திரு. எ.எஸ். ஏ. ஆறுமுகம் | 370—373 |
| *திரு. வை. பாலச்சந்திரன் | 373—375 |
| *திரு. க. அன்பழகன் | 375—387 |
| திரு. என்.எஸ்.வி. சித்தன் | |

6 அரசினர் சட்ட முன்வடிவு :

நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு 1985.. 413

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 414—415

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, ஜூலை 12, வெள்ளிக்கிழமை.
ஆனி 28, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :
''விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்''.

கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்:

### சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தனியார் தெருக்கள்.

614— *(வினா எண். 3181)—திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தனியார் தெருக்களை மாநகராட்சியின் பொதுத் தெருக்களாக அறிவித்து அவற்றின் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கக் கோரி மனுக்கள் பெறப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இராதாகிருஷ்ணன் நகர் மக்களிடமிருந்து அபிவிருத்தி கோரி மனுக்கள் வந்தன. இந்தப் பகுதிகள் குடிசைமாற்று வாரியத்தின் அறிவிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளாகும். எனவே இது குறித்து தக்க மேல் நடவடிக்கை எடுக்க குடிசை மாற்று வாரியத்திற்கு மாநகராட்சியால் ஏற்கனவே கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

திரு. எஸ். வேணுகோபால் : துணைத் தலைவரவர்களே. இராதாகிருஷ்ணன் நகரில் பல தெருக்களை தனியார் தெருக் களாக வைத்திருக்கிறார்கள். அந்தத் தெருக்களுக்கு மாநகராட்சியும் குடிநீர் மாற்று வாரியமும் தெருவிளக்கு வசதி, கழிவுநீர் வசதி போன்ற வசதிகளை செய்து தருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர் களே, மாநகராட்சி இப்போது தனியார் தெருக்களுக்கு பல வசதிகளைச் செய்வது பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தனியார் தெருக்களுக்கு தெரு விளக்குகள் போடாமல் இருந்தால், ரோடுகள் போடாமல் இருந் தால் அதை மாநகராட்சி செய்துவிட்டு, பின்னால் அதற்கான பணத்தை மக்களிடமிருந்து வாங்குகின்ற வரிப்பணத்தோடு சேர்த்து வசூலித்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக் கிறார்கள்.

திரு. எஸ். வேணுகோபால் : துணைத் தலைவரவர்களே, தனியார்களுடைய இடங்களில் அங்கிருக்கிற மக்கள் வசதி இல்லாமல் இருக்கிற காரணத்தால் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டிருக்கிறார்கள். அரசு அதை ஆர்ஜிதம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர் களே, அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு இருந்தால் அப் புறப்படுத்துவதைத் தவிர, அது தனியார்நிலமாக இருந்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது. மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை வேறு யாராவது ஆக்கிரமிப்புச் செய்திருந்தால், அதுபற்றி எழுதிக் கொடுத்தால், அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ச. துரைசாமி : துணைத் தலைவரவர்களே, சென்னை மாநகரிலுள்ள அனைத்துத் தனியார் தெருக்களுக்கும் சாலை வசதி, விளக்கு வசதி, கழிவுநீர் வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகளைச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அறி விப்பு செய்தார்கள். அந்தப் பணிகளைச் செய்வதற்கு சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத் தோடு கலந்துபேசி, தனியார் தெருக்களுக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுக்க நடப்பு நிதியாண்டில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர வர்களே, தனியார் தெருக்களுக்கு பெட்டர்மென்ட் டாக்ஸ் கொடுக்காத காரணத்தால் இதுவரை மாநகராட்சி பராமரிக்க வில்லை. இதுவரை இருந்த சட்டத்தின்படி 25 சதவீதம் அதற்கு முதலிலே கட்டிவிட்டால் எஞ்சியிருப்பதை வரியோடு சேர்த்து வசூலித்துக்கொள்ளலாம் என்று உத்தரவிடப்பட்டிருக் கிறது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25 சத



வீதம் கூட சட்டவேண்டாம், தனியார் தெருக்களுக்கும் மாநகராட்சி எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்து விட்டு, அதற்கான பணத்தை அந்த மக்களிடமிருந்து 15 ஆண்டு காலத்தில் வரியோடு சேர்த்து வசூல் செய்து கொள்ள லாம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

செஞ்சி உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றல்.

615 – (*வினா எண். 1770)– திரு. கோ. இரகுபதி : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) காட்பாடி தொகுதி, செஞ்சி உயர்நிலைப் பள்ளியை மேலநிலைப் பள்ளியாக (+2) மாற்ற அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில, எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ&ஆ) துணைத் தலைவ ரவர்களே, மேல்நிலைப் பள்ளியாகத் தொடங்க வேண்டிய ஒரு யோசனையில் இன்னும் இறுதி முடிவினை அரசு எடுக்கவில்லை. என்றாலும் வந்திருக்கிற கோரிக்கையைப் பரிசீலனை செய்ததில் செஞ்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குவதற் கான வழிமுறைகளை நிறைவு செய்யாததால் உயர்மட்டக் குழு இதைத் தேர்ந்தெடுக்கவில்லை.

திரு. கோ. இரகுபதி : துணைத் தலைவரவர்களே, செஞ்சி உயர்நிலைப் பள்ளியை பிளஸ் 2 பள்ளியாக ஆக்குவதற்கான தகுதிகள் இருப்பதாக முறைப்படி பரிசீலனை செய்த கீழ் நிலை அதிகாரிகள் சொல்லி, அதற்கான பணம் பில்டிங் கமிட்டித் தலைவர் மூலமாகக் கட்டப்பட்டு அது அரசுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. ஏறத்தாழ இரண்டு ஆண்டு காலமாக முயற்சி எடுத் துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கல்வி அமைச்சர் அவர்கள் தயவு செய்து அந்தப் பள்ளியை ஆரம்பித்து, என்னுடைய காட் பாடி தொகுதியில் ஒரு காரியத்தை செய்து முடிக்கின்ற வாய்ப் பினை நல்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவ ரவர்களே, அந்த வழிமுறைகள் எல்லாம் பின்பற்றப்பட்டிருக் கின்றனவா என்று பார்த்து பிறகு அரசு தக்க முடிவு எடுக்கும்.

[1985 ஜூலை 12

### தொழில் நுட்பத் துறைக்குச் சொந்தமான இடம்.

633ஆ—(*வினா எண். 2047)— திரு. சா. துரைசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீராம்பேட்டை, கலிக்குன்றம், பள்ளிப்பட்டு ஆகிய பகுதிகளுக்காக கழிவுநீர் பம்பிங் நிலையம் அமைக்க தொழில்நுட்ப நிர்வாகத்திற்கு சொந்தமான ஒன்பது கிரவுண்ட் நிலத்தை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்திற்கு அரசு வழங்க திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு, மற்றும் அருகாமையிலுள்ள கிராமங்களுக்கு கழிவு நீரேற்று நிலையம் அமைக்க தொழில் நுட்பக் கல்வித் துறைக்குச் சொந்தமான மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகத்தில் 1,250 ச. மீ. நிலம் ஒதுக்கீடு செய்வது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனயில் உள்ளது.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீராம்பேட்டை, கலிக்குன்றம், பள்ளிப்பட்டு ஆகிய பகுதிகளுக்கு கழிவு நீரேற்று நிலையம் அமைப்பதற்கான பணி நீண்டகால தாமதத்தினால், இன்னும் அந்தப் பகுதிகளுக்கு அந்த வசதி கிடைக்காத சூழ்நிலையைக் கருதி பரிசீலனையில் உள்ள அந்தச் செயற்குறிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதப்படுத்தி, நடப்பாண்டிலேயே அந்தப் பணியைத் துவங்குவதற்கு இடத்தைக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கழிவு நீரேற்றுப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான திட்டங்களை ரூ. 100 இலட்சத்தில் மேற்கொள்வதற்காக அரசின் நிர்வாக ஒப்புதலை பெருநகர்க் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் பெற்றிருக்கிறது. அவர்களுக்கு 60 மீட்டருக்கு 60 மீட்டர் பரப்பளவு நிலம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் காரணமாக, இந்தப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகத்தில் இருக்கிறவர்களும் பயன் பெறுகின்ற நிலைமையும் இருக்கிறது. அது தேவையான ஒன்று என்று கருதுகிற காரணத்தால் 1,250 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தை வழங்கலாம் என்று தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்திருக்கிறார். அரசு தீவிர பரிசீலனை செய்து கொண்டிருக்கிற காரணத்தால் விரைவில் முடிவு எடுக்கப்படும்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி மிக அவசியமான பணி எனக் கருதித்தான் அந்தப் பகுதி மக்களுடைய நல்லெண்ணத்தைக் கருதி, 40 ஆண்டுக்காலமாக, அந்த வசதிகள் இல்லாமல் இருந்த



அந்தப் பகுதி மக்களுக்கு இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நன்றி. நிலத்தை ஒரு மாதத்திலே கொடுத்துவிட்டால், நடப்பு நிதி ஆண்டிலே அந்தப் பணியைத் துவக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சட்டக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புப் பிரிவுகள்.

633-இ—(*வினா எண் 2997)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் கல்வியாண்டில் திருச்சி, கோவை அரசினர் சட்டக் கல்லூரிகளில் முதுகலைப்பட்ட மேற்படிப்பு (M.L.) ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, (அ) முதுகலைப் பட்ட மேற்படிப்பு (எம்.எல்) திருச்சி மற்றும் கோவை சட்டக்கல்லூரிகளில் திறப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

(ஆ) கோவை பாரதியார் பல்கலைக் கழகம் கோவை சட்டக் கல்லூரியில் எம். எல்., சட்டப் படிப்பு வகுப்பு துவங்க இசைவு தெரிவித்துள்ளது. போதிய இடவசதியில்லாத காரணத்தினால் வகுப்புகள் துவக்கப்படவில்லை. திருச்சி சட்டக் கல்லூரியில் எம். எல்., சட்டப் படிப்பு வகுப்பு துவங்குவதன் பொருட்டு திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் அனுமதி இதுகாறும் கிடைக்கப் பெறவில்லை.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, கோவை பாரதியார் பல்கலைக் கழகம் பலவிதமான கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டு, வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அவற்றிற்குத் தேவையான கட்டிடங்கள் இல்லாமல், ஆரம்ப முதலே சிறிய கட்டிடத்தில் ஆரம்பித்து நடத்திவருகிறார்கள். மேலும், நிலம் நிறைய ஆர்ஜிதம் செய்து எடுத்திருந்தாலும்கூட, பெருங் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்கும்போது, வெறும் திட்டங்கள் அறிவித்தால் போதாது. அதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு உடனடியாகக் கட்டிடங்களை நிர்மாணித்துத் தரவும், அறிவித்த திட்டங்களை உடனே செய்வதற்காக, கட்டிடங்கள் இல்லாவிட்டாலும் வேறு கட்டிடங்கள் தேடிப்பிடித்து ஆரம்பிப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரிக்கு நாம் நிலத்தை ஒதுக்கீடு செய்கின்றபொழுது அந்தக் குறிப்பிட்ட பகுதி

யிலே உள்ளவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறார்கள். இங்கே வேண்டாம் என்று. ஆகவேதான் அதிலே ஒரு பிரச்சினை ஏற்பட்டு விடுகிறது. நாம் வேறு ஒரு இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த இடம் ஒதுக்கீடு செய்த பிறகு கட்டிடங்கள் கட்டுகிற பணி துவங்கப்படும். ஆனால், இடையிலே இந்தக் கோரிக்கை வருகிற காரணத்தால், நாம் அனுமதி தருகிறோம். அந்த அனுமதி வாங்கிக் கொண்டு வேறு வகையிலே நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, சொந்தக் கட்டிடம் இல்லையென்றாலும் வேறு வாடகைக் கட்டிடம் எடுத்துக் கூட அந்த வகுப்புகளைத் துவங்கலாம். ஆகவே, எல்லா வசதிகளையும் நாம் செய்து விட்டுத்தான் ஆரம்பிப்போம் என்பது இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே முடியாது. ஆகவே, ஆரம்பிக்கிற குறைந்தபட்ச வசதி இருந்தால் கூட பிறகு வசதிகளை நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

(முற்பகல் 9-10)

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி சட்டக் கல்லூரிக்கு நிலம் கையகப் படுத்தப்பட்டு கட்டிடங்கள் கட்டுவது என்று நிதியாதாரங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். வேலை துவங்கி நடந்துகொண்டிருக்கிறதா ? அந்த வேலை நடந்து முழுமை பெற இன்னும் எவ்வளவு நாட்கள் ஆகும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை சட்டக் கல்லூரிக்கான இடத்தைத் தேர்வு செய்து விட்டார்களா என்பதையும் அது எங்கே அமைய இருக்கின்றது என்பதையும் சட்டக் கல்லூரியில் எம். எல்., பட்டப் படிப்பிற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது என்றால் அதிலே எந்தெந்த கோர்ஸ், எந்தெந்த சப்ஜெக்ட்ஸ் இருக்கும் என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் படிப்பு என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 15 மாணவர்களை அனுமதிக்கலாம் என்று உத்தரவை நாம் தந்திருக்கிறோம். கோவை சட்டக் கல்லூரிக்கு எந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கலாம் என்பது பற்றி இப்போது பரிசீலித்ததில் கோவை பாரதியார் பல்கலைக் கழக வளாகத்தில் கொஞ்சம் இடம் வாங்கி அமைக்கலாமா என்று இப்போது யோசித்துக்கொண்டிருக்கிறோம்.



சென்னை நகரில் நடைப்பாதைக் கடைகள்.

633-அ (* வினா எண் 417)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் முக்கிய சாலைகளில் உள்ள நடைபாதைகளை சிறுகடை வைத்திருப்பவர்கள் ஆக்கிரமித்து உள்ளதால், பாதசாரிகள் நடப்பதற்கு சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் முக்கிய சாலைகளில் குறிப்பாக என்.எஸ்.சி போஸ் சாலையிலும், பிரம்பு அங்காடி சாலையிலும் நடைப்பாதை வியாபாரத்தை ஒழுங்குப்படுத்த வேண்டும் என்று உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பினை நிறைவேற்றும் வகையில் சென்னை மாநகராட்சி நடைபாதை சிறு வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கி 4.5 மீட்டர் அகலம் உள்ள நடைபாதை ஓரங்களில் குலுக்கல் மூலமாக நடைபாதை சிறு வியாபாரிகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை டி. நகரில் அஞ்சுகம் மார்க்கெட் என்று ஒன்று இருக்கின்றது. அது எப்போது திறக்கப்பட்டது? அதை யார் திறந்தது ? அங்கிருந்து மாநகராட்சிக்கு வருமானம் வருகின்றதா ? குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றதா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, டி. நகரில் அஞ்சுகம் மார்க்கெட் இருப்பது உண்மைதான், அது மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். 4 ஆண்டுகளுக்கு முன்பு குத்தகைக்காரர்கள் எடுத்து அது காலாவதியாகிவிட்டது. நான்காண்டுக் காலம் குத்தகை மாநகராட்சிக்குக் கொடுக்கவில்லை. குத்தகை வசூலிக்கவும் அதைக் காலி செய்வதற்கும் முயற்சித்தபோது உயர் நீதிமன்றம் தடைவிதித்திருக்கின்றது. விரைவில் அந்தத் தடையை அப்புறப்படுத்துவதற்குரிய வகையில் மாநகராட்சி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டி. நகர் ரெங்கநாதன் தெரு என்று இருக்கின்றது. அதைக் காலி செய்ய அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றதா ? அங்கே தற்காலிகமாக ஆக்கிரப்பு செய்யப்பட்டிருக்கும் அன்பழ

கள் பழக்கடை ஆக்கிரப்பில் இருக்கின்றதா ? அப்படி என்றால்
அதை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அன்பழகன் பழக்கடை சாலை
ஓரத்தில் ஆக்கிரமிப்பாகத்தான் இருப்பதாகத் தகவல் கிடைத்
திருக்கின்றது. அது மாநகராட்சியினிடத்திலிருந்து கிடைக்கப்
பெற்ற தகவல். அதை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை
எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சென்னைமாநகரில் பலவிடங்களில் நடை
பாதைகளில் இருந்த கடைகளை அகற்றிக்கொண்டு வருகின்ற
சீரிய பணி நல்லமுறையில் தொடர்ந்துகொண்டிருப்பதை அறி
கிறோம். ஆனால் 15, 20 ஆண்டுக்காலமாக அந்தப் பகுதியில்
கடை வைத்து பிழைத்துக்கொண்டிருந்தவர்கள் பாதிக்காத வண்
ணம் சென்னை நகரில் உள்ள பல்வேறிடங்களில் அதாவது காலி
யாக உள்ள இடங்களில், போக்குவரத்து இல்லாத இடங்களில்
கடைகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ? குறிப்பாக
சைதாப்பேட்டை மார்க்கெட் அருகில் காலியாக இருக்கின்ற
ஆட்டுத் தொட்டியை எடுத்துக்கொண்டு அங்கே கடைகள் கட்டிக்
கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சைதாப்பேட்டைக்கு அருகே இருக்கின்ற
இடத்தில் காலி செய்யப்பட்ட கடைக்காரர்களுக்கு மாற்று இடம்
கொடுக்க முடியுமா என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள்
கேட்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். மாற்று இடம் பற்றி
அரசு பரிசீலிக்கலாம். ஆனால் ஒரு இடத்திலே போக்குவரத்துக்கு
இடைஞ்சலாகக் கடை வைத்திருப்பவர்களை அப்புறப்படுத்தி
னால் மீண்டும் அவர்கள் அப்புறப்படுத்தப்பட்ட இடத்திற்கு
வந்துதான் கடை வைக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்
கிறார்கள். மாற்று இடம் கொடுத்தால் அவர்கள் போக விரும்ப
வில்லை. எனவே நடவடிக்கையைக் கொஞ்சம் கடுமையாகத்
தான் எடுக்க வேண்டியிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் நடைபாதை
யில் சிறு கடை வைத்திருப்பவர்கள் என்பவர்களைப் பொறுத்த
வரையில் தியாகராயர் நகர் ரெங்கநாதன் சாலையில் 21 அடி
அகலம் உள்ள சாலையைத் தடுத்து சுவர் வைத்து அதிலே கடை
வைக்கமுயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள். அதை அரசு அறியுமா?
அப்படியானால் அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்திருக்
கின்றதா என்பதை அறிவிக்க இயலுமா ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர்
அவர்களே, ரங்கநாதன் சாலை என்பது ஏற்கெனவே இருந்து
வருகிற ஒரு சாலையாகும். மிகவும் நெரிசலான இடத்தில் நடை
பாதைகளில் கடைகளை வைத்திருந்தார்கள். உயர் நீதிமன்றத்
தினுடைய தீர்ப்பின் படி, அக்கடைகள் அப்புறப்படுத்தப்பட்டன.
மாண்புமிகு உறுப்பினர் சொல்வது ரங்கநாதன் சாலைக்கு பக்கத்
திலே உள்ள-பின்புறமாக உள்ள 28 அடிசாலை என்று நினைக்
கிறேன்---அது மூடப்பட்டு இருந்தது. அவைகள் இப்போது
திறந்து விடப்பட்டிருக்கின்றன. ஏராளமான குப்பைகள் கூளங்
கள் இருக்கின்ற காரணத்தால் அவைகளை அப்புறப்படுத்திக்
கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த இடம் அங்குள்ள ஒரு சங்
கத்தினருக்கு சொந்தமானது என்று வழக்குத் தொடுத்துள்ளார்
கள். அந்த வழக்கை எப்படி நடத்துவது என்று மாநகராட்சி
தன்னுடைய வழக்கறிஞரோடு கலந்து பேசி வருகிறது.

திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, சென்னை பாரீஸ் கார்னரில் உள்ள பர்மா
பஜார் கடைகளின் நடைபாதைப் பகுதியில் மிகவும் நெரிசலாக
உள்ளது. ஆகவே அப்பேர்ப்பட்ட கடைகளை அப்புறப்படுத்தி,
அந்த வியாபாரிகளுக்கு வேறு இடம் அளிக்கவோ அல்லது வேறு
தொழில் செய்ய வசதிகளையோ இந்த அரசு கொடுத்து உதவுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர்
அவர்களே, பர்மா பஜார் கடைகளை சமீபத்தில்தான் மாற்றி
அமைத்து கடைகளாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்
கும் நெரிசல் அதிகமாகத்தான் இருக்கிறது. அது நடைபாதையில்
செல்பவர்களுக்கு, மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கு
மானால் அது பற்றி மாநகராட்சி நடவடிக்கை எடுக்கும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, பாண்டி பஜார் நடைபாதை கடைகளையும், எம்.ஜி.ஆர்.
நகரில் உள்ள நடைபாதைக் கடைகளையும் அடிக்கடி அகற்றப்
போவதாகச் சொல்லி அதிகாரிகள் அந்தப் பகுதி வியாபாரிகளை
அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி மாற்றினால் அவர்
களுக்கு மாற்று ஏற்பாடு ஏதாவது செய்து தர திட்டம் உள்ளதா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடங்
களில் அச்சுறுத்துகிறார்கள் என்பது அல்ல. இந்த வியாபாரிகள்
வேண்டும் என்றே நடைபாதைகளில் கடைகளை வைத்து நடத்தி
வருவதால் பொது மக்களுக்கு நடக்க இடைஞ்சலாக இருப்பதால்
பாதையின் மத்தியிலே நடக்க வேண்டியிருக்கிறது. அதனால்
விபத்துக்கள் நேரிடுகின்றன. அதன் காரணமாக எப்படியாவது
நடைபாதைக்கடைகள் எங்கெங்கே இருக்கின்றனவோ அவைகளை

அப்புறப்படுத்த வேண்டும் என்று அதற்கான முயற்சிகளை மாநகராட்சி செய்துக் கொண்டிருக்கிறதே தவிர, நடைபாதை வியாபாரிகளிடம் அனுதாபம் இல்லை அரசுக்கு என்று தயவு செய்து தவறாக கருதவேண்டாம் என்று தலைவர் அவர்களே உங்கள் மூலமாக உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு துணை சபா நாயகர் அவர்களே, என்.எஸ்.சி. போஸ் ரோட்டிலே, பாரீஸ் கார்னரிலிருந்து பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் வரை நடப்ப தற்கு இடம் இல்லாமல் இரண்டு பக்கமும் கடைகள் வைத்துக் கொண்டு மிகவும் நெரிசலாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது அவர்களுக்கு நகரசபை கார்டு வழங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நடக்கவே முடியாத அளவுக்கு 2 பக்கத்திலேயும் கடைகள் இன்னமும் இருப் பது அமைச்சருக்கு தெரியுமா? அவைகள் அகற்றப்படுமா என்ப தோடு, திருவொற்றியூரில் ரோட்டில் இருக்கிற கட்டிடங்களை யெல்லாம் இடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் அரசுக்குத் தெரியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: துணைத்தலைவர் அவர்களே, போஸ் ரோட்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமீபத்திலே போய்பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். அங்கிருந்த கடைகள் எல்லாம் காலி செய்யப்பட்டு, கோர்ட்டிற்கும், கோவிந்தப்ப நாயக்கன் தெருவிற்கும் இடையில் எந்தக் கடையும் வைக்கக் கூடாது என்று உத்திரவிட்டிருக்கிறோம். ஆனால் பாரிசுக்கு கிழக்குக் பக்கத்திலே இருக்கிற பகுதிகளில் கடைகளை வைப்ப தற்கு, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் படி, மாநகராட்சி அனுமதி வழங்கி அடையாள அட்டைகளையும் கொடுத்து இருக்கிறது. ஆனால் சில பேர்கள் அந்த அட்டைகள் இல்லாமலேயே இடங் களை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். திருவொற்றியூரில் உள்ள இடங்களைப் பற்றிச் சொன்னார்கள். அது பற்றி மாநகராட்சி கவனம் செலுத்தி வருகிறது. எந்த இடத்திலே பாதையை யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் நிச்சயமாக இந்த அரசு தயவு தாட்சண்யம் பார்க்காமல் அப்புறப்படுத்தும் என்பதைச்சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு பிரச்னையை தீர்க்க ஆலோசனையாக ஒரு கருத்தை சொல்லலாம் என்று கருது கிறேன். இது ஒரு வாழ்க்கைப் பிரச்னை என்பதை அரசும் அமைச் சரும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, சிறு சிறு கடைகளை அமைத்து, அவைகளை மலிவான வாடகைக்கு கொடுக்கக்கூடிய வகையில், பர்மா பஜார் மாதிரி, நகரத்தில் எவ்வளவோ இடங் கள் இருக்கின்றன. அந்த இடங்களில் இம்மாதிரி சிறு சிறு கடை களை மலிவான வாடகைக்கு விட்டு, பிறகு அவர்களை நடை பாதைகளிலிருந்து அப்புறப்படுத்தினால் அவர்கள் வாழ்விற்கும் வசதி ஏற்படும். நடைபாதை பயணிகள் நடந்து செல்லவும்



தடை இல்லாத நிலைமை ஏற்படும். ஆகவே அந்த வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முயலுமா என்பதை அறிய விரும்புவ தோடு, கோவில்களுக்குப் போகும் நடைபாதைகளிலேயும் சிலர் கடைகளை வைத்திருக்கிறார்கள். நாலு நாத்திகன் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக் கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கேள்வி நேரம். கேட்க வேண்டிய துணைக் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

(முற்பகல் 9-20)

திரு. வி. பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, ஆகவே அந்தக் கோவில்களை நடைபாதைகளிலிருந்து நிர்தாட் சண்யமாக அகற்றுவதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, என்.எஸ்.சி. போஸ் ரோட்டில் சிறு கடைகளை வைத்திருப்பவர்களுக்கு நாள் ஒன்றுக்கு மூன்று ரூபாய் என்ற அளவில் மாதத்திற்கு 90ரூபாய் வாடகைநிர்ணயித்து அவர்களுக்கு கடைகள் கொடுக்கப்படுகின்றன. எனவே, ஆக்கிரமிப்புக்கள் இருக் கிற இடங்களில் அப்படிச் செய்வதற்கு. மக்கள் நடப்பதற்கு போதிய இடம் போக மீதி இடம் இருக்குமானால் அவைகள் கடை களாக பிரிக்கப்பட்டுக் கொடுப்பதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் மக்கள் நடப்பதற்கே இடம் இல்லாமல் இருக்கிற போது அந்த இடங்களில் கடைகளுக்குக் கொடுப்பது என்பது இய லாத காரியம். நடைபாதைகளில் இருக்கிற கோவில்களை அகற்று வதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்குறிப்பிட்டார்கள். அதற்கான நடவடிக்கையில் மாநகராட்சி கவனம் செலுத்தி வருகிறது. உரிய நேரத்தில் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. அ. பாலுசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை நகரில் நடைபாதை கடைகள் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதைப்போல மதுரை நகரில் டவுன் ஹால் ரோட்டில் உள்ள இதுபோன்ற சிறு கடை களை அகற்றுவார்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வி சென்னையைப் பற்றியதாகும்.

திரு. அ. செல்வராசன் : துணைத் தலைவர் அவர்களே, என்.எஸ்.சி. போஸ் ரோட்டில் உள்ள நடைபாதைக் கடைகள் அத்தனையையும் அகற்றிவிட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது என்னுடைய தொகுதி. இப்போது கூட அமைச்சர் அவர்கள் என்னுடன் வந்தால் அவருக்கு காட்டுகிறேன். பாரிஸ் கார்னரிலிருந்து மாடர்ன் கேப் வரையில் இன்னும் கடைகள் அகற்றப்படாமல் இருக்கின்றன. அதற்கு அந்தப் புறத்தில்தான் அவைகளை அகற்றி இருக்கிறார்கள். ஆகவே அவைகளைப் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத்தலைவர் அவர்களே, மாடர்ன் கேபிலிருந்து பாரிஸ் கார்னர் வரையில் கடைகள் அகற்றப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக நன்றி. விரைவில் அவற்றை அப்புறப்படுத்துவதற்கும், அங்கே நடைபாதை போக மீதி இடம் இருக்குமானால் ஏற்கனவே கடைகளை வைத்திருந்தவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுப்பதற்கும் ஆட்சேபணை இல்லை. உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி நடைபாதைக்குப் போக மீதி இடமிருக்குமானால் அங்கே ஏற்கனவே கடை வைத்திருந்தவர்களுக்கு அதே வாடகைக்கு மாதம் 90 ரூபாய் வாடகைக்குக் கொடுப்பதற்கு அரசுக்கு ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : துணைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பொருள்கள் நல்ல பொருள்களாகவும், மலிவாகவும் கிடைக்கிற பர்மா பஜாரை வேறு இடத்திற்கு மாற்றுகிற செயற்குறிப்பு எதுவும் அரசிற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பொருள்கள் விலை குறைவாக கிடைக்கிறதென்று போய் அங்கே ஏமாந்து விட வேண்டாம். சிலநேரங்களில் உள்நாட்டுப் பொருள்களைக் கூட வெளிநாட்டுப் பொருள்களென்று விற்பதாக கேள்விப்படுகிறேன். ஆகவே, பர்மா பஜாருக்குப் போகிறபோது அதிலே எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பர்மா பஜாரை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு தற்போது அரசுக்கு யோசனை இல்லை.

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, நடைபாதைகளில் ஊனமுற்றவர்களுக்கு அதிகாரப் பூர்வமாக அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு உதவுகிற வகையில் ஏராளமாக இருக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கடைகளை அகற்றுகிற நிலைமை இருக்குமானால், அந்த ஊனமுற்றவர்களின் நிலைமை என்ன ஆவது? அவர்களுக்கு வாழ்வளிக்க அரசிடம் என்ன திட்டமிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்கள் என்பதற்காக நடக்கிறவர்கள் கால்களை எல்லாம் ஊனம் செய்துவிட முடியாது. ஊனமுற்றவர்கள் மீது அரசாங்கம் அனுதாபம் காட்டுகிறது. கடைகளை கொடுக்கிறோம். அதற்காக வங்கிகளில் கடன் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. மானியமும் கொடுக்கிறோம். நடைபாதை போக மீதி இருக்கிற இடங்களில் தான் அவர்கள் பங்குகளை வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அவர்கள் நினைத்த இடங்களில் வைத்துக்கொள்வது என்பதை அனுமதிக்க முடியாது. எங்கேயாவது அனுமதித்திருப்பார்கள் என்றால் அது இடைஞ்சல் இல்லாத இடமாக இருந்து தான் அனுமதிக்கப்பட்டிருக்கும். இவைகளைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

### பக்கிங்காம் கால்வாயில் விசைப் படகு விடும் திட்டம்.

616—(*வினா எண். 1998)— திரு கே. பி. கே. சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் எண்ணூரிலிருந்து பழவேற்காடு வரை பக்கிங்காம் கால்வாயில் மோட்டார் (விசைப்படகு) படகு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு கே. பி. கே. சேகர் : துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியில் இருக்கிற பழவேற்காட்டிலிருந்து எண்ணூர் வரைக்கும் பக்கிங்காம் கால்வாயில் விசைப்படகுவிடுவதன்மூலமாக அந்தப்பகுதியில்பிடிபடுகிற ஏராளமான இறால் மீன்களை சென்னைக்கு விரைவில் கொண்டு வருவதற்குவாய்ப்பிருக்கும். அதேபோல அந்தப் பகுதியில் இருக்கிற கடற்கரை பகுதி வாழ் மீனவ சமுதாய மக்கள் பயணம் மேற்கொள்வதற்கும் வசதியாக இருக்கும். இதனை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக அதைச் செய்வதற்கு வாய்ப்பில்லை என்றாலும் வருகிற காலங்களில் அதைப்பற்றி ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு இப்போது முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஏறத்தாழ 25 லட்சம் ரூபாய் ஒதுக்கலாமென்று அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு லட்சம் ரூபாய் ஆய்விற்காக வழங்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனியிலிருந்து கூட இதற்காக ஒரு குழுவை நாம் வரவழைத்து ஏப்ரல்

1985-ல் அவர்கள் அதைப் பார்த்திருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் டிசம்பர் 1985-ல் ஜனவரி 86-ல் வந்து அதுபற்றி முழுமையாக ஆய்வு செய்து அவர்கள் சொன்ன பிறகு தான் முடிவை எடுக்க இயலும்.

திரு கே. பி. கே. சேகர் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது துவக்கப்படயிருக்கின்றது என்பது பற்றியும், எவ்வளவு படகுகள் விடப்பட இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு க. முத்துசாமி : துணைத்தலைவர் அவர்களே, இது எப்போது துவக்கப்பட இருக்கின்றது என்பது சரியான கேள்வி. அப்படி துவக்கப்பட்டதற்குப் பின்னாலேதான், எவ்வளவு படகுகள் விட வேண்டுமென்பதை ஆய்வு செய்ய முடியும். இப்போது ஏற்கனவே சொன்னதைப்போல், இது லாபகரமாக இருக்குமா என்பதை ஆய்வு செய்வதற்காக ஒரு இலட்ச ரூபாய் நாம் ஒதுக்கியிருக்கிறோம். ஜெர்மனியிலே இருந்து இதற்காக எச். ஜி. கிரெம்மர் என்பவர் 85 ஏப்ரலிலே வந்து சென்றிருக்கிறார்கள். மீண்டும் 85 டிசம்பரிலும், 86 ஜனவரியிலும் அவர் வந்து பார்த்து, அதற்குப் பின்னாலே அந்த ஆய்வு கிடைத்தவுடன், நாம் அதிலே முடிவு எடுக்க இருக்கிறோம்.

சென்னை—ஆத்தூர் இரவுநேர துரித வண்டி.

617—(*வினா எண். 2095)— திரு சி. பழனிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—ஆத்தூர் எண். 504 வழித்தடத்தில் இரவு 10-00 மணிக்கு திருவள்ளுவர் பேருந்து கழகத்தால் துரித வண்டியை மீண்டும் விடும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 504 என்ற எண்ணுள்ள திருவள்ளுவர் துரிதப் பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் திடீரென்று அந்தத் துரிதப் பேருந்தை நிறுத்தி விட்டார்கள். இந்தத் துரிதப் பேருந்து சென்னையிலே இருந்து இரவு 10 மணிக்கு புறப்பட்டு, ஆத்தூரிலே இருந்து காலை 6 மணிக்கு கிளம்பி ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் பேருந்து இப்போது நிறுத்தப்பட்டது. அந்தப் பேருந்தில் நீங்கள் சொல்கின்றதுபோல் கிலோ மீட்டருக்கு என்ன வசூலாக வேண்டுமோ, அந்த அளவுக்கு நல்ல வசூலானது. அதை நிறுத்தி விட்டார்கள். ஆகவே, அதை மீண்டும் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, மேலும் ஒரு பேருந்து சென்னை— ஆத்தூருக்கு இடையே 14.15 மணிக்கு இங்கிருந்து புறப்பட்டு, 20.30க்கு அங்குபோய்ச் சேருகிறது. அங்கிருந்து 22.00 மணிக்குப் புறப்பட்டு விடியற் காலை 4.20 மணிக்கு இங்கு வந்து சேருகிறது. எனவே, இதற்கு மேலும் பேருந்து விட வேண்டுமென்ற நிலை இல்லை என்ற காரணத்தினால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு 504 எண்ணுள்ள திருவள்ளுவர் பேருந்துகள் ஓடிக் கொண்டிருந்தன. அப்படி ஓடிய வண்டிகள் மக்களுக்கு நல்லமுறையில் பயன்பட்டுக் கொண்டிருந்தது. மக்கள் அதனால் பயனடைந்து வந்தார்கள். ஆனால் இப்போது ஆத்தூரில் காலை 8 மணிக்கே இரவு வண்டிக்கு இடமில்லை என்று கூறி விடுகிறார்கள். ஆகவே, ஓடிக் கொண்டிருந்த அந்தப் பேருந்தை நிறுத்துவது என்பது நியாயமில்லை. 617 என்ற ஒரு பேருந்தும், 572 என்ற ஒரு பேருந்தும் விடப்பட்டது. இருந்தாலும், ஓடிக் கொண்டிருந்த பேருந்தை நிறுத்துவது என்பது எவ்வளவு நியாயம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதை விடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, கூடுதல் பேருந்துகள் விடுகின்றபோது நிர்வாகத்திற்கு சில இடைஞ்சல்கள் இருக்கின்றன. இருக்கின்ற பேருந்தை நிறுத்திவிட்டால் பிரச்னை வருகிறது. கூடுதலான வழித்தடத்தில் ஆத்தூரைத் தொட்டுச் செல்கின்ற பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, நிறுத்தி விட்டோம் என்று சொல்வது சரிதானா என்று சொல்வது அவ்வளவு சரியாகப்படவில்லை. இருந்தாலும், அவசியம் இருக்குமானால் அதிலே நடவடிக்கை எடுக்கலாம். இப்போதுகூட அங்கே காலை 8 மணிக்கே இரவுப் பேருந்தில் இடமில்லை என்று சொல்வதாகச் சொல்கிறார்கள், அது எக்ஸ்பிரஸ் பஸ். எக்ஸ்பிரஸ் என்று சொன்னால், முன்கூட்டியே ரிசர்வ் செய்ய வேண்டும். அப்படியிருந்தால்தான் அந்தப் பேருந்தை இயக்க முடியும். டவுன் பஸ் போல் வருகிறவர்களை அழைத்துக் கொண்டு போனால், அது எக்ஸ்பிரஸ் பஸ் அல்ல. கூடுதலாகப் பேருந்து விட வேண்டுமென்றால், அதை ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளக் கலந்து, அவசியம் இருக்குமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. அதைப் போக்குவதற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இரவு நேரங்களில் அதிகமான பேருந்துகளை விட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. முத்துசாமி : துணைத்தலைவர் அவர்களே, தற்போது ஏழுத்தாழ 70 விழுக்காடு பேருந்துகள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இரவு நேரத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே கூடுதல் பேருந்துகளை விடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். எனவே எதிர்காலத்திலே நிலைமைகள் சரிசெய்யப்படும்.

(முற்பகல் 9-30 )

மேலூரில் புறவழிச் சாலை.

618—(*வினா எண் 2328)—திரு. க.வெ. வீராணம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) மதுரை மாவட்டம் மேலூர் தொகுதி, மேலூரில் ஓர் புறவழிச்சாலை ( Bye pass Road ) அமைக்க மதிப்பீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, மேலூர் நகரமானது மதுரையிலிருந்து சென்னைக்கு வருகிற தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற நகரமாக இருப்பதாலும் பஸ் போக்குவரத்து மட்டுமல்ல, ஆள் நடமாட்டத்திற்கும் இடைஞ்சலாக இருக்கிற காரணத்தினாலே இப்போது இல்லாவிட்டாலும், எதிர்காலத்திலேயாவது—மேலூர் மட்டுமல்ல, திருமங்கலத்திலே உள்ள நெடுஞ்சாலையும் அப்படித்தான் இருக்கிறது—ஆகவே இவைகளையெல்லாம் பேஸ்டு புரோகிராம் என்ற முறையிலே இந்த ஆண்டு, அடுத்த ஆண்டு என்று நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? இந்த மேலூர் புறவழிச் சாலையை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அதற்கு 63 லட்ச ரூபாய் செலவாகும். இப்போது இல்லையென்றாலும் எப்போதாவது செய்யவேண்டுமென்பது தான் அரசினுடைய எண்ணமாகும். எனவே வருகிற ஆண்டிலே நிதிநிலைமைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. உ. சுப்பிரமணியன் : துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு சித்தன் சொல்லியதைப்போல மேலூர் நகரம் வழியாக சென்னைக்கு மட்டுமல்ல, திருச்சி, நாகப்பட்டணம், பாண்டிச்சேரி போன்ற இடங்களுக்கு நெடுந்தூரப் பயணம் செய்யக்கூடிய விரைவு வண்டிகளும் இந்தத் தடத்தின் வழியாகத் தான் செல்கின்றன. மேலூர் நகரத்திலே உள்ள முக்கியமான கடைவீதி வழியாகத்தான் முழுதூரம் பேருந்துகள் செல்கின்ற காரணத்தினால் பொதுமக்களுக்கும் அபாயம் ஏற்படுகிறது. விரைவுவண்டிகள் செல்வதற்கும் அதிக நேரமும் ஆகிறது. ஆகவே இதற்கு முன்னுரிமை கொடுத்து முதலாவதாக எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, பை-பாஸ் சாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று நாம் சொல்கிற இடங்களில் எல்லாம் இப்படித்தான் நிலைமைகள் இருக்கின்றன. எங்கெல்லாம் பை-பாஸ் சாலைகள் போடவேண்டும் என்று நாம்திட்டம் போடுகிறோமோ அங்கெல்லாம் இந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. அவற்றுள் எதை முதலாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அந்த அந்த இடங்களின் நிலைமைகளைக் கருதி படிப்படியாக நாம் இருக்கிற நிதிநிலைமைகளுக்கு ஏற்ப எடுத்துக்கொள்கிறோம். அவற்றிலே எந்தப் பாதை மிகக் குறுகலாக இருக்கிறது என்பதையெல்லாம் கணக்கில் எடுத்து அதற்கு என்றைக்கு முறை வருகிறதோ அன்றைக்கு அதை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிய உணர்வுகளை மனதிலே கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரையில் சுரங்கப் பாதைகள்

619—(*வினா எண். 2814)—திரு. என். எஸ். வி. சித்தன்: திரு. ஏ. தெய்வநாயகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க; மத்திய பேருந்து நிலையம் அருகிலும், கோரிப்பாளையம் அருகிலும் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறான திட்டம் எதுவுமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, மதுரை நகரம் தென் மாவட்டங்களுக்கு மைய கேந்திரமான நகரமாகஇருந்து கொண்டிருக்கிறது. அதோடு தமிழகத்திலேயே

ரெண்டாவது பெரிய நகரமாகவும் இருக்கிற காரணத்தினால் மதுரையில் வாழ்கிற லட்சகணக்கான மக்கள் மட்டுமல்ல, பிளோட் டிங் பாபுலேஷன் என்று சொல்வார்களே, அதைப் போன்று வந்து போகிற மக்கள் எண்ணிக்கையும் பல ஆயிரக்கணக்கிலே இருக்கிற காரணத்தினால் முக்கியமான இந்த இரண்டு சுரங்கப் பாதைகளையும் அமைக்க அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு சுரங்கப் பாதைகளையும் கட்ட வேண்டுமென்றால் ஒரு சுரங்கப்பாதைக்கு 50 லட்ச ரூபாய் வீதம் 1 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கு சொல்லப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே அது தேசிய நெடுஞ்சாலையாக இருந்தது, இப்போது அங்கே பை-பாஸ் சாலை போடப்பட்ட தால் மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே நிதிநிலைமை களுக்கு ஏற்பத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும், அவை தேவை யில்லை என்று சொல்லவில்லை.

திரு என். எஸ்.வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் எப்போது எதைக் கேட்டாலும் நிதிநிலைமை என்று சொல்கிறார்கள். பாலம் பழுது பார்க்கவேண்டுமென்றாலும் சாலை போட வேண்டுமென் றாலும் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மக்களுடைய கஷ்டங்களைப் பார்க்கவேண்டும். அவைபற்றி எனக்கும் தெரி யும், எல்லோருக்கும் தெரியும், நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடம் அவர்கள் சொல்லி போராடி, வாதாடி அல்ல, கேட்டாலே அவர்கள் கொடுத்துவிடுவார்கள். இவைகளைச் செய்யாத காரணத்தினால் பல விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கின்றன. ஆகவே இந்த ஆண்டாவது அவைகளை எடுத்துக் கொள்வதற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் ஒருமுறை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். எங்கெல்லாம் வேலைகள் கணக்கமாக இருக்கின்றனவோ அந்த வேலைகளைப்பற்றித்தான் மன்றத்திலே கேட்கிறார்கள். அவைகளை உடனடியாகச் செய்யமுடி யாததற்குக் காரணம் நிதிநிலைமைகள் தான். செய்யப்பட்ட வேலைகளையெல்லாம் நான் இங்கே சொல்ல ஆரம்பித்தால் நேரம் போதாது, எத்தனையோ வேலைகளை செய்து முடித்து இருக்கிறோம். கோடிக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்து கொண்டிருக்கிறோம். ஆகவே செய்யவில்லை என்று சொல்லி அதை எடுத்துச் செய்துவிட்டால் பிறகு அடுத்த வேலையை ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்று நான் கேட்பார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருக்கிற பிரச்சினை யாகும். மெரிட் அடிப்படையிலே தான் வேலைகள் எடுக்கப்



படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் உணர்வுகளை மனதிலே கொண்டு— நிதியமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள், அவர்களும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள், மேலும் அதற்கு ஒரு தூண்டுகோலாக அது இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1985–86 ஆம் ஆண்டுக்கு எந்தெந்தத் துறையில் என்னென்ன பணிகள் மேற்கொள்வது என்பதற்காக திட்டவட்டமாகவும் தெளி வாகவும், வரையறுத்து மன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்து அதற்கான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. அறவே நிதிநிலை இல்லை என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. எடுத்துக்கொண்ட நடவடிக்கைககளுக்கு. இங்கே எடுத்துச் சொல்லப்பட்டவை களுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் கூடுதலான செலவினங்களுக்கு எல் லாம் வழி வைக்கிறார்கள். அதே சமயத்தில் அதிலே வெட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். 100 ரூபாய் வெட்டு, 100 ரூபாய் வெட்டு என்று சொல்லிவிட்டு, அவர்கள் சொல் கிறபோது, அதிகமான அளவிற்கு கூடுதலான செலவினங்களை வைக்கிறார்கள். அப்படிச் செலவினங்களை வைக்கிறபோது, அதிலே நியாயம் இல்லை என்று அமைச்சர்கள் யாரும் சொல் வது இல்லை. அது செய்யப்படவேண்டியதுதான். ஆனால் அதற்கான நிதி வசதிகள் ஏற்படுகின்றபோது, அதைச் செய்ய லாம் என்ற காரணத்தின் அடிப்படையிலே மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் செலவினத்தைச் சரிக்கட்டுவதற்கான முயற்சிகளிலே ஈடு பட்டு வருகிறோம். ஆகவே இன்றைக்கு நமக்குக் கூடுதலான வருவாய் வர வர இந்தச் செலவினங்களை நாம் ஈடுகட்ட லாம். அந்த வகையிலே எட்டாவது நிதிக் குழுவிலே சில பல இழப்புகள் ஏற்படத்தக்க அளவிற்கு அந்த பார்முலா அமைந் திருப்பதாலே, அதை மாற்றுவதன் மூலம் நமக்கு அதிக நிதி ஆதாரங்கள் கிடைக்கும் என்று வாதாடிக்கொண்டு இருக் கிறோம். அதைப்போன்று ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றும் போது, கூடுதலான நிதி ஆதாரங்கள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். ஓரளவிற்கு எடுத்துச் சொன்னதற்குப் பிறகு மத்திய அரசு இப்போது ஓரளவுக்கு 4,800 கோடியாக இருந்ததை 5,750 கோடி அளவிற்குக் கூட நாம் ஓரளவிற்கு வாதாடிய பிறகு கொண்டு வந்திருக்கிறார்கள். எட்டாவது நிதிக் குழுவினுடைய பார்முலா மற்றவைகளை மாற்றித் தருவார்களேயானால் அதிகமான அளவிற்கு பணி களை மிகச் சிறப்பாக செய்து வருகின்ற மாநிலங்களாக இருப் பவர்கள், குறிப்பாக, தமிழகம், மேற்கு வங்கம், மகாராஷ் டிரம், பஞ்சாப் போன்ற மாநிலங்கள் இன்னும் கொஞ்சம் அதிக

மான பலன்களை அனுபவிக்க முடியும். அதையும் நாம் வற்
புறுத்திக் கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்
படுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற வைகளை,
கூடுதலாக ந்யூ சர்விஸ் என்ற திட்டத்தின் கீழ் கொண்டு வந்து
அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே அந்த
வகையிலேதான் நிறைவேற்றப்படும் என்று சொன்னேனே தவிர,
எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய காரியங்கள் எல்லாம் எடுத்
துக் கொள்ளப்பட மாட்டாது என்ற நோக்கத்தில் அல்ல.

திரு. க. பாலஸுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
மதுரையிலே சுரங்கப் பாதை கட்டுவதில்லை என்று தெரிவித்
தார்கள். ஆனால் அரசாங்கமானது, பல இடங்களில் சுரங்
கப் பாதைகளைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அந்தச்
சுரங்கப் பாதைகளிலே மாலை நேரங்களிலே செல்லும்போது,
தனியாகச் செல்வதற்கு பயம் ஏற்படுகிறது......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்
விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சுரங்கப் பாதை அமைப்பதில், கோரிப்
பாளையம் பகுதியில் மருத்துவமனை, காவலர் குடியிருப்பு,
மகளிர் கல்லூரி, ஆண்கள் கல்லூரி என பல்வேறு பொது நிறு
வனங்கள், மாவட்ட ஆட்சி அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு
நிறுவனங்கள் இருக்கின்ற காரணத்தாலே கோரிப்பாளையம்
பகுதிக்கு சுரங்கப் பாதை அமைப்பதில் முன்னுரிமை வழங்கப்
படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஐ. முத்துசாமி : துணைத் தலைவர்
அவர்களே, ஏற்கனவே சொல்லியதை நான் திருப்பிச் சொல்ல
வேண்டியிருக்கிறது. எப்போது பணம் கைக்கு வருகிறதோ,
அப்போது முன்னுரிமை கொடுக்கப்பட்டு, நிச்சயமாக எடுத்
துக்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மதுரை வைகை ஆற்றில் கட்டப்பட்டுள்ள மேம்
பாலம் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது.
அதை ஒன்-வே-ஆக ஆக்கி, கீழ்ப் பாலத்தையும் மேம்பால
மாக்கி, போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாத வகையில்
அதை அதிக அளவில் விரிவுபடுத்தி, போக்குவரத்துக்கு வழி
வகை செய்ய அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஐ. முத்துசாமி: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே
வந்த பின்பு ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.
அதைப்பற்றி ஆய்வு செய்துதான் சொல்ல முடியும். இங்கே
தன்னிச்சையாகச் சொல்வதற்கு இயலாது.



## சென்னை கன்னியாகுமரி கிழக்கு கடற்கரைச் சாலை

633—(*வினா எண்.2909)—திருமதி பா.வளர்மதி: மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) சென்னை-கன்னியாகுமரி கிழக்கு கடற்கரைச் சாலை
திட்டம் தற்போது எந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது ?

(ஆ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு ஐ. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்
களே, (அ) சென்னை-கன்னியாகுமரி கிழக்குக் கடற்கரைச் சாலை
யின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, மத்திய அரசின்
கடனுதவித் திட்டமான மாநில பொருளாதார முக்கியத்துவம்
வாய்ந்த திட்டத்தின் கீழ் ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டில் ஆறா
வது ஐந்தாண்டுத் திட்டத்தில், நாகப்பட்டினத்திலிருந்து கன்னி
யாகுமரிவரைசிலபகுதிகளில்68.4 கிலோ மீட்டர் நீளத்திற்கு
சாலை மேம்பாட்டுப் பணிக்கும், 17 பாலங்கள் கூட்டுவதற்கும்
மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதில், 50 விழுக்காடு
தொகையான ரூ. 150 இலட்சத்தை மத்திய அரசு கடனாக
வழங்கும். மீதமுள்ள ரூ. 150 இலட்சமும், இதர கூடுதல் செல
வினம் ஏதும் இருப்பின் அதையும் மாநில அரசு அதனுடைய நிதி
யிலிருந்து செலவழிக்க வேண்டும். இப்பணிகள் வெவ்வேறு முன்
னேற்ற நிலையில் உள்ளன.

(ஆ) கிழக்குக் கடற்கரைச் சாலை முழுவதும் தேசிய
நெடுஞ் சாலைத்தரத்திற்கு ஒரு வழித்தடமாக அமைக்க தோராய
மாக ரூ. 56.50 கோடியும், இருவழித்தடமாக அமைக்க ரூ. 95
கோடியும் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி பா. வளர்மதி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த திட்டத்திற்கான மதிப்பீடு எந்த ஆண்டுக்கு
போடப்பட்டது; இது எத்தனை தடவை திருத்தப்பட்டு இருக்
கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு ஐ. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, எத்தனை தடவை திருத்தப்பட்
டது என்ற விளக்கம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனி
யாக அதற்கான விளக்கத்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்
கப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பணி இன்னும் எத்தனை ஆண்டுகள்
தொடர்ந்து நடைபெறும்? எந்த ஆண்டுக்குள் முடிவுபெறும்
என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 12

மாண்புமிகு திரு க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மற்ற சாலை போல் அல்லாமல் இந்தச் சாலையில் ஒரு தனித் தன்மையோடு செயல்படவேண்டிய நிலை இருக்கிறது. எனவே இதற்கான கணக்கை இப்போது சொல்ல முடியாது. இந்தப் பணம் முழுமையாக கிடைத்த பிறகு அதை முழுமையாக நாம் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதோடு தொடர்ச்சி இந்த வேலை நடக்காமல் தனித் தனியாக 17 இடங்களில் பாலம் கட்டப்படுகிறது. மேம்பாட்டுத் திட்டங்கள் கூட வரிசையாக இல்லாமல் பிட் பிட் ஆக இடங்கள் இருக்கின்ற காரணத்தால் அதைப்பற்றி தனியாக ஒரு முழு விவரமாகத் தான் கொடுக்க வேண்டி இருக்கும்.

திரு கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாகையிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள கடலோரச் சாலையை தேசிய நெடுஞ்சாலையில் சேர்த்து வேலை செய்வதாகக் குறிப்பிட்டார்கள். இடையே நடைபெறுகிற வேலைகள் நின்று விடுகின்றன. அந்த வேலைகள் நிற்காமல் தொடர்ந்து நடப்பதற்கு முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கலாம்.

வத்திராயிருப்பு—கூமாபட்டி நெடுஞ்சாலை

633 ஈ—(வினா எண். 767)— திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு கூமாபட்டி நெடுஞ்சாலை சமீப வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே (அ) ஆம்.

(ஆ) இச்சாலை ரூ. 3,66,000 செலவில் சீர் செய்யப்படுவதுடன், மொத்தம் ரூ. 64,000 செலவில் இரண்டு சிறுபாலங்கள் திரும்பக் கட்டப்படுகின்றன.



1985 ஜூலை 12]

திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு வத்திராயிருப்புப் பகுதியில் வெள்ளம் வந்த போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நேரடியாக வந்து அந்த இடத்தை ஹெலிகாப்டர் மூலம் பார்த்து நிதி ஒதுக்கீடு செய்து வேலைகளை துரிதப்படுத்தினார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட காண்டிராக்டர்களுக்கும் அங்கே உள்ள டி.இ.-க்கும் ஏதோ சில பிரச்சினைகளின் காரணமாக இந்த வேலைகள் ஒரு வருடமாக அங்கே நடைபெறவில்லை. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலை நடைபெறுகிறது என்று சொல்கிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆகவே, நாளையிலிருந்து வேலை நடக்குமா வேலையைத் துரிதப்படுத்த அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே 2 விதமான வேலைகள் நடக்கின்றன. ஒன்று பாலம். இன்னும் ஒன்று சாலை. எனவே பால வேலை அவர்கள் சொல்லுவது போல் ஏதோ அங்கே தண்ணீர் வந்தது அந்த பிரச்சினையின் காரணமாக (குறுக்கீடு) எனக்கு கொடுத்த குறிப்பில் அங்கே வேலைகள் நடந்து கொண்டு இருப்பதாக அதற்கு பணம் ஒதுக்கப்பட்டு இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை டெண்டர் கால் பார் செய்து இருப்பதை கூட வேலை நடந்து கொண்டு இருக்கிறது என்று சில நேரங்களில் அதிகாரிகள் சொல்லிவிடுகிறார்கள். எனவே அதில் தவறு இருக்குமானால் நான் இங்கே சொல்லிய குறிப்பில் தவறு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களானால் எழுதிக் கொடுத்தால் கடுமையான நடவடிக்கை எடுத்து சரியான தகவல் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெண்டர் விடப்படுகிறது. டெண்டர்விடுவது காலாகாலத்தில் அவர்கள் வேலை செய்யாமல் இருக்கிறார்கள். உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 6 மாதம் கால அவகாசம் கொடுக்கிறார்கள். பிறகு 20 ரூபாய் பைன் போடுகிறார்கள். இதை எல்லாம் முடித்த பிறகு மறுபடியும் டெண்டர் விடும் போது அந்தபழைய காண்டிராக்டரே பினாமி பெயரில் டெண்டர் எடுத்து வேலை செய்யாமல் இருக்கிறார்கள். இப்போது அங்கே வேலை நடைபெறவில்லை சத்தியமாகச் சொல்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏற்கனவே ஒரு கேள்விக்கு அதாவது அர்சினாபுரம் ரோடு சம்பந்தப்பட்ட கேள்விக்கு அதிகாரிகள் அப்படித் தான் தவறான குறிப்பு கொடுத்தார்கள். இப்போதும் கொடுத்து இருக்கிறார்கள். அப்படித்தவறான குறிப்பு கொடுக்கிற அதிகாரிகள் மீதும் அரசுக்குக் கெட்டப் பெயர் ஏற்படுத்தும் அதிகாரிகள் மீதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க முன்வருவதோடு, வேலையை துரிதமாக்குவதற்கு டிபார்ட்மெண்டே எடுத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னாலே போதும். சத்தியம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. அந்த அளவுக்கு எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. எனவே இதில் தவறான தகவல் எந்த அதிகாரி கொடுத்து இருந்தாலும் மிகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயக்கம் காட்டாது. அவசியமும் இல்லை, டிபார்ட்மெண்டு எடுத்து செய்வது பற்றி கேட்டார்கள். அது சாதாரண பிரச்சினை அல்ல. டிபார்ட்மெண்டு எடுத்துச் செய்வது மிகக் கடுமையான காரியம். சில இடங்களில் அப்படி மோசமான காண்டிராக்டர்கள் இருக்கிறார்கள். எனவே அவர்களை நீக்கி விட்டு மற்றவர்கள் இடத்தில் கொடுத்து விரைவாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்து மூலம் இதைக்கொடுத்தால் கூடநடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். எனவே அதை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**சென்னை சிங்கப்பூர் கப்பல் போக்குவரத்து.**

633உ—(*வினா எண் 2119)—திரு மு.இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—நாகை—சிங்கப்பூர் கடல் மார்க்கத்தில் மீண்டும் கப்பல் விடவேண்டும் என்று மத்திய அரசுக்கு ஏதும் பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு சு.முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை—சிங்கப்பூர் பயணிகள் கப்பல் போக்குவரத்தை மீண்டும் இயக்க கொள்கையளவில் முடிவெடுக்கப் பட்டுள்ளதாகவும் இக்கப்பல் போக்குவரத்து விரைவில் இயக்கப் படும் எனவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்றவர்கள் சிங்கப்பூரிலே சென்று அங்கு கூலி வேலைகள், மற்ற வேலைகள் செய்து பிழைக்கின்றார்கள், அங்கே நிறையபேர் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றார்கள். அவர்கள் திரும்பி வருகின்ற நேரத்தில், விமானத்தைப் பயன்படுத்துவதற்கு வசதி போதாத நிலையில் இருக்கிறது. ஆகவே, இந்த சென்னை—நாகை—சிங்கப்பூர் கடல் மார்க்கத்தில் மீண்டும் முன்பு எரிந்து



136423

போன சிதம்பரம் கப்பலுக்குப் பதிலாக, மீண்டும் ஒரு கப்பலை விரைவில் அங்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு தமிழக அரசு ஆராய்ந்து ஒரு வழி காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு விரைவான நடவடிக்கைஎடுத்த காரணத்தினால்தான், 31—5—1985இலே மத்திய அரசிலிருந்து நமக்கு தகவல் கொடுத்து இருக்கிறார்கள். விரைவாக அந்தக் கப்பலை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அங்கேயிருந்து கடிதங்கள் எழுதப்பட்டிருக்கிறது. எனவே, அதை விரைவாக இயக்குவார்கள் என்ற நம்பிக்கையில் எதிர்பார்த்து இருக்கிறோம்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சென்னை—சிங்கப்பூர் கப்பல் போக்குவரத்து நாகை வழியாகச் செல்வதை, நாகையிலே பயணிகள் ஏறிஇறங்குவதற்கான வழிமுறையில் பழையமுறையில் அரசு ஏற்பாடு செய்ய முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கப்பல் போய்க் கொண்டிருந்த நேரத்தில் எப்படி செய்து கொண்டிருந்தார்கள் என்று சரியாகத் தெரியவில்லை. எனவே, வசதிகளைப் பார்த்து நிர்வாகத்துடன் பேசித்தான் சொல்ல முடியும். இப்போது சொல்வதற்கு இயலாது.

திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சிதம்பரம் கப்பலானது நிறுத்தப் பட்டபோது தீப் பிடித்து எரிந்து இருக்கிறது. எரிந்தபோது, பல பேர் உயிர் இழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் சேரவேண்டிய உதவித் தொகைகள் போய்ச் சேராமல் இருக்கிறது என்பதை நான் அறிகிறேன். எனவே, அவர்களுக்கு அந்த உதவித் தொகை கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு முறைப்படி கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகை மத்திய அரசால் கொடுக்கப்படுகிறது. கொடுத்து விட்டார்களா இல்லையா என்கிற தகவல் என்னிடம் இல்லை. மாநில சர்க்காரைப் பொறுத்தவரையில், நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், அதற்காக பணம் கொடுக்க வேண்டும் என்று ஒதுக்கப்பட்டு, அந்தக் காரியங்கள் நடந்து இருக்கிறது.

[1985 ஜூலை 12

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க குறுகிய கால வினா எண் 7 இப்போது எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

சீதாலட்சுமி நூற்பாலைத் தொழிலாளர், திருநகர்.

குறுகிய கால வினா எண் 7— (*வினா எண் 4026)—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதியைச் சார்ந்த திருநகரி லுள்ள சீதாலட்சுமி நூற்பாலையில் ஏற்பட்ட தொழிலாளர் வேலைநிறுத்தம் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தையின் முடி வென்ன ?

(ஆ) இது குறித்து அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) 1,300 தொழிலாளர்களைக் கொண்ட திருப்பரங்குன்றம் தொகுதியைச் சார்ந்த திருநகரிலுள்ள சீதாலட்சுமி நூற்பாலையில் ஏற்பட் டுள்ள தொழிலாளர் வேலைநிறுத்தம் சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதன் பயனாக 41 நாட்களாக நடை பெற்று வந்த வேலைநிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டு தொழி லாளர்கள் 10—7—1985 முதல் வேலைக்குத் திரும்பினர்.

(ஆ) இத் தொழிற்தகராறில் மதுரை தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) மற்றும் தொழிலாளர் துறை துணை ஆணையர் ஆகியோர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் ஒரு சுமுகமான முடிவு ஏற்படவில்லை. எனவே 18—6—1985 அன்று சென்னை தொழிலாளர் துறை தனித் துறை ஆணையர் மதுரைக்குச் சென்று இரு தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து 28—6—1985 அன்றும், இறுதியாக 9—7—1985 அன்றும் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டன. இவற்றின் பயனாக சென்னைத் தொழிலாளர் துறை தனித் துறை ஆணையர் வழங்கிய 6 நிபந்தனைகள் கொண்ட ஆலோசனைகளை நிர்வாகமும் பெரும்பான்மையான தொழிற் சங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. இப்போது இந்த ஆலையில் தொழில் அமைதி நிலவுகிறது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுமார் 1,400 தொழிலாளர்கள் குடும்பங் கள் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சனையில் அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்காகவும், மாண்புமிகு தொழிலாளர்



1985 ஜூலை 12]

நலத் துறைஅமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக் காகவும், தொழிலாளர் குடும்பங்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றனர். அதே நேரத்தில், ஒப்பந்தத்தின்படி ஏற் படுத்தப்பட்ட ஷரத்துக்கள் தொடர்ந்து நடைமுறையில் கடைப் பிடிக்கப்படுகின்றனவா என்பதை அரசு தொடர்ந்து கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கவனிக்கப்படும்.

பட்டுக்கோட்டையில் அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள்.

620— (*வினா எண் 1643)—திரு. п. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் அரசு அலுவலர் களுக்கு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. п. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டைப் பகுதி, அந்த சரகத்தில் கோட்டாட்சியர் அலுவலகம், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், தாலூகா அலுவலகம், பஞ்சா யத்து ஒன்றிய அலுவலகம் மற்றும் வணிக வரித் துறை, பல்வேறு துறைகள், கூட்டுறவுத் துறை போன்ற அலுவலகங்கள் நிரம்ப இருக்கின்றன. ஏறத்தாழ ஆயிரக்கணக்கான அரசு அலுவலர்கள் வேலை பார்க்கிற பகுதி, அந்தப் பகுதி. அரசு இந்த ஆண்டு அலுவலர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதற் காக நிலத்தைக் கையகப்படுத்துவதற்காவது முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப் போல அது கோட்டாட்சித் தலைமையிடமாகவும் மற்றும் தஞ்சை மாவட்டத்திலே முக்கியமான பகுதியாகவும் இருப்பதால் அங்கே நில ஆர்ஜித நடவடிக்கையைப் பொறுத்த வரையில் இப்பொழுது அரசு 10.48 ஏக்கர் தனியார் நிலத்தை

ஆர்ஜிதம் செய்வதற்கான திட்டம் இடப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்புகூட வெளியிடப்பட்டிருப்பதால் அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்து, மேற்படி திட்டத்தை எவ்வளவு விரைவாகத் தொடங்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் தொடங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரம் நடந்துகொண்டிருக்கும்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்தில் இருத்தல் வேண்டும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு நிலத்தைக் கையகப்படுத்த இருப்பதாகத் தெரிவித்தமைக்காக அமைச்சரவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். இந்த ஆண்டே நிலத்தைக் கையகப்படுத்தி பணி களைத் துவக்குகின்ற செயற்குறிப்பு அரசிடத்தில் இருக்கிறதா? அதன் மதிப்பீடு என்ன? எந்தக் கால கட்டத்தில் அந்தப் பணி நிறைவுபெறும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 10.48 ஏக்கர் நிலங்களை அரசு எடுப்பதாக இருக்கிறது. அந்த முடிவின் அடிப்படை யில் 37 இலட்சம் ரூபாய் என்று அந்த நிலத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது பட்டுக்கோட்டையில் தமிழக அரசு ஊழியர்கள் இதுவரையில் 573 பேர் விண்ணப்பங் களைத் தந்திருப்பதால், அந்த அடிப்படையில் 291 இலட்சம் ரூபாய் செலவில் 486 வீடுகள் கட்ட ஒரு முடிவை அரசு இப் பொழுது எடுத்து இருக்கிறது. நிலத்தைக் கையகப்படுத்துவதில் ஒரு இறுதியான முடிவு ஏற்பட்டதற்குப் பிறகு வீடு கட்டுகின்ற திட்டத்தை எவ்வளவு விரைவாக மேற்கொள்ள முடியுமோ அவ் வளவு விரைவாக அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமேஸ்வரத்தில் இலங்கை அகதிகளுக்கு மருத்துவமனை.

621—(*வினா எண். 1002)—திரு. செ. செம்மலை : மாண்பு மிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கை அகதிகளுக்கு உதவும் வகையில் இராமேஸ் வரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி கட்டித்தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?



மாண்புமிகு திரு. த. இராமசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) இலங்கை அகதிகளுக்காக இராமேஸ்வரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி கட்டித்தரும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் அகதிகள் குடியமர்த் தப்பட்டால் அவர்களுக்கு இப்படிப்பட்ட மருத்துவமனை வசதி அவசியம் தேவைப்படும். எனவே மாண்புமிகு அமைச்சரவர் களின் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவது, வருகின்ற அகதிகள் இராமேஸ்வரத்தில் குடியமர்த்தப்படுகிறார்களா அல்லது மாற்று முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்களா என்ற விவரத்தோடு, இப்படிப்பட்ட அகதிகளுக்கு வேறு எங்கெங்கே மருத்துவமனை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற அந்த விவரங்களையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் அகதிகள் வந்திறங்கியவுடன் அகதி களுக்கு உடன் தடுப்பு ஊசி போடுவதற்காகத் தனி மருத்துவக் குழு இருக்கிறது. அவர்கள் உடல்நலத்தைப் பரிசோதித்து வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு தனி மருத்துவக் குழுவும் நாள் முழுவதும் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. பெண் களுக்கு என்று தனி பெண் மருத்துவரும் நியமிக்கப்பட்டிருக் கின்றார். மேலும், இராமேஸ்வரத்தில் அப்படிப்பட்ட அகதிகள் இருக்கும் நேரத்தில் கடுமையான முறையில் உடல் நலம் பாதிக் கப்பட்டால் அவர்களைக் கவனிப்பதற்காக இராமேஸ்வரத்தில் 44 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை அனைத்து வசதிகளுடனும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இராமேஸ்வரத்திற்கு போதுமான மருத்துவமனை இருப்ப தாலே இராமேஸ்வரத்தில் தனியாக மருத்துவமனை தேவை யில்லை. அதோடு அவர்கள் இராமேஸ்வரத்தில் ஒருநாள், இரண்டு நாள்தான் வைக்கப்படுகிறார்கள். அதற்குப் பிறகு மண்டபம் முகாமிற்கு அனுப்பப்படுகிறார்கள். மண்டபம் முகா மில் 20 படுக்கைகள் கொண்ட, தாயகம் திரும்பியவர்களுக்கு, மருத்துவமனை சிறந்த முறையில் செயல்பட்டுக்கொண்டிருக் கிறது. பெண் மருத்துவரும், 2 ஆண் மருத்துவர்களும் செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மரியாதைக்குரிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் மண்டபம் முகாமிற்கு வந்திருந்தபொழுதுகூட அந்த மருத்துவமனை யைப் பார்த்து விட்டு அது எவ்வளவு சிறப்பான முறையில், அருமையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று பாராட்டி விட்டுக்கூட வந்திருக்கிறார்கள். ஆகவே, அகதிகளைப் பொறுத்த வரையில் மருத்துவமனை மருத்துவ வசதியைப்

பொறுத்தவரையில், எந்தவிதமான குறைகளும் இல்லாத அளவிற்கு சீரான முறையில், சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. என்பதை துணைத் தலைவரவர்களின் மூலமாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன்முறைகளின் கொடுமைகளுக்குப் பயந்துகொண்டு அகதிகள் முகாமில் அடைக்கலம் புகுந்திருக்கின்ற அகதிகள் எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கேள், 9–7–1985 வரை, இலங்கை வன்முறைச் செயலுக்கு ஆட்பட்டு தமிழகத்திற்கு வந்திருக்கிற 22,610 அகதிகள், 68 அகதிகள் முகாம்களிலே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடிக் களங்கண்டு தாயகம் திரும்புகிற அகதிகள், அந்த அன்புச் சகோதரர்களுக்கு தமிழகத்திலே மருத்துவ வசதிக்கு ஆண்டுக்கு ஒதுக்கப்படுகிற நிதி எவ்வளவு? இதுவரை அந்த வசதிக்கு எவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பல்வேறு இடங்களில் நமது அரசு மருத்துவ மனைகளிலே அகதிகளுக்குப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். தனியாக, மருத்துவச் செலவுக் கென்று அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட விவரங்கள் என்னிடத்திலேயில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு வரும்போது, இன்னொரு நாடாக இருப்பதால், அங்குள்ளவர்கள் இங்கு வரும்போது, அங்குள்ளவர்களுடைய தொற்று நோய் இவர்களுக்குப் பரவாமல் இருப்பதற்கும், இவர்களுடைய வியாதி அவர்களுக்குப் பரவாமல் இருப்பதற்கும், அவர்கள் இங்கே வருகை தரும்போது மொபைல் வான் மூலமாக தடுப்பு ஊசி போடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் இராமேஸ்வரம் கடற்கரையிலே அகதிகள் படகுகள் மூலமாக வந்து தங்குகின்றபொழுது



அவர்களுக்கு உடனடியாகத் தடுப்பு ஊசி போட்டு அதற்குப் பிறகு மருத்துவச் சோதனை நடத்தி, பெண்களாக இருந்தால் பெண் மருத்துவர்கள் மூலம் பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். அதற்குப் பிறகு முகாம்களுக்கு அனுப்பும்போது, அந்த, அந்தப் பகுதியிலே இருக்கிற ஆரம்பச் சுகாதார நடமாடும் மருத்துவ மனைகள் மூலமாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகையினாலே, நோய் தொற்றாத அளவுக்கு அரசு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு துணை தலைவர் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகதிகள் முகாம் அமைப்பதிலே சேலம் மாவட்டத்திலே ராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான கல்யாண மண்டபத்தில் 300 பேர்கள் தற்காலிகமாகத் தங்குவார்கள், 15 நாட்கள் மட்டும்தான் தங்குவார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து, அந்தத் திருமண மண்டபம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால், இதுவரையில், 6 மாதகாலம் வேறிடத்திற்கு மாற்றாமல், அங்கேயே வைத்திருக்கிற காரணத்தால், அந்தத் திருமண மண்டபம் பாழடைந்து போகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்த அகதிகள் முகாமை மாற்றுவதற்கான ஆலோசனையை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வன்செயலால் பாதிக்கப்பட்ட சுமார் 22,000-க்கு மேற்பட்ட அகதிகள் இராமேஸ்வரத்திற்குத் திடீரென்று வந்து விட்டார்கள், அதனால் கடற்கரை ஓரங்களில் உள்ள பல்வேறு பகுதிகளில், புயல் பாதுகாப்பு இல்லங்களில் அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அது நீங்கலாக, மற்ற இடங்கள், பள்ளிக் கூடங்கள், சத்திரங்கள் போன்ற பொது இடங்களில் எல்லாம் அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும்போது பொது இடங்கள் மற்றவர்களுக்குத் தேவைப்படுகிறபோது, அவர்களைக் காலி செய்து, வேறு இடங்களில் அமர்த்த வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்தபோது, வாடகைக் கட்டிடங்களில் கூட அமர்த்த உடனடியாக அங்கங்கே இருக்கிற தனித் தாசில்தார்கள், மறுவாழ்வுத் துறை டி.ஆர்.ஓ. ஆகியோர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, வாடகைக் கட்டிடத்தில் அமர்த்தப்பட வேண்டுமென்று அந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரியைச் சந்தித்து, அருமையான கட்டிடத்தை எடுத்துக் கொடுப்பார்களானால், நிச்சயமாக அந்த இடத்திலே அவர்களைக் குடியமர்த்தி, இவர்களைக் காலி செய்வதற்கு வழி செய்யப்படும் என்பதை துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜூலை 12

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகத்திற்கு வந்த அகதிகள் இப்பொழுது ஆத்தூர் நகராட்சி மண்டபத்திலே தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தினமும் கொடுக்கின்ற பணத்தை உரிய முறையில் கொடுக்கிறார்களா? வேறு இடம் கொடுத்தால், நல்லது. பொது மக்களுக்குப் பயன்படுகிற நகராட்சி மண்டபத்தைகடந்த 3, 4 மாதங்களாக அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேறு இடத்தைக் கொடுக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற் பகல் 10-00).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : துணைத் தலைவரவர்களே, அகதிகளுக்கு வழங்கப்படுகிற பணம் உரிய காலத்தில் வழங்கப்படுகிறது என்பதை நான் சென்று பார்த்த பல்வேறு அகதி முகாம்களில் பார்த்தேன். அகதிகளைக் கேட்டபோதும் அவர்கள் சரியாகக் கிடைக்கிறது, அதிகாரிகள் நன்றாகக் கவனித்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். குற்றச்சாட்டு குறைபாடு எதையும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல இன்றைய தினம் சில இடங்களில் அகதிகளைக் குடியமர்த்தி யிருக்கிற, ஊர் மக்களுக்கு தேவைப்படுகிற பொது இடங்கள், பள்ளி நிறுவனங்கள் போன்ற இடங்களை காலி செய்து தரவேண்டுமென்று கேட்கும்போது வாடகைக் கட்டிடங்களை எடுத்து அவர்களை குடியமர்த்த வேண்டுமென்று அதிகாரிகளுக்கு தெரிவித்திருக்கிறோம். அந்த ஊரிலே இருப்பவர்கள் வாடகைக் கட்டிடம் கொடுக்க மறுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையைக் கவனித்து, வாடகைக் கட்டிடம் கிடைக்க ஏற்பாடு செய்தால், அரசாங்கம் அதற்கான வாடகையைக் கொடுக்க தயாராக இருக்கிறது. ஆகையால் அங்கே வாடகை வீடுகளைப் பெற்றுத் தந்து, அந்த மக்களை அங்கே குடியமர்த்த நீங்களே கூட ஈடுபடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி நிலையங்கள்.

622—(*வினா எண் 1868)—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மொத்த தொழிற் பயிற்சி நிலையங்கள் எத்தனை?



1985 ஜூலை 12]

(ஆ) ஆண்டுதோறும் இவற்றில் பயிலும் மாணவர்கள் எத்தனை பேர்?

(இ) தற்போதுள்ள மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்கான முறையினை மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாட்டில் மொத்தம் 38 தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன.

(ஆ) ஆண்டுதோறும் இத் தொழில் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 14,728.

(இ) தற்போதுள்ள மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்கான முறையினை மாற்றும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. கோ. இரகுபதி : துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் மொத்தம் 38 தொழிற்பயிற்சி நிலையங்கள் இருப்ப தாகத் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங் களில் பயிற்சி பெற்று, தொழில்கள் அதிகமாக வளர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அரசு பாடுபடும்போது, அதற்கு ஏற்ற முறையில் இன்னும் அதிகமான தொழில் பயிற்சி நிலையங் களை ஏற்படுத்த அரசு முன்வருமா? அது மட்டுமல்லாமல், ஆண்டுதோறும் இத்தனை மாணவர்கள் என்று சொன்னார்கள். தொழிற் பயிற்சி நிலையங்களை அதிகப்படுத்தும் போது அதிகமான மாணவர்கள் அங்கே பயிற்சி பெற்று, அதிகப்படியான வேலை வாய்ப்பு பெற சந்தர்ப்பம் ஏற்படும் என்பதை அறிந்து அமைச்சர் அவர்கள் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : துணைத் தலைவர் வர்களே, தமிழ்நாட்டில் இன்றைய தினம் 38 தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் 3 பெண்களுக்காக தனி யாக இருக்கின்ற தொழிற் பயிற்சி நிலையங்கள். ஆண்களுக்கு 35, பெண்களுக்கு 3 என்ற வகையில் மொத்தம் 38 தொழிற் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டில் தமிழ் நாட்டில் தொழில் கல்வியை உருவாக்க வேண்டுமென்றுதான் தமிழக மக்களுடைய இதயங்களில் எல்லாம் தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் கள் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே கூட இரண்டு பெண்கள் தொழிற் பயிற்சி நிலையங்களை உருவாக்க வேண்டுமென்ற உணர்வோடு அதற்கு அனுமதி அளிக்கப்பட் டிருக்கிறது. கோவை மாவட்டத்தில் திருப்பூரிலே ஒரு பெண்கள் தொழிற் பயிற்சி நிலையமும் மதுரை மாவட்டம் காந்தி கிரா மத்தில் ஒரு பெண்கள் தொழில் பயிற்சி நிலையமும் ஆரம்பிக் கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தக்க
காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தத் துறை மட்டு
மல்ல. இந்த அரசிலே இருக்கிற அனைத்துத் துறைகளிலும்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு,
அதிகமான வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்று அரசு
பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. கோ. இரகுபதி ; துணைத் தலைவரவர்களே, நாட்டிலே
ஆண்களுக்கு பெண்கள் சரிநிகர் என்று சொல்கிறோம். மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் ஆண்களுக்கு 35 தொழிற் பயிற்சி நிலை
யங்களும் பெண்களுக்கு 3 தொழிற்பயிற்சி நிலையங்களும் இருப்ப
தாகச் சொன்னார்கள. மேலும் பெண்களுக்கு இரண்டு தொழில்
பயிற்சி நிலையங்களை இந்த ஆண்டில் ஆரம்பிப்பதாகவும் சொன்
னார்கள். இது போதுமானதாக இல்லை. ஆண்களுக்கு பெண்கள்
சரிநிகர், சமம் என்று சொல்லுகிறபோது, ஆண்களுக்கு 35
தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன என்று சொல்லும்
போது, அந்த அடிப்படையில் பெண்களுக்கும் சம உரிமை வழங்கு
கின்ற முறையில், சம வாய்ப்பு அளிக்கின்ற முறையில் தொழிற்
பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து தற்போது மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்குரிய
முறையினை மாற்றும் உத்தேசம் இல்லை. என்று குறிப்பிட்டார்
கள். அந்த மாணவர்களைச் சேர்க்கும் போது பிட்டர் போன்ற
பணிகளைப் பொறுத்த வரையில் ஏதேனும் மார்க்கை அடிப்படை
யாக வைத்துச் சேர்க்கிறார்களா ? எம்ப்ளாய்மென்ட் ஆபீஸ்
சாதாரணமாக 10 பேருக்கு ஒருவராக அங்கே அனுப்புகிறார்கள்.
அந்த விதிமுறைப்படிதான் அனுப்புகிறார்களா ? அல்லது மார்க்
தகுதி அடிப்படையில் ஒதுக்குகிறார்களா ? அந்த விவரத்தை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. த. இராமசாமி : பேரவைத் தலைவர்
அவர்களே, பெண்களுக்கும் சரி சமமான அந்தஸ்து தர வேண்டும்
என்ற உணர்வோடு அவர்களுக்கும் தொழிற் பயிற்சி நிலையங்கள்
உருவாக்க வேண்டும் என்று இன்றைய தினம் இந்த அரசு நட
வடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டிலே
2 தொழில் பயிற்சி நிலையங்களுக்கு அனுமதி வழங்கி இருக்
கின்றது. நிதியாதாரங்களுக்குத் தகுந்த மாதிரி ஆண்டுதோறும்
அந்தப் பணிகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது. அதேபோல்
இன்றைய தினம் பள்ளி மாணவர்களைச் சேர்க்க வேண்டும்
என்றால் கணிதத்தில் அல்லது சையன்ஸ் போன்ற பாடங்களில்
பி.சி. யாக இருந்தால் 40 மார்க் பெற்றவராக இருக்க வேண்டும்,



சேர்ந்தவர்களாக இருந்தால் 30
ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால் 30
சதவீத அடிப்படையில் இருக்க வேண்டும் என்றும் மலை ஜாதி
யினராக இருந்தால் 30-க்குக் கீழே இருக்கலாம் என்ற அடிப்படை
யில்தான் நியதி இருக்கின்றது. அந்த வகையில் அவர்கள் எடுக்கப்
பட்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை
மாநகரத்தில் சாதாரணச் சிறு தொழில்கள் உட்பட இன்ஜினியரிங்
தொழில்கள் ஏராளமாக வளர்ந்து விஸ்தரித்திருக்கக் கூடிய
இடம். அங்கே ஒரே ஒரு தொழிற் பயிற்சி நிலையம் தான்
அரசாங்கத்தின் தொழிற் பயிற்சி நிலையம் இருக்கின்றது. நான்
இன்னொரு பயிற்சி நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று
ஆண்டுக் கணக்காக இந்த மன்றத்தில் கேட்டுக் கொண்டுதான்
இருக்கிறேன். 200 சீட் மட்டும் 2 வருஷத்துக்கு முன்பு எக்ஸ்
டென்ஷன் என்ற வகையிலே உயர்த்தப்பட்டது. எனவே
அங்கே மேலும் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் உடனடியாக
ஏற்படுத்துவது அவசியம். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள்
அங்கேதான் வருவார்கள். அவர்களால் இன்ஜினியரிங் கல்லூரிக்
குப் போக முடியாது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
உடனடியாக மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை ஏற்
படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆவலைப்
பூர்த்தி செய்கின்ற வகையில் அரசு பரிசீலிக்கும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்
களே, தொழிற் கல்வியில் நாட்டம் கொண்டிருக்கின்ற நமது
அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை தனியார் நடத்துகின்ற
போது அரசு அதற்கு ஏதாவது உதவி செய்ய முன்வருமா என்
பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தொழிற் பயிற்சி நிலையங்களைத் தனியார்
ஆரம்பிக்க வேண்டும் என்ற உணர்வை மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் இங்கே காட்டியிருக்கிறார்கள். அப்படி அவர்கள்
ஆரம்பிக்கிற அந்தச் சூழ்நிலையில் அரசு சில விதிகளை வைத்
திருக்கின்றது. அந்த விதிகளின் அடிப்படையில் அவர்கள் ஆரம்
பித்தால் அதாவது நேஷனல் டிரேட் சர்ட்டிபிகேட் என்ற
அளவில் அங்கீகரிக்கப்பட்டு இருந்தால் அதாவது ஆரம்பிக்கப்
பட்டு மூன்று ஆண்டுகள் ஆகி அரசினுடைய விதிகளின்படி
அந்தத் தொழிற் பயிற்சி நிலையம் இருக்குமேயானால் அதற்கு
அரசு அங்கீகாரம் மட்டுமே வழங்குமே தவிர நிதியுதவி எதுவும்
செய்வதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1985 ஜூலை 12

623—*(வினா எண் 2792)— திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொல்லிமலையில் தொழில் நுட்பப்பயிற்சிப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சேலம் மாவட்டத்தில் கொல்லிமலையில் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடத்தில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் கொல்லிமலையில் மலைவாழ் மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் திட்டம் பற்றி சென்ற ஆண்டு மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. விஜயசாரதி இருந்த போது அவ்வாறு ஆரம்பிக்கின்ற குறிப்புகள் இருப்பதாகச் சொன்னார்கள் இதே சட்டமன்றத்தில். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். வரும் ஆண்டிலாவது மலைவாழ் மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று மலை வாழ் மக்களின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் பற்றி மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த ஆவலைப் பூர்த்தி செய்கின்ற வகையில் எதிர் காலத்தில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் வீட்டுமனைகளுக்கு நிலம் கையகப்படுத்தல்

624—(*வினா எண் 208)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆதி திராவிடர்கள் வீட்டு மனைக்கென சென்ற நிதி ஆண்டில் எவ்வளவு நிலம் கையகப்படுத்தப்பட்டது?

(ஆ) இதனால் பயனடைந்த குடும்பங்கள் எத்தனை?



1985 ஜூலை 12]

(இ) இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே,

(அ) ஆதி திராவிடர்கள் வீட்டு மனைக்கென சென்ற நிதியாண்டில் 615 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இதனால் 21,508 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன.

(இ) இத் திட்டத்திற்காக 1984–85 நிதியாண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 125 இலட்சம் ஆகும். இது திருத்திய மதிப்பீட்டில் ரூ. 100 இலட்சமாகக் குறைக்கப்பட்டது. எனினும் ரூபாய் 115.91 இலட்சம் இத் திட்டத்திற்கு செலவிடப்பட்டது.

(முற்பகல் 10–10)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக சென்ற ஆண்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புவதோடு, ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைகளை கையகப்படுத்துவதற்காக நிலத் த ஆர்ஜிதம் செய்யச் செல்கிறபோது, பல இடங்களில் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தடைகளை வாங்கி விடுகின்றனர். அதற்கு முக்கிய காரணம் நிலத்தை தேர்ந்து எடுக்கிறபோது ஆட்சேபணை குறைந்த, அப்ஜெக்ஷன் இல்லாத நிலங்களை தேர்ந்து எடுக்காமல், எத்தனையோ பேர்கள் தங்கள் நிலங்களைக் கொடுப்பதற்கு சம்மதம் கொடுக்கிறார்கள். அவர்களின் நிலங்களை தேர்ந்து எடுத்து வாங்குவதற்கான வழிமுறைகளை அரசு எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் 125 லட்சம் ஒதுக்கப்பட்டாலும் அது பின்னால்திருத்திய மதிப்பீட்டில் 100 லட்சமாக குறைக்கப்பட்டு, 115 லட்சம் மட்டும் செலவிடப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்று விட்டால் அதிலே யாருமே ஒன்றுமே செய்யமுடியாமல் போய் விடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் மனம் உவந்து கொடுப்பவர்களிடமிருந்து எடுக்கலாம் என்று. அப்படி கொடுக்கின்ற இடத்தை எடுக்க நான் தயாராக இருக்கிறேன். என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல நடைமுறையில் பார்க்கும்போது, அவர்கள் கொடுக்கின்ற இடத்தைக் கூட எடுக்காமல், ஆதிதிராவிட மக்களிடம் யாராவது ஒரு அரசியல்வாதி சொன்ன வார்த்தையை வைத்துக் கொண்டு, அவர்கள் இன்ன இடத்தை எடுங்கள் என்று சொன்னால், அதே இடத்தைத் தான் எடுக்க வேண்டும் என்று அதிகாரிகள் பிடிவாதம் பிடிக்கிறார்கள். அந்தக் கிராமத்திலேயே மனம் உவந்து கொடுப்பதற்கு மற்றவர்கள் இருந்த

போதும், அதிகாரிகளிடம் சொன்னால்கூட, ஆதிதிராவிட மக்கள் எதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்களோ அந்த நிலத்தைத் தான் எடுப்போம் என்று சொல்லுகிற நிலை இருக்கிறது. ஆகவே அந்த முறைகளை மாற்றி, அந்த நிலங்களைசிக்கிரமாக ஆர்ஜிதம் செய்து அதை எடுப்பதற்கு தகுந்த உத்திரவுகளை இட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அதை விரைவாகச் செய்ய வேண்டும் என்று உத்திரவு போட்டிருக்கிறேன். இது போன்ற நிலைமைகள் எல்லாம் இனிமேல் வருங்காலத்தில் இல்லாமல் இத்துறை பார்த்துக்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதித்திராவிடர்களுக்கு மனை தர வேண்டும் என்று சென்ற ஆண்டு 615 ஏக்கர் எடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது, அவர்கள் தங்கி வாழக்கூடிய இடம் பூராவும் ஒதுக்குப் புறமான இடங்களாகவே அதிகமாக இருக்கின்றன. அவர்களுக்கு மேட்டு இடத்தில் நிலங்களை எடுக்கிறபோது, அது கோவில் நிலமாக இருந்தால் ஆதித்திராவிட அதிகாரி பார்த்து எடுத்துக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்தாலும் கூட கோவில் நிர்வாகம் அதற்குத் தடையாக இருந்து வருகிறது. தனியார்களிடத்தில் போய் வாங்குகிறபோது, அவர்கள் கோர்ட்டுக்குப் போய் தடை வாங்கி விடுகிறார்கள். ஆகவே அரசு எவ்வளவு வேகமாக ஆதிதிராவிடர்களுக்கு மனை வழங்க வேண்டும் என்று நினைத்தாலும் கூட இன்றைக்கு இருக்கிற சட்டத்தினுடைய ஓட்டை உடைசல்களை வைத்து தடை வாங்கி விடுகிறார்கள் அந்த ஆதி திராவிட மக்களுக்காக நிலம் எடுக்கிறபோது தடை வாங்க முடியாத அளவுக்கு ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோர்ட்டுக்குப் போனால் நாம் கோர்ட்டை ஒன்றும் சொல்வதற்கு முடியாது. ஏன் என்றால் கோர்ட்டுக்குப் போய் விட்டால், தடை வாங்கிவிட்டால், அதற்கு எதிராக நம்மிடம் எந்த அதிகாரமோ, சட்டமோ இல்லை. ஆகவே நாம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து இதில் ஒரு முடிவு எடுத்தால் நன்றாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்பந்தமான வழக்குகள் ஆயிரக்கணக்கில் ஹைகோர்ட்டிலே பென்டிங்காக இருக்கின்றன, 4 வருடம் 5 வருடங்களாகக் கூடவே



பைசல் ஆகாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட வழக்குகளுக்கு அட்வான்ஸ் பெட்டிஷன் கொடுத்து அல்லது பெட்டிஷன் பார் வெகேட்டிங் தி ஸ்டே என்கிற பெட்டிஷனைக் கொடுத்து அந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கு துரிதமாக அந்த மக்களுக்கு வீட்டு வசதி செய்துகொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்மிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, உடனடியாக அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்கிறபோது ஒரு மிகப்பெரிய சிக்கல் இப்போது உருவாகி இருக்கிறது. நில ஆர்ஜிதம் சட்டத்தின்கீழ் நாம் வகுத்திருக்கிற விதிகளின் அடிப்படையில் திருமணமானவர்களுக்குத்தான் வீட்டு மனைப்பட்டா கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதற்கான சென்சஸ் எடுக்கிறபோது 25 வயது, 30 வயதாகியிருந்தாலும் திருமணமாகவில்லை என்பதால் பட்டா கொடுப்பதற்கு சென்சசில் சேர்க்கமாட்டேன் என்கிறார்கள். திருமணம் ஆனவுடன் மீண்டும் நிலஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே திருமணம் ஆகவேண்டுமென்ற விதியைத் தளர்த்தி, 20 வயது 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு நிலப் பட்டா கிடைக்கும் வகையில் செய்வதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, ஒரு குடும்பமென்றால் ஐந்தாறு அண்ணன் தம்பிகள் கூட இருப்பார்கள். அவர்கள் பொருளாதார ரீதியில் அதன் காரணமாக திருமணமாகாத நிலையில் கூட இருக்கலாம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்காக தொகை ஒதுக்கப்பட்டிருப்பது குறைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். குறைக்கப்பட்டதன் காரணம் என்ன ? நிலம் கிடைக்கவில்லையா அல்லது வீட்டுமனை கோரி பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப் பெறவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல பணம் குறைக்கப்படவில்லை. திருத்திய மதிப்பீடு என்று தான் சொன்னேன். ஆகவே கொடுக்கிற பணமே போதாத நிலைமையில் தான் இருக்கிறோம். ஆகவே உடனடியாக வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறோம். பணம் குறைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலச்செவல் பஞ்சாயத்து அரிசன மக்கள் வீடு கட்டும் திட்டம்

625—(*வினா எண். 1527)— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலச் செவல் நகர பஞ்சாயத்தைச் சார்ந்த நயினார் குளம், வாணியக்குளம் என்ற முத்துவீரபுரம், சொக்கலிங்கபுரம், கோலியர் தெரு, ஆகிய பகுதி களில் வசிக்கும் அரிசன மக்களிடமிருந்து வீடுகட்டிக் கொடுக்கக் கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே
(அ) இல்லை.
(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மலைவாழ் மக்களுக்கு தனி இயக்குநரகம்

626—(*வினா எண். 2206)—திரு. கோ. வீரய்யன் மற்றும் திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் நலனுக்கென ஆதிதிராவிட நலத் துறையிலிருந்து முழுமையாகப் பிரித்து தனி இயக்குநரகம் செயல் படுத்திடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே
(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கோ. வீரய்யன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் கொல்லி மலை, பச்சை மலை, இத்யாபுத்தூர் மலை, கல்வ ராயன்மலை, பெரிய கல்வராயன் மலை, சின்னகல்வராயன் மலை போன்ற மலைப்பகுதிகளில் பூர்வகுடி, மக்கள் மலைவாழ் மக்கள் சுமார் 5 லட்சம் பேர்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்படும் பணம் ஆதிதிராவிட நலத்துறை யில் சேர்ந்திருப்பதால், அவர்களுக்குச் செல்வதற்கு ஏராள மான சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே அவர்களுடைய நலனைக் கருதி அந்தத் துறையை தனியாகப் பிரித்து அமைத்து, இன்றைக்கு அது பரிசீலனையில் இல்லா விட்டாலும், எதிர்காலத்தில் அந்த மலைவாழ் மக்கள் பயன்பெறுவதற்கு அந்த வகையில் அதனை ஒரு தனித்துறை யாக அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே. பழங்குடியினரைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் கிட்டத் தட்ட 5 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு





தனியாக இயக்குநரகம் அமைப்பதற்கு 15 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவாகும். ஆகவே இருக்கிற நிதிநிலையைக் கருத்தில் கொண்டு அந்தத் துறைக்கு தனியாக இயக்குநர் என்ற அளவில் பதவி உயர்த்தப்பட்டு, ஆபீசர் ஆன் ஸ்பெஷல் டியூட்டி என்று ஒருவரை நியமித்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் ; தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையிலிருந்து மலைவாழ் மக்கள் நலனுக கென தனியாகப் பிரித்து தனி இயக்குநரகம் செயல்படுத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது அவர் களுடைய முன்னேற்றத்தை கருதி சிறப்பாக செயல்படுவதற்கு ஒரு கார்ப்பரேஷன் என்ற அளவிலாவது உருவாக்க அவர் களுக்கு தனியாக நிதி ஒதுக்கிட—மத்திய அரசு தான் அதனைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் மக்களிடம் பரவ லாக இருக்கிறது. மாநில அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டியும் அதைச் செயல்படுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆகவே தற்போது ஒரு தனிக் கார்பரேஷன் நிறுவுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர் களே, நேற்றைக்குக் கூட இந்தத் துறையின் மானியக் கோரிக் கையின்போது கொள்கைக் குறிப்பில் சொல்லி இருக்கிறேன். அதனைப் பொறுத்த வரையில் தனியாக ஸ்பெஷல் ஆபீசரைத் தான் போடமுடியுமே தவிர, தனியாக கார்ப்பரேஷன் ஏற்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வைகை ஆற்றின் இருமருங்கிலும் வெள்ளத்தடுப்புச் சுவர்.

627 (*வினா எண். 782).— திரு. பொன். முத்துராம லிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் ஏற்படும் வெள்ளச் சேதத்தைத் தடுக்க வைகை ஆற்றின் இருமருங்கிலும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ஏ. கை. மூ. யூஸ் : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.
(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்திலே கடந்த காலங் களில் வைகையில் பெருக்கு ஏற்பட்டு, பல முறை கடுமையான சேதங்களுக்கு கரையோரங்களில் இருக்கின்ற மக்கள் ஆட்பட்டு இருக்கிறார்கள். உயிர்ச்சேதம், பொருட் சேதம், என பல லட்சக்கணக்கான ரூபாய் அளவிலே நஷ்டம் ஏற்பட்டு அரசாங்கமே நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறது. இந்தக் கருத் துக்களை எல்லாம் மனதிலே கொண்டு, அரசு இப்போது இல்லை என்றாலும்கூட, வருகின்ற ஆண்டுகளிலாவது இந்த மிக முக்கியமான அத்தியாவசியமான திட்டத்தை நிறை வேற்றுவதற்கு அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மதுரை நகரத்தில் இருக்கக்கூடிய வைகையினால் ஏற்படுகின்ற வெள்ளச் சேதத்தைப் பற்றி இந்த அரசு தெரிந்து வைத்ததின் விளைவாகத்தான் 1.75 கோடி ரூபாய் திட் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு துறையில் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தலைமை பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தலைமை பொறியாளர் அவர்கள் சில விவரங்கள் வேண்டும் என்று கோரி, மறுபடியும் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அந்த விவரங்கள் எல்லாம் தெரிந்து முழு அறிக்கை வந்த பிறகு, அரசு பரிசீலனை செய்து உரிய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1.75 கோடி ரூபாய் அளவிற்கு அதற்கான திட்டம் திட்டப் பட்டு இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். வைகை யின் இரு மருங்கிலும் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான திட்டமா அல்லது வேறு திட்டமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் எந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டு இருக்கிறதோ, அந்தக் கோரிக்கைக்கு உரிய திட்டமாகத்தான் இது இருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டம் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அது வந்தவுடன் அரசு செயல்படுத்தும் என்று சொன்னார்கள். ஆனால் பிட்டுக்கு மண் சுமந்த காலத்திலேயிருந்து இன்று வரை வெள்ளத் தடுப்புக்கு அரசாங்கம் முயற்சி செய்தாலும் முழு வெற்றி பெறவில்லை. புரட்சித் தலைவர் அவர்களுடைய



அரசாங்கம் வெற்றி பெற்றது என்ற நற்பெயரையும், இதன் மூலமாக மிச்சப்படுகின்ற, வெள்ளப்பெருக்கால் வருகின்ற தண்ணீரை கடலுக்குப் போவதைத் தடுத்து கோட்டைக்கரை ஆற்றில் அதைத் திருப்பி, திருவாடனை தாலுக்காவிற்கு பயன்படுகின்ற வகையில் நல்லதைச் செய்ய, முந்தி, முனைந்து, விரைந்து செயலாற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர் களே, இந்தத் திட்டம் 1.75 கோடிக்கு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு இருக்கிறது என்று சொன்னேனே தவிர, திட்டம் இங்கே வந்தவுடன், உடனடியாக நாளையதினமே கால்கோல விழா செய்து, அதற்கான பணிகளை முடிக்கும் என்ற முறையில மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன் னார்களே, அந்தமுறையில் நான் பதில் சொல்லவில்லை. மேலும் பல்வேறு பகுதிகளைச் சுட்டிக்காட்டி, அந்தப் பகுதி களுக்குப் பயன் கிடைக்கக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டம் அமையுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக் கிறார்கள். இந்தக் கோரிக்கையைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், வெள்ளச் சேதத்தைத் தடுக்க வைகை ஆற்றின் இரு மருங்கிலும் தடுப்புச் சுவர் கட்டப்படுமா என்பதுதான். ஆகவே அதற்குரிய விடை கிடைத்திருக்கிறது. வேறு விவரங்கள் தேவையானால், தனிக் கேள்வித்தாளில் எழுதிக் கேட்டால், விவரங்கள் தரப்படும்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைப் பதைப் போன்று வைகைக்கரை ஓரங்களில் இருக்கின்ற கிராமங்கள் வெள்ளம் வருகின்ற காலங்களில் அதனால் அழிக்கப்பட்டு கிராம மக்கள் மிகவும் சேதத்திற்கு உள்ளாக்கப் படுகிறார்கள். ஆகவே அந்தக் கிராமத்திற்கு வெள்ளம் செல்லாத வகையில், அந்தத் தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டத்தை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தத் திட்டம் மேற்பார்வை பொறியாளர் அவர்களால் அனுப்பப்பட் டிருக்கிறது. ஒருசில விவரங்கள் கோரி, திரும்ப அவருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது என்று சொன்னேன். அந்த விவரங்கள் வந்தபிறகு, அந்த விவரங்களில், தரப்பட்டு இருக்கிற விவர அறிக்கையில் நாம் எதிர்பார்க்கும் நோக்கம் நிறைவேறுமா இல்லையா என்பதைத் தெரிந்துவைத்துக் கொண்டுதான் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்,

திருமங்கலம் நிலையூர் கண்மாய் விரிவாக்கும் திட்டம்.

628 (*வினா எண். 1993)—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில், நிலையூர் கண்மாயிலிருந்து பெரியாறு தண்ணீரை, வலையங்குளம், வலையப்பட்டி, நெடுமதுரை, எலியார்பத்தி, பாரப்பத்தி, கூடக்கோவில் போன்ற ஊர்களுக்கு விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே. (அ) நிலையூர் கண்மாயிலிருந்து தண்ணீரை வலையங்குளம், வலையப்பட்டி, நெடுமதுரை, எலியார் பத்தி பாரப்பத்தி, கூடக்கோயில் போன்ற ஊர்களுக்கு விரிவாக்கும் திட்டம் ஏதும் பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

பெரியார்—வைகை சீரமைப்புப் பணி.

629—(*வினா எண். 2144)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார்-வைகை சீரமைப்புப் பணி முடிவடைந்து விட்டதா?

(ஆ) திட்டமிட்டபடி, அதனால் கிடைக்கும் பலன்கள் யாவை?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) பெரியாறு வைகை திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முடிவுற்றது. இரண்டாம் கட்டப்பணிகள் தற்பொழுது எடுக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகள் 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



(ஆ) பெரியாறு— வைகை சீரமைப்புத் திட்டத்தின் மூலம் சேமிக்கப்படும் உபரிநீரைக் கொண்டு முதற்கட்டப் பணிகளில் சுமார் 10,305 ஹெக்டேர் கூடுதல் நிலப்பரப்புகளுக்கு பாசன வசதியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டப் பணியின் கீழ் 7,521 ஹெக்டேர் கூடுதல் நிலங்கள் பாசன வசதி பெறும்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை—பெரியார் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொண்டு இரண்டாவது கட்டம் முடியும் தருவாயில் மேற்கொண்டு 4 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு எங்களுடைய பகுதிக்கு தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டோம். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாக கூறினார்கள். இப்போது அதைப் பற்றி விவரம் ஏதாவது கூற முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்தில் விவரம் இல்லை என்றாலும், எதிர்க்கட்சித் தலைவருடைய கோரிக்கை பரிவோடு பரிசீலிக்கப்படும். ஆனால் உலக வங்கியைப் பொறுத்த வரையில் ஏற்கனவே உலக வங்கி எந்த திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி இருக்கிறதோ அதற்கு மாறாக வேறு எந்தத் திட்டத்திற்கும் ஒப்புதல் வழங்கயியலாது. கூடுதலான பகுதிக்கு பாசன வசதி தரவேண்டும் என்றுசொன்னால் அதற்கு தனியாக தமிழக அரசின் மூலமாக தன்னுடைய சொந்த நிதியிலிருந்து சொந்தத் திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் பகுதியில் இதிலே குறிப்பிட்டு இருக்கும் ஊர்களுக்கு நிலையூர் கண்மாயிலிருந்து பாசனத்திற்கு நீர் விரிவாக்கம் திட்டம் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது கேட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். நான் இந்த மாமன்றத்தில் முன்னால் சொன்னது போல் வறுமைக் கோட்டுக்கு அருகிலே உறவாடிக்கொண்டு இருக்கிற இந்த மூப்பர் சமுதாய மக்களுக்கு வேறு வழி இல்லை, விதி இல்லை. இந்தக் காரணத்தால் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பலமுறை வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. இப்போது பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும் கூட அரசால் அந்தமாதிரி பூர்வாங்க ஆய்வு ஏதாவது நடத்தப்பட்டதா? நடத்தப்பட்டு அதற்கான அறிக்கை அரசுக்கு வந்து இருக்கிறதா என்பதை உங்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அந்தத் திட்டத்தின் பயன் எவ்வளவு அதிகமான அளவுக்கு கிடைக்க

வேண்டுமோ அந்த அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவது தான் இந்த அரசின் செயல்முறை திட்டம் ஆகும். அந்த முறையில் ஒரு திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்ற அத்தனை திட்டப் பகுதிகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எவ்வளவு தூரத்திற்கு அதிகமான அளவுக்குப் பயன் கிடைக்குமோ அந்த அளவுக்கு அதிகமான பயனை தரக்கூடிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புவது, 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தமாதிரி பூர்வாங்க பணி அங்கே இருக்கின்ற நீர்ப்பாசன சம்பந்தப்பட்ட பொறியியல் துறையின் அலுவலகத்தால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நானும், அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயச் சங்கத் தலைவர்கள், ஊர் பொது மக்கள் எல்லோரையும் அழைத்துச் சென்று இந்த இந்த பகுதிகளை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி பூர்வாங்க ஆய்வு செய்யப்பட்டது எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. ஒருவேளை அந்த ஆய்வு அறிக்கை அரசுக்கு வரவில்லையோ என்னவோ, அப்படி ஏதாவது செய்யப்பட்டு இருக்குமானால் அதனை விரைந்து பெறுவதற்கு, அந்தத் திட்டத்தை மேலும் முனைப்பாக்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டு இருக்கிற விவரங்களின் அடிப்படையில் நிலையூர் கால்வாயை மேம்படுத்தி உபரியான வைகை நீரைப் பயன்படுத்தி 76 கண்மாய்களுக்கு நீரை உறுதிப்படுத்தும் திட்டம் ஒன்று தலைமை பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் இருக்கிறது. இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் 76 கண்மாய்கள் இருக்கின்றன. அந்தக் கண்மாய்களில் வலையங்குளம், வலையப்பட்டி, நெடுமதுரை, எலியார்பட்டி, டாரப்பட்டி, கூடக்கோயில் ஆகிய அத்தனை கண்மாயும் அமைகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி ஆனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது 1958-ல் கக்கன்ஜி அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில் ராயசிங்கமங்கலம் கண்மாயை ரிசர்வ் டாங்காக தண்ணீரை தேக்குகின்ற கண்மாயாக வைத்து 72 கண்மாய்களுக்கு அதிலிருந்து தண்ணீர் விடவும் 30 கிராமங்கள் அதன் மூலம் பயன் பெறவும் ஒரு திட்டம் வகுத்து இருந்தார்கள்.



இந்த சீரமைப்பின் மூலம் மிச்சம் வருகின்ற தண்ணீரினை இந்தத் திட்டத்தோடு இணைக்கின்ற செயற்குறிப்பு அரசாங்கத்திடம் உள்ளதா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. யா. சை.மு. யூசுப் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சீர அமைப்பைப் பொறுத்தவரையில் இப்போது பக்ராநங்கல் உடைத்ததற்குப் பிறகு, சிமெண்ட் சிலாப்கள் போடுவதற்கு முன்னாலே, பிளாஸ்டிக்கைக் கரைத்து அதிலே ஊற்றி அதன் மூலம் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வெளியே வராமலும், போடுகிற சிலாப்-கள் என்றும் நிலை பெற்று இருக்கின்ற திட்டத்தை நம் இந்திய நாட்டு விஞ்ஞானிகளே கண்டுபிடித்து செய்து இருக்கிறார்கள். அதனை இங்கே நாம் பின்பற்றுகிறோமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட பிளாஸ்டிக் காகிதங்களை எல்லாம் இரண்டு சிமெண்ட் பலகைகளுக்கு நடுவே போடக்கூடிய திட்டம் பரீட்சார்த்தகரமாகச் செய்து பார்க்கப்பட்டது. அதனால் எதிர்பார்க்கக் கூடிய அளவுக்கு பெரிய பயன் கிடைத்ததாகத் தெரியவில்லை. இது ஒரு தேவை அற்ற செலவு என்று கருதி தற்போது அது மேற்கொள்ளப்படவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

சட்ட கல்லூரி மாணவர் விடுதி கட்டிடம்

630—(*வினா எண். 2160)—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

பிரகாசம் சாலை (பிராட்வே ரோடு)யில் உள்ள, பாழடைந்த நிலையில் உள்ள, சட்டக் கல்லூரி மாணவர் விடுதியை இடித்துவிட்டு, புதிதாகக் கட்டும் திட்டம் அரசிடமுள்ளதா?

மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் : தலைவர் அவர்களே, பிரகாசம் சாலை (பிராட்வே ரோடு)யில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக மாணவர் குழு கட்டிடத்தை, சென்னைக்கு வெளியூரிலிருந்து அரசு அலுவல் நிமித்தம் வரும் அரசு அதிகாரிகள் தங்கும் இல்லமாக மாற்றத் தேவையான செப்பனிடும் பணிகளை நிறைவேற்ற அரசு அனுமதி வழங்கியது.

ஆனால், பின்பு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் முதலீட்டைப் பயன்படுத்தி கூட்டுறவுத்துறையில், இக்கட்டிடம் இருக்கும் இடத்தில் சாதாரண மக்களுக்கும் குறைந்த வசதி படைத்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் பயன்படும் வகையில் மலிவான வாடகை அறைகள் கொண்ட ஓர் ஓட்டல் கட்ட அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது.

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, இதை எப்படி மாற்றுகிறார்கள் என்பது அல்ல. அந்தக் கட்டிடம் மிகவும் பழுதடைந்து விட்டிருக்கிறது. பாழடைந்து இருக்கிற காரணத்தால், அந்தச் சுற்றுச் சுவர் எல்லாம் இடிந்து இருக்கிறது. சுற்றுப்புறத்திலே இருக்கிற ஏழை எளியவர்கள் அங்கே மழைக் காலங்களில் தங்கி விடுகிறார்கள். திடீரென்று அந்தக் கட்டிடத்தில் ஏதாவது விபத்து ஏற்பட்டால், அங்கே உயிர்ச் சேதம் ஏற்படும். ஆகவே தான், அதை பழுதுபார்க்கிறார்களா அல்லது இடித்து விட்டு புதிய கட்டிடமாகக் கட்டுகிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்விகளைக் கேட்கின்ற நேரத்தில், எந்த நோக்கத்திலே கேள்வி கேட்டார் என்று அரசுக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. ஆகவே தான் கேள்விக்கேற்ற விடை வருகின்றது. என்றாலும் அவருடைய அச்சம், இந்த அரசைப் பொறுத்தவரையிலும் அப்படிப்பட்ட அச்சம் கொள்ளக்கூடாத அளவுக்குத்தான் பணிகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. ஏற்கெனவே 12 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீடு ஒன்று போடப்பட்டு, அந்த அறைகளை எல்லாம் செப்பனிடுதல், அறைகளுக்கு புதிய மின் விசிறிகள் வாங்கி அமைத்தல், மரச் சாமான்கள் அமைத்தல் மற்றும் கட்டில்கள் போன்றவற்றை எல்லாம் அமைத்து 120 மீட்டர் அளவுக்கு சுற்றுச்சுவர் ஒன்றை எழுப்பி ஒரு 68 அறைகளைக் கொண்ட ஒரு தங்கும் விடுதியாக மாற்றத்தான் தீர்மானித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஏறத்தாழ ஆரம்பப் பணிகள், உடனடியாக பழுது பார்க்கக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கட்டிடம் பழுதுபட்டு இடிந்து விழக்கூடிய அபாயகரமான நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை பழுதுபார்ப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் முதலிலே சுற்றுச் சுவரைக் கட்டி விட்டால் ஏழைகள் உள்ளே போய் தங்கிட அவர்களுக்கு ஆபத்து ஏற்படாது என்பதற்காக உடனடியாக அந்தச் சுற்றுச் சுவரை எழுப்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்து இருக்கும் இந்த அரசு, ஏழை மக்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கின்றன. ஏழைகளுக்கு எந்த இடத்திலே எப்படி வசதி செய்து தரவேண்டும் என்ற திட்டங்கள் எல்லாம், செயல் முறைகள் எல்லாம் இந்த அரசிடத்தில் தனியாக இருக்கின்றன. ஆகவே அந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த இடத்தினைப் பொறுத்தவரையில், இந்த இடத்தில் வேறு ஒரு திட்டம் கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### கொள்ளிடத்தில் தடுப்பு அணை.

631—(*வினா எண். 2176)—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடத்தின் வழியாக கடலில் வீணாகும் நீரைத் தேக்கி விவசாயத்திற்கும், குடிநீராகவும் பயன்படுத்தும் வகையில் அணைக்கரைக்கு கிழக்கே 30 கி.மீ. தொலைவில் ஒரு தடுப்பு அணை கட்டும் (Bed dam) திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், கொள்ளிடத்தின் வழியாக கடலில் வீணாகும் நீரைத் தேக்கி விவசாயத்திற்கும் குடிநீராகவும் பயன்படுத்தும் வகையில் அணைக்கரைக்கு கிழக்கே 30 கி.மீ. தொலைவில் ஒரு தடுப்பு அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். கரிகாலன் கல்லணையைக் கட்டியதற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆண்டபொழுது மேல் அணை—அப்பர் டேம்—என்று முக்கொம்புக்குப் பக்கத்திலும், லோயர் டேம் என்று அணைக்கரையில், கும்பகோணத்திற்கு வடக்கே பத்து கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு அணையைக் கட்டி நீர்ப் பாசனத்தை முறைப்படுத்தினார்கள். இப்பொழுது மழைக்காலங்களில் அதிகமான தண்ணீர் கடலில் சென்று சேருவதால் லோயர் டேம் இருக்கின்ற

அணைக் கரைக்கு கிழக்கே 30 கிலோ மீட்டர் தொலையில் ஒரு 'பெட் டேம்'—அதாவது தடுப்பு அணையைக் கட்டினால் நிச்சயமாக அதிகமான தண்ணீரைத் தேக்கி வைத்தால் தஞ்சை மாவட்டத்திற்குப் பயனை அளிக்க முடியும். ஆகவே, இதைப்பற்றி மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் கலந்து பேசி மாண்புமிகு அமைச்சரவர்கள் இனிமேலாவது அந்த அணையைக் கட்டுவதற்கான முயற்சிகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொள்ளிடம் ஆற்றின் கடைசியாக உள்ள அணைதான் கீழ் அணை ஆகும். இந்தக் கீழ் அணையில் வாயிலாக நான்கு கால்வாய்கள் பிரிக்கப்பட்டு 1,32,300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்தக் கீழ் அணையைப் பொறுத்தவரையில் வடகிழக்குப் பருவமழைக் காலத்திலே மட்டும்தான் இந்தப் பகுதியில் பெய்யும் மழையின் காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பெரும்பாலும் இத்தகைய தண்ணீர் வருகின்ற காலம் அக்டோபர், டிசம்பர் மாதங்களாக அமைந்திருப்பது வழக்கம். சில நாட்கள் மட்டுமே உபரித் தண்ணீர் பாக்கியிருக்கும். அந்த வகையில் பார்க்கின்றபொழுது பாசனத்திற்கும், குடி தண்ணீருக்கும் தொடர்ந்து இடம் இருக்க வேண்டும் ; அப்பொழுதுதான் அம்மாதிரி செல்லும் இடங்களில் தண்ணீரைத் தேக்கி வைத்து பாசனம் அல்லது குடி தண்ணீர் தேவைக்காக நீர்த்தேக்கத்தைக் கட்ட முடியும். வினாவில் கூறியுள்ள 'பெட் டேம்' கட்ட வேண்டுமென்றால் தொடர்ந்து தண்ணீர் இருக்க வேண்டும். அந்த வகையில் பார்க்கின்ற பொழுது அங்கே 'பெட் டேம்' கட்டுவதற்கான வழிவகைகள் இல்லை ஆகவேதான் இது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற இரண்டு தினங்களுக்கு முன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் சொல்லுகின்ற பொழுது சீர்காழி நகரத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்குவதற்கு கொள்ளிடத்திலிருந்து தண்ணீரை எடுக்க வேண்டுமென்ற திட்டம் இருப்பதைப்பற்றி அறிவித்தார்கள். ஆகவே, சீர்காழிக்கு மட்டுமல்ல, இன்னும் பலவேறு கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கவும் தண்ணீர் தேவைப்படுகிறது. அதைப் போல, மேட்டூரையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அதில் காலதாமதம் ஆவதால், அங்கே கொஞ்சம் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொண்டால் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் காலத்திலே நெல் விதைகளை விதைத்துக் கொள்வதற்காகவாவது அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகவே, இப்படிப்பட்ட அவசியங்களைக் கருதி மாண்புமிகு அமைச்சரவர்கள், அந்தத் தண்ணீர் விரயமாகாமல் தடுப்பதற்கான தக்க நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அணை கட்டப்பட்ட வரலாற்றைப் பற்றி இங்கே கூறினார்கள் அவர்களே சொல்லும்பொழுது, கீழ் அணை என்றும், மேல் அணை என்றும் எல்லாம் சொன்னார்கள். ஏற்கனவே ஆரம்பத்திலே திட்டமிட்டதில், இதற்குக் கீழே இனி கட்ட முடியாது என்றுதான் கீழ் அணையைக் கட்டி இருக்கிறார்களோ என்று கருத வேண்டியுள்ளது. அந்தவகையில் பார்க்கின்ற பொழுது வேறு இத்தகைய செயல்முறைகள் கொண்டுவரப்படுவதால் எந்த இலாபமும் இருக்காது என்பதால் கீழ் அணைக்கு அடுத்து,—அதை அப்பர் மிடில் அணையாக மாற்றி இன்னொரு கீழ் அணையை உருவாக்கும் திட்டத்தைப் போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசலாற்றில் கலுங்கு கட்டும் திட்டம்.

632—*(வினா எண். 2831)—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் வட்டம், திருவலஞ்சுழி கிராமத்தில் அரசலாற்றில் கலுங்கு கட்டும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் நிறைவேற்றுவதில தாமதமாவதின் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே,
(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

I—

பெரிய மற்றும் சிறு பாசனத் திட்டங்களுக்கு செலவிடப்பட்ட தொகை.

வினா 63—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் 1981 முதல் 1984 வரை பெரிய மற்றும் சிறு பாசன திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) ஏதாவது மாவட்டத்தில் தொகை பயன்படுத்தாமல் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

விடை—

ஒவ்வொரு மாவட்டத்திலும் செலவிடப்பட்ட தொகையின் விவரம் கீழ்வருமாறு :—

1981—82

| வரிசை எண்ணும், மாவட்டத்தின் பெயரும். (1) | பெரிய பாசனத் திட்டங்கள் (2) | சிறு பாசனத் திட்டங்கள் (3) |
|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 1 தென் ஆற்காடு | .. | 6,625 |
| 2 வட ஆற்காடு | 1,799 | 749 |
| 3 தஞ்சாவூர் | 7,570 | 16,204 |
| 4 திருச்சிராப்பள்ளி | 7,032 | 5,024 |
| 5 புதுக்கோட்டை | .. | 1,493 |
| 6 தருமபுரி | .. | 230 |
| 7 மதுரை | 10,156 | 11,282 |
| 8 ராமநாதபுரம் | 17,361 | 4,186 |
| 9 கோயம்புத்தூர் | 41,451 | 339 |
| 10 நீலகிரி | 2,034 | 666 |
| 11 சேலம் | .. | 1,114 |
| 12 பெரியார் | 174 | 3,226 |
| 13 திருநெல்வேலி | 3,874 | 3,050 |
| 14 கன்னியாகுமரி | 595 | 230 |

1982—83.

| (1) | (4) | (5) |
|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 1 தென் ஆற்காடு | 250 | 6,096 |
| 2 வட ஆற்காடு | 2,108 | 5,215 |
| 3 தஞ்சாவூர் | 25,623 | 14,565 |
| 4 திருச்சிராப்பள்ளி | 21,467 | 6,320 |
| 5 புதுக்கோட்டை | 2,776 | 2,164 |



1982—83

| வரிசை எண்ணும், மாவட்டத்தின் பெயரும். (1) | பெரிய பாசனத் திட்டங்கள். (6) | சிறு பாசனத் திட்டங்கள். 7) |
|---|---|---|
| 6 தருமபுரி | .. | 4,973 |
| 7 மதுரை | 24,888 | 5,284 |
| 8 ராமநாதபுரம் | 26,393 | 17,826 |
| 9 கோயம்புத்தூர் | 49,353 | 543 |
| 10 நீலகிரி | 2,114 | 519 |
| 11 சேலம் | 3,612 | 1,958 |
| 12 பெரியார் | 6,741 | 4,018 |
| 13 திருநெல்வேலி | 2,072 | 4,863 |
| 14 கன்னியாகுமரி | 5,282 | 688 |

1983—84

| | | |
|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 1 தென் ஆற்காடு | 203 | 5,157 |
| 2 வட ஆற்காடு | .. | 3,118 |
| 3 தஞ்சாவூர் | 25,324 | 2,240 |
| 4 திருச்சிராப்பள்ளி | 27,081 | 24,487 |
| 5 புதுக்கோட்டை | 2,444 | 15,778 |
| 6 தருமபுரி | .. | 6,819 |
| 7 மதுரை | 19,382 | 3,692 |
| 8 ராமநாதபுரம் | 32,047 | 18,235 |
| 9 கோயம்புத்தூர் | 52,232 | 1,082 |
| 10 நீலகிரி | 25 | 828 |
| 11 சேலம் | 16,794 | 2,180 |
| 12 பெரியார் | 11,463 | 1,887 |
| 13 திருநெல்வேலி | .. | 3,450 |
| 14 கன்னியாகுமரி | 9,474 | 630 |

(அ) மற்றும் (இ) எந்த மாவட்டத்திலும் வழங்கப்பட்ட மானியம் காலாவதி ஆகவில்லை.

2—

## CONSTRUCTION OF WARD IN GOVERNMENT HOSPITAL AT KULASHEKARAN.

Q. 68—THIRU T. HEMACHANDRAN: Will the Honourable the Minister for Health be pleased to state—

(a) Whether the Government have accorded sanction for the construction of a ward in the Government Hospital at Kulashekaran, and

(b) If not, considering the want of proper building to accommodate patients, whether the Government will take steps to construct a building there?

Answer—

(a) No.

(b) Necessary steps will be taken for construction of building as and when necessity arises.

கூடுதல் பகுதி கட்ட வேண்டிய அவசியம் பரிசீலிக்கப்பட்டு தேவையான தருணத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3—

ஹாடனேரி கிராம ஆதிதிராவிடர் குடியிருப்பில் குடிநீர் கிணறு.

வினா 101—திரு. இரா. தாமரைக்கனி: ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி ஹாடனேரி கிராம ஆதி திராவிட மக்கள் குடிக்கும் குடி தண்ணீர் கிணற்றில் சாக்கடை தண்ணீர் கலப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சாக்கடை நீர் கலக்காமல் பாதுகாக்கப் பட்ட குடிநீர் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ): காமராசர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி ஹாடனேரி ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள கிணற்றின் பிளாட்பாரத்தை, மறுபடியும் புதுப்பித்து சாக்கடை நீர் ஓட வாய்க்கால் கட்டும் பணியை நிறைவேற்ற அறிவுரைகள் வழங்கப்பட்டு, மராமத்துப் பணி எடுக்கப்பட்டு விட்டது.

4—

இராமசாமியாபுரத்தில் சமுதாயக் கூடம்

வினா 110—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி, இராமசாமியாபுரம் ஆதி திராவிட மக்களுக்காக 'சமுதாயக் கூடம்' கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

5—

பள்ளி மாணவர்களுக்கு போட்டோவுடன் அடையாள சாதி சான்றிதழ் வழங்கல்.

வினா 227.—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி மாணவர்களுக்கு வசதியாக போட்டோவுடன் கூடிய அடையாள சாதி சான்றிதழை பள்ளியிலேயே வழங்க அரசு முயற்சி எடுத்துள்ளதா ?

விடை—

இது பற்றி கருத்துரு ஏதும் இல்லை.





நாகை மருத்துவமனை

6—

வினா 260.—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மருத்துவ மனையில் இதய தீவிர சிகிச்சைப் பிரிவு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது இயங்கும் நிலையில் உள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ): நாகை மருத்துவ மனையில் 1983-ல் தீவிர இதய சிகிச்சைப் பிரிவு அமைக்கும் அரசாணை பிறப்பிக்கப் பட்டு கட்டிடம் கட்டும் பணிகள் நடந்து வருகிறது. அது முடிந்த பிறகு இயங்கும்.

7—

வினா 261—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மருத்துவ மனையில் 105 படுக்கைக் கொண்ட வார்டிற்கு நகராட்சி குடிநீர் குழாய் இன்னும் நீடிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): குடிநீர் குழாய் இணைப்பு இன்னும் கொடுக்கப்படவில்லை. தற்சமயம் இப்பிரிவுக்கு குடிநீர் மற்றப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு வருவது போல கிணற்றிலிருந்து நீரேற்று பம்புக் குழாய் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

8—

மல்லிகுண்டம் பகுதியில் இராணுவத் தளவாட தொழிற்சாலை

வினா 334—திரு. கு. அய்யராயன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் ஓமலூர். தாரமங்கலத்திற்கு இடையில் உள்ள மல்லிகுண்டம் பகுதியில் இராணுவத் தளவாட தொழிற்சாலை மத்திய அரசு அமைக்க இருப்பது பற்றி தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம்?

விடை—

(அ) இல்லை.
(ஆ) வினாவிற்கு இடமில்லை.

9—

பள்ளிக்கல் பகுதியில் தாழ்வான சாலையை உயர்த்துதல்

வினா 355—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிக்கல் பகுதியிலுள்ள மாங்காடு விரிவிளையின் தாழ்வான சாலையை உயர்த்தி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): 198[illegible], இப்பகுதி பராமரிப்பில் புதுப்பிக்கப்பட்டு சாலை ஓர வடிகால்கள் தார் எடுக்கப்பட்டன. எனினும், மழைக்காலத்தில் நீர் தேங்குவதால், பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தி, பகுதி, பகுதியாக மேம்பாட்டுப் பணிகளை 1985-86 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க ஆவன செய்யப்படும்.

10—

காட்டுமன்னார்கோயிலிலுள்ள கிராமச் சாலைகளை செப்பனிடும் பணி.

வினா 387—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தாலுக்காவில் உள்ள கிராமச் சாலைகளை செப்பனிடும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் நடப்பாண்டில் எந்தெந்த சாலைகள் செப்பனிடப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1985-86 ஆம் ஆண்டில் காட்டுமன்னார் தாலுகாவில் உள்ள காட்டுமன்னார் மற்றும் குமராட்சி ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க்கண்ட சாலைப்பணிகளை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.



காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றியம்.

| சாலையின் பெயர். (1) | மதிப்பீடு. (2) ரூபாய். |
| --- | --- |
| 1 ஏசம்புரம் சாலையை சரளைக் கற்சாலையாக மேம்பாடு செய்ய .. .. .. | 30,000 |
| 2 குப்பன் குடி கீழ்ராதாமூர் சாலையைச் சரளைக் கற்சாலையாக மேம்பாடு செய்ய .. | 1,50,000 |

குமராட்சி ஊராட்சி ஒன்றியம்.

| சாலையின் பெயர். (1) | மதிப்பீடு. (2) ரூபாய் |
| --- | --- |
| 1 தெய்வாசல் சாலையை சரளைக் கற்சாலையாக மேம்பாடு செய்ய .. .. .... | 1,80,000 |
| 2 காலனி சாலைகள் மேம்பாடு செய்ய .. | 2,40,000 |

11—

காட்டுமன்னார் கோயில் அரசு மருத்துவமனையை விஸ்தரித்தல்.

வினா 393—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயில் அரசு மருத்துவமனையை விஸ்தரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

தற்சமயம் இல்லை.

12—

பழனி முருகன் கோயிலுக்கு மேலும் இழுவை இரயில் விடும் திட்டம்.

வினா 462—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி முருகன் கோயிலுக்கு மேலும் ஒரு இழுவை இரயிலை விடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும்?

[illegible]

விடை—

(அ) அருள்மிகு பழனி முருகன் கோயிலுக்கு மேலும் ஒரு (மூன்றாவது) இழுவை இரயில் விடும் திட்டம் திருக்கோயிலின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இப்பணி தொடர்பாக, தொழில் நுட்ப நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. பரிசீலித்து இன்னும் முடிவுகள் எடுக்கப்படவில்லை.

13—

கோவை அரசு மருத்துவமனையில் விபத்து சிகிச்சை பிரிவுக்கு புதிய கட்டிடம்.

வினா 515—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் மருத்துவமனையில் விபத்து சிகிச்சை பிரிவுக்கு புதிய கட்டிடம் கட்டி முடிக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கட்டிடத்தை முடிப்பதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. வேலையினை துரிதப்படுத்தவும் விரைவில் முடிப்பதற்கும் பொதுப்பணித் துறையினரால் ஆவன செய்யப்பட்டு வருகிறது.

14—

பார்வையற்ற குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்.

வினா 520—திரு. க. சோலைராஜ :— மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பார்வையற்ற குழந்தைகளுக்கு வரும் கல்வி ஆண்டிலிருந்து தரப்படும் "ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்" எந்த வகையில், அமுல்படுத்தப்பட்டுள்ளது?

விடை—

மைய அரசு தமிழ்நாட்டிலுள்ள உடல் ஊனமுற்ற குழந்தைகளை, சாதாரண குழந்தைகளுடன் சாதாரணப் பள்ளிகளில் ஒருங்கிணைக்கும் திட்டத்தை தீட்டி இதனை செயல்படுத்த



தேவையான நடவடிக்கை எடுக்கும்படி மாநில அரசை கேட்டுக் கொண்டது. இத்திட்டத்தின் நோக்கம், ஊனமுள்ள குழந்தைகளை சாதாரண பள்ளிகளில் இதற்கான தனிப்பட்ட ஆசிரியர்கள் மற்ற உபகரணங்கள் உதவிகளுடன் படிக்க வைப்பதாகும். இவ்வாறு செயல்படுத்தத் தேவையான செலவுகள் அனைத்தையும் ஆறாவது திட்ட காலத்தில் மைய அரசே ஏற்றுக் கொள்ளும். இத்திட்டத்தின் கீழ் ரூ. 16,40,000 உதவித் தொகையை மைய அரசு வழங்கியுள்ளது. ஓர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 10 பள்ளிகள் வீதம் சுமார் 4,000 பள்ளிகள் இத்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படலாம் என்றும். முதல் நிலையாக கண் தெரியாத மற்றும் உடல் ஊனமுற்ற (orthopaedically handicapped. குழந்தைகளை முதல் வகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம் எனவும் இவர்களுக்கு போதிக்கத் தேவையான தனிப் பயிற்சியை முதற் கண் ஆசிரியர்களுக்கு அளிக்க வேண்டும் என்றும் அரசு முடிவெடுத்தது. இதற்கிணங்க 300 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க ஆணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் முதல் கட்டமாக பூவிருந்தவல்லி அரசு பார்வையிழந்தோர் மேல்நிலைப் பள்ளியில் 50 ரிசோர்ஸ் ஆசிரியர்களுக்கும் கோயம்புத்தூர் இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலாயா கல்விக் கல்லூரியில் 50 ரிசோர்ஸ் ஆசிரியர்களுக்கும் 11—2—1985 முதல் 4—5—1985 முடிய (12 வாரங்கள்) பயிற்சி அளிக்கப்பட்டது. மீதமுள்ள 200 ரிசோர்ஸ் ஆசிரியர்களுக்கு 1985-86 ஆம் கல்வி ஆண்டில் பயிற்சி அளிக்க உள்ளது. மேலும் இத்திட்டத்தினை 1985-86 ஆம் கல்வி ஆண்டில் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15—

மருங்காபுரி தொகுதியை வறட்சிப் பிரதேசமாக அறிவித்தல்.

வினா 528—திரு. க. சோலைராஜ : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதியினை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

விடை—

இல்லை.

இந்த ஆண்டு மாநிலம் முழுவதிலும் 25 வட்டங்களில் குடிநீர்ப்பற்றாக்குறை மட்டுமே இருப்பது கண்டறியப்பட்டு அப்பகுதிகளின் குடிநீர் வழங்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை வட்டத்தில் உள்ள மருங்காபுரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலும்குடிநீர் வசதிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

16—

திண்டுக்கல் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்தல்.

வினா 535—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதியினை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு செயற்குறிப்பு உள்ளதா?

விடை :—

இல்லை.

தமிழகத்தில் திண்டுக்கல் தொகுதியுட்பட எந்த ஒரு பகுதியிலும் வறட்சி நிலை இல்லை. திண்டுக்கல் நகராட்சிப் பகுதியில் குடிநீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் லாரிகள் முதலியன மூலம் குடிநீர் விநியோகம் செய்ய அரசு அனுமதித்துள்ளது. இப்பணிகள் நடந்தேறி வருகின்றன. குறைந்த அளவு நீர்ப் பாசனம் காரணமாக பயிர்கள் பாதிக்கப்பட்ட 3 கிராமங்களின் நிலவரி ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

17—

வடகாடு அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

வினா 555—திரு த. புஷ்பராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை :—

1985—86-ல் சில உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அனுமதிக்கலாமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது. வடகாடு அரசு உயர்நிலைப் பள்ளியின் தேவையும் அவ்வாய்வின்போது கருத்தில் கொள்ளப்படும்.

18—

குடியாத்தம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தல்.

வினா 580—திரு. ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



குடியாத்தம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

குடியாத்தம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக தனியாருக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்த, 10—9—1984 நாளிட்ட அரசு ஆணை (நிலை) 246-ல் நிலம் கையகப்படுத்தும் சட்டம் பிரிவு 4(1)-ன் கீழ் அறிவிப்பு வெளியிட அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்பேரில், மேற்படி நிலங்களை கையகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

19—

திருப்புவனம் நகரில் பெண்கள் இல்லத்திற்கு புதிய கட்டிடம்.

வினா 588—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"திருப்புவனம் (மானாமதுரைத் தொகுதி) நகரில் ஆதி திராவிடர் நலத்துறையால் நடத்தப்படும் பெண்கள் இல்லத்திற்கு (Hostel) புதிய கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?''.

விடை—

18—2—1985 நாளிட்ட அரசு நிலையாணை (சமூக நலத்துறை) எண் 531-ல் இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் நகரில் உள்ள ஆதிதிராவிடர் நல பெண்கள் விடுதி கட்ட ரூ. 11.50 இலட்சம் செலவுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இக்கட்டிடம் கட்டுவதற்காக ஒப்பந்தக்காரர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20—

திருச்சி சித்தாமணி பேருந்து நிலையத்தை அபிருத்தி செய்யும் திட்டம்.

வினா 668—திரு. இரா. தாழ்ரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரிலுள்ள சித்தாமணி பேருந்து நிலையத்தை, ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இதற்காக ரூ. 25.00 இலட்சம் கடனுதவி அளிக்க, கொள்கை அளவில், நகர் ஊரமைப்பு வாரியம் 1982-83-ல் ஒப்புக்கொண்டது. ஆனால், பொதுப்பணித்துறை, கண்காணிப்புப் பொறியாளர், இத்திட்ட மதிப்பீடு ரூ. 37.50 இலட்சம் ஆகும் என தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, இதை இரு பகுதிகளாகப் பிரித்து, வரைபடமும், மதிப்பீடும் தயாரித்து, தொழில் நுட்ப அனுமதி பெற, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

21 —

மலைப்பகுதியில் பணியாற்ற உறுதிமொழி அளித்தல்.

வினா 667—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு ஊழியராக பணியாற்ற இனிமேல் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் நீலகிரி போன்ற மலைப் பகுதிகளிலும் பணியாற்ற உடன்படுவதாக உறுதிமொழி தரவேண்டும் என்ற செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

விடை—

மாநிலம் முழுவதும் ஒரே அலகாக நிர்ணயிக்கப்பட்ட பதவிகளில் நியமனம் பெற, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவிற்கு, உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் அதற்கு இணையாக பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்களுக்கு, அவர்கள் மலைப் பகுதிகளில் கட்டாயமாகப் பணிபுரிய வேண்டிவரும் என்றும், அப்படிப் பணிபுரிய மறுத்தாலோ அல்லது தாமதித்தாலோ, அவர்கள் அப்பதவியை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்து அதற்கு இசைவாக மேற்படி நிபந்தனையையும் விண்ணப்ப படிவத்திலேயே குறிப்பிட்டு அதில் அவர்களின் ஒப்புதலையும் பெறவேண்டும் என்று அரசு (நிலை) ஆணை எண் 926, நாள் 12—9—1984-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

22—

மதுரை பாண்டியன் சூப்பர் மார்க்கெட்டில் ஏற்பட்ட கையாடல் மீது நடவடிக்கை.

வினா 670—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மதுரை பாண்டியன் சூப்பர் மார்க்கெட்டில் ரூ. 10 லட்சம் வரை கையாடல் செய்ததாக 1985 ஆம் ஆண்டு சனவரியில் அங்கு பணிபுரிந்த அதிகாரிகள் மீது அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடியின் மருந்துப் பிரிவில் 1981-ல் ரூ. 5.12 இலட்சம் சரக்கு இருப்புக் குறைவு கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சரக்கு இருப்பு குறைவு சம்பந்தமாக நடந்த விசாரணை அறிக்கையின் பேரில் மதுரை துணைப்பதிவாளர் 1985 சனவரியில் குற்றவியல் நடவடிக்கை தொடர்ந்துள்ளார்.

23—

விளவங்கோடு தாலுக்காவிலுள்ள மலைப் பகுதியில் சாலை அமைக்கும் பணி.

வினா 699—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா சுற்றுலா முதல் ஆறுகாணி வரையுள்ள மலைப் பகுதியில் சாலை அமைக்கும் பணி நடந்து வருகிறதா?

(ஆ) இப்பணி எப்போது துவங்கப்பட்டது?

(இ) எப்பொழுது முடிவடையும்?

(ஈ) இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

விடை—

(அ) வினாவில் குறிப்பிட்டுள்ள பணி, கிராமச்சாலை திட்டம் 6-ம் கட்டப்பணியின்கீழ் சேர்க்கப்பட்டு வேலை நடைபெற்றுவருகிறது.

(ஆ) இப்பணி 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முறையே 5 பகுதிகள் 2—3—1983 அன்றும், ஒரு பகுதி 18—7—1983 அன்றும், எஞ்சிய ஒருபகுதி 5—9—1983 அன்றும் துவக்கப்பட்டன

(இ) பணிகள் அனைத்தும் 31—3—1986-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 23.40 இலட்சம் ஆகும்.

24—

தேங்காய் நாரையும், ரப்பரையும் சேர்த்து மெத்தைகள், தலையணைகள் தயாரித்தல்.

வினா 728—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேங்காய் நாரையும், ரப்பரையும் சேர்த்து மெத்தைகள் மற்றும் தலையணைகள் தயாரிக்கக் கூடிய ஒரு நிலையம் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த நிலையம் தஞ்சை மாவட்டம் பாபநாசம் நகரில் துவங்க அரசு முன் வருமா?

விடை—

(அ) ஆம். செங்கல்பட்டு மாவட்டம் அம்பத்தூரில் தேங்காய் நாரையும், ரப்பரையும் சேர்த்து மெத்தைகள் மற்றும் தலையணைகள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் நகரில் அமைக்கும் உத்தேசம் தற்பொழுது இல்லை.

25—

தஞ்சை மாவட்டத்திலுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள்.

வினா 731—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி மன்றம், மருத்துவக்குடி கிராமத்திலிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டிமுடிக்கப்பட்டு இப்பொழுது இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒன்றியம் ஆத்தூர் ஊராட்சி மன்றம், மருத்துவக்குடி கிராமத்தில் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்சொன்ன மேல்நிலைத் தொட்டியுடன் இணைக்கப்பட்டுள்ள மோட்டார் 22-4-1985-ல் பழுதாகிவிட்டது. மோட்டார் பழுது பார்க்கப்பட்டு தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவையில் (SENATE) 1985-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாள் பிற்பகல் முதல் ஏற்படும் இரண்டு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதி முறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (Proportional Representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 1985-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவை செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 1985-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1985-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ஆம் நாள் புதன் கிழமை மாலை 3.00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதவாவது இரண்டு இடங்களுக்கு மேற்படுமாயின் 1985-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18-ஆம் நாள் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்குமிடையே, சென்னை கோட்டையிலிருக்கும் பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு, நடைபெறும்.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) திருப்பத்தூர், வாணியம்பாடி வட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர், வாணியம் பாடி வட்டங்களில் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டினால் அப்பகுதி மக்களிடையே நிலவும் இன்னல்கள் குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 10-40]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

அறிக்கை.

பருவ மழைகள் காலந்தவறியதாலும், பொய்த்துப் போன தாலும் பரவலாக தமிழ்நாடு முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டு, நீர்நிலைகள் வற்றிப்போயின. மேலும் நிலத்தடி நீர் மிகவும் கீழே இறங்கிப்போனது இதனால் ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்னையை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆங்காங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களை கலந்தாலோசித்து தமிழ்நாடு முழுவதும் 9,463 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க திட்டமிட்டது. அதில் வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் 70 ஆழ்துளைக் கிணறுகளும் வாணியம்பாடி வட்டத்தில் 27 ஆழ்துளைக் கிணறுகளும், பரிந்துரைக்கப்பட்டன. மேலும் வறட்சிப்பணிக் காக அரசு நியமித்த உயர் மட்டக் குழு ஆய்வு செய்ததில் சேலம், தர்மபுரி, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை பெரியார் ஆகிய ஆறு மாவட்டங்களில் மட்டும் கடுமையான வறட்சி இருப்பதாக முடிவுசெய்து மேற்கண்ட மாவட்டங்களில் இதுவரை 660 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அரசு உத்திரவு வழங்கியதில் இதுவரை 582 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஆகவே, திருப்பத்தூர், வாணியம் பாடி பகுதிகளில் உள்ள குடிநீர்த் தட்டுப்பாடு நீக்க அரசு ஆவன செய்து வருகிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான வறட்சித் தமிழகத்தைத் தாக்கிய பொழுதெல்லாம் அதை எதிர்த்து சமாளித்த பெருமை இந்த அரசுக்கு உண்டு. அப்படியிருந்தும் தொடர்ந்து மழையில்லாத காரணத்தால் இன்று பல பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.



குறிப்பாக, என்னுடைய தொகுதியில், பல இடங்களிலே பொதுக் கிணறுகளில் கூட நீர் வற்றி, மக்கள் குடிநீருக்கு அவதிப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பத்தூர் வட்டத்தில் 70 ஆழ்துளைக் கிணறுகளும் வாணியம் பாடி வட்டத்தில் 27 ஆழ்துளைக் கிணறுகளும் பரிந்துரைக்கப் பட்டன என்று அறிவித்து இருக்கிறார்கள். அந்த இரண்டு பகுதிகளும், 4 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 3 தொகுதிகளுக்கும் உட்பட்ட பகுதியாக இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியில் இன்னும் அதிக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி, ஏற்படுகின்ற நேரத்திலே எல்லாம் புதிதாக ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பது என்பது சரியான முறையாகத் தெரியவில்லை. ஏனென்றால், ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் 60,000-க்கு மேல் இருக்கின்றன. ஆகவே, அவையெல்லாம் சரியாகப் பராமரிக்கப் பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்தின் அடிப்படையில் அவருடைய பகுதியினுடைய குடிநீர்த் தட்டுப் பாட்டினை ஆராய்ந்து, அதற்குரிய வகையிலே அரசு பணிகளை மேற்கொள்ளும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற, அரசு நியமித்துள்ள உயர்மட்டக் குழு, வறட்சிப் பகுதி எவை என அறிவித்துள்ளது. இன்றைக்குத் தமிழகத்தில் 6 மாவட்டங்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போது, அங்கு மட்டும்தான் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணிகள் —வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரை வேலை துவங்கப்படவில்லை. அரசு அலுவலர்களைக் கேட்கும்போது வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிற பகுதிகளில் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய ரிக்குகள் முழுவதும் அங்கே பணி யாற்றிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, எங்க ளது பகுதியில், அதுவும், குறிப்பாக, திருப்பத்தூர், வாணியம் பாடி பகுதியில் இதுவரை வேலை துவக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பத்தூர், வாணியம்பாடி பகுதியை, வறட்சிப் பகுதியாக அறிவிப்பார்களா ? வறட்சிப் பகுதி என்று அறிவித்தால் எங்களுக்குச் சலுகை கிடைக்கும். அதோடு காட்டகரி முன்ற பார்க்காமல், அங்கே பணிகளைச் செய்ய ஏதுவாக இருக்கும். ஆகவே, அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகள் என அறி வித்து, அதிகாரிகள் ஆழ்துளைக் கிணறுகளை உடனடியாகப் போடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. : தலைவர் அவர்களே, குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ஆழ்துளைக் கிணறுகள் மட்டும்தான் தேவை. தன் மூலமாக மட்டும்தான் அந்தத் தட்டுப்பாட்டைப் போக்க முடியும் என்பது அல்ல. வேறு வகையான வழிகளும் இருக்கின்றன. ஆகவே, அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தி னுடைய அடிப்படையில் அரசு முயற்சி மேற்கொள்ளும்.

(ஆ) காவிரி டெல்ட்டாப் பகுதி பாசனத்திற்குத் தண்ணீர் விடுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' காவிரி டெல்டா பகுதியை நம்பி விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வந்த பல இலட்சம் விவசாயத் தொழி லாளர்கள் வேலையிழந்து பட்டினி கிடக்கும் நிலை '' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப். : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.—

அறிக்கை.

மேட்டூர் நீர்த்தேக்கம் வழக்கமாக ஜுன் மாதம் 12 ஆம் தேதி காவிரி டெல்ட்டா பாசனத்திற்காக திறந்துவிடப்பட வேண்டும். மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருக்கும் நீரின் அளவை யும் மெர்க்காரா பகுதியில் தென்மேற்கு பருவ மழை பெய்வதை யும் கருத்தில் கொண்டு நீர்த்தேக்கம் எந்த தேதியில் திறக்கலாம் என்பது நிர்ணயிக்கப்படும். 1974 ஆம் ஆண்டு முதல், கர்நாடக அரசு 1924 ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்த விதிமுறைகளை கடை பிடிக்காமல், வரும் நீர் முழுவதையும் ஹேமாவதி, ஹேரங்கி, கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி ஆகிய நீர்த்தேக்கங்களில் தேக்கி வைத்து அவைகள் நிரம்பிய பின்பு தான் உபரி நீரை அனுப்புகிறார்கள். ஆகையால், கர்நாடகாவிலுள்ள நீர்நிலை களின் தேக்கத்தினை கருத்தில் கொண்டு, மேட்டூர் அணை திறக்கும் தேதியை நிர்ணயிக்கவேண்டியதாயிருக்கிறது.





2. இந்த ஆண்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் ஜுன் 12 ஆம் தேதி இருந்த நீரின் அளவு 11.5 டி.எம்.சி. ஆகும். அந்த சமயத்தில் கர்நாடக நீர்த்தேக்கங்களில் இருந்த நீரின் அளவு 22 டி.எம்.சி. ஆகும். கர்நாடகத்தின் நான்கு நீர்த்தேக்கங்களின் முழுக் கொள்ளளவு 106 டி.எம்.சி. ஆகும். அந்த சமயத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடையவில்லை. ஆகையால் மேட்டூர் நீர்த்தேக்கம் திறக்கும் தேதி ஒத்தி வைக்கப்பட்டது. கபினி நீர்த் தேக்கத்தின் நீர்பிடிப்பு பகுதியில் நல்ல மழை பெய்ததினால் நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீர் 26—6—1985 முதல் வினாடிக்கு 40,000 கன அடி வீதம் அனுப்பப்பட்டது. இதனால் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 29—6—1985 முதல் 1—7—1985 வரை வினாடிக்கு 46,000 கன அடி நீர்வரத்து வந்துள்ளது. தற்போது கபினி நீர்த்தேக்கத்திலிருந்து அனுப் பப்படும் உபரி நீர் 2—7—1985 முதல் வினாடிக்கு 2,000 கன அடியாக இருக்கிறது. ஆகையால், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீரின் வரத்து குறையத் தொடங்கியுள்ளது.

3. கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தின் நீரளவில் கணிச மான முன்னேற்றம் இல்லை. 7—7—1985 அன்று இந்நீர்த் தேக்கத்தின் நீரளவு 22.7 டி. எம். சி. இதன் முழுக் கொள்ளளவு 45 டி.எம்.சி. ஆகும்.

4. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 8—7—1985 அன்று நீரின் அளவு 31.6 டி.எம்.சி. ஆகும். மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 40 டி.எம்.சி. நீரளவும், மேலும் கணிசமான நீர்வரத்து வர வாய்ப்பும் இருந்தால், மேட்டூர் நீர்த்தேக்கம் பாசனத்திற்காக திறந்துவிடலாம். கர்நாடக மாநிலத்தில் உள்ள தேக்கங்களில் உள்ள நீரளவு, மேட்டூர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரளவு, அதன் நீர் வரத்து முதலியவை தினமும் ஆராயப்பட்டு வருகிறது.

5. தென்மேற்கு பருவமழை காலதாமதம் ஆனதாலும், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தொடக்கத்தில் போதிய நீர் இல்லாததாலும், மேட்டூர் நீர்த்தேக்கம் கடந்த 51 வருடங் களில், 34 வருடங்கள் தாமதமாக திறக்கப்பட்டுள்ளது. 1983- ஆம் ஆண்டு, மேட்டூர் நீர்த்தேக்கம், 17—8—1983 அன்றுதான் திறக்கப்பட்டது. இருந்தபோதிலும் காவிரி டெல்டாவில் விவசாயம் செய்வோரது நலன் காத்திட விசவாய தொழிலாளர் கள் வறுமை ஒழுந்திட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் 8—7—1985 முதல் மேட்டூர் அணையை திறந்துவிட உத்தரவிட்டார்கள். அன்று மாலை முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இருக்கக்கூடிய சூழ்நிலையில் விவசாயிகள் சிக்கனமான முறையில் பாசனத்தண்ணீரை பயன்படுத்தவேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, நான் கேட்டுக் கொள்வது, காவேரி நீர்ப்பாசனத்தை நம்பி வாழக்கூடிய விவசாயிகள் தஞ்சை மாவட்டத்தில் 7 இலட்சம் பேர், திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களிலும் சிதம்பரம் தாலுகாவிலும் 3 இலட்சம் பேர், ஆக மொத்தம் 10 இலட்சம் பேர் இருக்கிறார்கள். வருஷத்திற்கு 320 நாள் என்று எடுத்துக் கொண்டால், நடவு, அறுவடை எல்லாம் சேர்த்தால் 140 நாள்தான் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது. மீதி இருக்கிற 180 நாட்களுக்கு அவர்களுக்கு வேலை இல்லை. இந்த நிலையில். எப்போதும் ஜூன் மாதம் 12-ந்தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு 21-ந்தேதி கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் வந்து சேரும். அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் வேலை தொடங்கப்படும். இந்த ஆண்டு ஒரு மாதம் பிந்தி தண்ணீர் திறந்து விடப்பட்டதால் அந்த விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் வேலை இல்லாமல் ஒரு மாதமாக பட்டினி கிடக்கிறார்கள். இதற்கு முன்னாலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது அவர்களுக்கு மாற்று வேலையாக, வறட்சி நிவாரணப் பணியைப் போல் ஏதாவது வேலை கொடுப்பார்கள். அதைப் போன்று இப்படி வேலையில்லாத காலத்தில் அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கத்தைப் பொறுத்த வரையில் கடந்த 51 ஆண்டுகளில் 34 ஆண்டுகள் தண்ணீர் தாமதமாக திறந்து விடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை இந்த விவர அறிக்கையிலேயே தந்திருக்கிறோம். அது மட்டுமல்ல. கடந்த 1983 ஆம் ஆண்டில் கூட ஆகஸ்ட் மாதம் தான் தண்ணீர் திறக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலங்களில் எல்லாம் நீரளவு அதிகமாக இருந்தாலும்கூட நாம் தேவையான நேரத்தில் திறக்க முடிந்தது. இந்த ஆண்டு நீரின் அளவு மிகவும் குறைவு. 32 டி.எம்.சி. தான் இருக்கிறது. இருந்தாலும் கூட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டிய பிரச்சினைகளை கருத்திற்கொண்டு தான் வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும், ஏழைகளைப் பட்டினி போடக் கூடாது என்பதற்காகத்தான் கவனம்செலுத்தி, தண்ணீர் இல்லாத காலத்திலும் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம் என்று கருதி, தண்ணீரைதிறந்து விட உத்தரவிடப் பட்டிருக்கிறார்கள். தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. விரைவிலே கடைமடைப் பகுதி வரையில் தண்ணீர் வந்து சேரும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர் வேலைக்கு தண்ணீர் காலம் கடந்து வருவதுபற்றி சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது, இந்த விவசாயிகளுக்கு வேறு வேலை கிடையாது. வறட்சி காலத்திலே விவசாயத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்படுகிற போது, குளம், ஏரிகளை, தூர் எடுக்கும் வேலை, அது





போன்ற பிற வேலைகளைக் கொடுப்பார்கள். அதனால் பட்டினி இல்லாமல் இருப்பார்கள். ஆனால் இந்த ஆண்டில் அந்த வேலைகள் கொடுக்கப்படவில்லை. அதனால் பட்டினி கிடக்கிறார்கள். இப்படி தண்ணீர் தாமதமாக வரும்போது உடனடியாக அந்த விவசாயத் தொழிலாளர்கள் பட்டினி இல்லாமல் இருக்க, மாற்று வேலைக்கு ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு காலதாமதம் ஏற்பட்டால் ஒரு குடும்பத்திற்கு குறைந்த பட்சம் வேலை கிடைக்கும் வரையில், இரண்டு கிலோ அரிசியும் செலவுக்கு ஒரு ரூபாயும் கொடுத்து அரசாங்கம் உதவி செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப். : தலைவரவர்களே, அதை விட சுலபமான வழி ஒன்று இருக்கிறது. ஏற்கெனவே ஆட்சி செலுத்தி வருகிற கேரள மாநிலத்திலே அவர்களுடைய நண்பர்கள் எல்லாம் இருக்கிறார்கள். மேற்கு நோக்கி பாயும் தண்ணீரை எல்லாம் கிழக்கு நோக்கிப் பாய்வதற்கு தேவையான ஏற்பாட்டைச் செய்தால் நிலைமை சீராகிவிடும்.

### 4. அறிக்கைகள் அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள்.

திரு. பி. முசிறிபுத்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை அவை முன் வைக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980–81 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் தமிழ்நாடு மின் வாரியம் தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் நான்காவது அறிக்கை.

(2) 1973–74 ஆம் ஆண்டிற்கான (சிவில்)துறைகள் பற்றிய இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–79) அளித்த எட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐந்தாவது அறிக்கை.

(முற்பகல் 10-50).

(3) தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தின் 1971–72 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான இருபத்தேழாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் ஆறாவது அறிக்கை.

(4) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாம் அறிக்கையில் (1980–81) கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஏழாவது அறிக்கை.

5. வரவு செலவுத் திட்டம், 1985–86 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 7.—மாநிலச் சட்ட மன்றம் என்னும் தலைப்பின் கீழ் ரூ. 1,63,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண் 8.—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 50, 87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

(இ) கோரிக்கை எண். 43— பல்வகை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,22,39,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

(ஈ) கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச்செலவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண். 58.—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,90,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.





(உ) கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,10,21,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : மானியக் கோரிக்கைகள், பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு** டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றம் பற்றிய மானியக்கோரிக்கையில் வாக்கெடுப்புக்கு சுமார் உட்பட்டது 1 கோடியே 63 இலட்சத்து 36 ஆயிரம் ஆகும். சாட்டப் பட்ட தொகை 3,82,000 ஆகும். இவ்விரு இனங்களும் சேர்ந்து மொத்தத் தொகை 1,67,18,000 ஆகும். சாட்டப் பட்ட தொகையில் பேரவைத் தவைவர், பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் தவைலர், மேலவைத் துணைத்தலைவர் ஆகியோரது சம்பளமும் மற்ற மருத்துவச் செலவுகளும் ஏனைய படிகளும், பயணச் செலவுகளும் எல்லாமே அடங்கும். ஆனால் இவை வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படமாட்டாது, மரபின்படி.. பொதுவாக இவற்றைப் பற்றி விவாதிக்கலாம் என்றாலும் கூட வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படுவதில்லை,

வாக்கெடுப்புக்கு உட்பட்ட தொகையாகிய 1,63,36,000-இல் சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுடைய சம்பளமும் மற்ற செலவுகளும் அடங்கும். அந்த வகையில் அடிப்படைச் சம்பளம் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் என்ற வகையில் அடிப்படைச் சம்பளம், மருத்துவச் செலவுகள், பயணச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள், 69,27,000 ரூபாய் ஆகும்.

சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அடிப்படைச் சம்பளம், மருத்துவச் செலவுகள், பயணச் செலவுகள் மற்றைய செலவுகள் 14,22,000 ரூபாய் ஆகும். சட்டமன்றப் பேரவைச் செயலகத்தினுடைய தங்கும் விடுதி உட்பட செலவு 66,03,000 ரூபாய் ஆகும். அதில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும், பயணப்படி மட்டும் 42,86,000 ரூபாய் ஆகும் இதில் உறுப்பினர்களுக்கு என ஏற்படும் செலவுகள், தங்கும் விடுதி, அலுவலர்கள் சம்பளம் 8,30,000 ரூபாய்· தங்கும் விடுதி, தொலைபேசிக் கட்டணம் 1,75,100; விடுதிபராமரிப்புச்செலவு ரூ.23,000; படுக்கை விரிப்புகள், ஜன்னல் திரைகள் முதலியவற்றுக்கு 86,000,

எழுதுபொருள், காகிதச் செலவுகள் நாளிதழ் உட்பட 11,08,000
ஆகும், நூலகப் புத்தங்கள் 70,000. குழுக்களுடன் செல்லும்
அலுவலர்கள் பயணச் .செலவுகள் 1,00,000; குழு உறுப்பினர்
களின் விருந்துண்ணும் செலவு 86, 000, காமென்வெல்த்
பாராளுமன்றத்திற்கான ஆண்டுச் சந்தாவும், சுற்றுப் பயணச்
செலவும் 26,000; சட்டமன்ற மேலவைச் செயலகம் 15,84,000.
இவை கேட்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையின் கீழ்
இந்தச் செலவினங்கள் குறிப்பாக அடங்கும். தேர்தலைப்
பொறுத்தவரையில் மானியக் கோரிக்கை எண். 8 தேர்தல்கள்
என்பதன்கீழ் 1985–86 நிதியாண்டுச் செலவுகளுக்காக
50,87,000 ரூபாய் அரசுக்கு வழங்கவேண்டும் என்று முன்
மொழியப்பட்டு இருக்கின்றது.

ஆக இந்த மானிய கோரிக்கைகளின் மீது ஒதுக்கப்படும்
நிதி பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில்
உள்ளவர்கள் சம்பளம், பயணப்படி செலவுகள், தேர்தல்
நிர்வாகத்தில் சரியான நடைமுறைகள் போன்றவற்றிற்காக
பயன்படுத்தப்பட்டு வருகிறது. இன்றைய நிலையில் சட்ட
மன்றத்தை பொறுத்தோ, அல்லது பாராளுமன்ற மக்கள்
அவையைப் பொறுத்தோ எந்த ஒரு இடமும் காலியாக
இல்லை, இன்றைய நிலை வரையிலும். ஆனால் சட்ட
மன்ற மேலவையில் 20–4–1986-ஆம் நாளன்று பட்டதாரி
கள் தொகுதிகள் இரண்டிற்கும், ஆசிரியர்கள் தொகுதிகள்
இரண்டிற்கும் 21–4–1986 முதல் காலியிடம் ஏற்பட உள்ளது.
அந்த தொகுதிகளுக்கு அடுத்த ஆண்டில் எம். எல். சி. யாக
தேர்ந்து எடுக்கப்பட வேண்டிய தேர்தலை முறைப்படி
நடத்த வேண்டிவரும்.

43-வது கோரிக்கையான பல்வகையின் கீழ் 222 கோடியே
39 லட்சத்து, 7 ஆயிரத்திற்கு மேற்படாத தொகை அனுமதிக்
கப்பட்டிருக்கும் செலவு ஆகும். 13 லட்சத்து 73 ஆயிரம்
சாட்டிய செலவாகவும் அமையும். இது ஒரு கூட்டுக்
கோரிக்கையாகும். இதில் பொதுவாக உள்ளாட்சி மன்றங்
கள், தமிழ்நாடு மின்வாரியம் ஆகியவற்றிற்கு கொடுக்கப்
படும் உதவித் தொகைகள், கொத்தடிமை தொழிலாளர்கள்
மறுவாழ்விற்கான செலவினங்களும், சிறு நிறுவனங்கள் போன்ற
வற்றிற்கு கொடுக்கப்படும் உதவித் தொகை போன்ற பல்
வகையான செலவுகளும் இதிலே அடங்கியிருக்கின்றன.

குறிப்பிட்ட மானியக் கோரிக்கைகள் எதிலும் சேர்க்க
இயலாத ஏனைய இனங்களும் இதிலே சேர்க்கப்பட்டுள்ளன.
இலங்கை, பர்மா அகதிகள் மறுவாழ்வு திட்டம், தமிழ்நாடு
பரிசுச் சீட்டு திட்டம், சிறு சேமிப்புத் திட்டம் பற்றிய
தொடர்பாக செலவுகளும் இதில் சேர்ந்து அடங்கியுள்ளது.

சிறு சேமிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில்
நம்முடைய மாநிலம் ஓரளவிற்கு நல்ல முறையிலே நிறை
வேற்றி வந்திருக்கிறது. சிறு சேமிப்பு நிதி திரட்டும் முனைப்
ன் , விரைவாக தொடர்ந்து விளம்பரம் செய்ததன் மூலம்



மத்திய அரசு பொருளாதார விவகாரங்கள், நிதி அமைச்சகம்
துறை உருவாக்குகிற பல்வேறு சிறு சேமிப்பு திட்டங்களைச்
செயல்படுத்துவதே இந்த சிறு சேமிப்புத் துறையின் பணியாக
இருந்து வருகிறது. சிறு சேமிப்புத் தொகையின் மூலம்
கிடைக்கும் நிதியில் மூன்றில் ஒரு பங்கு மத்திய அரசையும்,
மூன்றில் 2 பங்கை மாநில அரசும் நீண்டகால கடனாகப்
பெறுகிறது. ஆக எவ்வளவுக்கெவ்வளவு சிறு சேமிப்புத்
திட்டத்திலே அதிகமான தொகை சேருகிறதோ அவ்வளவுக்
கவ்வளவு மானியத்தினுடைய முக்கியமான செலவினங்களுக்கு
பயன்படுகிற வகையில் நீண்டகால கடனாக பெறுவதற்கு
வசதி ஏற்படுகிறது. அதனுடைய அடிப்படையில்தான் பல்
வேறு சூழ்நிலைகளை நாம் பெற்றிருக்கிறோம். ஆண்டுக்
காண்டு இந்தத் தொகை வளர்ந்துக் கொண்டுதான் வருகிறது.
அது நமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

1980–81-ல் இலக்காக குறிப்பிட்டது 52 கோடியே 30
லட்சம் என்றாலும் நாம் திரட்டியது 56 கோடியே 23
லட்சம். ஆக மேற்கொண்டு, 8 சதவீதம் கூடுதலாக கிடைத்
தது. 1981–82-ல் 52 கோடியே 30 லட்சம் நாம் இலக்காக
அமைத்தோம். 57 கோடியே 86 லட்சம் நமக்கு கிடைத்தது.
அதன் மூலம் 11 சதவீதம் கூடுதலாக கிடைத்திருக்கிறது.
1982–83-ல் 55 கோடியே 15 லட்சம் இலக்கு அமைத்தோம்.
கிடைத்தது 62 கோடியே 79 லட்சம். அதிலே 14 சதவீதம்
கூடுதலாக கிடைத்திருக்கிறது. 1983–84-லே 67 கோடியே
10 லட்சம் இலக்காக அமைத்தோம். 87 கோடியே 39
லட்சம் கூடுதலாக கிடைத்தது. அதன் மூலம் 30 சதவீதம்
கூடுதலாக கிடைத்திருக்கிறது. 1984–85-ல் 105 கோடி
ரூபாய்தான் இலக்காக அமைத்தோம். ஆனால் 156
கோடி 65 லட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. அதன் மூலம்
49 சதவீதம் கூடுதலாக கிடைத்திருக்கிறது. 1985–86ஆம்
ஆண்டில் அரசு 175 கோடியாவது சிறு சேமிப்புத் திட்டத்
தின் மூலம் திரட்டுவோமேயானால் மாநிலத்தினுடைய பல்
வேறு .பணிகள் சிறப்பாக நடைபெறும் என்ற வகையில்
முடிவெடுத்திருக்கிறோம். மாவட்டம்தோறும் சிறு சேமிப்பு
நிதி திரட்டுகிற பணி முடுக்கி விடப்பட்டிருக்கிறது. அதிலே
சென்னை மாநகராட்சிக்கு 55 கோடி ரூபாயும், எஞ்சிய
மாவட்டங்களுக்கு எல்லாம் சேர்த்து 120 கோடி ரூபாயும்
என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த கோரிக்கை 58-ன் கீழ் நாம் கேட்பது பல்வகை
யான மூலதனச் செலவு. அனுமதித்த தொகை 7 கோடியே
90 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் ஆகும். அதிலே கேட்
டிருப்பது எல்லாம் ஒரு கூட்டு கோரிக்கையாகும். அதிலே
எழுது–பொருள் அச்சுத்துறை, கூட்டுறவு, சமூகப் பாதுகாப்பு
போன்ற பல்வேறு துறைகளின் தொடர்பாக முதலீட்டுத் தொகை
செலவுகள் அடங்கியுள்ளன. இச்செலவுகள் வேறு எந்தக்
குறிப்பிட்ட கோரிக்கைகளிலும் சேர்க்கப்படவில்லை. தமிழ்
சங்கம், மகளிர் சங்கம், கால்நடை வளர்ப்பு

நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி மேம்பாடு கழகம், தமிழ்நாடு மகளிர் வளர்ச்சிக் கழகம், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பு ஆலைகள், நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு இரால் கழகம் போன்றவற்றிற்கு பங்கு மூலதன உதவி போன்ற மூலதனச் செலவுகள், மற்றும் பாலைக் குளிரவைக்கும் நிலையங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய வற்றை வழங்குவதற்காக இந்தச் செலவுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

(முற்பகல் 11.00)

ஆகவே கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன் களும் முன்பணங்களும் என்பதில் பல்வேறு இனங்களுக்கும், தனிப்பட்டவர்கள் கடன்கள் முன்பணங்கள் குறித்து நிதி ஒதுக்கீடுகள் கோரிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு நோக்கங்களுக்காக நிதியுதவி அளிப்பதற்குரிய வகையில் துறைகளுக்கு வருவாய் செலவு கோரிக்கைகளை வைக்கும்போது விளக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலேதான் இந்த மானியக் கோரிக்கைக்கு கிட்டத்தட்ட 410 கோடியே 21 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகை கேட்கப்பட்டிருக்கிறது. அவையில் வைக்கப்பெற்றிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு களை* நான் படித்ததாக அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இதன்மீது நடத்துகிற விவாதங்களையொட்டி இறுதியாக நான் கருத்துக்களைச் சொல்கிறேன் என்று தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஒரு மணிக்கு கில்லட்டின். ஆகவே உறுப்பினர்கள் விரைவாக தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

திரு. கோ. வீரய்யன்: தலைவர் அவர்களே, சட்ட மன்றம் தேர்தல்கள், பல்வகை மூலதனச் செலவு கோரிக்கை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக சட்ட மன்ற கோரிக்கை மீது சில கருத்துக்களை கூறவேண்டிய நிலை இருக்கிறது. சட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய அளவிற்கு சந்தர்ப்பமும், அவகாசமும் கொடுக்கப்படாத நிலை மாற்றப்பட வேண்டும். முதல் நாள் காலையில் சட்ட முன்வடிவுகளை கொடுத்து விட்டு, அல்லது சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்தி விட்டு ஒரு 12 மணி நேரத்திற்குள்ளே சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள் வதால், உறுப்பினர்கள் அவற்றை ஆழ்ந்து படித்து, அவற்றின் மீது கருத்துக்களைச் சொல்வதற்கான சந்தர்ப்பம் அளிக்காத நிலை இருக்கிறது. அது எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

* 140, 145, 159 ஆம் பக்கங்களில் இணைப்பு I, II மற்றும் III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



அதேபோல மானியக் கோரிக்கை மீது விவாதங்கள் வருகிறபோது சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையை விவாதிப்பதற்கு முன்னால் நம்முடைய பலவேறு சபை அலுவல்களை இங்கே கவனித்து விட்டு, அதற்கு பிறகு ஒரு சில மணி நேரங்களில், ஒரு ஆண்டு முழுவதற்குமான மானியக் கோரிக்கையைப் பற்றி விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்குவதென்பது போதுமானதாக இல்லை. எனவே எதிர் காலத்தில் இதனை கவனத்தில் எடுத்துக் கொண்டு சட்ட மன்றத்தின் கூட்டத் தொடரை குறைந்தபட்சம் 120 நாட் களாவது நடத்துவதற்கான முறையில் முயற்சி எடுக்க வேண்டும்.

சமீபத்தில் திருவனந்தபுரத்தில் கூடிய பேரவைத் தலைவர் கள் மாநாட்டில் கூட இதை வலியுறுத்தி இருப்பதாக அறிகிறேன். அந்தப் பேரவைத் தலைவர்களின் மாநாட்டிற்கு தலைமையேற்ற நாடாளுமன்ற தலைவர் கூட அதை வற்புறுத்தி இருப்பதாக அறிகிறேன். எனவே இதனையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு 120 நாட்களாவது சபையின் நடவடிக்கைகள் நடக்கக்கூடிய முறையில் செய்ய வேண்டும்.

அதோடு சபையில் இருக்கக்கூடிய நேரத்தில் உரிய' அளவிற்கு கருத்துக்களை எடுத்துக்கூற முடியாமல் இருப்பதால் ஒவ்வொரு அமைச்சரின் இலாக்காவிற்கும் நாடாளுமன்றத் தில் இருப்பதைப் போல ஆலோசனைக் குழுவை அமைத்து, இடையில் அந்தக் குழு அவைகள் பற்றி விவாதித்து, பிறகு சட்டமன்றத்திலே விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

சமீபத்தில் மேற்கு வங்க மாநிலத்தின் பேரவைத் தலைவர் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது நம்முடைய தலைவர் அவர்களோடும், முன்னவர் அவர்களோடும் பேசியதாக அறி கிறேன். நம்முடைய முன்னவர் அவர்களோடு பேசியதாக நான் அறிந்ததிலிருந்து அவர்கள் என்ன நடைமுறையை அங்கே இதில் கையாளுகிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்ததற்குப் பிறகு 15 நாட்கள், இரண்டு வாரம் விடுமுறை அளிக்கப்பட்டு, அதற்கிடை யில் இலாகாவாரியாக அமைச்சர்கள், உறுப்பினர்களோடு கலந்து பேசி அதிலே வருகிற கருத்துக்களை வைத்து பிறகு சபையில் விவாதிக்கிற முறை அங்கே இருப்பதாக அறிகிறேன். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும், அரசும் அங்கே இருப்பதைப் போலவும், மற்ற மாநிலங்களில் வரவு-செலவுத் திட்ட விவாதங்களில் கடைப்பிடிக்கப்படும் முறைகளைப்போலவும் செய்வதற்கு அவற்றை ஆராய்ந்து, நடக்கக்கூடிய விவாதங்களில்

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூலை 12

உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு எப்படி
வாய்ப்பளிக்கப்படுகிறது என்பதைப் பார்த்து, நம்முடைய சபை
யின் விவாத நேரங்களையும் அதிகரிக்க வேண்டும். ஏனென்றால்
பல உறுப்பினர்களுக்கு தங்களுடைய கருத்துக்களை சொல்ல
போதுமான நேரம் கிடைக்கவில்லை என்ற எண்ணமிருக்கிறது.
எதிர்காலத்திற்கு அந்த வகையில் செய்வதற்கு முயற்சிக்க
வேண்டும்.

அடுத்து சட்டமன்றத்திலே கூறிய கருத்துக்கள் எல்லாம்
சட்டமன்ற பதிவுப் புத்தகத்தோடு இருக்கக்கூடிய முறையில்
இருக்கிறது என்று தான் கருத வேண்டியிருக்கிறது. சட்டமன்ற
உறுப்பினர்கள் தங்களுடைய மானியக் கோரிக்கைகள் மீது
கூறியிருக்கிற கருத்துக்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்
பட்டது என்பது அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

இதன் மீது எடுக்கப்பட்டு இருக்கிற நடவடிக்கைகள் என்ன
என்பதை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கக்கூடிய ஒரு ஏற்பாடு
செய்யப்பட வேண்டும். அத்தோடு நம்முடைய சட்ட
மன்றத்திலே, சட்டமன்றத்தினுடைய ஹாஸ்டல்களிலே இருக்
கக்கூடிய பணியாளர்கள் போதுமானவர்களாக இல்லை, அத்
தோடு மட்டுமல்லாமல், அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல்,
தற்காலிகமாக, சபை கூடக்கூடிய நேரத்தில் மட்டும் வேலைக்கு
அமர்த்தக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். எனவே இந்த
நிலையை மாற்றி, அவர்களை நிரந்தரமாக்கக் கூடிய வகையில்
முயற்சிகளை எடுக்க வேண்டும். ஏன் என்றால், 2 மாதம் சபை
நடந்து, அதற்குப் பிறகு, தற்காலிகமாக இருந்தவர்கள் எல்லாம்
திரும்பியும் போய் விடக்கூடிய நிலைமை இருப்பதால், அவர்கள்
பல்வேறு அவதிக்கும், சங்கடங்களுக்கும் ஆளாகிறார்கள்.
இந்த நிலை போக்கப்பட வேண்டும். அவர்களை நிரந்தரப்
பணியாளர்களாக ஆக்குவதோடு, உரிய அளவிற்கு பணியாளர்
கள் நியமிக்கப்பட வேண்டும்.

அடுத்து, தற்காலிகமாக பணியாற்றுகிறவர்களுக்கு சம்பளம்
என்பது ரொம்பவும் குறைவாக இருப்பதாக நான் அறிகிறேன்.
பியூனாக இரப்பவர்கள் தினசரி 12 ரூபாயும், ஸ்வீப்பராக
இருக்கின்ற தாய்மார்களுக்கு தினசரி 4 ரூபாயும் சம்பளம் கொடுப்
பதாக நான் அறிகிறேன். சென்னை
இருந்து கொண்டு, அவர்களுடைய குடும்பத்தை, ா நகர
நடத்துவதற்கு இது எந்த அளவிற்குப் போதுமானது. வாழ்க்கையை
பாகச் சொல்ல வேண்டும் என்றால், குறிப்
மூட்டைத் தூக்கக்கூடிய பெருந்து நிலையங்களில்
வேலையைச் செய்ய கூடியவர்கள்



1985 ஜூலை 12] [திரு. கோ. வீரய்யன்]

எல்லாம் ஒரு நாளைக்கு சாதாரணமாக 30, 40 ரூபாய் சம்
பாதிக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. அதோடு 5 மணியிலிருந்து,
7 மணி வரையிலும், 2 மணி நேரம் தெருவிலே கீரை விற்றால் கூட,
அந்தப் பெண்மணிகளுக்கு தினமும் 10 அல்லது 15 ரூபாய்
கிடைக்கிறது. ஆனால் நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய
சட்டமன்றத்திலே, தலைமைச் செயலகத்தில் அல்லது உறுப்
பினர்களுடைய விடுதிகளிலே பணியாற்றக் கூடிய
தற்காலிகப் பணியாளர்களுக்கு 12 ரூபாயும், பெண்களுக்கு
4 ரூபாயும் கொடுப்பது என்பது நியாயமல்ல. அதை மாற்றி
உயர்த்தித் தரக்கூடிய முறையில் அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை
யில், இப்போது பஸ்ஸிற்குப் பாஸ் கொடுத்து இருப்பதைப் போல
ரயில்வேயிலும் பாஸ் கொடுத்தால் நல்லது. இப்போது கூப்பன்
என்று கொடுக்கிறீர்கள். இதைக் கொண்டு போய் டிக்கட்
வாங்குவதற்கு மிகப் பெரிய சிரமங்கள் இருக்கின்றன. அவர்கள்
வெயிட்டிங் லிஸ்ட்டிலே போட்டு விடுகிறார்கள். பின்னாலே
இடம் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே இந்தக் கூப்
பனுக்கு பதிலாக ரயில்வேயிலும் பாஸ் கொடுப்பதற்கு அரசு
பரிசீலித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தன்
னுடைய தொகுதிகளைச் சுற்றிப் பார்ப்பதற்கும், மக்களோடு
தொடர்ச்சியான தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் ஊராட்சி
ஒன்றியத்திலே ஒரு மாதத்திற்கு 2 நாள் ஜீப் கொடுக்கலாம்
என்று உத்தரவு இருந்தாலும் அதைப் பெறுவதிலே பல்வேறு
சிரமங்கள் இருக்கின்றன. பலருக்குக் கிடைப்பதில்லை. ஒருக்
கால் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குக் கிடைக்கிறதோ,
என்னவோ, என்னைப் பொறுத்தவரையில் கிடைக்கவில்லை.
எனவே அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு துறை
களில் உள்ள வாகனங்களை ஒரு வாரத்திற்கு, ஒரு நாளைக்காவது
சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளுக்குச் செல்
வதற்கு இந்த அரசு வாகனங்களைக் கொடுத்து உதவி செய்ய
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தேர்தல்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு
நம்முடைய தொகுதிகள் 1972 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்
பட்டு இருக்கிறது. ஏறக்குறைய 15, 16 ஆண்டுகள் ஆகியும்,
இந்தத் தொகுதிகள் திருத்தி அமைக்கப்படாத நிலைமையிலிருக்
கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் 1½ இலட்சம் இரண்டு
இலட்சம் வாக்காளர்கள் என்று இருக்கக்கூடிய அளவிற்கு அவர்
களுடைய எண்ணிக்கை இருக்கிறது. இன்னும் சொல்லப்
போனால், சென்னைக்குப் பக்கத்தில் உள்ள வி லிவாக்கம்

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூலை 12

தொகுதியில் உள்ள வாக்காளர்கள் ஏறக்குறைய 2½ இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். எனவே இந்தத் தொகுதிகளைப் பிரித்து அமைத்து, குறைந்த பட்சம் 1 இலட்சம் வாக்காளர் களுக்கு மேலே போகாமல், ஒரு தொகுதி இருக்கக்கூடிய அளவிற்கு, சட்டமன்ற தொகுதிகளை திருத்தி அமைப்பதற்கு நீங்கள் முயற்சி எடுத்துச் செய்ய .வேண்டும். அப்படி வரும் போது ஒரு நாடாளுமன்ற தொகுதிக்குள் இப்போது 6 சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி என்பதற்கு பதிலாக, 7, 8 தொகுதி களாக ஆக்கினால், சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மக்களின் அளவு, எண்ணிக்கை சுருக்கப்படக்கூடிய முறையில் 1 இலட்சம் வாக்காளர்கள் உள்ளிட்ட முறையில் அந்தத் தொகுதியில் இருக் கிற முறையில் முயற்சிகளை எடுக்க வேண்டும். எனவே அந்த வகையில் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த பல்வகையைப் பொறுத்தவரையில் அந்நிய நாடுகளில் இருந்து இங்கே வருபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொறுப்பு முழுவதும் இன்றைக்கு மாநில அரசு ஆரம்பத்தில் கவனிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தமான நிலை ஏற்படுகிறது. குறிப்பாக 1983 ஜூலைக்குப் பிறகு, இலங்கையில் ஏற்பட்ட சூழ்நிலையில் அதிகமாக இங்கே வந்த அகதிகள் முழுவதையும் இந்த மாநில அரசு ஏற்று பராமரிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறது. மத்திய அரசு உதவி செய்தாலும், இந்த முழுப் பொறுப்பையும் அந்நிய நாடுகளில் இருந்து, அது இலங்கையாக இருந்தாலும், பர்மாவாக இருந்தாலும், மலேசி யாவாக இருந்தாலும், அல்லது வியட்நாபாக இருந்தாலும் அல்லது வேறு எந்த நாடாக இருந்தாலும், நம்முடைய நாட்டுக்கு குடி யேற வந்தால் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய பொறுப்பு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

(முற்பகல் 11–10)

கடைசியாக சிறு சேமிப்பைப் பொறுத்தவரையில் அதிகமான தொகையை, நம்முடைய குறியீட்டுக்கு மேலாக நாம் திரட்டி இருப்பதாக நம்முடைய மாண்புமிகு முன்னவர் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த சிறு சேமிப்பைப் பொறுத்த வரையில் நடைமுறையில் அந்த அதிகாரிகளுக்கு முழுமையாக கோட்டா நிர்ணயித்து ஒரு நிர்ப்பந்த முறையில் ஒரு கட்டாய வசூல் என்ற அளவுக்கு வசூலிக்கின்ற நிலை கூட இன்றைக்கு இருக்கிறது. அப்படி இல்லாமல் சிறு சேமிப்பு என்பது அவர்கள் உணர்வுபூர்வமாக முதலீட்டைச் செய்யும் முறையில் நம்முடைய பிரச்சாரமும் நடவடிக்கையும் அதில் இருக்க வேண்டும். கட்டாய வசூலாக அதிகாரிகளை நிர்ப்பந்தித்து வாங்கக்கூடிய நிலை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு என்னுடைய கருத்தை முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.



1985 ஜூலை 12]

திரு கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில சட்டமன்றம் குறித்த மானிய கோரிக்கை மீது சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்பு கிறேன்.

ஜனநாயகத்தில் மக்களுக்கு நம்பிக்கை அழுத்தமாக, ஆழ மாக ஏற்பட வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்களின் பணிகள் அதற்கு ஏற்ப அமைய வேண்டும் என்பதை நான் வலி யுறுத்திச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களின் பணி சமுதாயத்திற்குப் பயன்படுகிற வகையில் அமைய வேண்டுமானால் அதிலே பத்திரிகையின் பங்கும், அரசின் பங்கும் அதிகமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்றம் நடக்கும் நாட்களில் பத்திரிகைத் துறையைச் சேர்ந்த நண்பர்கள் நம்மோடு உடன் இருந்து இங்கே மன்ற நட வடிக்கைகளை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதில் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். சில செய்தித் தாள்களில் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி சமுதாயத்தில் இருக்கின்ற சாதாரண மக்களுக்குக் கூட நம்பிக்கை இழக்கும் வகையில் கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன. நான் முழுமையாக சட்டமன்ற உறுப்பினர்கள் இடத்தில் எந்த குறையும் இல்லை என்று சொல்லத் தயாராக இல்லை. சில சில குறைகள் இருக்க லாம். சில சில இடங்களில் சில தவறுகள் கூட நேர்ந்து இருக்கக் கூடும். யாரும் மறுக்க முடியாது. ஆனால் இவற்றை மட்டுமே வைத்துக் கொண்டு சட்டமன்றத்தில் பணி ஆற்றுகின்ற சட்டப் பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேரும் எல்லோரும் தவறுக்கு உரியவர்கள், தவறு செய்பவர்கள், வசதி படைத்தவர்கள், வாய்ப்பு உள்ளவர்கள் என்று தவறாக சில செய்தித் தாளில் தொடர்ந்து கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், ஜனநாயகத்தில் பத்திரிகைகள் ''பிரீடம் ஆப் பிரஸ்'' இந்த அரசைப் பொறுத்த வரையில் பத்திரிகைக்கு முழு சுதந்திரம் கொடுப்பதில் முன்னணியில் இருக்கின்ற அரசு. ஆனால் அதிலே வருகிற கருத்துக் கள் ஜனநாயகத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து விடக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தி விடக்கூடும் என்பதற்காகத்தான் சட்டமன்ற நிகழ்ச்சிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றிய செய்திகளையும் வெளியிடும்போது குறிப்பாகச் செய்தித் துறையைச் சேர்ந்த அருமை நண்பர்கள் கொஞ்சம் கவனத் தோடு இதை வெளியிட வேண்டும் என்று நான் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் இங்கே ' எக்ஸ்பன்ஜ் ' சபைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்ட செய்திகள் கூட சில நேரங்களில் சில பத்திரிகையில் வந்து விடுகிறது. ஒரு பத்திரிகையில் சமீபத்தில் அந்த நிகழ்ச்சியைப்

128 204—11

போட்டு விட்டு இதை படித்து விட்டு மறந்து விடுங்கள் என்ற குறிப்பைப் பார்த்தேன். இது போன்ற செய்திகள் எல்லாம் இந்த சட்டமன்றத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை குறைவாக ஏற்படுகிற நிலையை ஏற்படுத்தும் என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடு சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர் இயற்கையில் வசதி படைத்தவர்களாக, வாய்ப்பு பெற்றவர்களாக இருக்கக் கூடும். ஆனால் பெரும்பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்கு வந்த உடனே அவர்கள் பணி முழுவதும் தன்னுடைய தொகுதியின்பாலும், தன்னுடைய மாநிலத்தின் பாலும் திருப்பப்படுகிற காரணத்தால் மற்ற வாய்ப்புகள், வசதிகள் பெறாதவர்கள் எல்லாம் இன்று கஷ்டமான சூழ்நிலையில் இருப்பதை நான் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அமைச்சர்களாக இருப்பவர்களின் தொகுதியானால் பல காரியங்கள் அதிகாரிகள் மூலம் நடந்துவிடுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரிகளோடு போராடுவதற்கே காலம் போதவில்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியில் இருக்கிற மக்களுக்கு நல்ல பயன் உள்ள பணி ஆற்றவேண்டுமானால் அவர்களுக்கு சில அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது ? அரசினுடைய கடமை என்பதை நான் அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

சலுகைகள் பெறுவது என்பது—ஒரு சாதாரண சட்டமன்ற உறுப்பினன், தனிப்பட்ட முறையிலே, என்னைப் பொறுத்த வரையில் குப்புசாமிக்கு சலுகை கொடுக்க வேண்டும் என்பதற்காக இதனைச் சொல்லவில்லை. இங்கே இருக்கிற பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக நல்ல பணிகளை ஆற்றவேண்டுமானால், மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமானால், நேர்மையான முறையிலே அவர்கள் மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமானால், அவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகள் சிலவற்றை பூர்த்தி செய்ய அரசு கடமைப்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அந்தமுறையிலே சில சலுகைகளை நாங்கள் கேட்கிறபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதோ சொர்க்கத்திலே இருப்பது போலவும், அவர்களுக்கு சலுகைகள் தேவை இல்லை என்பது போலவும் உணர்வு வரக்கூடாது என்பதற்காகத்தான் இதை முன்னாலேயே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

சாதாரணமாக நாடாளுமன்றத்தில், புது நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்லும்போது ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றி அவர்கள் பேசவேண்டுமானால், அங்கே நூலகத்திற்குச்



சென்றவுடனேயே அவர்கள் தகவல் டைப் செய்து கொடுத்து
விடுகிறார்கள். அவர்கள் சென்று புத்தகங்களை பத்திரிகைகளை
தேடி அலைய வேண்டிய நிலை இல்லாது, அவர்களே, இவர்
களுக்கு வேண்டிய குறிப்புக்களை தயார்செய்து, கொடுக்கிறார்கள்.
ஆனால் [illegible] சட்டமன்றத்தில் இந்த வசதி இல்லை.

புதிதாக வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவு
கிற வகையில், பாராளுமன்றத்தில் உள்ளதைப் போல, இங்கே
யும், ஏதாவது சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்புக்கள்,
தகவல்கள் வேண்டுமென்றால், இங்கே இருக்கிற நூலகத்தில்
பணியாற்றக் கூடியவர்கள் அந்தத் தகவலைச் சேகரித்து 'டைப்'
செய்து உறுப்பினர்களுக்கு உடனடியாகக் கொடுக்கக் கூடிய ஒரு
நிலையை இங்கே ஏற்படுத்தி ஆகவேண்டும். நூல் நிலையத்தை
அந்த அளவுக்கு நல்ல வசதிகள் கொண்டதாக அமைக்க
வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாடாளுமன்றத்தில் ஆலோசனைக் குழு என்று ஒன்று இருக்
கிறது. 'கன்சல்டேடிவ் கமிட்டி ஃபார் எவ்விரி மினிஸ்ட்ரி'—
ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி
இருக்கிறது. அந்த அமைச்சகத்திலே சொல்ல வேண்டிய
குறைகள், ஆலோசனைகள் எல்லாம் மாதம் தோறும் அந்த
கன்சல்டேடிவ் கமிட்டி மூலம் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும்
போது அதைக் களைகின்ற ஒரு வாய்ப்பு அந்த அமைச்சகத்திற்கு
இருக்கிறது.

மாநில சட்டமன்றங்களில் அந்த நிலை இல்லை. முன்புகூட,
இங்கே பாசனத் துறையிலே ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி சென்ற
சட்டமன்றத்திலே இருந்தது. இர்ரிகேஷனுக்கு மட்டும் அதைப்
போட்டு இருந்தார்கள். சென்ற சட்ட மன்றம் கலைக்கப்
பட்ட உடனே அந்த கமிட்டி அதோடு சென்று விட்டது.

எனவே, ஒவ்வொரு அமைச்சகத்திற்கும், நாடாளுமன்றத்
தில் இருப்பதைப் போல ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி/ஆலோசனைக்
குழு நமது தமிழகத்தில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணி
யடிக்கப் பெற்றது.)

சட்டமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, இங்கே
பத்திரிகைகளில் எல்லோருடைய பேச்சுக்களையும் போடுவது
இல்லை. இரண்டொரு வரிகளிலே முடித்து விடுகிறார்கள்.
அதே போல் வானொலி, டெலிவிஷனிலும் அதைத் தான் செய்
கிறார்கள். அந்தந்தச் சட்டமன்றத் தொகுதிகளிலே இருக்கிற

பொதுமக்கள் அவர்களுடைய பணிகளை உணர்ந்து கொள்கிற வகையில் சட்டமன்றத் துறையிலே ஒரு பத்திரிகை நடத்த வேண்டும் என்று நான் அரசுக்கு ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி ஒரு பத்திரிகை நடத்தப்பட்டால், சட்டமன்ற நிகழ்ச்சிகள், எல்லோருடைய பேச்சுக்கள், முக்கியமான குறிப்புக்கள் அதிலே வருவதற்கு இடம் இருக்கிறது.

இங்கே கவுன்சிலிலே மெம்பர்களுக்கு ஒரு நல்ல லௌன்ஜ் இருக்கிறது. அசெம்பிளியில் அப்படிப்பட்ட ஒரு லௌன்ஜ் இல்லை. மீட்டிங் ஹாலை, லௌன்ஜ் ஆக மாற்றி அந்த மீட்டிங் ஹாலை, அரசினர் தோட்டத்திற்குக் கொண்டு சென்றால் அது பயனுள்ளதாக இருக்கும்.

அதேபோல், செயலகத்தில் ஒரு நல்ல ஓட்டல் இல்லை. என்னைப் போன்றவர்கள் எல்லாம் இங்கே லேட் அட்டென்டென்ஸ்—ஆவதற்கு காரணம்' வயிற்றுக் கோளாறு காரணமாக பல உறுப்பினர்கள் ஆஸ்பிட்டலுக்கு செல்லவேண்டிய நிலை இருக்கிறது; அந்த நிலை ஏற்படாத வகையில் இங்கே ஒரு நல்ல ஓட்டல்விடுதி செயலகத்திலே பணிபுரிபவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உதவுகிறவகையில் தரமானஒரு உணவுக்கூடம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரயிலிலே திடீரென்று செல்வதற்கு, அங்கே டிக்கெட்டை வாங்கி, ரிசர்வ் செய்து போவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அது குறித்து, இப்போது தலைமைப் பொறுப்பை ஏற்று இருக்கிற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கேயே ஹாஸ்டலிலேயே, அசெம்பிளியில் ஒரு ரிசர்வேஷன் கவுண்டர் திறக்கப்படுமானால், உறுப்பினர்களுக்கு மிகச் சுலபமாக ரிசர்வேசன் பெறுவதற்கு வெளியூர்கள் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தினால், நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பென்ஷனைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களிலும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட அதிகப்படுத்தி இருக்கிறார்கள். இங்கே 250 ரூபாய் தான் இருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, இப்போது இருப்பவர்களுக்கு கூட அந்த பென்ஷனை அதிகப்படுத்தி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



கொறடாவைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல வேண்டும். காரணம், அவருக்கு அரசு கார் இருக்கிறது. வசதி இருக்கிறது. ஆனால் சம்பளம் அசெம்பிளியிலிருந்து கொடுக்கிறார்கள். வசதிகள் எல்லாம் பப்ளிக் டிபார்ட்மென்டிலிருந்து கொடுக்கிறார்கள். அவர் அமைச்சர்களுக்கு, சபாநாயகர், துணை சபா நாயகர் ஆகியோருக்கு அடுத்த நிலையில் மதிப்பான, சிறப்பான பதவியிலே இருப்பவர்.

(முற்பகல் 11-20)

அவருக்கு, சாதாரண சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பதை விடக் குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறது. எனவே, கொறடா என்ற அந்தப் பதவியை மதிக்கிற வகையிலே, சம்பளத்தை உயர்த்த வேண்டும். அமைச்சர்களுக்கு சட்டப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோருக்கு இருக்கிற வசதிகள் ஓரளவுக்கு இருக்கின்றனவே தவிர, சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆந்தப் பதவிக்குரிய மரியாதையை காப்பாற்றுகிற முயற்சியிலே அந்த சம்பளத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது 7 நாட்களுக்கு ஒரு முறை ஊருக்குச் சென்றுவர படி கொடுக்கப்படுகிறது. இப்பொழுது சனி, ஞாயிறு விடுமுறை ஆகி விடுகிறது. எனவே, 5 நாள் ஒருவர் அசெம்பிளி அட்டென்ட் செய்தால், அவர் இரண்டு நாள் வெளியூர் சென்றுவருவதற்குப் படி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஆர். ஐ.—களுக்கு குவார்ட்டர்ஸ் இருக்கிறது, சாதாரண டீச்சர்களுக்கெல்லாம் குவார்ட்டர்ஸ் இருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினருக்கு அந்தந்த தொகுதியிலே பணியாற்ற அவருக்கென்று ஒரு இடம் கிடையாது. வருகின்ற மக்கள் அங்கே தங்கி, அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலேயும் கட்டிடம் கட்டி, அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிற ஒரு நிலைமையை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும்.

அதோடு ஒரு அட்டென்டன்ட்—டாக்டர் நாவலர் அவர்களிடம் நீண்ட காலமாக கேட்டுக்கொண்டு வருகிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் பணியாற்றுகிற காலத்தில் ஒரு உதவியாளர் அவசியம் தேவை. ஒரு நாட்டாண்மைக்காரருக்குக் கூட, ஒரு வி.ஓ.வுக்கு கூட உதவியாளர் இரண்டுபேர்கள் இருக்கிறார்கள்; ஆர். ஐ.க்கு இருக்கிறார்கள்; தாசில்தாருக்கு இருக்கிறார்கள்; எல்லோருக்கும் இருக்கிறார்கள். சமுதாயத்திலே இருக்கிற, ஒவ்வொரு சட்ட தொகுதியின் வேலை முழுவதும் கவனிக்கிற

மன்ற உறுப்பினருக்கும், அம்மக்களின் பிரதிநிதியாக இருக்கிற காரணத்தால், ஒரு உதவியாளர் அவசியம் தேவை. உதவியாளர் இல்லை. என்று வீட்டிலிருக்கிற குடும்பத்தினரைத்தான் உதவியாளராக வைத்துக் கொள்கிற ஒரு இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருக்கும் போது, தொகுதிப் பணியை ஆற்றுவதற்கு முடியாத அளவுக்கு, குடும்பத்தினருடைய உறவு கெட்டுவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, தனியாக ஒரு உதவியாளர், தனியாக ஒரு அலுவலகம் தேவை. பஞ்சாயத்திலிருந்து கூட ஒரு அட்டென்டன்டை டெப்புட்டேஷனில் கேட்கலாம், 4, 5 வருஷத்திற்கு. பீரியட் முடிந்த பிறகு, திரும்ப வைத்துக்கொள்ளலாம். உதவியாளர் இல்லாத நிலைமையில், சட்டமன்ற உறுப்பினர் நல்லமுறையில் சமுதாயப் பணி ஆற்றுவது என்பது இயலாத காரியம் என்பதை டாக்டர் நாவலர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு, ஆந்திராவிலே கார் கூட கொடுத்திருக்கிறார்கள். அங்கே ரூ. 1 இலட்சம் கார் அட்வான்ஸ் கொடுத்திருக்கிறார்கள். வட்டியில்லாத கடன் கொடுத்தால், கார் கூட வாங்கிக் கொள்ளலாம். இங்கே அந்த வசதி இல்லை. போக்குவரத்திற்குக் கார் கொடுக்கலாம். அதற்கு லோன் கொடுக்கலாம்; நாம் வாங்கிக் கொள்ளலாம். யூனியனிலே ஒரு மாதத்திலே 3 நாள் ஜீப் உபயோகப்படுத்தலாம்; 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கிறார்கள்; ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு யூனியன்கள் இருக்கின்றன; 100 லிட்டர் பெட்ரோல் கொடுக்கிறார்கள். அப்படி 100 லிட்டர் பெட்ரோலை உபயோகப்படுத்தி, ஜீப்பை உபயோகபடுத்துகிற சட்டமன்ற உறுப்பினர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்குக் கூட இருக்க மாட்டார்கள். சொந்தச் செலவிலே காரை எடுத்துக்கொண்டு தொகுதியிலே செல்லவேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அந்த 100 லிட்டர் பெட்ரோலைக் கூட சம்பளத்திலே சேர்த்துக் கொடுத்து விடுவார்களானால் நாங்களே சொந்தக் காரையோ, வாடகைக் காரையோ வைத்து அதைப் பயன்படுத்த முடியும். ஆகவே, அந்த ஜீப்பை நம்பி, அங்கே இருக்கிற அதிகாரிகளை நம்பி, தொகுதிப் பணியாற்றுவது என்பது நடைமுறையிலே இயலாத காரியம் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. பி. முசிறிபுத்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆந்திராவிலே ரூ. 1 இலட்சம் கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். சமீப காலங்களில் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவர்கள் முழுக் காலமும் அந்தப் பதவியை அனுபவிப்பதற்கு காரண்டி எதுவும் இல்லை என்பதாலே, அது எப்படிச் சரியாக வரும். இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே



கலைத்து விடுகிறார்கள், இல்லையென்றால், அந்தப் பதவிக் காலம் குறைகிறது. ஆகவே, எந்த அடிப்படையிலே அப்படித் தருகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அப்படிக் கொடுத்தால் பரவாயில்லை என்றுதான் நானும் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரெக்கவர் செய்வதற்கு பென்ஷன் இருக்கிறது.

திரு. கே. குப்புசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே போன்று இந்தியத் துணைக்கண்டத்திலே பல மாநிலங்களில் விடுதி அறைகளில் தங்குவதற்கு வாடகை வாங்குவதில்லை. ஆப்டர் ஆல் ரூ. 2.50 வாங்குகிறார்கள். அதன்மூலம் ஒரு கணிசமான தொகை அரசுக்கு வருவதாக நான் கருதவில்லை. பஞ்சாபிலே, அரியானாவிலே மற்ற மாநிலங்களிலே, இலவசமாக ஆஸ்டலுக்குப் பதிலாக, வீடுகளைக் கட்டித் தருகிறார்கள். இங்கே வீடுகள் இல்லையென்றாலும், இலவசமாக ரூம்களையாவது கொடுப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹவுசிங் போர்டில் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளில், 5 ஆண்டுக்காலத்தில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் எங்கு கேட்கிறாரோ, அங்கு அவருக்கு ஒரு வீடு முன்னுரிமையிலே அலாட் செய்யப்படவேண்டும். அதில் அரசுக்கு எந்தவிதமான நஷ்டமும் கிடையாது. சொந்த வீடில்லாத ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியிலோ வேறு இடத்திலோ, வீடு வேண்டுமென்றால், முன்னுரிமை கொடுத்து, கவர்ன்மென்ட் அலாட்மென்ட்டிலோ, வேறு முறையிலோ முன்னுரிமை கொடுத்து, 5 ஆண்டுக்காலத்தில் அவர் சொந்த வீடு பெற அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இப்போது இருக்கிற தொகுதிகள் எல்லாம் மிகப் பெரிதாக இருக்கின்றன. குறிப்பாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய தொகுதி மதுரை மாவட்டத்தில் இருக்கிற தொகுதிகளிலே மிகவும் பெரியது; என்னுடைய தொகுதியை விடவும் பெரிதாக இருக்கிறது. அதிலே மூன்று யூனியன்கள் இருக்கின்றன. திரு. உச்சி கவுடர் அவர்களும் பெரிது என்று சொல்கிறார்கள். இப்படி பல்வேறு தொகுதிகள் மிகப்பெரும் தொகுதிகளாக இருக்கின்றன. தேர்தல் காலத்தில் ஒரு மாதத்தில் ஒரு ரவுண்ட் கூட போக முடியவில்லை. ஒரு தொகுதி ஏறத்தாழ 2½ இலட்சம் வாக்காளர்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆகையால் மத்திய அரசிடம் கலந்து பேசி, தொகுதிகள் ரீஹாபிலிட்டேஷன் வரும்போது பெரிய தொகுதிகளை எல்லாம் சிறிய தொகுதிகளாக ஆக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய சட்டமன்றத் தொகுதிகளாக இருப்பதால் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது. தொகுதிகளைப் பிரித்து சிறிதாக அமைத்து, சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்த வேண்டும். சிறிய சிறிய தொகுதிகளாக இருந்தால்தான் செய்ய வேண்டிய காரியங்களை முறையாகச் செய்ய வாய்ப்பு ஏற்படும். அதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் குறிப்பிட்டு, முடித்துக்கொள்கிறேன். ஓல்டு ஆஸ்டலில் இருக்கிற உறுப்பினர்கள் டெலிபோன் செய்தால் லோக்கல் காலுக்கு பணம் செலுத்தவேண்டியதில்லை. ஆனால் நியூ ஆஸ்டலில் இருக்கிற உறுப்பினர்கள் லோக்கல் காலுக்கும் பணம் செலுத்த வேண்டியதிருக்கிறது. இந்த ஏற்றத் தாழ்வு இருக்கக்கூடாது. ஓல்டு ஆஸ்டலில் இருப்பதைப் போல நியூ ஆஸ்டலில் இருப்பவர்களுக்கும் லோக்கல் காலை ப்ரீயாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் கொஞ்சம் கனிவோடு என்னுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அன்போடு சில சலுகைகளை அளிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற மாநில சட்டமன்றங்கள் துறை மானியத்தின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

சட்டமன்ற நடைமுறைகள் சிறப்படையவும், சட்டமன்ற நடைமுறைகள் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு நியாயமான பலன்கள் உரிய காலத்தில், உரிய வழிமுறைகளில் கிடைக்கவுமான வாய்ப்பை விசாலப்படுத்துகின்ற கடமை ஆளும் கட்சிக்கு அதிகம் உண்டு என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எதிர்க் கட்சியின் வாய்ப்புகளை அதிகப்படுத்துவதன் மூலம் தான் ஆளும் கட்சி வேலை சுலபமாக்கப்படுகிறது. ஆளும் கட்சியினுடைய கடமைகளை விரைவுபடுத்தவும் அவர்கள் பார்வையை சரியான திசையில் திருப்பவும் இடையறாத முயற்சிகளை எதிர்கட்சிகள் மேற்கொள்கின்றன. நம்முடைய எதிர்க் கட்சிகள் செயல்பாட்டை முடமாக்காமல் ஜனநாயக நெறிமுறைகளை அங்கீகரிப்பதன் மூலம் தான் அத்தகைய நோக்கத்தை நிறைவேற்ற முடியும். இங்கே நடைபெறுகின்ற இந்த மானியத்தின் மீதான விவாதத்தின் போது கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான நினைவுகளை எல்லாம் நினைவுபடுத்தி விமர்சிப்பது என்னுடைய நோக்கம் அல்ல. கடந்தவை



கடந்தவையாக இருக்கட்டும். அதே நேரத்தில் கடந்த காலத்
தில் ஏற்பட்ட கசப்பான நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு
நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் அப்படிப்பட்ட சம்பவங்
கள் நடைபெறக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டும் கடமை
எனக்கு உண்டு என்கிற முறையிலே நான் சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன். எதிர்க் கட்சிகள் நீண்ட இடைவெளிக்குப் பின்னர்
குறைந்த எண்ணிக்கையில் எதிர் வரிசையில் அங்கம் பெற்றி
ருந்தாலும் அவர்களுக்கு வாக்களித்த மக்கட் தொகையைக்
கவனத்தில் கொண்டு ஜனநாயக நெறிமுறைகளை மதித்து,
அண்ணாவின் பெயரால் ஆளும் கட்சி தன்னை நிலை
நிறுத்தி இருக்கிற காரணத்தால் எதிர்க் கட்சிகள் எண்ணிக்கை
யில் அல்ல, எத்தகைய கருத்துக்களைப் பரிந்துரைக்கிறார்கள்,
என்ன காரியங்களை எடுத்துச் சொல்கிறார்கள் என்பதை
எண்ணிப் பார்த்து, எதிர்க் கட்சிகளின் குரல்வளை நசுக்கப்
படாமல் அவர்களுக்கு வாய்ப்புகளை அதிகப்படுத்துகிற போது
தான் ஆளும் கட்சியின் வேலைப் பளு குறையும் என்ற உண்மை
நிலையை உணர்ந்து, வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த நேரத்தில் குறிப்பாக ஒரு விஷயத்தை மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன். நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி. திருப்பூர் சட்டமன்ற தொகுதி
யிலே இருந்து தேர்வு செய்யப்பட்ட பின்னாலே அங்கே
கடந்த சில தினங்களுக்கு முன்னால் அண்ணா தி.மு.க. சார்பாக
நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திலே

* * * * * *

உரையாற்றிய சில விஷயங்களை மாண்புமிகு நிதி அமைச்சர்
அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப் பட்டிருக்
கிறேன்.

(முற்பகல் 11.30)

அங்கே அவருடைய வீர உரையிலே குறிப்பிடுகிறார்—
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத்
தோற்கடித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வெற்றி
பெற்றிருக்கின்ற சுப்பராயன் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்
பட நாங்கள் அனுமதிக்க மாட்டோம்; இங்கேயிருந்த
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொகுதி
அமைப்பாளர்களின் லெட்டர் பேடிலே எழுதப்பட்டால் தான்
அங்கே கடமைகள் நிறைவேறும் என்று சொல்கிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுக் கூட்டங்
களில் பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பில் பொதுக் கூட்டங்
கள் நடைபெறுகிறபோது பல்வேறு விதமான கருத்துக்களை
மேடையில் பேசுவது வழக்கம். அவற்றுக்குப் பொதுக் கூட்டங்
களில் வேண்டுமானால் பதில் சொல்லிக் கொள்ளலாமே தவிர
சட்டமன்றத்தில் அதைக் கொண்டு வந்து ஏற்றுவதும் அதற்கு
இங்கே பதில் சொல்ல முயற்சிப்பதும் மரபாகவோ, பழக்க
மாகவோ இல்லை. எனவே அதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் பின்பற்ற வேண்டும். வேண்டுமானால் மாண்புமிகு
உறுப்பினர் அவர்களும் அவர்களுடைய கட்சிக் கூட்டம்போட்டு
அதிலே பேசலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பொதுக் கூட்டங்களில் பேசப்படுகின்ற
கருத்து சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டு அதற்குப் பதில்
சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படக் கூடாது என்பதற்காக
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னாலும் கூட
பொதுக் கூட்டங்களில் பேசப்பட்ட கருத்தை வைத்துக் கொண்டு
சபாநாயகரே கோபித்துக் கொள்ளக் கூடிய, ஆத்திரப்படுகின்ற
( * *) நிலைமை இருக்கிறபோது இங்கே சட்டமன்றத்தில்
பொதுக் கூட்டங்களில் பேசியது குறித்துப் பேச வேண்டிய
அவசியம் ஏற்படுமா ஏற்படாதா என்பதை மாண்புமிகு அமைச்
சர் அவர்களும், ஆளும் கட்சியும் தீர்மானித்துச் சொல்ல
வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த விவரங்கள் எல்லாம்
சபைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட்ட விஷயங்கள்.
ஆகவே அதை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு சட்ட
மன்ற உறுப்பினர் அவர்களைப் பேச அனுமதிப்பது சரிதானா
என்று நீங்கள் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அவர் கட்சியைப் பற்றி பேசியிருந்தால்
அதைப் பற்றி இங்கே சொல்ல மாட்டோம். ஆனால் ஒரு
சட்டமன்ற உறுப்பினரைப் பற்றி பெர்சனலாக சொன்னது
பற்றித்தான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறாரே
தவிர கட்சியினை பற்றிப் பேசினால் பொதுக் கூட்டத்திலே
பதில் சொல்லிக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, பெர்சனலாக தனிப்பட்ட
முறையில் எவ்வளவோ விஷயங்கள் பல்வேறு அரசியல் கட்சிகள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



என்ற முறையில் பேசப்படுகின்றன. எனவே அதற்கெல்லாம்
அங்கே தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர அதற்கு சட்ட
மன்றத்தைப் பயன் படுத்தக்கூடாது.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நான் முதலிலே ஒரு வேண்டுகோளைத் தெரிவிக்க
விரும்புகிறேன். மாநிலச் சட்டமன்றங்களில் நெறி முறைகளைப்
பற்றியும், நடைமுறைகளைப் பற்றியும் விவாதிக்கிறபோது
ஆளுகிற கட்சியின் நண்பர்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு
என்ன சொல்கிறார்கள் என்பதைக் காது கொடுத்துக் கேட்டு
பிறகு பதிலளிக்கக் கருத்துக்கள் இருப்பின் உங்கள் சார்பாகப் பதி
லளிக்கத்தான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இருக்கிறார்
கள். ஆகவே எந்த ஒரு கருத்தையும் நாங்கள் சொல்லிவிடுவ
தாலேயே அது சபை நடைமுறையாக ஆகி விடாது. இருப்பினும்
மாநிலச் சட்டமன்றம் என்ற இந்த மானியக் கோரிக்கை நடை
பெறுகிறபோது மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஒரு பிரதி
நிதியைச் செயல்பட விடமாட்டோம் என்று * * பேசலாமா
என்பதை நினைவுப் படுத்துவதோடு ஜனநாயக நெறி முறை
களின் கழுத்தை நெறிப்பது போல் இது அமையாதா என்ற
கேள்வியைத்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்
பினர்களைச் செயல்பட விடமாட்டோம் என்று * * பேசிய
தாகச் சொன்னார்கள். பல கூட்டங்களில் ஆட்சியையே
செயல்பட விட மாட்டோம் என்று பொது மேடைகளிலே பேசு
கிறார்கள். எனவே அதற்கெல்லாம் அங்கே தான் பதில் சொல்ல
வேண்டும்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு நாங்கள் எண்ணிக்கையிலே இரண்டு
பேராக இருந்தாலும் கூட இந்தச் சட்டமன்றம் துவங்கிய
காலத்திலிருந்து இன்று வரையில் 1946 ஆம் ஆண்டிலே இருந்து
1985 ஆம் ஆண்டு வரையிலும் சட்டமன்றத்திற்கான நெறி
முறைகளையும் நல்ல நடைமுறைகளையும் உருவாக்குவதில்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பெரும் பங்காற்றியுள்ளது.
கண்ணியத்தையும் கௌரவத்தையும் பாதுகாப்பதில், சட்ட
மன்ற உறுப்பினர்கள் கடைப்பிடிக்கக் கூடிய நடை முறை
களை உருவாக்குவதில் அளப்பறிய பங்காற்றி இருக்கின்ற கட்சி
யின் பொறுப்புள்ள பிரதிநிதி என்ற முறையில் நான் பொறுப்
போடு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன், ஆகவே ஒரு
ஆளுகின்ற கட்சியின் பொறுப்புள்ள * * இப்படிப் பட்ட கருத்
துக்களைத் தெரிவிப்பதன் மூலம் .. .. .. ..

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைத்தான் ஒரு தடவை சொல்லி விட்டீர்களே, மீண்டும் மீண்டும் சொல்லி பிரச்சினையைப் பெரிதாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: இத்தகைய கருத்துக்கள் நிதி அமைச்சரால் கவனத்தில் கொள்ளப் பட்டிருக்கின்றது என்பதால் நான் அவற்றைத் தவிர்த்துக் கொள்கிறேன். இங்கே ஒரு விஷயத்தை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். என் னுடைய அனுபவத்திலிருந்தும் கடந்த சில மாதங்களாக சட்ட மன்ற நடை முறைகளில் ஜனநாயக நெறி முறைகள் சுருங்கி யுள்ளதாக அறிகிறேன். தேங்கிக் கிடக்கின்ற தமிழ்நாடு அரசின் பொதுவான பிரச்சினைகளைத் தீர்க்கின்ற பொறுப்பு ஆளும் கட்சியின் உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல. 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அத்தகைய பொறுப்பு இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் அங்கீகரித்து எதிர் தரப்பிலே இருந்து வருகிற கருத்துக்களுக்கு, அதிகமான கவனமும் காலவாய்ப்பும் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு சட்டமன்றப் பணியாளர்கள் சார்பாக இங்கே ஒரு சில கருத்துக் களை முன் வைக்க விரும்புகிறேன்.

இங்கே சட்ட மன்ற பேரவையின் காவலர்களாக இருக்கக் கூடியவர்களுக்கு தற்போது ரூபாய் 4 மட்டும் தான் பேட்டாவாக வழங்கப்பட்டு வருகிறது. காலம் மாறுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களின் தேவைகள் கூட மாறுகின்றன, கூடுகின்றன. பலதரப்பட்ட மக்களின் பிரச்சினைகளும் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆனால் இங்கே சட்டமன்ற பேரவையின் காவலர்களாக இருக்கக் கூடிவர்களின் கோரிக்கைகள் மட்டும் ஏற்றுக்கொண்டு கொடுக்கப் படவில்லை. குரல் எழுப்பினால் மட்டுமே கொடுப்பது என்ற போக்கு ஜனநாயக மரபுக்கு உகந்தது அல்ல. ஜனநாயக மரபு களின் மேல் இருக்கின்ற நம்பிக்கையில் கோரிக்கைகளை வைக்கிறபோது அவைகள் உடனடியாக பைசல் ஆகவில்லை

என்றால், காலம் காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகின்ற அந்த ஜனநாயக மரபுகளின் மீது மக்களுக்கு ஆத்திரமும் எரிச்சலும் தான் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.



ஆகவே இங்கே இருக்கக்கூடிய காவலர்களின் கோரிக்கைகளை உடனடியாக கவனித்து அந்த 4 ரூபாயை 10 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அவர்களுக்கு கருமை நிறக் காலணிகள் வழங்கப்பட்டு வந்தது இடையிலே நிறுத்தப்பட் டிருக்கிறது. அவற்றையும் உடனடியாக வழங்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதே போல சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் இங்கே அவர்கள் வந்து போவதற்காக பஸ் பாஸ் களையும் வழங்க வேண்டும்.

அதேபோல லைப்ரரியில் பணியாற்றக் கூடியவர்கள் 9 மணிக்கு சட்டமன்றம் கூடுகிறது என்றால், 8 மணிக்கே வந்து லைப்ரரியை திறந்து வைக்க வேண்டும். அந்த ஊழியர்களின் பொறுப்பை உணர்ந்து அவர்களுக்கு அதிக ஊதியம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஓவர் டைம் என்று வைத்திருந் தாலும் கூட, அதன்படி அவர்கள் செய்து வந்தாலும் கூட, ஓவர்டைம் சட்டப்படி நடைமுறையில் எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமோ அது போன்று எதுவும் கொடுக்கப்படுவ தில்லை. ஏதோ ஒரு காலத்தில் ஏற்படுத்தப்பட்டு வந்த நடை முறையின்படியே இப்போதும் வழங்குவது சரியல்ல. ஆகவே நாவலர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டவர்கள் சட்டமன்ற செயலகத்தைச் சுற்றி பணியாற்றக் கூடியவர்களின் பிரச்சி னையை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிவிட்டு இறுதியாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.

நான் சொல்ல விரும்புவது, இங்கே தற்காலிக ஊழியர்களாக 10 வருடம் 15 வருடம் பலர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றப் பகுதியிலேயும் சரி, செயலகத்திலும் சரி பணியாற்று கிறார்கள். இப்படி 10 ஆண்டுக் காலம் 15 ஆண்டுக்காலம், தற்காலிக ஊழியர்களாக பணியாற்றும் அவர்கள், ஏதோ ஒரு மாத காலம் சட்டமன்றம் கூடுகின்றபோது பணியாற்றிவிட்டு— கானல் நீரிலே கெண்டைமீனைப் பிடிக்கின்றவர்களைப்போல— நமக்கும் காலம் வரும், நம்மையும் நிரந்தரமாக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். தயவு செய்து நாவலர் அவர்கள் அவர்களை இலவு காத்த கிளிபோல் ஆக்கிவிடாமல் இங்கே பத்தாண்டுக்காலம், 15 ஆண்டுக்காலம் பணியாற்றும் அந்த ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும். அதனால் நஷ்டம் அதிகம் ஏற்பட வாய்ப்பில்லை என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொதுவாக
மேலவையிலிருக்கும் உறுப்பினர்களைப் பற்றி இங்கே பேசக்
கூடாது. இங்கே இருப்பவர்களைப் பற்றி அங்கே பேசக்கூடாது.
எனவே மாண்புமிகு உறுப்பினர் பேசியதிலே * * * *
என்ற வார்த்தையை நீக்குகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டுவரப்பட்டிருக்கும்
மாநில சட்டமன்றம், தேர்தல்கள், பல்வகை, பல்வகை மூல
தனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்கள் மற்றும் முன்பணம்
வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேச அனுமதி
தந்தமைக்காக முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொண்டு
ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து
வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்களுடைய பிரதி
நிதிகள் என்பது இதிலே போடப்பட்டிருக்கக்கூடிய விளக்கம்.
மக்களுடைய பிரதிநிதிகளாகிய எங்களுக்கு எங்களுடைய
சட்டமன்ற தொகுதிகளிலே வருகின்ற பல்வேறு வேலைகளைப்
பற்றித் தெரிவதில்லை. அங்கு நடக்கக்கூடிய மக்கள்
நல்வாழ்விற்குபோடப்படும் திட்டங்களை எல்லாம்அந்தந்தப்பகுதி
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே நீங்கள் தெரிவிப்
பீர்களேயானால் நாங்களும் உங்களோடு சேர்ந்து வந்து, நாங்கள்
இன்னின்ன முயற்சிகளை எடுத்தோம். அரசு தரப்பில் இன்னின்ன
செய்திருக்கிறார்கள் என்று சொல்ல வசதியாக இருக்கும்.

(முற்பகல் 11–40)

ஆனால் எங்களுக்கு எந்தவிதமான தகவலும் கிடைப்ப
தில்லை. ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு,
முன்னாள் எம். எல். ஏ.-க்களுக்கு தகவல் கிடைத்து அவர்கள்
பத்திரிகையிலே வெளியிடுகிற சூழ்நிலை இருக்கிறது. அவர்கள்
பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுக்கிறார்கள். குடிசை மாற்று
வாரியத்திலே இன்னென்ன வேலைகளை நடத்துகிறார்கள்
என்று பேட்டி கொடுக்கிறார்கள். அதையெல்லாம்
பார்க்கிற போது அந்தப் பகுதியிலே இருக்கிற சட்ட மன்ற
உறுப்பினரால் ஒன்றுமே செய்ய முடியாதோ என்று கூட மக்கள்
ஐயுறுகிற நிலை இருக்கிறது. அதனை முதலாவதாக தவிர்க்க
வேண்டும். அந்தப் பகுதியில் மந்திரி அவர்கள் அறிக்கை விடலாம்
அல்லது அதிகாரிகள் அறிக்கை தரலாம். அதிகாரிகள் அறிக்கை
தருவதைப் பற்றி கூட நான் கவலைப்படவில்லை. ஆனால
ஏற்கனவே இருந்த சட்டமன்ற உறுப்பினர் அறிக்கை கொடுத்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.





பேட்டி கொடுக்கிறார். பேட்டி கொடுத்து பல பத்திரிகையிலே
வந்திருக்கிறது. சில பத்திரிகையில் வரவில்லை என்றால்
அவர்கள் பொதுக் கூட்டங்களில் அதுபற்றி பேசுகிறார்கள்.
பேசியதை போடமாட்டேன் என்கிறார்கள். ஆகவே போராட்
டம நடத்துவோம் என்று எல்லாம் கூட பேசியிருக்கிறார்கள்.
ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அப்படி சொல்லும் போது
அந்தப் பகுதியில் இருக்கிற எங்களைப் போன்றவர்களை வேலை
பாாக்க விட மாட்டார்களோ என்ற நிலை இருக்கிறது. *****

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுக் கூட்டத்
தில பேசியதை இங்கே பேச வேண்டாம் காலையில் தலைவர்
அவர்கள் மறுத்திருக்கிறார்கள். அதை நீக்கி இருக்கிறார்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: அதை நீக்கவில்லை. உரிமைப்
பிரச்சினை கொடுப்பதை தான் மறுத்திருக்கிறார்கள்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே,
உரிமைப் பிரசசினையாக எடுத்துக் கொள்ள தலைவர் அவர்கள்
மறுத்தார்கள். கருத்தாக பேச அதற்கு என்ன மறுப்பு ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மறுக்கவில்லை.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இல்லை. ஆகவே அது
வேண்டாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே,
இரண்டு வார்த்தைகளை மட்டும் சொல்லி விடுகிறேன்.

** ** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அலிகேஷன்
வேண்டாம். அமைச்சர் அவர்கள் இருந்தால் அவர்கள் மறுப்ப
தற்கு வாய்ப்பிருக்கும். ஆகவே இதில கான்ட்ரவர்சி தேவை
யில்லை. அவற்றை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்; துணைத் தலைவர் அவர்களே
நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்
தாலும் அவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து பி. டி. ஓ. அலுவலகங்
களிலிருந்து ஜீப்புகளை எடுத்துக் கொள்ளலாம் என்று வைத்திருக்
கிறார்கள். மாதத்திற்கு 50 லிட்டர் பெட்ரோல் கொடுத்து உதவ

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டுமென்று வைத்திருக்கிறோம். ஆனால் ஒரே ஒரு தடவை தான் எனக்கு அந்த வண்டி கிடைத்திருக்கிறது. பலதடவை நான் கேட்டபோதுகூட எனக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. நாளைக்குச் சொல்லுகிறோம் என்று சொல்லிவிடுகிறார்கள். என்ன காரணமென்று தெரியவில்லை. பி. டி. ஓ அவர்களைக் கேட்டால் மாவட்ட பிரிவினை வேலைகள் எல்லாம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. பல்வேறு அதிகாரிகள் ஜீப்புகளை எடுத்துச் சென்று விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள் நான் இந்தச் சட்ட மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு ஏழு மாத காலமாகிறது. ஒரு மாதத்திற்கு 50 லிட்டர் என்றால ஏழு மாதத்திற்கு 350 லிட்டர் பயன் படுத்தியிருக்கலாம். ஆனால் 10 லிட்டர் தான் செலவழித்திருக்கிறேன். ஆகவே, இந்த ஜீப் எனக்கு கிடைக்க வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு ஏதாவது ஒரு உத்தரவை போட்டு நாங்கள் அந்த ஜீப்பைப் பெறுகிற வகையில் வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பி. டி. ஓ. வை போனில் தொடர்பு கொள்ள முடிவதில்லை. எந்த நேரத்திலும் யாராவது மானேஜர் போன்றவர்கள் தான் அங்கே இருக்கிறார்கள். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூட சொல்லி இருக்கிறேன். பார்த்துச்செய்கிறேன் என்று அவர்களும் சொல்லி இருக்கிறார்கள்.

இதையெல்லாம் நான் சொல்வதற்கு காரணம், மக்களின் பிரச்சினைகளில் பல்வேறு ஊர்களில் தண்ணீர் இல்லையென்பதைப் போல பிரச்சினைகளை மக்கள் கொண்டு வருகிறார்கள். அந்த ஊர்களுக்குச் சென்று பார்வையிட வேண்டியிருக்கிறது. எங்களுடைய சொந்த உபயோகத்திற்காக இதை நாங்கள் கேட்கவில்லை.

அடுத்து, டி. டி. சி. மீட்டிங்கைப் பொறுத்தவரையில் எங்களுடைய காமராஜர் மாவட்டத்தில் இன்னும் நடக்காமல் இருக்கிறது. முறையாக இன்னும் மாவட்ட பிரிவினை வேலைகள் முடியவில்லை என்று ஆட்சித்தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். இரண்டொரு பஞ்சாயத்துக்களை பிரிக்காமல் இருந்தாலும் பரவாயில்லை. டி. டி. சி. மீட்டிங்குகள் உரிய இடைவெளியில் நடத்தப் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னென்ன சட்டங்கள் இதற்கு இருக்கிறதோ அந்த வகையில் அவற்றை கடைப்பிடித்து செயல்படுத்த வேண்டும். எங்கள் மாவட்டம் 15-3-1985 லிருந்து செயல்படுகிறது. இன்னும் மீட்டிங் நடக்கவில்லையென்றால் அது சரியாக இருக்காது.





அதைப் போலவே சட்டமன்றத்தில் உள்ள காவலர்களுக்கு 4 ரூபாய் படி கொடுப்பதாகவும், அது மிகவும் குறைவாக இருப்பதாகவும் எனக்கு இன்று தான் தெரிய வந்தது. எனவே, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அரசாங்கத்திலே ஊழியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன என்ன வசதி செய்து கொடுக்க வேண்டுமோ, அவைகளைச் செய்ய வேண்டும். இந்த படி என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, இதை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே 1984 லே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்க, ரயில்வே மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் ரிசர்வேசன் கவுண்டர் ஒன்றை சட்டமன்ற உறுப்பினர்கள் ஹாஸ்டலிலே வைக்க வேண்டும் என்று அப்போது யோசனை சொல்லப்பட்டது. அதைப் போலவே பஸ்களுக்கு பாஸ் கொடுப்பது ஓரளவிற்கு வசதியாக இருக்கிறது. ஆனால் இப்போது ரயிலில் ஊருக்குப் போக வேண்டும் என்று சொன்னால், காலையிலே போய் ரயில்வே ஸ்டேசனில் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அங்கே போய் வரிசையிலே நிற்க வேண்டியிருக்கிறது. பிறகு அவர்கள் வெயிட்டிங் லிஸ்ட் என்று சொல்கிறார்கள். திரும்பவும் போய் அதைச் சரிபடுத்துவதற்குள் தெய்வப் பாடாக போய்விடுகிறது. ஆகவே, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதைப் போல, எங்களுக்கும், ரயில்வே பாஸ் கொடுத்துவிட்டால், வசதியாக இருக்கும். இப்போது இந்தத் தொகை 4,000 என்று இருக்கிறது. அந்த அளவிலே கூட கொடுத்தால் போதும்.

அதைப் போலவே, அங்கே காத்திருக்கின்ற ஆட்டோக்கள், டாக்சிகள், எல்லாம் கூப்பிடும்போது வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். எங்கே செல்ல வேண்டும், எக்மோருக்கா, இல்லை, வராது என்று சொல்கிறார்கள். அடுத்து இன்னொருவர் வந்து கேட்கும்போது போய் விடுகிறார்கள். இதிலே எல்லாம் மிகுந்த சிரமங்கள் இருக்கின்றன. அதைப் போலவே, அங்கே இருக்கக் கூடிய உணவு விடுதிகள் கூட தரமானதாக இல்லை. நல்ல தரமானவைகளாக வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப் போலவே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் காப்பி பார் இருக்கிறது. நாங்கள் இங்கே சட்டமன்றப் பணிகளை ஆற்றிவிட்டு லேட்டாகப் போனால், அங்கே எங்களுக்கு வேண்டிய உணவுகள் கிடைப்பதில்லை. எனவே, அங்கே தேவையான உணவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும என்று நான் கேட்டுக் கொண்டு, இந்த அளவிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் பற்றிய மானியக் கோரிக்கைமீது நடைபெறும் விவாதத்தில் நானும் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்

கிறேன். தனி ஒரு மனிதனாக இந்த மன்றத்திலே நான் இருந்து
கொண்டு இருந்தாலும் நான் சார்ந்திருக்கின்ற இயக்கம் ஒரு
மாபெரும் இயக்கம் என்ற காரணத்தால் அதன் சார்பாக நான்
ஒரு சில கருத்துக்களை அவ்வப்போது பல்வேறு சந்தர்ப்பங்
களில் சொல்வதற்கு தொடர்ந்து எனக்கு வாய்ப்பு இந்த மன்றத்
திலே வழங்கி வருகிறீர்கள். அதற்காக இந்தச் சந்தர்ப்பத்தை
பயன்படுத்தி, என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

இன்றைக்கு ஜனநாயகத்தை மக்கள் மதிக்க வேண்டும் என்று
சொன்னால், ஜனநாயக மாண்புகளை மக்கள் மதிக்க வேண்டும்
என்று சொன்னால், அதனுடைய அடிப்படை அமைப்புகளாக
இருக்கிற அமைப்புகள் மீது மக்களுக்கு நம்பிக்கையும் மரியாதை
யும் இருக்க வேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படை அமைப்பு
களாக இருந்து கொண்டிருக்கிற அமைப்புகளில் ஒன்றுதான்
நம்முடைய சட்டமன்றம். ஆனால் சட்டமன்றத்தின் மீது
மக்கள் நம்பிக்கை இழந்து விடுகிற அளவிற்கு இந்தச் சட்ட
மன்றத்தின் மீது களங்கம் விளைவிக்கிற வகையில், செய்திகள்
நாட்டு மக்களிடத்திலே பரப்பப்படுகின்றன.
பத்திரிகைகளாக இருந்தாலும், அல்லது வேறு கருவிகளாக
இருந்தாலும், அவைகள் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது
அல்லது சட்ட மன்றப் பேரவைத் தலைவர், மற்றும்
பொறுப்பாளர்கள் மீது களங்கம் கற்பித்து அவர்கள் கடமையைச்
சரிவர செய்வதில்லை என்ற முறையில் ஒரு விபரீதமான விளைவை
உருவாக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சில செய்திகளை
இன்று பரப்பப் பயன்படுத்தப்படுகின்றன. பேருந்துகளில் செல்லு
கின்ற போது,கூட சிலர் அருகிலே இருந்தால், பத்திரிகையிலே
வருகிறசட்டமன்றநடவடிக்கை பற்றிய சில செய்திகளை வேண்டு
மென்றே வாசித்துக் காட்டி, இப்படி யெல்லாம் செய்வதற்குத்
தான் இவர்கள் சட்டமன்றத்திற்குப் போகிறார்கள் என்று
சொல்லி கேலி செய்யும் அளவிற்கு செய்திகளை அவர்கள் பத்தி
ரிகைகளிலே போடுகிறார்கள். இன்றைக்குக் கூட ஒரு இதழைப்
படிக்கும் வாய்ப்பு இடைத்தது. அந்த இதழில் ஒரு செய்தியைப்
போட்டு அட்டைப் படத்திலே ஒரு சித்திரத்தைப் போட்டு,
சட்டமன்றத்திலே மாண்பு கெடுகிற வகையிலே ஒரு விஷமப்
பிரச்சாரத்தை அதில் செய்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்
பினர்கள் யாராக இருந்தாலும், அந்தச் செயலுக்கு ஒரு உள்
நோக்கத்தைக் கற்பித்து அதைச் செய்து கொண்டு இருக்கிறார்
கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

மக்களுடைய ஆதரவைப் பெற்று, மக்களுடைய வாக்கு
களைப் பெற்று, இந்த மன்றத்திற்கு வந்து தங்களுடைய கருத்
துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாது போனவர்கள் எல்
லாம் ஒரு அரிப்பு உணர்வோடு இன்றைக்கு அதைச் செய்கிறார்
கள் என்ற எண்ணம் நமக்கு வருகிறது. தவறுகள் இங்கே



ஆயிரம் நடந்தாலும், அவைகளை மக்களிடத்திலே சொல்ல
வேண்டிய முறையிலே தான் சொல்ல வேண்டும் என்பதை நம்
முடைய பத்திரிகையாளர்கள், அதை நடத்துகிற பெரியவர்கள்
எல்லாம் மனதிலே கொண்டு ஜனநாயகத்தினுடைய அடிப்படை
யை தகர்க்கிற வகையில் செய்திகளை மக்களிடத்திலே கொண்டு
போகக் கூடாது என்று பணிவோடு வேண்டுவதற்கு கடமைப்
பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களை அவமதிக்கிற
வகையில், அவர்களை அவமதிப்பதன் காரணமாக சட்டமன்றத்
தினுடைய மாண்பைக் கெடுக்கிற வகையில், செய்திகள் வெளியே
வராமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான வழி
வகைகளை நீங்கள் வகுக்க வேண்டும். அப்படி சட்டமன்றத்
தினுடைய மரியாதையைக் காப்பாற்றுவதன் மூலமாகத்தான்
மக்களுக்கு ஜனநாயகத்தின் மீது இருக்கிற நம்பிக்கையை,
மரியாதையை காப்பாற்ற முடியும். அப்படி இருந்தால் தான்
இந்தியத் திருநாடு பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்லி
வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

(முற்பகல் 11.50)

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்டமன்றத்தை குறிக்
கும், தேர்தல்கள் குறித்தும், இந்த அரசின் மூலமாக வழங்கப்
படுகின்ற கடன்கள் குறித்தும் வாதிக்கப்படுகின்ற இந்த விவாதத்
திற்கு வெட்டு தீர்மானம் தரப்படவில்லை என்பது குறிப்பிடத்
தக்க ஒன்று. ஏன் என்றால், வெட்டுத் தீர்மானம் தரப்படுகிற
பல்வேறு பிரச்சினைகளில் பல்வேறு விவாதங்களில் அது காரண
மாக எந்த ஒரு மாற்றமும் ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்
தால் வெட்டுத் தீர்மானம் தராமலேயே ஏதாவது மாற்றத்தை
ஏற்படுத்தலாமா என்ற நோக்கத்தின் காரணமாக வெட்டுத்
தீர்மானம் தரப்படவில்லை.

மற்றும் ஒன்று; சட்டமன்றம் என்பது இந்த அவையாக நம்
முடைய கண்ணுக்குத் தெரிந்தாலும் கூட இந்த அவைக்கு அப்
பாற்பட்டு வாழ்கிற தமிழ்நாட்டில் வாழ்கிற 5 கோடி மக்
களுடைய எதிர்காலத்தை உருவாக்குவதற்குக் காரணமாக இருக்
கின்ற ஜனநாயக அமைப்பு என்ற முறையில் தமிழர்கள், தமிழ்
நாட்டு மக்களுடைய எதிர்கால வாழ்வுக்கு செயல்பட வேண்டிய,
வழி காட்ட வேண்டிய உறுதுணையான சட்டங்களை இயற்ற
வேண்டிய ஒரு அமைப்பு என்ற முறையில் எல்லோருடைய மதிப்
பிற்கும் உரிய ஓர் இடமாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆக
வேண்டும்.

சட்டமன்றத்தில் அவ்வப்போது நடைபெறுகிற சில நிகழ்ச்சி
களின் காரணமாக சில குற்றம் குறைகள் அல்லது கேலிகள்
பேசப்படுவது பற்றி நினைத்தாலும் ஒரு வேளை அவைகள் ஒரு
நல்ல எண்ணத்தோடு அந்தக் கேலிகள் நிகழ்த்தப்படுமானால்
அந்தக் கேலிகளைப் பெருந்தன்மையோடு அலட்சியப்படுத்து

வதற்கு நாம் முன் வரவேண்டும். தீய நோக்கத்தோடு அந்தக் கேலிகள் அமையுமானால் அப்போதுதான் சட்டமன்ற உறுப் பினர்கள் அவைகளை உற்று நோக்கிட வேண்டுமே தவிர ஒரு நகைச்சுவை யாகவோ அல்லது ஏதோ ஒருவகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னும் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்ற வகையில் பயன்பட்டு இருக்குமானால் ஒரு விவாதத்திற் குரிய கருத்தாக இருக்குமானால் அந்த கேலிகளை நாம் பொருட் படுத்தத் தேவையில்லை.

மேல் நாட்டில் ஜனநாயகம் பூத்துக் குலுங்குகிறது என்று சொல் லப்படுகிற அளவுக்கு சிறப்பாக நிகழ்கிற இங்கிலாந்து நாட்டி னுடைய பாராளுமன்றத்தினுடைய வரலாற்றை உற்று நோக்கி னால் அந்த வரலாற்றிலே ஜனநாயகம் உருப்பெற்ற வரலாறு மிக நன்கு தெரியும். அந்தப் பாராளுமன்றம் வளர, வளர தான் அதற்கு முன்னால் அது பிரபுக்கள் அவையாக இருந்தது, மன்னர் கள் பிரதிநிதிகளின் சபையாக இருந்தது. அதற்கு பின்னர் காமன்ஸ் என்ற முறையில் மக்களுடைய பிரதிநிதிகளின் சபை யாக மாறி அப்படி மாறியதற்குக் பின்னால், அரசு என்ற முறை யில் அமைத்து இருக்கிற நிர்வாக இயந்திரம் பெறவேண்டிய பல அதிகாரங்கள் முடியரசு இடத்தில் இருந்தபோது முடியரசு நினைத்தபடி நிதியை எடுத்துக் கொள்ளாமல் தடுப்பதற்கு முத லில் பயன்பட்டு அதற்குப் பின்னால் நிர்வாகத்திற்கு வழங்கு கின்ற நிதியை அளவிட்டு வழங்குவதற்குப் பயன்பட்டு அதற்கு பின்னால் மேலும் முறைப்படுத்துவதற்குரிய ஒரு அமைப்பாக அது இயங்கி வந்திருக்கிறது.

அந்த முறையில் பார்த்தாலும் இன்றைக்கும் கூட சட்ட மன்றம் என்பது நிர்வாகத்தை கட்டுப்படுத்த உரிய அமைப்பாக இருந்தாலும் கூட, இந்த சட்டமன்றத்தினுடைய முடிவுகளுக்கு மாறாக நிர்வாகம் என்பது விலகிச் செல்லக்கூடிய வாய்ப்பு, நோக்கத்தை கைவிட்டு வேறு வழியில் செல்லக்கூடிய வாய்ப்பு இன்னும் சொல்லப் போனால் சட்டமன்றத்தினுடைய நோக்க மாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று நிறைவேற்றப்படாமல் வேறு நோக்கம் நிறைவேறுகிற ஒரு வாய்ப்பு இன்றைக்கு அதிகமாகி வருகிறது என்பதை ஜனநாயகத்தில் அக்கறை உள்ள நாம் சிந் தித்துப் பார்த்து ஆக வேண்டும். இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகின்ற நிதி, வரவு செலவுத் திட்ட அறிவிப்பின்படி ஒவ்வொரு ரூபாயும் ஒரு குறிப்பிட்ட காரியத் திற்குத் தான் பயன்படுத்த வேண்டும் என்று இருந்தாலும் கூட எத்தனையோ காரியங்களில் மாற்றிச் செலவிடப்படுகிறது. செலவிடப்பட வேண்டியதற்கு செலவிடப்படாமல் இருக்கிறது. தாங்கள் விரும்புகின்ற ஒன்றுக்கு அதிகமாக செலவிடப்படுகிறது.

உதாரணமாக சத்துணவுத் திட்டம் வரவேற்கப்படக்கூடிய திட்டம் என்று ஒத்துக் கொண்டாலும் கூட அதிலே ஆயிரம் குறைபாடுகள் இருந்தாலும், அது ஒரு பொது நலத் திட்டம்



என்று கருதினாலும் கூட அந்தத் திட்டத்திற்காக செலவிடப் படுகிற நிதி முழுமையாகக் கணக்கில் வந்து செலவிடப்படுவதாக ஆடிட் செய்யப்படுவதாக இந்த அவையில் கூற முடியாது.

பொதுவாகவே ஒரு கருத்து உலகெங்கும் நிலவுகிறது— சட்டமன்றங்கள், பாராளுமன்றங்கள் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டனவோ, அந்த நோக்கத்திற்கு மாறாக, அந்த நோக்கத்தைச் செம்மையாக நிறைவேற்றக் கூடிய நிலைமை இன்றையதினம் பாராளுமன்றங்கள், சட்டமன்றங்களில் இல்லை.

நிர்வாக இயந்திரத்தினுடைய ஆதிக்கம், அமைச்சர்கள் மூல மாக அதிகமாவதன் காரணமாக, அமைச்சர்கள், அரசினுடைய அமைப்பு, இவைகள் செல்வாக்கு, ஆதிக்கம் சட்டமன்றத்தின் உரிமையை அழுத்துகிறது என்ற கருத்து நிலவுகிறது.

அரசாங்கம் எதை வேண்டுமானாலும் செலவிட்டு விட்டு, சட்டமன்றத்திலே பெரும்பான்மை இருப்பதன் காரணமாக, சப்ளிமென்ட்ரி மூலமாக அதை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. நியாயமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையின்படி, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு துறையில் ஏற்படக்கூடிய செலவு மிகுதியான காரணத்தால், அந்த மிகுதி யான செலவை மறுபடியும் நிறைவேற்றி விட்டு, அதைச் சட்ட மன்றத்திலே சப்ளிமென்ட்ரி என்று கொண்டு வந்து நிறைவேற்று வதை விட, தாங்கள் நினைக்கின்ற வகையிலே செலவிட்டு விட்டு, அதை சப்ளிமென்ட்ரி ஆக்கக்கூடிய வாய்ப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. இந்த அரசுக்கு மட்டும் அல்ல. எல்லா அரசுக்கும் இருக்கிறது.

ஆகவே, சட்டமன்றத்திற்குத் தரப்படவேண்டிய மதிப்பு தரப்படாத நிலையை ஏற்படுத்துகிறது. சட்டமன்றத்திற்கு தரப்படவேண்டிய மதிப்பு என்று சொல்கிறபோது, இங்கே இருக் கிற உறுப்பினர்களைக் கருதி நான் சொல்லவில்லை. நாட்டுக்கு, மக்களுக்குத் தரவேண்டிய மதிப்பு, மக்களுக்கு நாம் எந்த அளவு பொறுப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டுமோ அப்படிச் செயல்படுகிற நிலையாக அது அமையவில்லை என்பதை நினை வூட்ட விரும்புகிறேன். அந்தக் கடமையிலிருந்து விலகிச் செல் கிறோம்.

இன்னும் சொல்லப் போனால், சட்டமன்றத்துறை ஆட்சித் துறை, நீதித்துறை, இவை மூன்றுக்கும் இடையில் விலகல் கோடு, இவைகளைப் பிளவு படுத்துகிற கோடு நாளுக்கு நாள் வளர் கிறது. அதே நேரத்தில் நீதித்துறையை மதிக்காமல் ஆட்சித் துறை இருக்க முடியும் என்ற எண்ணம் வளர்கிறது. நீதித் துறையை அலட்சியப்படுத்தக் கூடிய நிலைமை சட்டமன்றத் திலே வளருகிறது. சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட

சட்டத்தை நீதிமன்றம் அவர்களுடைய கண்ணோட்டத்திலே பரிசீலிக்கிறபோது, மாறுபாடு ஏற்படுகிறது என்று சொன்னாலும் கூட, அவர்கள் சட்டத்திற்குட்பட்டுத் தான் அந்தக் கருத்தைச் சொல்ல முடியும். ஆனால் சட்டமன்றம் விலகிச் செல்ல முடியும்.

ஆனால் சட்டமன்றத்தை விட, ஆட்சி மன்றம் விலகிச் செல்வது அதிகமாக இருக்கிறது. குறிப்பாக, சட்டமன்றத் திற்கு மதிப்பு ஏற்படவேண்டுமானால், நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளை அரசு அந்தத் தீர்ப்பு நம்மைக் கட்டுப்படுத்துகிற நாள் வரையில் நிறைவேற்றுவதில் அக்கறையாக இருக்கவேண்டும் : பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்று சட்டமன்றத்தினுடைய மதிப்பைக் காப்பாற்றுவதற்கு ஆட்சித் துறை, அந்த நீதிமன்றத் தீர்ப்பை மதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சட்டமன்றத்தினுடைய சட்டத்திற்கு மதிப்பு ஏற்படுவதே நீதிமன்றம் இருக்கிற காரணத்தால் தான். நீதிமன்றம்தான் அந்தச் சட்டத்தினை நிலை நாட்டமுடியும்.

அப்படி நிலைநாட்டக்கூடிய சட்டத்தின்படி, ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டால், அதை ஆட்சித்துறை, அமைச்சர்கள் நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் சட்டமன்றத்திற்கு மதிப்புக் கிடைக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சட்டமன்றம் எவ்வளவு பிரதிநிதிகளைக் கொண்டதாக இருந்தாலும், எவ்வளவு மக்களுக்காக நாம் இங்கே அமர்ந்து இருந்தாலும் கூட, இந்த சட்டமன்றம் ஒரு பெரிய பஞ்சாயத்து. ஒரு காலத்திலே ஊராட்சியிலே 10 பேர் உட்கார்ந்து பேசித் தீர்க்கிற அந்த முறையிலே அமைந்த விரிவான ஒரு அமைப்பு தான் இது.

தமிழ் நாட்டிலே குடியாட்சி முறையினுடைய அடிப்படைக் கருத்து, இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்னாலே நிலவி இருக்கிறது என்பதும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே நிலவியதற்கான கல்வெட்டுக்கள் இன்றைக்கும் சான்றாக கிடைக்கின்றன என்பதும் தமிழர்களைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், நம்முடைய நாகரிகத்திலே ஜனநாயகம் இயற்கையிலேயே இடம் பெற்ற ஒன்று.

ஆனால், அந்த ஜனநாயகத்தை மதிக்கிற மனப்பான்மையின் மூலமாகத்தான் அது வேரூன்ற முடியும். அப்படி மதிக்க வேண்டுமானால், ஜனநாயகத்தினுடைய அடிப்படை என்ன வென்றால், எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வதிலே ஜன நாயகம் தழைக்குமே தவிர, வெறும் எண்ணிக்கையை கருதிப் பார்ப்பதிலே ஜனநாயகம் தழைக்காது என்பதை நான் சபா நாயகர் மூலமாக இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.





எண்ணிக்கைதான் முடிவு எடுப்பதற்குக் காரணமாக இருக்கிறது. அந்த முடிவு எடுப்பதற்கு முன்னாலே அந்த முடிவுக்கு வருவதற்கு எண்ணங்களை பரிமாறிக் கொள்கிற வாய்ப்பு நிறைவாக இருந்தால் தான் ஜனநாயகம் தழைக்கமுடியும். இல்லையெனில், கருத்துக்களைச் சொல்கிறவர்களுக்கு விருப்பம், ஆர்வம் ஏற்படாது. சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்ற எண்ணம் ஏற்படும். சொன்னால் பயன் இல்லை என்ற முடிவு ஏற்படும்.

ஆகவே, கருத்துக்களை எடுத்து வைப்பதன் மூலம்தான் ஜனநாயகத்திற்குரிய பயன்கள் கிடைக்கும் என்ற காரணத்தால், எண்ணிக்கையைக் கருதாமல், எண்ணங்களைக் கருத வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் என்பதை இப்போதும் ஆளும் கட்சியாக இருக்கிற அமைச்சர்களுடைய நினைவுக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அப்படி எண்ணங்களைக் கருதவேண்டும்: எண்ணிக்கையை கருதக் கூடாது என்று சொல்கிறபோது, அதற்கு வழிகாட்ட வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு சபாநாயகருக்கு இருக்கிறது. எண்ணிக்கையைக் கருதுகிற ஒரு மனப்பான்மை உள்ள சபா நாயகராக இருப்பாரேயானால், அந்தப் பதவி, அவர் ஏற்றிருக் கிற பொறுப்பு, மதிப்புடையதாக ஆவதற்கு வாய்ப்பு இல்லை. இந்தக் கருத்து, இங்கிலாந்து நாட்டினுடைய காமன்ஸ் சபையிலே இருந்து, டெல்லி பாராளுமன்றத்திலிருந்து, ஜனநாயகத்தை வலியுறுத்துவதற்கான எண்ண ஓட்டம் வருகிறபோது எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதிலே சபாநாயகர் பதவி நம்மாலே மதிக்கப்பட்டாலும் கூடப் பாராளுமன்ற முறையைப் பற்றி எழுதிய திரு. கோபால மேனன் அவர்கள் ஏற்கனவே இந்த அவையினுடைய தலைவராக இருந்தவர்.

(நண்பகல் 12-00)

அவர் எழுதிய நூலிலே குறிப்பிடுகிறார், the speaker is a e rvant of the legislature என்று எழுதுகிறார். சர் வென்ட் என்பதாலே குறைவு என்று கருதிச் சொல்லவில்லை. நான் அதை மதிப்பவன். நல்ல பணியாளர் சிறந்த தலைவர் என்று நான் கருதக்கூடியவன். இங்கே பணி செய்கின்ற காரணத் தினாலே பணியாளர் என்ற சொல் எழுந்தது என்றாலும், அவையினுடைய மொத்த நலனைக் கருதி செயல்படுத்துகின்ற பொறுப்பிலே இருக்கின்ற பணியாளர் என்ற கருத்துதான் அதிலே இடம் பெறுகிறது. அப்படி அவையினுடைய மொத்த நன்மை களையும் கருத வேண்டும்மென்று கருதுகின்ற பொழுது, அவர் ஆளுங்கட்சிக்குச் சொந்தக்காரராகவோ. தொடர்பு உடையவராகவோ தன்னைக் கருதுவதிலேயிருந்து முதலில் விடுவித்துக் கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப்போனால், தான் ஆளுங்கட்சியினுடைய ஆதரவைப் பெற்றவன் என்ற எண்ணம்

கூட ஒரு சபாநாயகருக்கு இருக்கக்கூடாது. சபையை நடத்துகின்றபொழுது பெரும்பான்மை கருத்தைத் திட்டவட்டமாக மதிக்கத்தான் வேண்டுமென்பது அவசியம். இருந்தாலும்கூட சபையை நடத்துவதில் பெரும்பான்மை கருத்துக்கேதான் கட்டுப்பட்டவன் என்ற நிலைமை இருக்குமேயானால் ஸ்பீக்கர் என்ற கருத்து தானாக நீக்கப்படுகிறது.

மேல்நாட்டில் சபாநாயகராக வந்தவர்கள், அந்தச் சபாநாயகர் பொறுப்பை நிறைவேற்றுவதிலே, ஆளுங்கட்சிக்குத் தாங்கள் கட்டுப்பட்டவர்களாக இருந்தால், சபாநாயகர் பொறுப்பிற்குக் கண்ணியம் ஏற்படாது என்பதற்காக, கட்டுப்பட முடியாது என்று எதிர்த்து, தங்கள் உரிமைகளை நிலைநாட்டிய வரலாறுகள் பல உண்டு.

அதைப்போல, டெல்லி பாராளுமன்றத்திலே மல்லாங்கர் அதனுடைய சபாநாயகராக இருந்த காலத்தில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களோ, இராஜேந்திர பிரசாத் அவர்களோ, வேறு பலரோ அந்த அவையிலே இருந்தாலும், அங்கே இருக்கக் கூடியவர்கள் எவ்வளவு பெரிய தலைவர்களாக இருந்தாலும் மல்லாங்கர் அவர்கள் சபையினுடைய தனி உரிமையை நிலைநாட்டுவதிலே மிக முக்கியமான பொறுப்பை ஏற்றிருந்தார்கள் என்பது பெருமையாகப் பாராட்டப்படும். அவ்வளவு பெரிய தலைவர்கள் இங்கே இல்லை என்பதுகூட வேறு. ஆனால் சபையின் உரிமை பெரிது.

நான் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பில் உள்ள சபாநாயகர் பல நேரங்களில் தன்னை ஒரு சார்புடையவராக ஆக்கிக் கொள்ளக்கூடாது. சில நேரங்களில் தங்களுடைய கருத்தை வெளியிடுவதன் மூலமாக.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜெனரலாகச் சொல்லிக் கொண்டுவருவது வரலாம். ஆனால் சபாநாயகர் மேலே மோட்டிவ் மாதிரி சொல்லக்கூடாது என்று விதியே இருக்கிறது. ஜெனரலாக ஸ்பீக்கரைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வருகிறீர்கள். ஆனால் இப்பொழுது குறிப்பிட்டுச் சொல்வது மாதிரி கடைசியிலே இரண்டு வார்த்தைகள் இருக்கின்றன.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, நீங்கள் சொல்லும் முறைப்படியும் எனக்குச் சொல்லத் தெரியும். புரிய வேண்டும் என்பதற்காக விளக்கிச் சொன்னேன். எங்கே புரியாமல் போய்விடுமோ என்று கவலைப்பட்டேன். புரிய வேண்டாம் என்றால் வேண்டாம். சபாநாயகர் பொறுப்பிலே உள்ள யாராக இருந்தாலும்— நான் சபாநாயகர் பொறுப்பைத்தான் சொல்கிறேன். ஆளைச் சொல்லவில்லை— தன்னுடைய கருத்து என்று ஒரு கருத்தை இந்தச் சட்டமன்றத்திலே சொல்வதற்கு அவருக்கு உரிமை கிடையாது. Th-y cannot express any politicel opinion எது ஒபினியன் ஆகும் என்றால், Any opinion cn except unedr the rules that are prescribed for the Legislature.



இந்தச் சட்டமன்றத்திலே ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி எந்த ஒன்றைப்பற்றியும் சொல்லலாமே தவிர, தன்னுடைய கருத்து என்று எதையும் சொல்ல முடியாது.

நான் வேண்டுமென்றால் ஒரு அடையாளத்திற்காகச் சொல்கிறேன். ஒரு கருத்தை இங்கே சொல்லும்பொழுது அதனால் ஏற்படுகின்ற விளைவுகள், சபாநாயகரை ஒரு கட்சி சார்புடையவராகவோ, ஒரு எண்ணச் சார்புடையவராகவோ, ஒரு கொள்கையை வலியுறுத்துகின்றவராய்க் கருதுவதற்கு இடம் ஏற்படக் கூடாது.

எந்தச் சபாநாயகர் என்று நான் சொல்லாவிட்டாலும், ஒரு சபாநாயகர் ஒரு கருத்தை இங்கே சொல்லிவிட்டு, வெளியிலே பேசுகின்றபொழுது இன்னொரு கருத்தைச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அப்பொழுது ஒரு சபாநாயகரைப்பற்றி இந்த அவையிலே எப்படி மதிக்க நேரிடும் என்பது தெரிய வேண்டும். அதற்கெல்லாம் ஆதாரங்கள் இருக்கின்றன. எனக்குச் சொல்ல நேரம் இல்லை. எனக்கு நேரம் இல்லாமல் இருப்பதேகூட நல்லது என்று இருக்கிறேன் சில நாட்களாக, ஏனென்றால், எவ்வளவு நேரம் தெரிவித்தாலும் அதனுடைய பலன்கள் எப்படிக் கிடைக்கின்றன என்பதை நான் எண்ணிப்பார்க்கின்ற வயதுக்கு ஆளாகியிருக்கிறேன். எனவே, அந்த நிலைமை காரணமாக நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அவையிலே இருக்கின்ற எந்தக் கட்சியும் எந்தவொரு காரணத்தைக்கொண்டும், எண்ணிக்கை காரணமாக அவர்களால் வெளியிடப்படக்கூடிய கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமைகள் குறைக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கக்கூடாது. காலத்தைக்குறைக்கலாம். கட்சிகளுக்குத் தரப்படும் நேரம் இவ்வளவு என்று வரையறுக்கின்ற உரிமை சபாநாயகருக்கு இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அதைப்போல ரூல்ஸ் கமிட்டியில் தீர்மானிக்கப்படுவது என்பது அந்தக் கமிட்டியினுடைய தீர்ப்பு அல்ல. கமிட்டி தருகின்ற கருத்துக்கள் இந்தச் சட்டமன்றத்திற்கு வைக்கப்படுகின்ற ஆலோசனைகள், கமிட்டி எடுக்கின்ற முடிவுகள் சட்டமன்றத்தைக் கட்டுப்படுத்தும் என்று சொல்வது என்பது மிகப்பெரிய தவறு.

Any Committe is only a part of the Assembly அப்படி ரூல்ஸ் கமிட்டியிலே நிறைவேற்றப்பட்ட ஒரு கருத்து,— நிறைவேற்றப்பட்டது முறையாக நிறைவேற்றப்பட்டதா என்பது வேறு கேள்வி ; அப்படித்தான் நிறைவேற்றப்பட வேண்டுமா, அதை எதிர்க்கக் கூடாதா என்பது வேறு கேள்வி ; இந்த அவையிலே வைக்கின்றபொழுது இந்தச் சட்டமன்றத்தினுடைய நடைமுறைகளை அது பாதிப்பதாக இருந்தால், அதனால் மாற்றம் ஏற்படுவதாக இருந்தால் அப்படிப்பட்ட விதிகள் இந்தச் சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டு, விவாதிக்கப்பட்டு, கருத்துக்கள் சொல்லப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான் அது கட்டுப்படுத்தும்.

உதாரணத்திற்கு நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே யுள்ள எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாக் கட்சி ஆகிய கட்சிகளெல்லாம் அண்மையில் உருவான ஒரு கருத்தோட் டத்தின்படி அன்ரெகக்னைஸ்ட் பார்ட்டி என்றுதான் இன்றைக் குக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அன்ரெகக்னைஸ்ட் குரூப் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. குரூப் என்று குறிப்பிடுவ தாலே எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. கழகம் என்பதோ, கட்சி என்பதோ, அணி என்பதோ ஒரு அடையாளச் சொல். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு குரூப், ஒரு அணி என்று குறிப்பிடுவதால் எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. கட்சி என்றுதான் குறிப்பிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

அணியாக இருப்பதை நான் பெருமையாகக் கூடக் கருது கிறேன். ஆனால், அன்ரெகக்னைஸ்ட் என்ற சொல்லோடு சேர்த்து அங்கீகரிக்கப்படாத அணி என்று சொல்லப்படுகின்ற பொழுது அங்கீகரிக்கப்படாத என்று சொன்னால், இந்த அவைக் குள்ளே வந்து, இடம் பெற்று, உரையாடுகின்ற கருத்துக்களை எடுத்து வைக்கின்ற, கேள்வி கேட்கின்ற அத்தனை உரிமை களும் இருக்கின்றபொழுது அங்கீகரிக்கப்படாத அணி என்பது ஒரு டெக்னிக்கல் டெர்மாக இருந்தாலும், அதைப் பயன் படுத்துகின்றபொழுது ஏற்படுகின்ற விளைவுகளைக் கருத வேண் டும். வேண்டுமானால், பேரணி, சிற்றணி என்றுகூடப் பயன் படுத்தலாம். அல்லது மேஜர் குரூப், மைனர் குரூப் என்று பயன் படுத்தலாம். அப்படி மைனர் குரூப் என்ற சொல்லைப் பயன் படுத்துவதன் மூலமாக, அன்ரெகக்னைஸ்ட் என்று குறிப்பதைத் தவிர்க்கலாம், அகில இந்தியாவிலே நேஷனல் பார்ட்டீஸ் என்ற முறையில், ரெகக்னைஸ்ட் பை தி எலக்ஷன் கமிஷன் என்ற தகுதியுள்ள கட்சிகள் இங்கே சட்டமன்றக் குறிப்பில் சாதாரணமாகப் படித்துப் பார்க்கும்போது அன்ரெகக்னைஸ்ட் குரூப்ஸ்என்ற பெயருக்கு உரியதாக ஆவதும் அந்தக் கட்சிகளுடைய உறுப்பினர்களின பெயர்கள் இந்தச் சட்டமன்றத்தாலே தரப் படுகின்றபொழுது முகவரிப் பட்டியலிலே இண்டிபெண்டன்ட்ஸ் என்று குறிப்பிடப்படுவதும் சரியாகாது. அவர்னெல்லாம் இண்டிபெண்டன்ட்ஸ் என்றால், யாராவது இரண்டு பேர்கள் இண்டிபெண்டன்ட்ஸ் இருக்கிறார்கள் என்றால், அவர்களை எப்படி அழைப்பது என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, அப்படியென்றால், அவர்களை டிபென்டன்டஸ் என்று நான் கருது கிறேன். ஆகவே, இண்டிபெண்டன்ட்ஸ் என்று குறிப்பிடுவது..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ரூல்ஸ் கமிட்டி யிலே போட்டார்கள். ரூல்ஸ் கமிட்டியிலே எல்லா பார்ட்டியினரும் இருக்கிறார்கள். இதற்கு டிசென்டிங் நோட் கூடக் கிடை யாது. நீங்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர் செய்த மாதிரி சொல்வதால் சொல்கிறேன். ரூல்ஸ் கமிட்டிதான் அவை ப்ரேம் செய்தது. ஈவன் தேர் ஈஸ் நோ டிசென்டிங் நோட் இன் தி ரூல்ஸ் கமிட்டி. எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதிலே அங்கம் வகிக்கிறார்கள்.



திரு. க அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, 1957 ஆம் ஆண்டு முதல் அந்த கமிட்டிகளைப் பற்றி நான் அறிந்தவன். அந்தக் கமிட்டியிலே நிறைவேற்றப்படுவதால் அது செல்லாது. அது இங்கே, சட்டமன்றத்திலே மேஜையிலே வைக்கப்பட்டக் காரணத்தால் செல்லும் என்று ஆகி இருக்கிறது. இங்கே வைக்கப் பட்டபொழுது சபாநாயகர் தேர்தல் நடத்திய நாளில் வைக்கப் பட்டது. அதனால் அது கவனத்திற்கு வரவில்லை. இன்னும் சொல்லப் போனால், சட்டமன்றத்திலே உள்ள கட்சிகளுடைய தகுதிகளை, சற்று வேறுபடுத்தி மாற்றியமைக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுமானால், அப்படி ஏற்படுகின்றபொழுது, அதுவே இந்தச் சட்டமன்றத்திலே விவாதிக்கப்படவில்லையானால் அப்புறம் சட்டமன்றத்திலே அங்கமாக இருப்பவர்களுடைய நிலைமை என்ன என்பதை நீங்கள் மறுபடியும் எண்ணிப் பார்ப் பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

எல்லாவற்றையும்விட கட்சிகளுக்குத் தரப்படுகிற தகுதி, இடங் களை மாற்றுகிற உரிமை சபாநாயகருக்கு உண்டு என்றாலும், அலுவலகங்களிலிருந்து எழுதப்படுகின்ற கடிதங்கள் கண்ணியத் தைக் காப்பாற்றுகின்றனவாக இருக்க வேண்டும். கண்ணியத் திற்குரிய நடைமுறையில் எழுதப்பட வேண்டும். எழுதப்படுகிற நடையிலேயே கண்ணியம் காப்பாற்றப்படுவது இல்லை. இன் னும் சொல்லப் போனால், சட்டமன்றம் மொத்தமாகச் சேர்ந்த ஒரு அமைப்பு. அதிலே எந்தக் கட்சியிலே இருந்தாலும், எந்த உறுப்பினராக இருந்தாலும், எல்லோரும் சேர்ந்த ஒரு பேர மைப்பு. அந்த அமைப்புக்குள்ளே ஒரு பகுதிக்கு இன்னொரு பகுதி அநீதி இழைப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்து வதற்கு மன்றத்தின் செயலாளரின் கடிதங்கள் காரணமாக இருந்தன.

அதே போல் இன்னுங்கூட நான் சொல்கிறேன், ஒன்றை மாற்றியமைப்பது என்பதில் பெரும்பான்மை கட்சிக்கு உரிமை கூட இருக்கலாம்; சிறுபான்மைக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அதில் அந்த அளவுக்கு உரிமை இல்லாமல்கூட இருக்கலாம். நடைமுறைப்படுத்துகிற முறை இருக்கிறதே, சபாநாயகர் அலு வலகத்தின் மூலமாக, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இன்னும் பெருந்தன்மை உடையதாக இருக்க வேண்டுமென்று நான் வலி யுறுத்த விரும்புகிறேன். பெருந்தன்மையாக நடந்து கொள்ள முடியாது என்று சொன்னால், சட்டமன்றத்தை அவமதிப்பதான ஒரு முறையாகத்தான் என்னைப் போன்றவர்களாலே கருதப்பட முடியும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்பு கிறேன்.

இன்னும் இந்தச் சட்டமன்றத்தினுடைய முழுத் தகுதியை நிலைநாட்ட வேண்டுமானால் இந்தச் சட்டமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் களை விட, அதிக அளவுக்கு, மக்களுடைய பிரதிநிதிகளாக இருப் பதற்கான நெருக்கம் உடையவர்கள். பொதுமக்களிடத்தில்

நெருக்கமாகப் பழகுகிற உரிமை, பாராளுமன்ற உறுப்பினர்களை விட சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் அதிகம். இந்தி யாவிலேயே இருக்கிற எல்லாப் பகுதியைச் சேர்ந்தவர்களும் இணைகின்ற ஒரு வாய்ப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது என்பதற்காக அவர்களுக்கு ஒரு பெரிய நாட்டு டைய பாராளுமன்ற உறுப்பினர் என்ற சிறப்பு இருக்கலாமே தவிர, மக்களோடு நெருங்கிப் பழகுகிற சட்டமன்ற உறுப்பினர் கள் இருக்கிற இந்த அவையில், இந்த அவைக்கு இல்லாத ஏராள மான உரிமைகள் பாராளுமன்றத்திற்கு இருக்கின்றன என்பது ஒரு பெரிய குறை. பாராளுமன்றத்திற்கு எல்லா உரிமைகளும் கூட இருக்கலாம். ஆனால், சட்டமன்றத்திற்குப் பல உரிமைகள் இல் லாமல் இருப்பது என்பது சட்டமன்றத்தினுடைய தகுதியைக் குறைப்பது ஆகும். மாநில சுயாட்சி மூலமாகத்தான் அந்த உரிமைகளை இந்தச் சட்டமன்றம் பெற முடியும்.

சட்டமன்றத்திலே எந்த ஒரு பொருளைக் குறித்து விவாதிக் கலாம் என்றாலும் இந்த அளவுக்கு மேல் விவாதிக்க முடியாது என்னும் நிலை உள்ளது. எப்படி கோட்டையிலே இருக்கிற புல்வெளியைச் செதுக்குவதற்கான உரிமை இந்த அரசுக்கு இல் லையோ, அதை வலியுறுத்த சட்டமன்றத்திற்கு வாய்ப்பில்லை என்ற நிலைமை இருக்கிறதோ, எப்படி இங்கே இருக்கிற கோட் டையிலே உயர்த்தப்படுகிற கொடியை உயர்த்துவதற்கோ, மாற்று வதற்கோ நேரடியாக முதலமைச்சருக்கு உரிமை கிடையாது இராணுவத்திற்குத்தான் அந்த உரிமை உண்டு என்ற நிலைமை இருக்கிறதோ, இப்படி நூற்றுக்கணக்கான பிரச்சனைகள், அது இந்தச் சட்டமன்றத்திற்கு, இந்த இந்த, உரிமை இல்லை என் பதைத் தெளிவாக்கும் மிகக் குறைவான சில உரிமைகள் தான் இல்லாமல் இருக்க வேண்டுமே தவிர, மற்ற உரிமைகள் எல்லாம் இந்தச் சட்டமன்றத்திற்கு இருந்தால்தான் சட்டமன்றம் முழுப் பயன் உடையதாக ஆகும் என்பதை நான் தெரிவிக்க விரும்பு கிறேன்.

(பிற்பகல் 12-10)

அப்படிப்பட்ட உரிமைகளுக்காகத் தொடர்ந்து நாம் போரா- வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே நேரத்திலே இங்கே சட்டமன்றம் தனக்குள்ள உரிமையை முழு அளவுக்குப் பயன் படுத்திக் கொள்ளவில்லை என்ற ஒரு நிலைமையும் இருக்கிறது. சட்டமன்றத்திலே இருக்கிற முதல் உரிமை, உடனடியாக, அவ சரமாக அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்க்கவேண்டிய பிரச் சனையாக இருந்தால், அப்படிப்பட்ட எந்த ஒரு பிரச்சனையை யும் உடனடியாக சட்டமன்றத்தில் எழுப்பி, ஒரு சிறு விளக்க மாவது கிடைக்குமானால் அந்த விளக்கத்தைப் பெற்று பொது மக்கள் ஓரளவுக்கு மன நிறைவு அடைவார்கள். அந்த நிறைவு அடையச் செய்வதற்கான ஒரு வாய்ப்பை இந்த சட்டமன்றம் இழந்திருக்கிறது.



எத்தனையோ ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எடுக்கப்பட வில்லை. எத்தனையோ பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச் சனைகள், அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் இங்கே கொண்டுவரப்பட்ட போதும் ஏற்கப்படவில்லை. உதாரணமாக சேப்பாக்கத்தில் 36 குடிசைகள் தீப்பற்றி எரிந்திருக்கின்றன. அதை உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டு மென்று இங்கே கொண்டுவந்தால் அது சபாநாயகரால் மறுக்கப் பட்டிருக்கிறது. ஆலந்தூரிலே வெடிமருந்து கிடங்கு பக்கத்தில் ஒரு குடிசை தீப்பற்றி, அதன் மூலமாக வெடிமருந்து கிடங்கு தீப்பிடித்து, அந்த விபத்தின் காரணமாக 22 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இருவருடைய உயிர் ஊசலாடுகிறது. ஒருவர் அங்கே செத்துப்போய்விட்டார். அது பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவரின் நடவடிக்கைப் பற்றி விமரிசனம் செய்யக்கூடாது என்று தெளிவாக விதி இருக்கிறது. நான் எதிர்க்கட்சித் தலை வருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரிவிலேஜ் மோஷன், அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொடுத்தால் இருக்கின்ற விதிமுறை களின்படி பேரவைத் தலைவர் முடிவு செய்கிறார்.

திரு. க. அன்பழகன்: நான் பேரவைத் தலைவரை குற்றம் கூறவில்லை. எந்த ஒரு விதிமுறையின்படி மறுக்கப்பட்டாலும் அந்த விதிமுறைகள் மாற்றப்பட வேண்டும் என்று வாதாடுவதற்கு இதுதான் இடம். அந்த விதிமுறை மாற்றப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவர் மறுத்தார் என்று சொல்வது நீங்கள் குறைசொல்வது மாதிரி இருக்கிறது. விதியைத் திருத்துவது உங்களுடையப் பொறுப்பு. இருக்கிற விதிமுறைகளை வைத்துக்கொண்டுதான் நாங்கள் செயல்படுகிறோம்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, அந்த விதியையும் திருத்திக் கொள்ளலாம்; நம்முடைய தலைவிதியை யும் திருத்திக் கொள்ளலாம். நான் சொல்வது, பொது மக்கள் சம்பந்தப்பட்ட ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை, அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை, அது ஒரு காரணத் தாலே அனுமதிக்கப்படவில்லை என்றாலும், அனுமதிக்கப்படாத தற்கான காரணம் எதுவாக இருந்தாலும், அது வேறு. ஆனால், இப்படிப்பட்ட பிரச்சனைகளை அனுமதிப்பதற்கு நாம் ஏன் வகை செய்ய முடியாது?

ஆலந்தூர் வெடிமருந்து கிடங்கு விபத்து பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். விபத்து ஏற்பட்டுவிட்டது. அவை முன்னவர் அவர்களுக்கு பதில் கிடைக்கவில்லை என்ப தால் 4 நாட்களாகியும் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. சபா நாயகர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட பிரச்சனை

களில் அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக இந்த அவையில் கொண்டுவருவதைத் தவிர வேறு என்ன வாய்ப்பு இருக்கிறது? ஒருவேளை அரசு ஒவ்வொரு பிரச்சனையிலும் முழுக் கவனம் செலுத்தும் என்ற நம்பிக்கை இருந்தால் நாங்கள் இங்கே பேச வேண்டிய தேவையே இல்லை. ஆக, அரசு முழுக் கவனம் செலுத்த முடியாத நிலைமைக்குக் காரணப் ஆயிரக்கணக்கானப் பிரச்சினைகள் இருக்கலாம். அதனால், தான் சொல்கிறோம். மேலும், அரசினால் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டால் Whether it is a Judicial Enquiry or an Executive Enquiry எந்த என்குயரியாக இருந்தாலும் அதனுடைய ரிப்போர்ட் வந்த பின்னால் ஒரு மாதத்திற்குள் அது இந்த சட்டமன்றத்தில் வைக்கப் படவில்லை என்றால் அது அரசாங்கத்தின் மீது பெரிய குற்றம் அல்லவா? சட்டமன்றத்தினுடைய உரிமையைப் பறிப்பது அல்லவா? அந்தக் கருத்தை அரசாங்கம் மறுக்கட்டும் தாராளமாக. பால் கமிஷன் ரிப்போர்ட் வந்தது. அதை அரசாங்கத்தின் சார்பிலே மறுத்துவிட்டார்கள். பாலை விட அதிகம் அளவுக்கு நீதியைப் புரிந்து நிலைநாட்டக்கூடிய அமைச்சர் அதை மறுத்திருக்கிறார். அது வேறு. ஒன்று மறுங்கள், அல்லது ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால், இந்த அவைக்கு உண்மை தெரிய வேண்டுமா, வேண்டாமா?

எத்தனையோ கமிஷன் ரிப்போர்ட்டுகள் இங்கே வைக்கப் படாமல் இருக்கின்றன. நான் அதற்கு எல்லாம் பட்டியல் வைத்திருக்கிறேன். உங்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பாததால் படிக்கவில்லை. 6, 7 கமிஷன்களுடைய ரிப்போர்ட் இங்கே வைக்கப்பட வில்லை. உதாரணத்திற்கு திண்டுக்கல்லில் அப்சல்கான் என்ற அதிகாரியைப் பற்றி முன்னாள் சீஃப் செக்ரட்டரி திரவியம் விசாரணை நடத்தினார். அப்சல்கானும் இறந்து போய்விட்டார்; முன்னாள் சீஃப் செக்ரட்டரி திரவியமும் இறந்து போய்விட்டார். நாம் தான் இருக்கிறோம். அவர் விசாரித்து 5 வருடம் ஆகியும் இங்கே அந்தக் குறிப்பு இந்த அவையில் வைக்கப்படவில்லை. ஏன் வைக்கப்படக் கூடாது? என்ன கெட்டுப்போய்விடும்?

போலீசார் நடந்து கொள்ளுகின்ற முறைகேடுகள் பற்றி விசாரணை நடத்துகிறார்கள். கிச்சிப்பாளையத்தில் நடைபெற்ற சம்பவத்தில் ஒரு முடிவு அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் என்ன முடிவு எடுத்தாலும் எடுக்கட்டும். பர்தர் என்குயரி நடத்த வேண்டுமென்று இருக்கிறது. அது தற்கொலை இல்லை என்று இருக்கிறது. அதை ஏன் இந்த அவைக்குத் தரக்கூடாது? நான் சொல்வது, கமிஷன் ரிப்போர்ட்டுகள் மறைக்கப்படுமானால் அரசாங்கம் உண்மையை மறைக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகும். அதை விட சட்டமன்றத்தைப் புறக்கணிக்கிறது என்ற நிலைமையும் ஏற்படுகிறது.



இறுதியாக ஒரே ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அம்பாசங்கர் கமிஷன் அறிக்கை தமிழக மக்கள் அனைவரையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்களைப் பாதிக்கக் கூடியது என்ற கருத்து வெளியிலே நிலவுகிறது. அந்தக் கமிஷன் அறிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் பேசப்படுகிறது. அந்தக் கமிஷன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட காரணத்தால் அந்தக் கமிஷனின் அறிக்கை இந்த அவையில் வைக்கப்பட வேண்டுமா, வேண்டாமா? அதை அச்சடிப்பதற்கு 5 ஆண்டு காலமா தேவை? அந்த அம்பாசங்கர் அறிக்கை அவையில் வைக்கப்படவேண்டும். அந்த அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாத நிலைமை இருப்பதன் காரணமாக சுப்ரீம் கோர்ட் வருகிற ஜூலை 31-ந் தேதிக்குள் அரசின் முடிவை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு நேற்றைய தினம் நாங்கள் "எக்ஸ்டென்ஷன் ஆப் டைம்" கேட்டு அப்பீல் செய்திருக்கிறோம என்று சொன்னார்கள். 'அது "ரிஜெக்ட்" ஆகியிருக்கிறது என்ற கருத்தும் வந்திருக்கிறது.

ஒருவேளை ஏற்கெனவே செய்த அப்பீல் ரிஜக்ட் ஆகி மறு அப்பீல் செய்யப்பட்டிருக்குமேயானால் இப்பொழுது என்ன நிலைமை, என்ன கட்டத்தில் நாம் இருக்கிறோம் என்று தெரிவிக்க வேண்டாமா? இந்த மாநிலம் நீதிக்கட்சிக் காலத்திலிருந்து ஏற்றுக்கொண்டிருக்கின்ற அடிப்படையான கொள்கைகளைப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் வழங்குவது என்று கொண்டிருக்கின்ற கொள்கைக்கு இந்த அரசும் துணை நிற்கும் என்று சொன்னால் அதைக் காப்பாற்றுவதற்கு இங்கே திரு. அம்பாசங்கர் கமிஷன் அறிக்கையினை அரசு கருத்தோடு இங்கே வைக்க வேண்டும்.

அது குறைபாடு உடையது என்றால் அதுபற்றிய கருத்துக்களை அவையிலே எடுத்து வைக்கக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். அதன் மூலமாக இந்த உரிமைகளைச் சுப்ரீம் கோர்ட் பாதுகாப்பதற்குரிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் It should be placed in lime-light – in the Table of the House. என்ற முறையில் செயல்பட வேண்டும். வெளிச்சத்தில் இந்த மன்றம் இருக்க வேண்டும். இந்த மன்றம் இருட்டில் இருக்கக் கூடாது. இந்த அரசின் நடவடிக்கை அத்தனையும் அறிந்து கொள்வதற்குரிய உரிமை சட்டமன்றத்திற்கு உண்டு; அந்த உரிமையைப் பாதுகாப்பவர்கள் ஜனநாயகத்தைக் காப்பவர்கள்; அந்த உரிமையை மறுப்பவர்கள் ஜனநாயகத்தை எதிர்ப்பவர்கள் என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம், தேர்தல் ஆகிய மானியங்களின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். ஜனநாயகத்திலே நீதியும், நேர்மையும் சட்டமன்றங்களும் நல்ல முறையில் பணியாற்றினால்தான் ஜனநாயகம் பிழைக்கும், தழைக்கும் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

நாடு முழுவதும் 8 ஆவது பொதுத் தேர்தல் நடந்து இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்றம் கூட்டப்பட்டு, இன்றைய தினம் நிதி நிலை அறிக்கையின் தொடர் கூட்டத்தில் சட்டமன்ற மானியம் பற்றி விவாதிக்கின்ற நிலையில் நாம் இங்கே இருந்து கொண்டிருக்கிறோம். பொதுவாகவே மானியக் கோரிக்கைகளின்போது பேசுகின்ற நேரத்தில் எதிர் வரிசையில் இருந்து பேசுகின்ற எங்களுக்கு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து அந்தத் தீர்மானங்களை வலியுறுத்திப் பேசுவது வழக்கம்.

100 ரூபாயோ அல்லது ஒரு ரூபாயோ, இந்த சட்டமன்றத்தின் மானியத்தின் மீது அந்த ஒரு ரூபாய் கூட குறைக்கப்படக் கூடாது; கேட்கின்ற அத்தனைப் பணமும் மாண்புமிகு முன்னவர் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் நாங்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக சட்டமன்றம் நடக்கின்ற நாட்களில் எல்லாம், இந்த விவாதம் வருகிற போதெல்லாம் சட்டசபைக்குப் புதிய கட்டிடம் வேண்டும் என்று இந்த வரிசையிலே இருந்து எழுப்பப்படும், அங்கேயிருந்து அவை முன்னவர் அவர்கள் வழக்கம் போல் விரைவில் அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்று சொல்வார்கள். இப்படி இந்தக் கேள்வியும் பதிலும் வாடிக்கையாகப்போய் அது மறந்துகூட போகின்ற அளவுக்கு ஒரு பழங்கதையாகப் போய்விட்டது என்கிற அளவுக்கு நிலைமை இருக்கின்றது. எனவே, புதிய கட்டிடம் கட்டப்படவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. நாம் இப்போது அமர்ந்திருக்கின்ற இந்த மண்டபம் 1911 ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். நான் உங்கள் மூலமாக அவையின் முன்னவர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் புதிய கட்டிடம் கட்டுவதில் அரசுக்கு என்ன தயக்கம் இருக்கின்றது? பணம் இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது மனம் இல்லையோ என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மற்றைய மாநிலங்களில் எல்லாம் பார்க்கிறோம்; முன்னாள் பேரவைத் தலைவர் அவர்களும், முன்னாள் செயலாளர் அவர்களும் உலகத்தில் பல்வேறு ஜனநாயக அமைப்பைக் கொண்டிருக்கின்ற நாடுகளுக்குப் போய் அங்கே இருந்து வரைபடங்களை எல்லாம் கொண்டு வந்து எல்லாம் தயாராக இருக்கின்றன; இதோ கட்டப் போகிறோம் என்று சொல்லியும் கூட இன்னும் கட்டப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறைபட்டுக்கொண்டார்கள். இங்கே இருக்கின்ற கொடிக் கம்பத்திலே இருக்கின்ற கொடியைக் கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றி இறக்க முடியாது என்று





சொன்னார்கள். எனவே, நமக்கென்று சொந்தமாகக் கட்டிடம் கட்டி நாம் விரும்புகின்ற நேரத்தில் கொடியை ஏற்றிக்கொள்கின்ற வாய்ப்பை மாண்புமிகு முன்னவர் அவர்களும் இந்த அரசும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தங்கும் விடுதியைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்களில் கொடுக்கப்பட்டிருப்பது போல் தனித்தனி வீடுகளாகக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னாலும் இந்த மன்றத்தில் இந்தக் கருத்து சொல்லப்பட்டது. அதை அரசு பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, வாரத்திற்கு இரண்டு நாள் விடுமுறை இருக்கின்ற காரணத்தால் சட்டமன்றத்திற்கும் வாரத்திற்கு இரண்டுநாள் விடுமுறை கொடுத்திருக்கிறோம். இங்கே சட்டசபை கூடுகின்ற நாட்களில் எல்லாம் விவாதம் நடைபெறுகின்றபோது இங்கே ஆளுங்கட்சிக்காரர்களும், எதிர்க்கட்சிக்காரர்களும் மோதுகிறார்களோ இல்லையோ பேரவைத் தலைவரிடத்திலும், துணைத் தலைவரிடத்திலும் எதிர்க்கட்சிக்காரர்களும், ஆளுங்கட்சிக்காரர்களும் மோதுகின்ற வழக்கத்தை நான் பார்க்கிறேன். காலையில் 9 மணிக்குக் கூடி ஒன்றரை மணிக்குக் கலைகின்றது என்றால் அந்த நாலரை மணி நேரத்தில் என்னைப் பேச அனுமதிக்க வேண்டும், அதிகமான நேரம் வேண்டும் என்றெல்லாம் பேரவைத் தலைவரிடத்திலும், துணைத் தலைவரிடத்திலும் மோதுகின்ற காட்சியினைப் பார்க்க முடிகின்றது. ஆகவேதான் நான் பேரவை துணைத் தலைவரின் மூலமாக உங்கள் வசதிக்காகவும் நம்முடைய வசதிக்காகவும் நான் கேட்டுக் கொள்கிறேன், நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டிருப்பதுபோல் காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை தொடர்ந்து நடைபெறுகின்ற முறையினைக் கொண்டுவர வேண்டும். உணவுக்காகப் போகின்றவர்கள் இடையிலே போய்விட்டு வந்துவிடுவார்கள். அந்த வகையிலே சட்டமன்றத்தைக் கூட்டினால் கிட்டத்தட்ட 7 மணி நேரம் அவகாசம் கிடைக்கும். பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி கருத்துக்களை எடுத்து வைக்க உதவியாக இருக்கும். அதன் மூலம் இந்த மோதுதலைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம்.

மேலும், சட்டமன்றம் புதிதாகக் கட்டப்படுகின்ற நேரத்தில் எல்லா வசதிகளையும் இணைத்து இன்னும் விசாலமாகக் கட்ட வேண்டும். நம்முடைய பேரவையில் எங்கே பார்த்தாலும் மைக் தலையை நீட்டிக்கொண்டிருக்கின்றது. சூடான விவாதம் வருகின்றபோது உறுப்பினர்கள் மைக்கை உடைத்துவிட்டார்கள் என்ற பொல்லாப்புக்கு ஆளாகின்ற நிலைமை இருக்கக்கூடாது. இது எலக்ட்ரானிக் யுகமாக இருப்பதன் காரணத்தால் டீ இன் ஒன்-லே கூட மைக்கை மிகச் சிறியதாக வைத்திருக்கிறார்கள்.

அந்த வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இங்கே மைக் நீட்டிக்கொண்டிருப்பதன் காரணத்தால் உறுப்பினர்களைப் பார்க்கக் கூட முடியவில்லை. எனவே, புதிதாகக் கட்டிடம் கட்டுகின்ற நேரத்தில் எல்லாவகையான வசதிகளோடு மைக் கைப் பொருத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–20)

இன்றைக்கு நம்முடைய சட்டமன்றத்திலே லைப்ரரி இருக்கிறது. இந்தியாவிலே இருக்கிற பல சட்டமன்ற படிப் பகங்களிலே மிகத் தொன்மையான சட்டமன்ற படிப்பகமாக அது இருக்கிறது. ஆனால் அது மிகக் குறுகிய இடத்திலே இருக்கின்ற காரணத்தினாலே, சட்டமன்ற உறுப்பினர்கள் போய் அமர்ந்து படித்து, இந்த மன்றத்தின் விதிமுறைகளைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிற காரணத் தினாலே பெரியதாக அதற்கு அறைகளை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பெரிய குறை. ரிசர்ச் செல் என்று ஒன்று இங்கே இருக்கிறது. அது முழுமையாகச் செயல்படவில்லை என்று நான் கருதுகிறேன். உதாரணமாக ஒரு பில் அல்லது மசோதா வருகிறது. அதிலே ஒரு பொருளைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றால், ஏனைய மாநில சட்டமன்றங்களிலேயும், நாடாளுமன்றங்களிலேயும் செய்வது போல், எப்படி எப்படி இந்த சட்டம் வந்திருக்கிறது. எதை வைத்துக் கொண்டு பேசலாம் என்பது போல ஒரு கெய்டை எங்களுக்குக் கொடுக்க வேண்டும். அது மாதிரி ரிசர்ச் செல் நன்றாக இயங்குமானால், மிக நல்ல முறையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளை ஆற்றுவதற்கு அது துணையாக இருக்கும். ஆகவே அந்த ரிசர்ச் செல்லை வலுப்படுத்த வேண்டும். அதற்கான வாய்ப் புகள் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இந்தச் சட்டமன்றத்திலே 17 சட்டமுன் வடிவுகள் வந்திருக்கின்றன; அப்படி சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிற நேரத்திலே, ஒரிஜினல் ஆக்ட் என்று சொல்லு வார்களே, அந்த மூலச் சட்டத்தினுடைய நகல்கள் எங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இல்லை என்று சொன்னால் அதை நாங்கள் தேடிப் பார்க்க வேண்டும். அல்லது அதைப்பற்றி தெரிந்து கொள்ள முடியாமல் பேச வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தினாலே, நான் கேள்விப்படுகிறேன், பாராளுமன்றத்தி லேயும் அந்த முறை இருக்கிற காரணத்தினாலே, ஒரு சட்டத் திருத்தம் வருமேயேனால், அந்தச் சட்டத்தினுடைய மூலச் சட்டத்திற்கான நகலையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கான முறையிலே அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து சட்டமன்றம் இன்னும் சரியாகப் பணியாற்ற பெட்டிஷன் கமிட்டி என்று ஒரு கமிட்டியும், லைப்ரரி கமிட்டி என்று ஒரு கமிட்டியும் அமைக்க வேண்டும். என்று இதே மாமன்றத்திலே இதே பக்கத்திலேயிருந்து நாங்கள் இதற்கு முன்னாலேயும் பலமுறைச் சொல்லியிருக் கிறோம். புதிய செயலாளர் வந்திருக்கிறார்கள். ஆகவே புதிய ரூபாலிவோடு இங்கே அதற்கான முயற்சிகள் தொடங்கப்படும் என்று நான் கருதுகிறேன். அதைப் போலவே வீடியோ பைரஸி என்று நாம் கேள்விபடுகிறோம். அதைப்போலவே சட்டமன்றத் திலே குவஸ்டின் பைரஸி என்று இருக்கிறதோ என்று நான் சந்தேகப்படுகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. சட்டமன்ற உறுப்பினர் களுக்கு கேள்வி கேட்கிற உரிமை இருக்கிறது. ஆனால் என்ன காரணத்தினாலோ சில பல வேளைகளிலே சம்பந்தம் இல்லாத உறுப்பினர்கள் எல்லாம் அதிலே சேர்கின்ற காரணத்தினாலே ஒருவேளை வேறு சிலர் அதிலே இணைக்கப்படுகிறார்களோ இடைச்செருகல் எல்லாம் நடைபெறுகிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதைத் தாங்கள் அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அதைப் பற்றி விரிவாகப் பேச நான் விரும்பவில்லை.

அதைப்போல சட்டமன்ற உறுப்பினர்கள் 2 துணைக் கேள்விகளுக்கு மேல் கேட்கக் கூடாது என்று விதி இருக்கிறது. அதை அருள் கூர்ந்து அடுத்தக் கூட்டத்திலே— அது ரூல்ஸ் கமிட்டியினுடைய வேலையாக இருந்தாலும் கூட— இன்னும் கொஞ்சம் துணைக் கேள்விகளை அதிகமாக கேட்க வாய்ப்பு கொடுத்து அவற்றிற்கு விடையளிப்பதன் மூலமாக எங்களுக்கும் தொகுதிப் பிரச்னைகளை தீர்க்க முடியும், அரசு' தரப்பி லேயும் நல்ல விளக்கங்களைத்தர முடியும். அதைப் போலவே இன்னொரு பிரச்னை. இதற்கு முன்னாலேயும் பலமுறை சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களு டைய இலாக்காவிலே இருக்கிற பல ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான கேள்விகள் பதில் அளிக்கப்படாமலேயே இருக்கின்றன. இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உடல் நலம் சரியில்லை என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அதற்கு முன்னாலும் கூட அவர்களிட மிருந்து பதில் அளிக்கப்படவில்லை. நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வதெல்லாம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முதலமைச்சர் அவர்களின் இலாக்காக்களுக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டு, அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும்.

ஏனென்றால் மிக முக்கியமான குறைகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. அதன் மூலமாக பல விவரங்களை நாங்கள் பெற முடிகிறது. அதைப் போலவே அரசுக்கும் பல சாதனைகளைச் சொல்லிக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆனால் என்ன காரணத்தினாலோ, இதுவரை அந்த உரிமை மறுக்கப்

பட்டிருக்கிறது. அடுத்த சட்டமன்றக் கூட்டம் வருகிற நேரத்திலே முதன் முதல் வருகின்ற கேள்விகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற இலாக்காக்களிலே இருக்கின்ற கேள்விகளாக இருக்க வேண்டும். மாண்புமிகு முன்னவர் அவர்கள் அதற்கு விடையளிப்பார்களே யானால் கூட அது நாட்டிற்கு நன்மை அளிக்கும். அதை அருள் கூர்ந்து பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொன்னதைப் போல கமிஷனின் அறிக்கைகள் இங்கே வைக்கப்பட வேண்டும். பல்வேறு கமிஷனின் அறிக்கைகள் இங்கே வைக்கப்படாததன் காரணத்தினாலே, எங்களாலே முழுமையான விவரங்களைத் தெரிந்துக் கொள்ள முடியவில்லை. நாங்கள் என்ன கருத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிய எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு வாய்ப்புக் கொடுத்து அறிந்தால், அதன் மூலம் எதிர் காலத்திலே நாம் கமிஷன்களை அமைக்கின்ற நடவடிக்கை களுக்கு அது துணையாக இருக்கும். ஆகவே அந்தக் கமிஷன் ரிப்போர்ட்டுகளை இந்த மாமன்றத்திலே வைக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர் பெருமக்களுக்கு கடிதங்கள் அனுப்புகிற நேரத்திலே அதற்கு முறையாக சரியான நேரத்திலே பதில் வருவதில்லை. இதை இந்தப் பக்கத்திலேயிருந்து பல்வேறு முறைகளிலே சொல்லியிருக்கிறோம். உதாரணமாக, நாங்கள் டெல்லியிலே இருக்கும் நாடாளுமன்ற அமைச்சர்களுக்கு கடிதம் எழுதினோம் என்றால் ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள்ள க நிச்சயமாக பதில் வந்துவிடுகிறது. சம்பந்தப்பட்ட அமைச்சரே கையெழுத்துப் போட்டு பதில் போடுகிறார்கள். அது நமக்கு நிறைவைத் தந்து கொண்டிருக்கிறது. ஆகவே அருள்கூர்ந்து யார் கடிதம் எழுதினாலும் பதில் போடுங்கள். குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் பொது விஷயமாக எழுதுகிற நேரத்திலே எத்தனையோ வேலைகள் இருந்தாலும் கூட, அதை ஒரு வழக்கமாகக் கொண்டு, அந்த அலுவல்களுக்குள் முக்கியமான அலுவலாக இதற்கு முன் உரிமைக் கொடுத்து, அந்தக் கடிதங்களுக்கு பதில் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல அந்தக் கடிதங்களுக்கு தொடர் நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே இங்கே இரயில் பாஸ் பற்றி சொல்லவேண்டும் என்று சொன்னார்கள். இங்கே 4 ஆயிரம் ரூபாய் பெறுகிற கூப்பன்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிறார்கள். அதை ரத்து செய்து விட்டு, சென்னையிலேயிருந்து தொகுதிக்கு வந்து போவதற்கு மட்டும் இலவசமாகப் பாஸ் கொடுப்பார் களேயானால் அது உதவியாக இருக்கும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் பணியாற்றக் கூடிய நேரத்திலே தொகுதியிலே ஒரு அலுவலகம் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் சொன்னார்கள். அதே கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். பொதுவாக அங்கே கட்டிடம் இருக்குமேயானால், யார் சட்ட மன்ற உறுப்பினர்களாக வந்தாலும் கூட, அந்த இடத்தைப் பயன்படுத்திக் கொண்டு அதன் மூலமாக சந்தித்துப் பணியாற்றக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே அரசாங்கம் அதை ஃபேஸ்ட் புரோக்கிரமாக எடுத்துக் கொண்டு அந்த நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் பட்டவர்களுக்கு தொகுதியிலே ஒரு பொது இடத்தில் வாடகைக்கு எடுத்தாவது கொடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவு வார்களேயானால், இன்னும் நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இருக்கிற விதிகளின்படி சட்டமன்ற உறுப்பினர் களுக்கு பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களில் கலந்துக் கொள் வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நகராட்சிகள், மாநக ராட்சிகளின் கூட்டங்களிலே நகரங்களிலே இருக்கிற உறுப் பினர்கள் கலந்து கொள்ள முடியாத நிலைமை இருக்கிற காரணத்தினாலே, அதையும் சேர்த்து—மாநகராட்சி, நகராட்சி களுக்குத் தேர்தல் வந்துவிடும்—அந்தக் கூட்டங்களில் கலந்துக் கொள்வதற்கான வகையில் முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே தொகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் சில நேரங்களில் ஜீப்புகள் வழங்குகிறார்கள். ஆனால் பல நேரங்களில் ஜீப்புகள் கொடுக்கப்படுவதில்லை. கொடுத்தாலும் பெட்ரோல கிடைப் பது இல்லை. அதன் மூலமாக தொகுதியைப் போய் சுற்றிப் பார்க்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு மாற்று ஏற்பாடு செய்தால் நல்லது என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில், நகரங்களிலே இருக்கிற உறுப்பினர்களுக்கு அந்த வசதி மறுக்கப்படுகிறது. ஒருவேளை எங்களைப் போன்றவர்கள் கிராமங்களுக்கு அதிகம் செல்லவேண்டும் என்ற காரணத்தினாலே, அந்த வசதி கொடுக்கப்படுகிறதோ, நகரத்தில உள்ள உறுப்பினர்கள் எந்த நேரத்திலும் எளிதாகப் போய் பார்க்க முடியும் என்ற காரணத்தினாலே, அந்த வசதி மறுக்கப்படுகிறதோ என்னவோ எப்படி இருந்தாலும், எங் களுக்கு கொடுக்கின்ற உரிமை அவர்களுக்கும் கிடைக்க வேண்டும்.

எவ்வோரையும் ஒரே மாதிரியாக நடத்துவதற்கு துணையாக அவர்களுக்கும் அந்த வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். அந்த வாய்ப்பை கொடுக்கின்ற நேரத்திலும், இப்போதிருக்கிற ஜீப் கொடுக்கின்ற முறைக்கு பதிலாக ஏதாவது தகுதியான மாற்று ஏற்பாடு சரியான முறையிலே செய்து, எல்லோருக்கும் வாகனங்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் நன்றாகப் பணியாற்றுவதற்கு ஊதியம் அதிகமாகக் கொடுங்கள் என்று நான் கேட்க மாட்டேன். ஏனென்றால் அரசுக்குத் தெரியும், சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி இருக்க வேண்டும் ; அவர்களுடைய தேவை என்ன என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகையினால் நான் அதைப்பற்றிச் சொல்லப் போவதில்லை. சொல்லவும் மாட்டேன். ஆனால் அதே நேரத்தில் எங்களுடைய பணியை நல்ல முறையில் நடத்துவதற்கு நீங்கள் உதவியாக இருக்க வேண்டும். சாதாரண ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற தலைவர்கள் கூட ஒரு கிளார்க் வைத்திருக்கிறார்கள். சேர்மன் கிளார்க் என்று கேட்கிறார்கள்.

அப்படி இருக்கிற 2½ பஞ்சாயத்து யூனியன்கள், 3 பஞ்சாயத்து யூனியன்களுக்கு பிரதிநிதிகளாக இருக்கிற எங்களுக்கு, இந்த மன்றங்கள் இல்லாத காரணத்தால், நாங்களே பொது வாழ்க்கையில் இருக்கிற காரணத்தால், எங்களுக்கு நிச்சயமாக உதவியாளர்களை அரசாங்கச் செலவிலே வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய விடுதியிலே இருக்கிற உணவுச் சாலைகளைப் பற்றி சொல்லியே ஆக வேண்டும். யாராவது 2, 3 நாட்கள் அங்கே தொடர்ந்து சாப்பிட்டு விட்டால் வயிற்று வலி வந்து விடும். அனுபவத்தின் காரணமாகச் சொல்கிறேன். பலமுறை இதைச் சொல்லி இருக்கிறேன். மனிதாபிமான பிரச்னையாக எடுத்துக் கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அவர்கலைப் பார்க்க பலர் அங்கே வருகிற காரணத்தால் அவர்களும் அந்த விடுதிகளில் சாப்பிட நேரிடுகிறது. ஆகவே உடனடியாக நல்ல தரமான உணவை, உடல் நலம் கெடாத அளவிற்கு உணவை வழங்க நல்ல உணவுச்சாலைகளை அமைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உறுப்பினர்கள் விடுதியில் ரெக்ரியேஷன் ரூம் இல்லை. இன்டோர் கேம்ஸ் போன்றவற்றை விளையாடுவதற்கு ரெக்ரியேஷன் ரூம் வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அதனை செய்து தரவேண்டும்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க வருகிறார்கள் என்றால் அவர்கள் இப்போது இருக்கிற முறையில் நேராக அறைக்கு தான் வரவேண்டியிருக்கிறது. அப்படி இல்லாமல் கீழே விசாலமான ஒரு அறையை ஏற்படுத்தினால் உறுப்பினர்கள் அவர்களை அங்கே வந்து பார்ப்பதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். அப்படி ஒருஏற்பாட்டைச் செய்யவேண்டும்.



எப்படி சட்டன்ற உறுப்பினர்கள் இந்தியா முழுவதுமாகச் சுற்றிப் பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே இருக்கிற பல்வேறு பகுதிகளை, பல்வேறு கலாச்சாரங்களை சென்று பார்க்க வேண்டுமென்று எண்ணுகிறோமோ, அதைப்போலவே ஆண்டிற்கு ஒரு முறையாவது உறுப்பினர்களுக்கு வெளி நாடுகளுக்குச் செல்கிற வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். இந்த ஆண்டு காமன்-வெல்த் பாராளுமன்ற அசோசியேஷன் மூலமாக அப்படி ஒரு முயற்சி இருப்பதாக அறிகிறேன். இந்த முயற்சி தடைபடாது தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கையாக எங்களிடம் நிறைய வந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது பெருகி வருகிற பரம்பரையாக இல்லை. அருகி வருகிற பரம்பரையாக தான் இருக்கும். 2,600 கோடி ரூபாய் அளவிற்கு வரவு செலவுத் திட்டத்தை நாம் வைக்கிற போது, இதற்கு 1.68 கோடி ரூபாய் தான் செலவாகிறது என்று நம்முடைய முன்னவர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே அவர்களுக்கு தற்போது வழங்குகிற ஓய்வூதியம் குறைவாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். அரசுக்கு யோசனையாக ஒன்றைச் சொல்வேன். எப்படி சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தை உயர்த்துகிறோமோ, அவ்வப்போது அதற்கு தகுந்த அளவிற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தையும் அரசு உயர்த்த வேண்டும்.

அடுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு வரையறை வைத்து, மாக்சிமம் லிமிட் என்று ஒன்றை வைத்து, அந்த அளவிற்கு அவர்களுக்கு கொடுக்கலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு வைத்திய வசதி வேண்டுமென்று கேட்கிறார்கள். வசதியுள்ளவர்களைப் பற்றி கவலையில்லை. ஆனால் பொது வாழ்க்கையிலிருந்து பல்வேறு பிரச்னைகளை ஏற்றுக்கொண்டு இன்றைக்கு வசதி குறைவாக இருக்கிறவர்களுக்கு இந்த மாதிரியான உதவிகளைச் செய்யும் வகையில், அரசாங்கம் அனுதாபத்தோடு அவற்றை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையில் இந்த சட்டமன்றத்திலே உறுப்பினர்களாக இருந்தவர்கள் இன்னும் கொஞ்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் 70, 75 வயதாகி இருக்கலாம். அவர்கள் தங்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் விரல் விட்டு எண்ணுகிற அளவில்தான்

இருப்பார்கள். 1952 ஆம் ஆண்டிற்குப் பின்னாலே வந்து அந்த ஓய்வூதியம் வழங்குகிற நிலையை, முன்னால் இருக்கிறவர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். நெல்லுக்குப் பாயும் நீர் கொஞ்சம் கரும்பிற்கும் பாயட்டுமே. ஆகவே அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த வரிசையிலிருந்து எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, இப்போது காவலர்களுக்கு உடுப்பாக கொடுக்கிறார்கள். அப்படி கொடுப்பதால் அளவு சரியாக இல்லாமல் இருக்கிறதென்று சொல்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அதனை துணியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அவர்களுக்கு இப்போது படியாக தினம் 4 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது ரொம்ப ரொம்ப குறைச்சலாக இருக்கிறது. இப்போது இருக்கிற விலைவாசியில் 4 ரூபாயில் என்ன செய்ய முடியும்? காலையிலிருந்து மாலை வரையில் இங்கேயே இருக்கிறார்கள். நாம் மாலை நேரங்களில் கூட அவையை வைத்துக் கொள்கிறோம். ஆகவே இந்தப் நான்கு ரூபாய் என்பது மிகக்குறைவாக இருக்கிறது.

(பிற்பகல் 12-30.)

ஆகவே இந்த 4 ரூபாய் படி என்பதை அருள் கூர்ந்து பரிசீலனை செய்து 10 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலே கூட இன்னொரு சங்கதி என்னவென்றால், நாம் எல்லாம் உடனடியாகப் படியை வாங்கிக் கொள்கிறோம். ஆனால் அவர்கள் ஆண்டுக்கணக்காக, மாதக்கணக்காக ஆகிறது இந்தப் படியைப் பெறுவதற்கு இது பரிதாபம். எனவே இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். அதேபோன்று இந்தக் காவலர்களைப் போட வேறு துறையிலே இருப்பவர்களும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையினாலே அவர்களுக்கு இந்தப் படியை உடனடியாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த தற்காலிக ஊழியர்களைப் பற்றி பேசும் போது மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். 10, 15 ஆண்டுக்காலமாக அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று சொல்கிற நேரத்திலே, அவை முன்னவர் அவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா? வருடத்திலே 40 நாள், 45 நாள் நடக்கிறது. எப்படி அவர்களை நிரந்தரமாக்க முடியும் என்று அவர்கள் சொல்வார்கள். ஆனாலும் கூட சட்டமன்றம் கூடுகின்றபோது இந்தப் பணியையும், வேறு நாட்களிலே வேறு பணிகளையும் அவர்களுக்குக் கொடுக்கின்ற அளவிற்கு



நிரந்தரமாக்க வேண்டும். நான் கேள் செய்து அவர்களை விப்படுகிறேன். இன்றைக்கு 25 இடங்கள் காலியாக இருப்பதாக அறிகிறேன். 25 இடங்கள் அப்படிக் காலியாக இருந்தால், உடனடியாக அவைகள் நிரப்பப்பட வேண்டும்.

டெல்லியிலே இருக்கிற தமிழ்நாடு இல்லத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துக்களைச் சொன்னார்கள். அங்கே இருக்கின்ற உணவு தரமானதாக இல்லை என்று சொன்னார்கள். அதேபோல் ஒவ்வொரு அறைக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் போவார்களானால், அவர்கள் சரியாக மதிக்கப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். இது சிறிய விஷயமாக இருந்தாலும் கூட, அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவாக்குகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருப்பது மட்டுமல்லாமல் வேண்டுகோள் பலவற்றையும் வைத்திருக்கிறார்கள் கோரிக்கைகள் பலவற்றையும் வைத்திருக்கிறார்கள் வழக்கம்போல. ஆனால் அவைகள் எல்லாம் நியாயத்தினுடைய அடிப்படையிலே, நிதி வசதியினுடைய அடிப்படையிலே, முறைப்படி ஆராய்ந்து வகைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றத்தினுடைய மாண்பு காப்பாற்றப்பட வேண்டும் என்றும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெருமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆற்ற வேண்டிய பணி செம்மையாக, சிறப்பாக ஆற்றப்படுவதற்கு வழிவகைகள் காணப்பட வேண்டும் என்பதைப் போன்ற கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சிறப்பாக எடுத்துக் தெரிவித்து இருக்கிறார்கள். சட்டமன்றத்தினுடைய ஒழுங்கு முறைகள் பற்றியும், நடவடிக்கைகள் பற்றியும் அவை எப்படி இயங்க வேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்கள் பற்றியும் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். மற்றைய உறுப்பினர்களும் எடுத்துத் தெரிவித்தார்கள். ஆகவே நான் முதலிலே பல தடவை எடுத்துக் கூறியிருப்பதைப் போன்று, இந்த மாநிலத்திற்கும், மற்றைய துறைகளுக்கும் எல்லாம் அடிப்படையாக அமைந்திருக்கின்ற துறை சட்டமன்ற பேரவைத் துறையாக அமைந்திருப்பதன் காரணமாக அதனுடைய மதிப்பு எந்த அளவிற்கு உயர்த்தப்படுகிறதோ, அந்த அளவிற்குத்தான் பிற வகைகளிலே, அதனுடைய பணிகள் எல்லாம் சிறப்பாக நடைபெறுவதற்கு வழிவகைகள் ஏற்படக் கூடும்.

ஆகவே நீதிமன்றம் தனியாக இயங்கினாலும், நிர்வாகம் தனியாக இயங்கினாலும், நிர்வாகம் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு அடிப்படையான சட்டத்தை வகுத்துத் தருகின்ற இடம் சட்டமன்றமாகும். அந்தச் சட்டங்களுடைய அடிப் படையிலே நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று, அந்தச் சட்டங்களை, கொள்கையின் அடிப்படையிலே வகுத்துத் தருகின்ற இடமும் சட்டமன்றமாகும். ஆகவே நீதிமன்றத்திற்கும், நிர்வாகத்திற்கும் அடிப்படையாக அமைந்தது சட்டமன்றம். ஆகவேதான் சட்டமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் தமிழகத்திலே இருக்கிற இத்தனை கோடி மக்களுடைய பிரதிநிதிகளாக இங்கே வந்து சேருகி றார்கள். ஆகவே ஒட்டு என்பதற்கும் டிக்கெட் என்பதற்கும் வேறுபாடு உண்டு. டிக்கெட்டை யார் வேண்டுமானாலும் கொடுத்து, அதற்குரிய இடத்திலே போய் உட்கார்ந்து கொள்ளலாம். ஆனால் வோட் என்பது, வாக்கு உரிமை யைப் பெற்றுக்கொண்டு, அத்தனை பேர்களும் வந்திருப்பதன் காரணமாக இந்த மாநிலத்தினுடைய அடிப்படைத் தேவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, அதை நிறை வேற்றுகின்ற பாங்கு உடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தச் சட்டமன்றத்தி னுடைய ஒழுங்கு, பாங்குகள் ஆகியவைகளை எல்லாம் முறைப்படி காப்பாற்ற வேண்டும் என்று எடுத்துக் கூறிய கருத்துக்கள் அனைத்தும் ஆளும் கட்சிக்கும், அரசுக்கும் ஒத்த கருத்துக்கள் தான் என்பதை இப்போது நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே சட்டமன்றத்தினுடைய மதிப்பு உயர்த்தப்பட வேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே காணுகின்றபோது, வெளியிலே இருப்பவர்கள் சட்டமன்றத்தை மதிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் களை கேலி செய்தோ, அல்லது கிண்டல் செய்தோ, அவர்களை தாழ்த்துவதன் மூலமாக நாட்டுக்கே ஒரு கேடு விளைவிக்கிறார்கள், சமுதாயத்திற்கே கேடு விளைவிக்கிறார்கள். இது கிண்டலுக்குரிய ஒன்றாக, அல்லது கேலி செய்வதற்கு உரிய ஒன்றாக, இழித்துக் காணுவதற்கு உரிய ஒன்றாக, ஆக்கப் பட்டுவிடுமேயானால் எதிர்காலத்தில் நாம் விரும்புகின்ற ஜனநாயகத்தை முறைப்படி அமைப்பதற்கு வழிவகைகள் ஏற்படாமல் போய்விடும். ஆகவே வெளியிலே இருப்பவர் கள், எழுதுகிறவர்கள், கட்டுரை எழுதினாலும் சரி, அல்லது சித்திரங்கள் வரைந்தாலும் அல்லது செய்திகளை, நிகழ்ச்சி களை மற்றவைகளைப் போட்டாலும், அந்தக் கருத் துக்களைப் பொறுத்து, தங்களுடைய கருத்துக்களை அவர்கள் எடுத்துத் தெரிவிப்பதிலே ஜனநாயக நாட்டிலே எந்த வேறு பாடும் கிடையாது.



ஆகவே எண்ணங்களை வெளியிடுவதற்கு யாருக்கும் உரிமை உண்டு. அந்த வகையில் எடுத்து வெளியிடலாம். நோக்கம் கற்பித்து இழிவுபடுத்த வேண்டும் என்று அல்லது கேலி செய்ய வேண்டும் என்று தரக் குறைவாக ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தை யாரும் ஏற்படுத்தக்கூடாது என்பது தான் உரிய கருத்து ஆகும். அதே நேரத்தில் மற்றவர்கள் மதிக்கப்படத்தக்க அளவுக்கு நாமும் நடந்து கொள்ள வேண் டும் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் மதிக்கவும் வேண்டும், வெளியிலே இருப்பவர்கள் நம்மை மதிக்கத் தக்க அளவுக்கு நாமும் நடைமுறைகளை இந்த அவையில் இருக்கிற அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்து எனக்கு உடன்பாடான கருத்து தான்.

அதற்கு நாமும் எடுத்து காட்டாக இருக்க வேண்டும். நாம் மதிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும், மதிப்பை பெறவும் கற்றுக்கொள்ள வேண்டும். அது ஒரு வழி பாதையாக இருக்க முடியாது. இரு வழி பாதையாக தான் இருக்க முடியும். நான் எவரையும் மதிக்க மாட்டேன் எல்லோரும் என்னை மதிக்க வேண்டும் என்றால் யாரும் மதிக்க மாட்டார்கள். நாமும் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பிறரும் நம்மை மதிக்க வேண்டும். அந்த வகையில் சட்டமன்றத்தினுடைய பாங்கைக் காப்பாற்ற வேண்டும் என்று எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனையையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அந்த வகையில் எடுத்துச் சொல்லும்போது உறுப்பினருக்கு உறுப்பினர் மதிப்புத் தர வேண்டும். ஒருவரை முட்டாள் என்று குறிப்பிடும் போது கூட 'லெர்னர்டு பூல்' என்று தான் சொல்வார்கள் ஆங்கிலத்தில். ஆகவே தான் அவர்களைப் பற்றி சொல்லும் போது கூட மதிப்புரை தந்து விட்டு, ஒரு புகழ் உரை தந்து விட்டு அவர்கள் எடுத்துச் சொல்லுகிற ஒரு பாங்கை ஆங்கில மொழியில் கற்று தந்து இருப்பது போல் நம் உறுப்பினர்களும் ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொள்ளும் போது கூட கருத்தின் அடிப்படையில் போக்கின் அடிப்படையில், நடவடிக்கையின் அடிப்படையில் எடுத்து ஒழுங்கு படுத்துவதற்கு, சீர்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளுவதில் தவறு இல்லை. ஆனால் அவர்களை தனிப்பட்ட முறையில் இழித்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆக யானை உயரத்திற்கு குதிரை வளர வேண்டும் என்றாலும் கூட, தான் வளரா விட்டா லும் கூட குதிரை, யானையை படுக்க வைத்தாவது தன்னுடைய உயரத்தை காட்டக் கூடாது என்றும் அதற்கு குதிரை முயலக் கூடாது என்றும் ஒரு பழமொழி உண்டு. அந்த வகையில் ஒருவரை ஒருவர் நாம் தாழ்த்த வேண்டிய அவசியம் இல்லை. மதிக்க வேண்டும். அந்த வகையில் எல்லோரும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் மிகமிக' பாராட்டக்கூடிய ஒன்று ஆகும்.

அது மட்டும் அல்லாமல் சட்டமன்றப் பேரவையில் கருத்துக்கள் வழங்கப்பட வேண்டும் என்று பேராசிரியர் அவர்கள் சொன்ன கருத்தை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். எண்ணங்களுக்கு மதிப்பு அளிக்கவேண்டும். ஆகவே Democracy by discussion, Decision by discussion என்று சொல்வார்கள். ஜனநாயகத்தில் ஏற்பட்டு இருக்கின்ற ஒரு வாய்ப்பு ஒரு முடிவு பெறுவதற்கு முன்னால் நடத்தப்படுகின்ற விவாதம்தான் அதற்கு அடிப்படை காரணமாக அமைகிறது. ஆகவே, 'டிக்டேட்டர்சிப்' இருக்குமானால் சர்வாதிகார நாடாக இருக்குமானால் எந்த விவாதமும் நடைபெறாது. அவருக்கு என்ன தோன்றுகிறதோ அதை டிக்டேட் செய்வார் அவ்வளவுதான். ஆனால் அதே சமயத்தில் ஜனநாயகத்தில் விவாதத்திற்கு பிறகு வருவதுதான் முடிவு. அதைப் போன்று பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல் எண்ணங்களைப் பொறுத்த வரையில் எடுத்துச் சொல்வதற்குதான் பல்வேறு தரப்பட்ட நிலையில் இந்த அவையில் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

ஆளும் கட்சி ஒரு பக்கம், எதிர்க்கட்சி ஒரு பக்கம், அதற்கு முறைகள் எல்லாம் வகுக்கக்கப்பட்டு வருகின்றன. எண்ணங்கள் தாராளமாக எடுத்துச் சொல்லப்பட வேண்டும். சொல்லப்பட வேண்டிய எண்ணங்களை எல்லாம் முறைப்படி அதில் எந்த வகையில் உள் நோக்கம் கற்பிக்காமல் எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொல்ல உரிமை உண்டு. அவர்கள் எடுத்துச் சொல்லியது மாதிரி முடிவு என்று வருகிற போது தான் எண்ணிக்கை காரணமாக இருக்க முடியுமே தவிர எண்ணங்களை எடுத்துச் சொல்லும் போதே அங்கே எண்ணிக்கை என்கிற காரணத்தை வைத்து யோசித்துப் பார்க்கக் கூடாது என்று அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தையும் நான் சிறப்பாக ஏற்றுக் கொள்கிறேன்.

''சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்து ஒரு பால் கோடாமை சான்றோருக்கு அணி'' என்று வள்ளுவ பெருந்தகை கூறியிருக்கிறார்கள். அதற்கு உரையெழுதிய பரிமேல் அழகர் மிக அழகாக எழுதினார்கள். சமன் செய் சீர் தூக்கும் கோல் போல் என்பதற்கு முதலில் தன்னை தானே சமப் படுத்திக் கொண்டு பிறகு எடை போடுகின்ற கருத்துக்களை சீர் தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதுதான் அந்த தராசு என்று. அதற்கு தான் சமன் செய்து தன்னை முதலில் சமன் படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு சீர் தூக்கி பார்க்கவேண்டும் என்ற பொருள் உணர்த்தும் அந்த இலக்கணத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து யாருக்கும் இருக்க நியாயம் இல்லை. சபையிலே நயம்பட கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்,



திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்ன அந்த குறளையும் அந்த உரையையும் நான் ஏற்றுக் கொண்டாலும் கூட ஒரு சின்ன மாற்றம். சமன் செய்து சீர் தூக்கும் கோல் என்று சொன்னால் நாம் தான் அதை சமன் செய்து சீர் தூக்கும் கோலாக ஆக்கி அதற்கு பின்னால் எடை பார்க்க வேண்டும். அந்தப் பொறுப்பை மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னவர் மட்டும் அல்ல, அவைத் தலைவர், அமைச்சர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள், ஒவ்வொரு உறுப்பினரும் அவரவர்களுக்கு என்று வருகின்றபோது ஒரு பிரச்சினையை எடுத்துச் சொல்லுகிறபோது சமன் நிலையில் இருந்து எடுத்துச் சொல்ல வேண்டும், ஒரு வழி சாராமல்.

(பிற்பகல் 12.40).

உண்மையைக் கொண்டு வருவதுதான் இந்த அவையினுடைய நோக்கம். உண்மையின் அடிப்படையிலே முடிவு எடுக்க வேண்டியதுதான் நம்முடைய நோக்கம். அந்த வகையிலே, தராசே கோணலாக இருக்குமேயானால், அதிலே எந்த எடை வைத்தாலும் சரியாக இருக்காது. அது அனைவருக்கும்தான். ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய பொறுப்பைத்தான் சொன்னார். தனிப்பட்டவருடைய கடமையையும் சொன்னார். ஒரு சொசைட்டி, ஒரு அமைப்புக்கு இருக்கிற கடமையையும் அந்தக் குறளிலே சொன்னார்.

நாம் அடிக்கடி மறந்து போய் விடுவதன் காரணத்தால், பல கருத்துக்களை நினைவு படுத்திக் கொண்டே இருக்க வேண்டி இருக்கிறது. சுடர் விளக்குகள்தான் எல்லோரும் என்றாலும் கூட, அதற்கு அவ்வப்போது தூண்டுதல் போட வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், நினைவு படுத்துகின்ற தன்மைகள் வருகின்றன.

அப்படிப்பட்ட மன்றங்களிலே பேசுகிறபோது நயம்பட உரைத்தல், 'விட் அண்டு ஹியூமர்' என்பார்கள். ஆகவே நயம்பட உரைத்தலும், நகைச்சுவைப்பட உரைத்தலும் உள்ளபடியே சிறப்பாக, வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

சில சமயங்களிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் நயம்படவும், நகைச்சுவைப்படவும் எடுத்துச் சொல்லுகிறபோது, அதனுடைய நோக்கத்தைத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அதனை எடுத்துக் கொண்டு விமர்சிக்க ஆரம்பித்தால், வெகு தூரத்திற்குப் போய் விடுவோம். பிரச்சினையிலிருந்து விலகி விடுவோம்.

இப்படிப்பட்ட பிரச்சினைகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் மற்ற இடங்களிலும் வருகின்றன. அப்படி நகைச்சுவைப்பட எடுத்துச் சொல்வதும், நயம்பட உரைப்பதும் உள்ளபடியே வரவேற்கத் தகுந்தது. அப்போதுதான் ஒரு அவையிலே இருக்கிற டென்ஷன் குறைந்து நல்லதொரு நிலை ஏற்படும்.

திரு. கி. மனோகரன் : நயம்பட உரைத்தல் என்று நாவலர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பிரிட்டிஷ் காமன்ஸ் இல் ஆட்சிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் எழுந்து, I conceivo, I conceive, I conceive என்று மூன்று முறை சொல்லி, Thrice conceived but no delivery என்று எதிர்க் கட்சி உறுப்பினர் எழுந்து சொன்னார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மனோகரன் அவர்கள் எடுத்துச் சொல்லியது போன்றுதான் அப்படிப்பட்ட உயர்ந்த தன்மையிலே நயம்பட எடுத்துச் சொல்கிறார்கள். ஒரு தடவை, லாயிட் ஜார்ஜ் அங்கே பிரதமராக இருந்து பேசிக் கொண்டு வருகிறபோது, லண்டன் மாநகரம் மற்ற இடங்களிலே உணவுப் பண்டங்கள் விலைகள் எந்த அளவுக்கு குறைந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான காரண-காரிய விளக்கங்களை சொல்லும்போது, குற்றச்சாட்டுக்களுக்கு எல்லாம் பதில் சொல்லிக் கொண்டு வரும்போது, எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் எழுந்து, வைக்கோல் விலை என்ன ஆயிற்று என்று கேட்டார்.

உடனே லாயிட் ஜார்ஜ் சொன்னார், இப்போது மனிதர்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டு வருகிறேன். அடுத்து மாட்டுக்கு வருகிறேன், என்று அந்த உறுப்பினரிடம் உங்களுடைய பிரச்சினைக்கு, மாட்டுப் பிரச்சினைக்கு வருகிறேன் என்று எடுத்துச் சொல்கிறபோது, யாரும் அதைக் குற்றம் சொல்ல முடியாது. அதை நகைச்சுவைப் படத்தான் எடுத்துக் கொண்டார்கள்.

அப்படிப்பட்ட நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பரிமாறிக் கொள்வார்களேயானால், சில சமயங்களில் ஏற்படுகிற திண்மையான, கடினமான சூழ்நிலைகள் குறைவதற்கு வழி வகை ஏற்படும். அந்த வகையிலேதான் Democracy without disciplinc is useless என்பார்கள். ஜனநாயகத்திற்கு மிக அடிப்படையான ஒன்று கட்டுப்பாடுதான்.

அதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்களும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று சொன்னதற்குக் காரணமே, தனி மனிதனாக இருந்தாலும், ஒரு குடும்பத்தை நடத்துவதாக



இருந்தாலும் சரி, ஒரு அமைப்பை முறையாக இயக்கிச் செல்வதாக இருந்தாலும் சரி, எத்த ஒரு சூழ்நிலையிலும் கடமை ஆற்ற வேண்டிய உணர்வு வேண்டும். அடுத்தது, ஆற்றப்படுகிற கடமை கண்ணியத்தோடு ஆற்றப்பட வேண்டும். அந்தக் கண்ணியத்தோடு ஆற்றப்படுகிற கடமை கட்டுப்பாட்டோடு ஆற்றப்பட வேண்டும்.

அது ஒவ்வொரு நிலைக்கும் உண்டு என்று சொன்னார்கள். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய தன்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியது மிக மிக பாராட்டுக்குரிய ஒன்று என்பதை எடுத்துக் கூறிட விரும்புகிறேன்.

உள்ளபடியே மன்றங்களினுடைய நடவடிக்கைகளை எல்லாம் தேவையான அளவுக்கு நாம் நடத்திக்கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற விருப்பினுடைய அடிப்படையிலே தேவையான அளவுக்கு அலுவல் ஆய்வுக் குழுவினைக் கலந்து கொண்டு அவ்வப்போது நாட்களை ஒதுக்கி வைக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் வீரையன் குறிப்பிடுகிறபோது, குறைவான நாட்களே கூடுகிறோம் என்று எடுத்துச் சொன்னார்.

ஓரளவுக்கு நாம் கூடுதலாகத்தான் நடத்திக் கொண்டு வருகிறோம். 1980-லிருந்து, கணக்கிட்டு பார்ப்போமேயானால் ஆந்திரப் பிரதேசமும், உத்திரப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரா என்று கணக்கிட்டுப் பார்த்தால், 1980-லே 40 நாட்கள் ஆந்திரப்பிரதேசமும், 48 நாள் உத்திரப்பிரதேசமும், 38 நாட்கள் குஜராத்தும், 50 நாட்கள் மகாராஷ்டிரமும் கூடி இருக்கின்றன. நாம் 48 நாட்கள் கூடி இருக்கிறோம்.

1983-லே கணக்கிட்டுப் பார்த்தால், ஆந்திரப் பிரதேசம் 45 நாட்கள், உத்திரப் பிரதேசம் 48 நாட்கள், குஜராத் 48 நாட்கள், மகாராஷ்டிரா 65 நாட்கள், நாம் 78 நாட்கள் கூடி இருக்கிறோம். இந்த ஆண்டு கணக்கை எடுத்துக் கொண்டாலும், உத்தரப்பிரதேசம் 39 நாட்கள், குஜராத் 37 நாட்கள், கூடி இருக்கிறார்கள். நாம் 55 நாட்கள் கூடி இருக்கிறோம்.

ஆனால் கூடுவது அவசியம் என்று பட்டால், நாட்களை அதிகமாக்கினால்தான் நல்லது என்ற நிலை ஏற்பட்டால் மகிழ்ச்சிக்குரியது. அதை விரிவுபடுத்துவதிலே நமக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்லியதுமாதிரி, அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளே முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதன் காரணமாகவும், கேள்வி நேரம் 1 மணி நேரம்தான் என்று ஒதுக்குகிறோம் ; அதற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய நலன் கருதி அவர்களுக்கு அதிக விளக்கங்கள் தரவேண்டும் என்ற அளவுக்கு நாம் நிலைமை வைத்திருக்கிறோம்.

அதனால் தான் நாம் கேள்வி நேரத்தை நீடித்து பத்தரை மணிக்கு மேல்கூட ஆகிவிடுகிறது. பாராளுமன்றத்தினுடைய தன்மைப்படி இந்த ஒரு மணி நேரத்திற்குள்ளே முடியாத கேள்விகளை நிறுத்தி விடுகிறார்கள்; அவர்களுக்கு பதிலாக அனுப்பி விடுகிற சூழநிலை இருக்கிறது. அந்தத் தன்மையிலே போனால் அதிலே நேரம் போய்விடுகிறது. அதற்கு மேலும் நேரம் போய் விடுகிறது. குறிப்பிட்ட பிரச்சினைகளைப்பற்றிய விவாதத்திற்கு இரண்டு மணிநேரம், இரண்டரை மணிநேரம் என்றுதான் நமக்குக் கிடைக்கிறது. எல்லாக் கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் ஒப்புக் கொள்ளுவார்களேயானாலும்கூட நாம் பத்து மணிக்கு தொடங்கிக்கூட, அவரவர்கள் போய்ச் சாப்பிட்டுவிட்டு வரட்டும் என்று முடிந்த வரையில் நடத்துவதற்கு இடம் தருவார்களேயானால்—அவை முன்னவரைப் பொறுத்தவரையிலேயும் அவர்கள் தயாராகத்தான் இருக்கிறார்கள்; மற்றவர்களும் தயாராக இருப்பார்களேயானால் அந்த முயற்சிக்கு நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலேயோ உறுப்பினர்களையோ கலந்து கொண்டு தக்க முடிவுகளை எடுக்கலாம். அதன் மூலமாக அதிகமான அளவிற்கு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படக் கூடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தொகுதியை பொறுத்த வரையிலும் குறிப்பிட்டுக் கூறினார்கள். ஒரு காலத்திலே, 70,000 வாக்காளர்கள் அல்லது 90,000 வாக்காளர்கள் என்று ஒரு இலட்சத்திற்கு உள்ளாக இருந்த வாக்காளர்களினுடைய எண்ணிக்கையினுடைய அடிப்படையிலே, ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு ஏற்கனவே ஐந்து சட்டமன்றத் தொகுதிகள் என்று இருந்தன. பிறகு ஆறு சட்டமன்றத் தொகுதிகள் என்று ஆக்கப்பட்டது. அப்படி ஆக்கப்பட்ட நிலையிலேயும் ஒரு இலட்சம் வாக்காளர்களுக்குக் குறைவாக இருந்த காலம் உண்டு. ஆனால் தொகுதி வரையறை அப்படியே இருந்துவிட்டதன் காரணமாகத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு அதிலே இருக்கின்ற வாக்காளர்களின் எண்ணிக்கை வளர்ந்து வளர்ந்து இப்பொழுது சில தொகுதிகளிலே 1,90,000 என்றோ, 1,50,000 என்றோ, 1,60,000 என்றோ அந்த அளவிற்குக்கூட போயிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட தொகுதியிலே 2,10,000 வாக்காளர்கள் கூட இருக்கிறார்கள். வாக்காளர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து, தொகுதியினுடைய எல்லையையும் சுருக்கி வைக்க வேண்டுமென்ற எண்ணம்தான் இந்த அரசுக்கு இருக்கிறது. ஆனால் மத்திய அரசு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, கி.பி. 2001 வரையில் இப்பொழுது இருக்கின்ற தொகுதியை எந்த வகையிலேயும் மாற்ற வேண்டாம் என்ற அளவிற்குக்கூட தீர்மானத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள்.

ஆனால், அது வரையிலேயும், 15 ஆண்டு காலம் வரையிலேயும் இதே நிலை இருக்குமேயானால் ஒவ்வொரு தொகுதியிலேயும் இரண்டரை இலட்சம் வாக்காளர்கள்கூட வந்து சேருகின்ற



சூழ்நிலை ஏற்படக் கூடும். ஆகவேதான் மறுபடியும் ஒரு திருத்தத்தைக் கூற வேண்டுமென்ற ஒரு கருத்தை மத்திய அரசுக்கு நாம் வற்புறுத்தி வருகிறோம். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறோம். சில பல மாநிலங்களிலே ஒரு பாராளுமன்றத்திற்கு 7 சட்டமன்ற இடங்களை வைத்திருக்கிறார்கள். சிலபலயிடங்களில் 8 இடங்களைக் கூட வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டியும், அதற்கடுத்து பத்து, பதினைந்து ஆண்டு காலத்திற்கு வருகின்ற சூழ்நிலையையும் அடிப்படையாக வைத்துப் பார்ப்போமேயானால் ஒரு தொகுதியில் குறைந்தது ஒரு பாராளுமன்றத் தொகுதியை எட்டு சட்டமன்றத் தொகுதிகளகப் பிரித்து வைத்து விடுவோமேயானால் ஓரளவிற்குத் தகுந்த அளவிற்கு வரும். அதற்குப் பிறகும் ஒரு பத்தாண்டுக் காலம் சமாளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையும் ஏற்படும். மத்திய அரசுக்கு இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்து விரைவிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள இருக்கிறோம். ஏனென்றால், பத்தாண்டுகளுக்கு ஒருமுறை லிமிடேஷன் என்று தொகுதி மாற்றியமைக்கப்படுவது உண்டு. பத்து பதினைந்து ஆண்டுகள்கூட ஆகிவிட்டது மாற்றியமைத்து. அந்தக் காரணத்தை ஒட்டியாவது சீக்கிரம் கொண்டு வர வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறுவோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு ஜனதா உறுப்பினர் இங்கே கூறுகிறபொழுது இந்த இரயில்வேயிலே டிக்கெட் வாங்குவதற்கு, உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களையும், அதற்காகத் தொல்லைப்பட வேண்டியிருக்கிறது என்பதையும் ரிசர்வ் செய்வதற்கான வழிவகைகளில் கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டினார்கள். இது குறித்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக நிர்வாகத்திற்கும், இரயில்வே நிர்வாகத்திற்கும் கடிதங்கள் எழுதப்பட்டு இருக்கின்றன. ஆகவே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இருக்கின்ற விடுதியிலேயே இரயில்வேக்கு என்று ஒரு கவுண்டரும், இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு என்று ஒரு கவுண்டரும் வைத்து விடுவார்களேயானால் அதன் மூலமாகவே டிக்கெட்டுகளைப் பதிவு செய்து கொள்ள-ரிசர்வ் செய்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை, அந்த வசதி வந்ததற்குப் பிறகு செய்யலாம் என்கின்ற நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது.

பாராளுமன்றத்தைத் தவிர எந்த மாநிலத்திலேயும் கூட பாஸ் வசதி தரப்படவில்லை. இரயில்வே நிர்வாகம் அவர்கள் கையில் இருப்பதன் காரணமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவச பாஸ் தந்து விடுகிறார்கள். நாம் எல்லோருக்கும் பாஸ் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு எழுதியபோதுகூட ஒரு கணக்கிட்டுப் பார்த்து இவ்வளவு நாள் செல்வார்கள் என்று

ஒரு உத்தேசக் கணக்கைப் போட்டு, அவ்வளவு பணத்தையும் நீங்கள் செலுத்துவீர்களேயானால் தான் நாங்கள் அதற்கு பாஸ் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அந்த வகையிலேதான் எந்த மாநிலத்திலேயும் கொடுப்பதற்கான சூழ்நிலைகள் இல்லை. இந்தக் கூப்பன் முறையைக் கையாண்டு வருகிறார்கள். அந்தக் கூப்பனிலே ஏற்கனவே ஒருவர் டிக்கெட் வாங்கிவிட்டுச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமேயானால் அது முழுவதும் பாழ் ஆகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. பிறகு இரயில்வேத் துறையினருடன் நாம் தொடர்பு கொண்டதன் காரணமாக, அப்படிச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அந்த டிக்கெட்டைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுமேயானால் அதிலே 75 சதவீதத்திற்குத் திருப்பித் தந்து அதைக் கூப்பனாகவே பெற்றுகொள்வதற்கு வாய்ப்பு இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் கூறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

பத்தாண்டு காலத்திற்கு மேல் சட்டமன்றத்திலே கூடுகின்ற காலங்களில் மட்டும் பணிபுரிந்தவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு பற்றி எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் சொன்னார்கள். சுப்பராயன் அவர்களும் சொன்னார்கள். ஆகவே, இந்தப் பத்தாண்டு காலத்திற்கு மேலே வேலை செய்கிறவர்கள் என்று சொல்வது, சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் தான் நாம் நியமிக்கிறோம் கூடுதலாக. தொடர்ந்து விடுதியிலிருந்து பணியாற்றுவதற்கு நிரந்தரப் பணியாளர்கள் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-50.)

சட்டமன்றம் ஆண்டுக்கு 70 நாள், 78 நாள், 80 நாள் கூடுகின்ற பொழுதெல்லாம் அவர்களை வைத்துக் கொள்கிறோம். அலுவலகம் அவ்வப்போது யார், யாரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்றாலும் மனிதாபிமான அடிப்படையில் ஏற்கனவே வேலை செய்தவர்கள் மறுபடியும் விண்ணப்பிப்பார்களானால் அவர்களுக்கு முன்னுரிமை தந்து, அவர்களை மறுபடியும் எடுத்துக் கொள்கிறோம். இடையில் வேறு வேலை பார்க்கிறார்கள். அப்படி 10 ஆண்டு காலம் வேலை செய்தவர்களைக் கூட நாம் எண்ணி இருப்பது, அப்படிப்பட்டவர்களுக்குப் போதுமான அளவுக்குத் தகுதி இருந்து, வேறு பல துறைகளிலும் மற்றவைகளிலும் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அவர்களுக்குக் கல்வித் தகுதி, மற்ற தகுதிகள் இருந்தால், அவர்களுடைய வயது தகுதியை வேண்டுமானாலும் நாம் தளர்த்திக் கொள்ளலாம்.

அவர்கள் வேலை வாய்ப்புத் துறைக்கு விண்ணப்பித்த அதனுடைய பதிவு எண் வேண்டுமென்று கூடக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படிப்பட்டவர்களை நிரந்தரமாக்க வேறு வேலைக்கு மாற்றியமைக்க முடியுமா என்பதை ஆராய்வதற்குச் செயற்குறிப்பு அனுப்பும்படியாகக் கேட்டிருக்கிறோம்.



அப்படி வருமேயானால் முன்னுரிமை அவர்களுக்குத் தந்து—இதிலே 10 ஆண்டு காலம் தற்காலிகமாகப் பணியாற்றியவர்களுக்குத் தந்து—அவர்களை அங்கே அமர்த்துவதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போழுது குறிப்பிட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசினார் என்ற அளவுக்குப் பொதுப்படையாக எடுத்துச் சொன்னர்கள். அவர்கள் என்னிடத்திலே கூட அதைப்பற்றிக் குறிப்பிட்டுக் கூறினார்கள். யாராக இருந்தாலும் 234 தொகுதிகளிலே தேர்தல் நடக்கும்போதுதான் போட்டி, கட்சிக்குக் கட்சி நடைபெறுகிறது. வாக்களித்தவர்கள் இருப்பார்கள். எதிர்த்து வாக்களித்த, மற்றவர்களுக்கு வாக்களித்தவர்கள் இருப்பார்கள். ஜனநாயக முறைப்படி ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்படுவாரானால் அவர் அந்தத் தொகுதியில் வாழ்கிற அவ்வளவு வாக்காள மக்களுக்கும், அத்தனை மக்களுக்கும் சேர்த்து பிரதிநிதியே தவிர, அவரை யாரும் புறக்கணிக்கவே முடியாது. 234 தொகுதிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்தத் தொகுதிக்கு உரியவர்கள். வேலை செய்யக் கூடாது, அல்லது வேலை செய்ய விடமாட்டோம் என்று யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அப்படிச் சொல்லி இருந்தால், சொல்லியிருக்கக் கூடாது, சொல்லியிருக்கவும் முடியாது. அதைப் பற்றிக் கூட நான் விசாரித்து, இப்படிப்பட்ட பேச்சுக்கள் பேச வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் என்று கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களிடத்திலே நான் தெரிவித்து இருக்கிறேன். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு தொகுதிப் பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அவர்களுடைய தொகுதிப் பணிகளைத் தடுத்து நிறுத்த யாருக்கும் உரிமை கிடையாது. அந்த வகையிலேதான் இந்த அரசு அந்தக் கருத்தை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூறுகின்ற பொழுது, கட்சிகளைப் பற்றிச் சொன்னர்கள். கட்சிகளைப் பற்றி எடுத்துச் சொல்கின்றபொழுது, சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகள், சட்டமன்றத்தினுடைய செயல்கள், மற்றவைகளை நிறைவேற்றுவதற்காக நர்டாளுமன்றத்தினுடைய விதிகளை அடிப்படையாக வைத்து, அதை வகுக்கின்ற பொழுது, எல்லா கட்சிகளும் சேர்ந்துதான் ஒத்துக் கொண்டார்கள். ஆனால், இங்கே சொன்ன மாதிரி, சட்டமன்றத்திற்குள்ளே ஒரு பார்ட்டி என்ற இலக்கணத்தின் கீழே எப்படி அறிவிப்பது, குரூப் என்ற இலக்கணத்தின் கீழே எப்படி அறிவிப்பது என்ற அளவுக்கும், சட்டமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்து கணக்கெடுக்கின்றபொழுது, அல்லது நடவடிக்கைகள் எடுக்கும்போது அந்த இலக்கணத்தைப் பொருத்திப் பார்க்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே

தான் அது நிறைவேற்றப்பட்டது. அந்த வகையிலேதான் எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். அப்படி இங்கே வந்திருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரையும் சுயேச்சையாகக் கருத வேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

அதற்கான திருத்தங்கள் எல்லாம் கொண்டு வரப்பட இருக்கின்றன. ஆனால், தேர்தலில் நிற்கின்ற பொழுது, ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சொல்லி, அந்தக் கட்சியின் சார்பாக கருத்துக்கள், கோட்பாடுகள் எல்லாம் வைத்து வருகின்ற, ஒதுக்கப்பட்ட சின்னத்தின் அடிப்படையிலே வந்தவர்களைக் குறிப்பிடுகின்ற பொழுது, அந்த, அந்தக் கட்சியினுடைய பெயரைச் சொல்லித் தான் குறிப்பிட வேண்டுமென்ற தன்மையைத்தான் இந்த அரசு கொண்டிருக்கிறதே தவிர, அவர்களைச் சுயேச்சையாகக் கருத வேண்டுமென்று அல்ல. அவர்கள் சொல்லிய மாதிரி, கட்சி, குழு, அல்லது சிறு குழுக்கள் என்று வைத்துக் கொண்டாலும் பேசுகின்றபொழுது உறுப்பினர்கள், மற்றவர்கள், ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வதிலே எந்தத் தவறும் இல்லை. அவர்களை அந்தக் கட்சிகளைக் குறிப்பிட்டு, உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வதிலே எந்தத் தவறும் இல்லை. பிரச்னைகள் வரும்போது பார்ட்டி என்று வரும்போது, அதற்கென்று தனி இலக்கணம் இருந்தால் அந்த இலக்கணம் அப்பொழுதுதான் பொருந்தி வருமே தவிர, இந்த அவையைப் பொறுத்தவரையிலும் அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இல்லை என்பதையும் அந்த வகையிலே அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதையும் நான் கூறிக்கொள்கிறேன்.

அம்பாசங்கர் கமிஷன் அறிக்கையைப் பற்றி மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே நான் எடுத்துச் சொன்னேன். சுப்ரீம் கோர்ட்டிலே இரண்டு பேர் வழக்கு தொடுத்து விட்டார்கள். வழக்குத் தொடுத்த உடனேயே அவர்கள் 31 இடம் என்று ஒதுக்கப்பட்டிருப்பதை 50 இடமாக மாற்றியமைத்ததற்கு என்ன காரணம்? அதற்குக் காரணம் சொல்லாவிட்டால் 31-ஆக இருக்க .வேண்டுமென்று இரண்டு பேர் தொடுத்த வழக்கிலே தீர்ப்பளித்தபொழுது தமிழக அரசின் சார்பாகச் சொன்னோம், ஓராண்டு காலம் நீங்கள் அவகாசம் தாருங்கள்; அதற்கான புள்ளி விவரங்களை, கணக்கை, மற்றவைகளை எல்லாம் வைத்து, 50 சதவீதம் ஆக்கியதற்கான நியாயங்களை நாங்கள் எடுத்து வைக்கிறோம் என்பதற்கு நாம் பதில் சொல்லிவிட்டு, டைம் கேட்டோம். மறுபடியும் ஓராண்டு காலம் அவர்களிடத்திலே நீடிக்கும்படியாகக் கேட்டோம். அவர்களும் நீடித்துத் தந்தார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பழங்குடியினருக்கும் 18 சதவீதம்



இட ஒதுக்கீடு, பிற்பட்டவர்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு என்ற கொள்கையை, நிலை நாட்டுவோம் என்பதிலே இந்த அரசு திட்டவட்டமாக, உறுதியாக, தெளிவாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு ஆதாரமாக சுப்ரீம் கோர்ட்டிலே வாதாடுவதற்காகத்தான் நாம் அம்பாசங்கர் கமிஷனை நியமித்தோம். அவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பது மட்டுமல்ல, சர்வீஸ் கமிஷனிலே இருந்தவர், நன்றாக அனுபவம் பெற்றவர். அதற்கு சாதகமாகத் தருவார் என்ற நிலைமையிலேதான் இரண்டு ஆண்டு காலம் கொடுத்து, 19, 20 உறுப்பினர்களையும் கொடுத்து, அதற்குப் பின்னாலே அவர்கள் கொடுத்த அறிக்கை வேறு மாதிரியாக அமைந்துவிட்ட காரணத்தால், இந்த அறிக்கையே இல்லாமல் இருந்திருக்கலாமா என்று நினைக்கிற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது (குறுக்கீடு).

அறிக்கை என்று வரும்போது அதை அரசு பார்த்து, அரசு ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம், அரசு நிராகரிக்கவும் செய்யலாம், சில திருத்தங்களையும் சொல்லலாம். ஒரு அறிக்கை என்று வந்துவிட்ட பிறகு, அந்த அறிக்கையைப் பார்த்து அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்ற இரண்டையும் சேர்த்துதான் அவைக்கு வைக்க வெண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. அதைப் பார்த்த பிறகு இன்னமும் பிரச்சனைகள் இருந்துகொண்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொன்னமாதிரி கெடு வைத்தாலும் அதை நீக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அப்படி இல்லை என்றாலும் கூட சட்டத்திட்டங்களுடைய அடிப்படையில் எப்படி இந்த விகிதாச்சார வரம்பைக் காப்பாற்றுவது என்பதை தீவிரமாக சட்டத்துறையும் தமிழக அரசும் சிந்தித்துக்கொண்டிருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகளை எடுக்க, அவர்கள் வற்புறுத்தியது மாதிரி, அதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபடும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

ஆக, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அடிப்படையிலே அவற்றை எல்லாம் இந்தத் துறையினரும் சரி, இந்தத் துறையுடன் உடன்பட்டு பணியாற்றுகின்ற மற்றத் துறைகளும் சரி, அவைகளுக்கு எல்லாம் நல்ல கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இருக்கின்ற வசதி வாய்ப்புகள் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே இந்த ஆண்டு இருக்கிற மற்ற அரசு அலுவலர்கள், மற்ற அரசு ஊழியர்கள், மற்றவர்களுக்கு எல்லாம் அவர்களுடைய ஊதிய விகிதத்தையும் படி விகிதத்தையும் நிர்ணயிக்கிறபோது அதற்கு என்று சிலபல வரன் முறைகள் முறைப்படி வகுக்கப் பட்டிருக்கின்றன. 8 புள்ளி சேர்ந்துவிடுமானால் அவர்களுக்கு

ஒரு அகவிலைப் படி கூட்டலாம் என்றும் அந்த அகவிலைப்படி வளர்ந்துகொண்டே வருகிறபோது 1978-க்கும் 1985-க்கும் இடை யிலே 33 படிகள் தந்துகொண்டும் வந்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதன் பிறகு ஊதியக் குழு அமைத்தோம். இப்படி இருக்கிற சூழ்நிலைகளில் விலைவாசி ஏற்றம் மற்றவைகளைக் கணக்கிட்டு வைத்து, அவர்களுக்கு என்று அண்மையிலே ஊதியத்தை உயர்த்தினோம், அவர் களுடைய படியை உயர்த்தினோம். அவர்கள் பெறுகின்ற சாதாரணச் சம்பளத்தின் அடிப்படைத் தன்மை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் நாம் வரையறுத்துத் தந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் கருத்துக்கள் பலவற்றை எடுத்துச் சொன்னாலும் கூட சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் முடிவு எடுக்க வேண்டியது இந்த அவையாகத்தான் இருக்கிறது. அதற்காக தனி சம்பளக் கமிஷனோ மற்ற எதுவுமோ இருக்காது.

ஆகவேதான் அவ்வப்போது எடுத்துக்கொள்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. அவர்களுக்கு 6 ஆண்டு, 7 ஆண்டு காலத்திற்கு ஒரு தடவைதான் இப்படி கொடுக்கிறோம். அவ் வப்போது எடுத்துச் சொன்ன கருத்துக்களை மனதில் வைத்து, எடுத்த நடவடிக்கைகளை மனதிலே வைத்து, மற்ற மாநிலங் களின் சூழ்நிலைகளை மனதிலே வைத்துக்கொண்டு, மற்ற மாநிலங்களிலே எவ்வளவு தருகிறார்கள் என்ற கணக்கையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு, அந்த அடிப்படையிலேதான் உறுப்பினர்களுக்குத் தருகின்ற வகையிலே இந்த அடிப்படைச் சம்பளம் 500 ரூபாயாக வழங்கி வந்ததை 1—7—1985 முதல் 100 ரூபாய் உயர்த்தி, 600 ரூபாயாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு ஈட்டுப்படி இப்போது 400 ரூபாய் தரப்படுகிறது. ஈட்டுப்படியில் மேற்கொண்டு 100 ரூபாய் உயர்த்தி, இனி 500 ரூபாயாகத் தரப்படும். அந்த வகையில் 200 ரூபாய் அவர்களுக்கு கூடுதலாகத் தரப்படுகிறது என்பதை இந்த வாய்ப்பிலே இப்போது இருக்கிற சூழ்நிலையை ஒட்டி, நிதிநிலையை ஒட்டி, அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று பேரவை, மேலவைத் துணைத் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியவர்களுக்கு 1,400 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்று இருப்பது 1—7—1985-லிருந்து 1,700 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. பேரவை, மேலவைத் தலைவர்கள், அமைச்சர்கள் ஆகியவர்களுடைய சம்பளம் 1,700 ரூபாய் இருக்கிறது. 1—7—1985 முதல் அது 2,100 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. வேறு சில மாநிலங்களிலே 2,500 ரூபாய், 3,000 ரூபாய் என்று இருந்தாலும் கூட நாம் இப்போது 200 ரூபாய், 300 ரூபாய், 400 ரூபாய் என்ற அளவிலே உயர்த்தி இருக்கிறோம்.





முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தைப் பற்றிச் சொன்னார்கள். தற்போது குறைந்தபட்சம் ஊதியம் 250 ரூபாய் என்று இருப்பதை இனிமேல் அடிப்படைத் தன்மை யிலே ஒரு ஐந்தாண்டு காலம் பணியாற்றியிருந்தால் 300 ரூபாய் என்று ஆரம்பித்து, அவர்களுடைய இறுதி ஒய்வூதியம் அதிகப் பட்ச ஒய்வூதியம் 500 ரூபாய் என்று இருப்பதை 600 ரூபாயாக உயர்த்தித்தரலாம் என்று வைத்திருக்கிறோம். மத்திய அரசிலே இன்னும் 500 ரூபாய் ஆகத்தான் வைத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00).

ஒரே ஒரு மாநிலம்தான் 600-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் 500 ஆகத்தான் வைத்திருக்கிறார்கள். ஒய்வூதியத்தைப் பொறுத்தவரையில் உச்சவரம்பாக 600 என்றும் ஆண்டுக்காண்டு 50, 50 என்று உயர்த்தி 600 வரையில் வந்து நிற்கலாம் என்றும் அவ்வாறு ஆரம்பிப்பதை 300 ஆகஆரம்பித்து அந்த வகையில் 1—7—1985-லிருந்து வழங்கப்படும். தற் போது முன்னாள் உறுப்பினர்களுக்கு மருத்துவப்படியாக 400 ரூபாய் வழங்கப்படுகிறது. 400 ரூபாய் வரையில் பெற்றுக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. அவர்களுடைய மருத்துவச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 500 ஆக உயர்த்தப்பட்டு, சட்டமன்றப் பேரவை, மேலவை நடைபெறும் நாட்களில் அதிகநேரம் பணி யாற்றும் பேரவை அலுவலர்களைப் பொறுத்தவரையில் அவர் களுக்கு வழங்கப்படக்கூடிய அவுட் ஆஃப் பாக்கெட் அலவன்ஸ் என்பது காலையிலிருந்து மாலை 8 மணிவரையில் அவர்கள் பணியாற்றுவதன் காரணத்தால் 5 ரூபாய், 4 ரூபாய், 3 ரூபாய் என்று முறையே இருந்ததை 10 ரூபாய், 8 ரூபாய், 6 ரூபாய் என்று 1—7—1985 அன்று முதல் மாற்றியமைக்கப்படும். அண்டர் செக்கரட்டரி என்பவர்களுக்கு பன்னிரண்டு ரூபாய் தான் நாள் ஒன்றுக்கு அவர்களுக்கு ஓய்வு நேரத்திலே வேலை இருக்குமானால் தரப்படுகிறது.

காவலர்களைப் பொறுத்தவரையில் குறிப்பிட்டார்கள். காவ லர்களுக்கு இப்போது நாட் படியாக 4 ரூபாய் இருக்கின்றது. அது இனிமேல் 6 ரூபாய் ஆக்கப்படும். 5 ரூபாயாக இருப்பது 7½ ரூபாய் ஆக்கப்படும். அவர்கள் துறையிலே பணியாற்று வதற்குப் பதிலாகத்தான் இங்கே வந்து பணியாற்றுகிறார்கள். அடிஷனல் ஒர்க் கிடையாது. இருந்தாலும் கூட காவல் துறை யினருக்கு 7½ ரூபாய் என்றும், 6 ரூபாய் என்றும் ஏற்றியதன் காரணத்தால் அந்த அடிப்படையில் இவர்களுக்கும் 6 ரூபாய் என்றும் 7½ ரூபாய் என்றும் மாற்றியமைக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதை ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடி வுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,63,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 50,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 43—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,22,39,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மரனியக் கோரிகை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 7,90,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 4,10,21,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 15—7—1985 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-04 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்
(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

261. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7–5–1985 ஆம் நாளிட்ட 494 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

262. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7–5–1985 ஆம் நாளிட்ட 495 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது).

263. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையும், 1984–85 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை துணை அறிக்கையும் [1948 ஆம் ஆண்டு மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61 (1) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய ஏடுகள்.

170. கோரிக்கை எண். 8—தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

171. கோரிக்கை எண். 43—கடல் கடந்த நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும் குடிபெயர்ந்தவர்களுக்கும் துயர் தணிப்பும், மறுவாழ்வும் (தமிழ், ஆங்கிலம்).

172. சிறு சேமிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

173. தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).



174. கோரிக்கை எண். 58—பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதலுக்கான முதலீடு பற்றிய துணைக் குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

175. கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1985–86.

176. மறுவாழ்வுத் துறையின் 1985–86 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

177. மீனவத் துறையின் 1985–86 ஆம் ஆண்டிற்கான செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

178. பிற்பட்டோர் நலத்துறையின் 1985-86 ஆம் ஆண்டிற்கான செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

179. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980–81 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் தமிழ்நாடு மின் வாரியம் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நான்காவது அறிக்கை (தமிழ்).

180. 1973–74 ஆம் ஆண்டிற்கான (சிவில்) துறைகள் பற்றிய இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–79) அளித்த எட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை (தமிழ்).

181. தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தின் 1971–72 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான இருபத்தேழாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது அறிக்கை (தமிழ்).

182. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாம் அறிக்கையில் (1980–81) கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை (தமிழ்).

183. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் 1 முதல் 25 வரை) (மூன்றாவது பட்டியல்).

[1985 ஜூலை 12

## இணைப்பு—1

(352......ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1985–86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்—கோரிக்கை எண். 8, கொள்கை விளக்கக்குறிப்பு—தேர்தல்கள்.

''மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்'' என்பதன் கீழ் 1985–86 ஆம் ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ. 50,87,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

215. எ. தேர்தல்கள்—(திட்டத்தில் சேராதது).

| | ரூபாய். |
|---|---|
| (எஎ) தேர்தல் அதிகாரிகள் எஎ சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் | 41,96,000 |
| (எபி) மேலவைத் தொகுதிகள் ... .. | 55,000 |
| (எபி) வாக்காளர் பட்டியலைத்தயாரித்து அச்சிடுதல் : | |
| (எஎ) சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் | 39,000 |
| (எசி) மேலவைத் தொகுதிகள் .. | 2,60,000 |
| (எசி) நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் அவற்றை நடத்துவதற்கானச் செலவுகள் .. | 1,24,000 |
| (எடி) நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆகும் செலவுகள் : | |
| (எஎ) இடைத் தேர்தல்கள் .. .. | 12,000 |
| (எபி) நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல் .. .. .. | 14,000 |
| (எஇ) மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் : | |
| (எஎ) மாநில சட்டமன்றப் பேரவை .. | 15,000 |
| (எபி) சட்டமன்ற மேலவை .. | 3,72,000 |
| மொத்தம் .. | 50,87,000 |



19 ஜூலை 12]

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே
விளக்கமாக்க் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு
செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன :—

எஎ. தேர்தல் அதிகாரிகள் :

எ . சட்டமன்றப்பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் :
மதிப்பீடு ரூ. 41,96,000.

தலைமைச் செயலகத்தில், பொது (தேர்தல்கள்) துறைக்குத்
தலைமை தேர்தல் அதிகாரியும், துணைத் தலைமைத்தேர்தல்
அதிகாரியும் (துணைச் செயலாளர்) பொறுப்பு வகிக்கின்றனர்.
அவர்களுக்கு உதவும் பொருட்டு பிரிவு அலுவலர்கள், உதவிப்
பிரிவு அலுவலர்கள், இன்னும் மற்ற ஊழியர்களும் நிலையான
அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளியூர் பகுதிகளில் எல்லா மாவட்ட (சென்னை நீங்க
லாக) ஆட்சித்தலைவர்கள் அலுவலகங்கள், வட்ட ஆட்சியர்
அலுவலகங்கள், தேர்தல் பதிவு அதிகாரிகளாகப் பொறுப்பு
வகிக்கும் வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள்,
சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் ஆணையர் அலுவல
கங்கள் மற்றும் கோயமுத்தூர், மதுரை மாநகராட்சிகளின் ஆணை
யர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட
பணிகளைக் கவனிப்பதற்கென நிலையான அடிப்படையில் ஓர்
உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப்
பொறுத்தமட்டில், சென்னை மாநகராட்சி ஆணையர் அலு
வலகத்தில், வட்ட ஆட்சியர் ஒருவர், உதவியாளர் இருவர்,
தட்டச்சர் ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், சிற்றெழுத்
தர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகியோர் நிலை
யான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்சமயம்
ஓராண்டு காலத்துக்கு மட்டும் ஒரு துணை ஆட்சியரும் மா
நகராட்சி ஆணையருக்கு உதவியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்
களின் சம்பளச் செலவுகள் தவிர, மாவட்டத் தேர்தல் அதி
காரிகள், தேர்தல் பதிவு அதிகாரிகள், உதவித்தேர்தல் பதிவு
அதிகாரிகள் ஆகியோரின் பயணச்செலவுகளும் இத்தலைப்பின்
கீழ் அடங்கும். அவர்களின் அலுவலகச் செலவுகள் எதிர்பா
ராத செலவினங்கள், தபால், தந்தி, தொலைபேசிக் கட்ட
டணங்கள், தேர்தல் சார்பான சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்
படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின்
கீழ் அடங்கும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள செலவினங்களுக்காக நிதி
ஒதுக்கம் தேவை. எனவே, மேற்குறித்த அளவில் செலவு மதிப்
பீடு செய்யப்பட்டுள்ளது. இச் செலவினங்களின் ஐம்பது விழுக்
காட்டினை மத்திய அரசு பகிர்ந்து கொள்ளுகிறது.

எஎ. தேர்தல் அதிகாரிகள் :

எ.பி. மேலவைத் தொகுதிகள் :
மதிப்பீடு : ரூ. 55,000.

மேலவை தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தி அமைக்கும் பணிக்காக அவ்வப்போது நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் போன்றவை இத் தலைப்பின் கீழ் அடங்கும்.

சென்னை மாவட்டத்திலுள்ள மேலவை தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் சம்பந்தமான பணிகளைக் கவனிக்க, சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் ஓர் உதவியாளர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் சம்பளம், படிகள் முதலியவற்றிற்காகவும் இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது.

எபி : வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் :

எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள்:
மதிப்பீடு : ரூ. 39,000.

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காகத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்கள் சம்பளம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

1985–86 ஆம் நிதியாண்டில் வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் நடைபெறுவது பற்றி எந்த தகவலுமில்லை. எனினும், சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைக் காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு சிற்றெழுத்தர் ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காக மேலே குறித்த அளவில் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது.

இச்செலவினங்களை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன.

எ.பி. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் :

எ.சி. மேலவைத் தொகுதிகள்:
மதிப்பீடு ரூ. 2,60,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை அச்சிடுவதற்கான செலவுகள் மட்டும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். இதற்கான மொத்தச் செலவுகளையும் மாநில அரசே



தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில்
மேற்கொள்ளுகிறது. தமிழ்நாடு சட்டமன்ற தொகுதிகள் இரண்
20–4–1986 ஆம் நாளன்று பட்டதாரிகள் தொகுதிகள் இரண்டிலும் தற்போதுள்ள
டிலும் ஆசிரியர்கள் தொகுதிகள் இரண்டிலும் தற்போதுள்ள காலியிடம்
உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைவதால் காலியிடம்
ஏற்படவுள்ளது. அத்தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்
கள் தயாரிக்கப்படவேண்டும். அவ்வாறு வாக்காளர் பட்டி
யல்கள் தயாரிக்கப்படுங்கால், அடுத்து வரும் நவம்பர் திங்
களின் முதல் நாளை அடிப்படையாகக்கொண்டு வாக்காளர்
பட்டியல்கள் தயாரிக்கும் வேலை நடப்பு நிதியாண்டில் மேற்
கொள்ளப்படும். இவ்வாறு புதிதாகத் தயாரிக்கப்படவிருக்கும்
வாக்காளர் பட்டியல்களை அச்சிடுவதற்காக மேற்குறித்த அள
வில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

எசி. நாடாளுமன்ற மக்கள் அவைக்கும், மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் இவற்றை நடத்துவதற்கான செலவுகள் மதிப்பீடு ரூ. 1,24,000.

நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே
சமயத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது எற்படும் செல
வினங்கள் அனைத்தும் இதன்கீழ் அடங்கும். 1984 ஆம் ஆண்
டில்தான் நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டப் பேரவைக்
கும் ஒரே சமயத்தில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. எனவே
நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்
கும், வரும் 1989 ஆம் ஆண்டில்தான் அடுத்த பொதுத்தேர்தல்கள்
நடைபெறும். ஆனால் மாவட்டங்களில் வாக்குப்பெட்டிகள்
வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை,
அதற்கான காவலாளர்களின் சம்பளம், வாக்குப்பெட்டி
களைப் பராமரிக்கும் செலவுகள். பொதுத் (தேர்தல்) துறை
யில் உள்ள மோட்டார்காரின் பராமரிப்பு, பெட்ரோல் செலவு
கள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்கள்
இதன்கீழ் அடங்கும். மேற்குறித்த செலவினங்களுக்காக இத்
தலைப்பின்கீழ் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்செல
வினங்களில் ஐம்பது சதவீதத்தை மத்திய அரசு பகிர்ந்து
கொள்ளுகிறது.

எடி. நாடாளுமன்றத்தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்:

எஎ. இடைத்தேர்தல்கள் :
மதிப்பீடு ரூ. 12,000.

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடை
பெற்றால், அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்
பின் கீழ் அடங்கும். தற்சமயம், நாடாளுமன்றத் தொகுதிகள்
ஏதும் இம்மாநிலத்தில் காலியாக இல்லை. எனவே, இத்
தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே
செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளுகிறது.

ஏ.டி. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்:
ஏபி. நாடாளுமன்றத் தேர்தல்கள் :
மதிப்பீடு : ரூ. 14,000.

நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசினரால் திருப்பித் தரப்படும்.

1984 டிசம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, 1985–86-ல் நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத்தேர்தல்கள் நடப்பதற்கு வாய்ப்பேதுமில்லை. ஆகவே, இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மத்திய அரசே மேற்கொள்ளுகிறது.

எஇ. மாநிலச் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்:
ஏஏ. மாநிலச் சட்டமன்றப் பேரவை :
மதிப்பீடு : ரூ. 15,000.

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தலோ இடைத்தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் அடங்கும்.

1984 டிசம்பர் திங்களில், நாடாளுமன்றத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே, 1985–86-ல் சட்டமன்றப் பேரவைக்குத் தனியே பொதுத்தேர்தல்கள் நடப்பதற்கு வாய்ப்பேதுமில்லை. மேலும் தற்சமயம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காலியிடம் ஏதுமில்லை. ஆகவே, இத்தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசே மேற்கொள்ளுகிறது.

எஇ. மாநிலச் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்:
ஏபி. சட்டமன்ற மேலவை :
மதிப்பீடு : ரூ. 3,72,000.

மேலவைத் தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படுகின்றன.



2. மாநிலச் சட்டமன்ற மேலவை கலைக்கப்படுவதில்லை. ஆனால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் 172 (2) வது பிரிவின்படி அவையின் உறுப்பினர்களில் மூன்றில் ஒருபங்கினர் இரண்டாண்டிற்கு ஒரு முறை பதவி ஓய்வு பெறுவர். உள்ளாட்சித் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய 21 இடங்கள் சட்டமன்ற மேலவையில் தற்பொழுது காலியாக உள்ளன. உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடந்து முடிந்தவுடனேயே மேற்படி தொகுதிகளிலிருந்து சட்டமன்ற மேலவைக்குத் தேர்தல் நடத்தப்படும். தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 20–4–1986 ஆம் நாளன்று பட்டதாரிகள் தொகுதிகள் இரண்டிலும், ஆசிரியர்கள் தொகுதி இரண்டிலும் தற்போதுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைவதால் காலியிடம் ஏற்படவுள்ளது. இக்காலியிடங்களை நிரப்புவதற்கான தேர்தல்கள் 1986–87 ஆம் நிதியாண்டின் துவக்கத்தில் (ஏப்ரல் திங்களில்) நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான தற்காலிகப் பணியாளர்கள் 1986 ஆம் ஆண்டின் துவக்கத்திலேயே நியமிக்கப்பட்டு வேலைகள் துவங்கிவிடும். எனவே, அவ்வேலைகளுக்கான செலவுகளுக்காக மேற்சொன்ன அளவில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசே இதன் மொத்தச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளுகிறது.

## இணைப்பு II.

(..76ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க).

### கொள்கை விளக்கக் குறிப்பு.

1985–86-ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம் கோரிக்கை எண் 43 பல்வகை.—கடல் கடந்த நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும், குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும், மறுவாழ்வும்.

பர்மா, இலங்கை, வியட்நாம் ஆகிய மூன்று நாடுகளிலிருந்து இந்திய வம்சா வழியினர் இந்தியாவிற்கு திரும்பி வந்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவும், இலங்கையும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து வருகின்றனர். பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து தொடர்ச்சியாக குடும்பங்கள் வருவதில்லை. குறைந்த அளவில் அவ்வப்போது வருகின்றனர். அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தேசிய பொறுப்பாக இருப்பதால், கடன்கள், மானியங்கள் என்ற முறையில் அதற்காகும் அனைத்துச் செலவுகளையும், மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. மத்திய அரசின் சார்பாக மாநில அரசு அதனைச் செயல் படுத்தும் ஒரு அமைப்பாகவே உள்ளது. மறு

வாழ்வுத் துறை இயக்குநர், இந்தியாவிற்கு திரும்புபவர்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதோடு, இந்தியாவிற்குத் திரும்புபவர்களுக்காகத் தயாரிக்கப்படும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார். இப்பணிகளைக் கவனிக்க மறு வாழ்வுத் துறையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் உள்ளனர் :—

| | ஏ பிரிவு. | பி பிரிவு. | சி பிரிவு. | டி பிரிவு. |
|---|---|---|---|---|
| 1 தலைமையக அலுவலர்கள். | 3 | 4 | 55 | 19 |
| 2 மாவட்ட அலுவலர்கள் | 2 | 27 | 144 | 49 |
| | 5 | 31 | 199 | 68 |

<u>பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு திரும்புவோர்</u> :

பர்மா தன் வணிகத்தை நாட்டுடமை ஆக்கியது. அயல் நாட்டினர்கள் மீது சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது. பர்மா அரசின் இத்தகைய கொள்கையினைத் தொடர்ந்து இந்திய மக்களின் வழி வந்தோர் அதிக அளவில் இந்தியாவிற்கு 1–6–1963 முதல் திரும்பி வந்தனர். 31–1–1985 வரை தமிழ், பீகாரி, தெலுங்கு மொழியினத்தவர்கள் சுமார் 2,07,693 பேர்கள், கப்பல் விமானம் மூலமாக பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ளனர். இவர்களுள் தமிழினத்தவர்களான 1,44,200 பேர்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளனர். 43,444 குடும்பங்களுக்கு தொடக்க மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. 1974-ஆம் ஆண்டுக்குப் பிறகு கப்பல் வழியாக இந்தியாவிற்கு எவரும் வரவில்லை. 1974-ஆம் ஆண்டிற்குப் பிறகு 266 குடும்பங்களைச் சேர்ந்த 827 பேர்கள் விமானம் மூலம் கல்கத்தா வழியாக 31–1–1985 முடிய வந்துள்ளனர்.

<u>ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு திரும்பியவர்கள் :</u>

ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வந்த இந்திய மக்களின் வழி வந்தவர்களில் நாடற்றவர்கள் என்று கூறப்படுகின்ற 9.75 இலட்சம் நபர்களின் எதிர்கால வாழ்விடம் பற்றிய பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமருக்கும், ஸ்ரீலங்கா பிரதமருக்கும் இடையே 1964-ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதி ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதன்படி இந்திய அரசு, மேற்கூறிய மக்களில் 5.25 இலட்சம் நபர்களையும் அவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகளையும் ஏற்றுக் கொண்டு, குடியுரிமை அளிக்க ஒப்புக் கொண்டது. ஸ்ரீலங்கா அரசு மேற்கூறிய மக்களில் 3 இலட்சம் நபர்களையும் அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளையும் ஏற்றுக் கொண்டு குடியுரிமை வழங்க ஒப்புக்கொண்டது. 1964-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வொப்பந்தம் சாஸ்திரி



சிரிமாவோ ஒப்பந்தம் என்றழைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி, அன்று நாடற்றவர்களாய் எஞ்சியிருந்த 1.5 இலட்சம் நபர்களின் எதிர்கால வாழ்விடம் பின்னர் ஒரு நாளில் முடிவு செய்யப்படவேண்டும் எனவும் வகை செய்யப்பட்டிருந்தது. 1974-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதி பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும், ஸ்ரீலங்காப் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டார நாயகாவும் எஞ்சியுள்ள நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்குவது பற்றிய இரண்டாவது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அதன்படி, குடியுரிமை வழங்குவது பற்றி பின்னால் முடிவு செய்வதாக இருந்த 1.5 இலட்சம் பேர்களின் ஒரு பாதிப் பேருக்கு இந்தியாவும் மறு பாதிப் பேருக்கு ஸ்ரீலங்காவும் குடியுரிமை வழங்குவதென ஒப்புக்கொண்டு வகை செய்யப்பட்டது. அதாவது, இந்தியா 75,000 பேருக்கும் ஸ்ரீலங்கா 75,000 பேருக்கும் குடியுரிமை வழங்குவது என ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஆண்டுதோறும் 35,000 பேரை ஸ்ரீலங்காவிலிருந்து தாயகத்திற்கு (இந்தியாவுக்கு) திருப்பி அனுப்புவதென ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. திருப்பியனுப்பப்படுபவர்களை விரைவாகத் திருப்பியனுப்பி வைக்கும் பொருட்டு அந்த எண்ணிக்கையை ஆண்டுதோறும் 10 சதவீதம் படிப்படியாக உயர்த்துவதென்றும் இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தத்தின்படி அவர்களை தாயகத்திற்குத் திருப்பியனுப்பும் பணி 1981-இல் முடிவுற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 30–10–1981 அன்று ஒப்பந்தக் காலம் முடிவுற்றது.

இவ்வாறாகக் கணக்கிடப்பட்டவர்கள் மொத்தம் ஆறு இலட்சம் பேர் (அதாவது, இரண்டு ஒப்பந்தங்களிலும் கணக்கிடப்பட்டவர்கள்) ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு திருப்பியனுப்பப்படவுள்ளனர். ஆனால், இந்த ஆறு இலட்சம் பேரும், அவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகளும், சேர்ந்த தொகையில் தாயகம் திரும்ப வகை செய்துள்ளதைக் கணக்கில் கொண்டு பார்த்தால், மொத்தத்தில் தாயகம் திரும்பிவர இருப்பவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 8.00 இலட்சம் ஆக இருக்கலாம். 1984 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 4,59,327 பேர்கள் அடங்கிய 1,15,400 குடும்பங்கள் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்புகின்றவர்கள் தங்களுக்குச் சொந்தமான உடமைகள், சொந்த நகைகள், ஆகியவற்றை ரூ. 16,000 வரைக்கும், வர்த்தக இருப்பினை ரூ.16,000 வரைக்கும் சுங்கவரிக் கட்டாமல் தங்களுடன் கொண்டு வர அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள், இராமேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்தவுடன் முதலில் தேநீரும். பின்பு ஒரு வேளைச் சாப்பாடும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இராமேஸ்வரம் துறைமுகத்தில் மறு வாழ்வுத் துறைப் பணியாளர்கள் இவர்களைக் குறித்த புள்ளி விவரக் கணக்குகளை எடுக்கின்றனர்.

சுங்கப் பரிசோதனை முடிந்த பின்னர் ரூ. 10,000-க்குக் குறைவாகக் கொண்டு வந்திருந்த குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்லலாம். அங்கிருந்து அவர்கள் பல்வேறு திட்டங்களில் சேருவதற்கு அனுப்பி வைக்கப்படுவர். அல்லது கண்டி உதவித் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர், அவர்களுடைய குடும்ப அட்டைகளில் பரிந்துரை செய்துள்ளவாறு வணிகக் கடன்கள் அங்கு அவர்களுக்கு வழங்கப்படும். ரூ. 5,000-க்குக் குறைவாகக் கொண்டு வருகின்ற குடும்பங்களுக்கு அவர்கள் இடைத்தங்கல் முகாமில் சேர்க்கப்பட்டதும் அதிக பட்சம் மூன்று மாத காலத்திற்கு குடும்பத்தின் அளவிற் கேற்ப மாதம் ஒன்றுக்கு ரூ. 110 முதல் ரூ. 357.50 வரை ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், குறைந்த விலையில், அதாவது ஒரு கிலோ அரிசி 57 காசு வீதம் வரையறுக்கப்பட்ட அளவுக்கு அரிசி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கே அவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. மத்திய அரசு இந்தியாவிற்குத் திரும்புவோருக்கு உதவியளிக்க வகுத்துள்ள திட்ட விதிகளின் கீழ் தாயகம் திரும்புவோர்களில் ரூ. 10,000-க்குக் குறைவாகச் சொத்துக்களைக் கொண்டு வருகின்றவர்களுக்கு நிலையான மறு வாழ்வு உதவி அளிக்கப்பட வேண்டும்.

பொதுவாக தாயகம் திரும்பி வருவோர்களில் 90 சதவிகித குடும்பத்தினர் அரசின் உதவியைப் பெறும் தகுதி உடையவராக உள்ளனர். 31–12–1984 வரை மொத்தம் 1,15,400 குடும்பங்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ளன. இவற்றுள் 95, 213 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் மட்டும் 90,221 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. 4,992 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏனைய மாநிலங்களில் அதாவது கேரளம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், அந்தமான் நிகோபார் தீவுகள், ஆகியவற்றில் குடியமர்த்தப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

விவசாய நிலக் காலனித் திட்டம்.

பர்மா மற்றும் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்களில் விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்களும், அக் குடும்பத்தில் இத் தொழிலில் ஈடுபடத் தகுதியுள்ள இரு நபர்கள் உள்ள குடும்பங்களும், அதே சமயம் சொந்த நிலமற்றவர்களாக உள்ள குடும்பங்கள் மட்டும் நிலக்காலனித் திட்டத்தில் அமர்த்தப்படுகின்றனர். உயர்ந்த பட்சம் மூன்று ஏக்கர் வரையில் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. இந்த நிலம் மாநில அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் நிலங்களைத் தாயகம் திரும்பியோர் தக்க முறையில் விவசாயம் செய்து அதற்காக மத்திய அரசால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விவசாயக் கடனாக ரூ. 6,850-ம் வழங்கப்படுகிறது. இக் கடன் தொகை, நிலத்தை சீர்படுத்தவும், பாசனக் கிணறு வெட்டவும், உழவு மாடுகள் வாங்கவும், விவசாயக் கருவிகள் வாங்கவும் வழங்கப்படுகிறது.





இவர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்து, அறுவடை செய்து, மகசூல் கிடைக்கும் காலம் வரைக்கும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் பராமரிப்புப் படி மாதம் ஒன்றுக்கு ரூ. 40 முதல் ரூ. 150 வரையில் குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது. இத்தொகை 21 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. முதல் 9 மாதங்களுக்கு வழங்கப்படும் தொகை முழு மானியமாகவும்; மீதி ஒரு வருட காலத்திற்குள் வழங்கப்படும் தொகையில் பாதி மானியமாகவும் மீதி பாதி கடனாகவும் வழங்கப்படுகிறது.

இதைத் தவிர இத்திட்டத்தில் அமர்த்தப்படும் எல்லோருக்கும் வீடு கட்ட கடனும், இவர்கள் இதர தொழில் செய்ய வண்டி மாடும், கோழிப் பண்ணை அமைக்கவும், காய்கறித் தோட்டப் பயிர் செய்யவும் கடன் வழங்கப்படுகின்றது. இக்கடன் தொகை, எட்டு ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தக் கூடியதாகும். கடன் பெற்ற நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவு பெற்று அடுத்த நாளில் முதல் சமத் தவணைத் தொகை செலுத்த வேண்டும்.

இம்மாதிரியான திட்டம் ஒன்றை 1982–83 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கூக்கல் கிராமத்தில் 360 ஏக்கர் நிலப்பரப்பில், ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் 180 குடும்பங்களை இத்திட்டத்தில் குடியமர்த்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 44.58 இலட்சம் ஆகும். இதுவரையில் இத்திட்டத்தில் 174 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீதி 6 குடும்பங்கள் 1985–86-ஆம் ஆண்டில் குடியமர்த்தப்படுவர்.

சொந்தமாக விவசாய நிலம் வாங்கும் திட்டம்.

(1) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்கள் அவர்களின் சொத்துக்கள் ரூ. 5,000-க்கு மேற்படாத வகையில் இருந்தால் அவர்கள் விரும்பியபடி அவர்களுக்கும், பட்டா நிலங்களை கிரையம் பெறவும், இதன் அளவு மூன்று ஏக்கர் மேற்படாமலும், ஏக்கர் 1-க்கு ரூ. 2,000 வரை மதிப்புள்ள நிலங்களை கிரையம் பெறவும் கடன் வழங்கப்பட்டு குடியமர்த்தப்படுகின்றனர். இவர்ளுக்கும் விவசாயம் செய்வதற்குரிய பல்வகைக் கடன்களும் ழங்கப்படுவதுடன், பராமரிப்புப்படியும் இதர தொழில் செய்யம் நிலக் காலனித் திட்டத்தில் அமர்த்தப்படும் குடும்பங்களுக்கு ங் ப்படும் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படுகின்றன. ச்லுகைகள் எல்லாமே, இவர்கள் கொண்டுவரும் சொத்தின் திருப்பு ரூ. 5,000-க்கு மேற்படாத வகையில் இருந்தால் ட்றமே வழங்கப்படுகின்றன. இவர்களுக்கும் வீடு கட்ட கடன் பூ த் தகுதியுண்டு.

(2) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் சொத்து ரூ. 5,000-க்கு மேற்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் மூன்று ஏக்கருக்குக் குறைவாக சொந்தமாக நிலம் வைத்திருந்தாலும் அவர்களுக்கு மொத்தத்தில் 3.00 ஏக்கர் நிலம் உடைமை பெற, தனிப்பட்டவர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு நில மதிப்பீடு ரூ. 2,000 வீதம் கிரையம் பெற்றுக் கொள்ளவும், விவசாயக் கடன் வழங்கப்படுகிறது. இதுபோல் அமர்த்தப்படும் குடும்பங்களுக்கும் மேலே தெரிவித்தபடி விவசாயம் செய்யவும் கடன் பெற வசதி உண்டு.

## தேயிலைத் தோட்டங்களில் குடியமர்த்தும் திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களை தேயிலை தோட்டப் பயிர்த் தொழிலில் குடியமர்த்த கீழ்க்காணும் மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

| திட்ட எண். | பரப்பளவு. | குடியேற்றப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) ஏக்கர் | (3) |
| திட்டம் ஒன்று .. | .. 3,750 | 1,875 |
| திட்டம் இரண்டு | .. 1,500 | 750 |
| திட்டம் மூன்று | .. 2,500 | 1,250 |

திட்டம் ஒன்று 1982–83-ஆம் ஆண்டுடன் செயல்படுத்தி முடிக்கப் பெற்றுள்ளது.

மைய அரசு ஆலோசனையின் பேரில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைக்கான தேயிலைத் தோட்ட அமைப்புக்கு திருத்திய திட்ட அறிக்கை தயார் செய்து, தேசிய ஊரக விவசாய வளர்ச்சி வங்கி மூலமாக, மையஅரசுக்கு அனுப்பியுள்ளது. இந்தத் திருத்திய அறிக்கையின் படி, இரண்டாவது நிலைத் திட்டத்தில் 570 குடும்பங்களும் மூன்றாவது நிலைத்திட்டத்தில் 380 குடும்பங்களும் குடியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே திருத்தியத் திட்ட அறிக்கை வெளியிடப்படுமுன் 450 குடும்பங்கள் இரண்டாவது நிலைத் திட்டத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர். எனவே, மீதமுள்ள 120 குடும்பங்கள் இரண்டாவது நிலைத் திட்டத்திலும் , 380 குடும்பங்கள் மூன்றாம் நிலைத் திட்டத்திலும் ஆக மொத்தம் 500 குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளன. 1984–85-ஆம் ஆண்டு முடிவிற்குள் 250 குடும்பங்களை குடியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 250 குடும்பங்கள் 1985–86-ஆம் ஆண்டில் குடியமர்த்தப்படும்.



## கன்னியாகுமரி ரப்பர் தோட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 800 ஏக்கர் பரப்பளவில் இரப்பர் தோட்டப் பயிர் செய்யும் திட்டம் செயல் முறையில் இருக்கிறது. இந்த திட்டத்தில் மொத்தம் 285 தாயகம் திரும்பியோர் குடியேற்றப்பட்டுள்ளனர்.

## வீட்டு வசதிக் கடன் வழங்கும் திட்டம் :

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்குக்காக வீட்டு வசதிக் கடன் உச்சவரம்பு ரூ. 3,000-லிருந்து ரூபாய் 4,000 ஆக கிராமப் புறத்திலும், ரூ. 6,000-லிருந்து ரூ. 8,000 ஆக நகர்ப் புறத்திலும் 7–7–1982 முதல் உயர்த்தி வழங்க மத்திய அரசு உத்திரவிட்டுள்ளது.

## சுயவேலை வாய்ப்புத் திட்டம் :

(1) சுமார் 1,000 தாயகம் திரும்பியோருக்கு வணிகக் கடனாக ரூ. 5,000-மும் வியாபாரத்திற்கு கட்டிடம் கட்ட ரூ. 1,000-மும் மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் வழங்கி தேசிய நூற்பாலை நிறுவனத்தின் விற்பனையாளர்களாக அமர்த்தப்படும் ஒரு புதிய வேலைவாய்ப்புத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 109 நபர்கள் தேசிய நூற்பாலை நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்க, தாயகம் திரும்புவோர் நடத்தும் தேசிய நூற்பாலைக் கடைகளில் விலை கட்டுப்பாட்டின்கீழ் வழங்கப்படும் துணிகளையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

(2) தாயகம் திரும்பியோருக்கு அளிக்கப்படும் வணிகக் கடன் தொகை ரூ. 5,000-த்தைக் கொண்டு-சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடன் மேலும் புதிய திட்டங்கள் 1979–80.இல் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டங்களில் 31-12-1984 வரையில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் விபரம் பின்வருமாறு:—

சேலம் மாவட்டத்தில் சிக்கம்பட்டி பால்பண்ணைத் திட்டத்தில் 44 குடும்பங்களும், கைலாசம்பாளையம் பால்பண்ணைத் திட்டத்தில் 52 குடும்பங்களும். தம்மநாயக்கன்பட்டி பால் பண்ணைத் திட்டத்தில் 44 குடும்பங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் குன்றக்குடி பால்பண்ணைத் திட்டத்தில் 20 குடும்பங்களும், சாத்தூர் பால்பண்ணைத் திட்டத்தில் 73 குடும்பங்களும்' புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூர் பால்பண்ணைத் திட்டத்தில் 25 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சென்னை, விசை சைக்கிள் ரிக்ஷா திட்டத்தில் 31-12-1984 வரையில் 35 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

[1985 ஜூலை 12

தமிழ்நாட்டின் பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களின் கீழ் குடியமர்த்தப்பட்டுள்ள 90,221 குடும்பங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| திட்டங்கள். | குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| நீலகிரி தேயிலை மலைத் தோட்டம் .. .. | 2,326 |
| கன்னியாகுமரி ரப்பர் மலைத்தோட்டம் .. .. | 285 |
| ஆனைமலை சின்கோனா மலைத் தோட்டம் .. | 125 |
| அரசு பண்ணைக் கழகம் .. .. .. .. | 791 |
| நிலக்குடியேற்றத் திட்டம் .. .. .. | 2,161 |
| கூட்டுறவு நூற்பாலை .. .. .. .. | 3,477 |
| வியாபாரக் கடன் .. .. .. .. | 75,305 |
| தாயகம் திரும்பியோர் வங்கியின் திட்டம் .. | 4,900 |
| விவசாய நிலம் வாங்கக் கடன் .. | 149 |
| சுயவேலை வாய்ப்பு (தேசிய நூற்பாலை நிறுவனம் மற்றும் பால்பண்ணை). | 526 |
| கூக்கல் விவசாயத் திட்டம் .. .. .. | 176 |
| மொத்தம் | 90,221 |

**வியட்நாமிலிருந்து இந்தியாவிற்கு திரும்பியவர்கள்:**

பர்மாவிலிருந்தும், ஸ்ரீலங்காவிலிருந்தும் இந்தியாவிற்கு திரும்வோர் தவிர, வியட்நாமிலிருந்து இந்திய மக்களின் வழி வந்தவர்களும் அவர்களுடைய உறவினர்களுமான 2,055 பேர்களடங்கிய 501 குடும்பங்கள் 1975 ஆம் ஆண்டிலிருந்து வந்துள்ளன. இவற்றுள் 316 குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடும்பங்கள் ஏனைய மாநிலங்களில் பெரும்பாலும் மத்திய அரசு நேரடி ஆட்சிக்குட்பட்ட பாண்டிச்சேரியில் குடியமர்த்தப்பட்டுள்ளன. 1975 ஆம் ஆண்டு ஜூலை முதற்கொண்டு வியட்நாமிலிருந்து இந்தியாவிற்கு திரும்புகிறவர்கள்



பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு திரும்பகிறவர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற வியாபார, வீட்டு வசதி ஆகியவற்றிற்கான நிவாரண உதவி கடன்கள் பெறத்தகுதியுடையவர்கள் ஆவர்.

1985-86 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

வருகிற ஆண்டில் ஸ்ரீலங்காவிருருந்து தாயகம் திரும்புவோரை குடியமர்த்த 48-க்கும் மேற்பட்ட பல்வகைப்பட்ட புதிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்தப் புதிய திட்டங்களில மட்டுமே 4,205-க்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் திட்டங்கள் :

1. பிளாஸ்டர் ஆப் பாரிஸ் தயாரிக்கும் கூட்டுறவு தொழிற் சங்கம், குன்றக்குடி.

2. பெரியார் முந்திரி பருப்பு கூட்டுறவு தொழிற் சங்கம் (விரிவு), குன்றக்குடி.

3. பாலி ஒவன் சாக்குப் பைகள் கூட்டுறவு தொழிற் சங்கம் மண்டபம்.

4. பாரத் குளோரைடு கூட்டுறவு தொழிற் சங்கம் (விரிவு), குன்றக்குடி.

5. நாராயண அம்மாள்புரம் பெரிய தொழில் திட்டம், திருநெல்வேலி.

6. சாத்தூரில் ஏற்கனவே உள்ள தீப்பெட்டிதொழிற்சாலை மற்றும் பால் பண்ணையில் பயிற்சி.

7. கோவில்பட்டியில் ஏற்கனவே உள்ள தீப்பெட்டி தொழிற்சாலை மற்றும் பால்தண்ணையில் பயிற்சி.

நிலக்காலனித் திட்டங்கள் :

8. பூம்பாறை நிலக்குடியேற்ற திட்டம், கொடைக்கானல் வட்டம், மதுரை மாவட்டம்.

பால்பண்ணைத் திட்டங்கள் :

9. கீழ வீரராகவபுரம் பால்பண்ணைத் திட்டம்.
10. குலவாணிகபுரம் பால்பண்ணைத் திட்டம்.
11. நாரணம்மாள்புரம் பால்பண்ணைத் திட்டம்.
12. சத்திரப்பட்டிப் பால்பண்ணைத் திட்டம்.
13. சிங்காரப்பாளையம் பால்பண்ணைத் திட்டம்,
14. வீராஸ்ரீம், அவத்திப்பாளையம் பால்பண்ணைத் திட்டம்
15. மகாலிங்கப்பன் நாயக்கன்பட்டி பால்பண்ணைத் திட்

டம்.

16. ஆலங்குடி பால்பண்ணைத் திட்டம்.
17. வலயமாதேவி பால்பண்ணைத் திட்டம்.
18. தசவிளக்கு பால்பண்ணைத் திட்டம்.
19. ஆண்டிப்பட்டி பால்பண்ணைத் திட்டம்.
20. வலங்கைமான் பால்பண்ணைத் திட்டம்.
21. சத்திரக்குடி பால்பண்ணைத் திட்டம்.
22. திருப்பாலைக்குடி பால்பண்ணைத் திட்டம்.
23. இராமநாதபுரம் பால்பண்ணைத் திட்டம்.

நூற்பாலைகள் :

24. பருத்தி (கழிவு) ஆலை, கரூர் திருச்சி மாவட்டம்.
25. மெசரியர் கூட்டுஉவு நூற்பாலை, திருநகர், மதுரை.
26. சைசிங் பிளாண்ட், நாசரேத்.
28. மூன்று சைசிங் பிளாண்டுகளுக்கு இடம் தேடுதல்.

விசைத்தறி கூடங்கள் :

28. கிருஷ்ணன் கோவில், காமராசர் மாவட்டம்.
29. கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.
30. பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.
31. கடலாடி, இராமநாதபுரம் மாவட்டம்.
32. சிவகங்கை, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்.
33. மூன்று விசைத்தறி கூடங்கள், மதுரை.

பட்டுப்பூச்சி வளர்த்தல் :

34. வடக்கு வள்ளியூர் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம்.
35. ஒசூர் பட்டுப்பூச்சி வளக்ப்புத் திட்டம்.
36. கொல்லிமலை பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம்.
37. பத்திரிக்குடி பட்டுப்பூச்சு வளர்ப்புத் திட்டம்.
38. மானகிரி-சுகந்தல் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம்.



39. பழனிமலை அடிவார பாச்சலூர் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம்.

40. குன்றக்குடி பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம்.

41. பைனாப்பிள் சாகுபடி திட்டம், கொல்லிமலை.

42. இராமநாதபுரம்.

43. மண்டபம் ரோடு, பட்டினக்குளம்.

இதர திட்டங்கள் :

44. எழுதுபொருள் தயாரிக்கும் திட்டம், இராமநாதபுரம்.

45. அம்பர்சர்க்கா அலகு, திருச்செங்கோடு.

46. நேபாலி தறி, மேலப்பட்டி.

47. செம்மறி ஆடு வளர்ப்பு பண்ணை, மேச்சேரி.

48. விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா திட்டம், சேலம், கரூர், வடாற்காடு, மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், பரமக்குடி, இராமேஸ்வரம், கோயம்புத்தூர்.

49. பதனீர் பெடரேஷன், இராமநாதபுரம் மாவட்டம், வேலை வாய்ப்புக்கு பயிற்சியளிக்கும் நிலையம் மானாமதுரையில் ஏற்படுத்துதல்.

50. கிராமப்புற துணி நிலையம்—ஸ்ரீவில்லிபுத்தூர் நூற்பாலையில் நேபால் வகை தறி மற்றும் சைக்கிள் பிளாண்ட்ஸ் அமைத்தல்.

51. விசை பொருத்திய சைக்கிள்ரிக்ஷா கூட்டுறவு தொழில் சங்கம், திண்டுக்கல்.

52. உப்பு தயாரித்தல், வீப்பாலடி, விளாத்திகுளம் தாலூக்கா (வைப்பூர் ஆற்றுப்படுகை).

53. பாண்டேஜ் துணி தயாரித்தல், சத்திரப்பட்டி கைத்தறி துணிச் சங்கம், ராஜபாளையம் தாலூக்கா, இராமநாதபுரம் மாவட்டம்.

54. மல்லிகை சாகுபடி தோட்டக்கலை சங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், மண்டபம், தங்கச்சிமடம் (தோட்டக்கலைத் துறையினரால் நிர்வகித்தல்).

55. மல்லி சாகுபடியும், மல்லிகை சேகரித்தலும் தோட்டக்கலை சங்கம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்கள்.

56. மீன்பிடிக்கும் தொழிற் பயிற்சி, திருப்பாலைக்குடி, தேவிப்பட்டினம், கீழக்கரை.

## செங்கற்பட்டு மாவட்டம் செங்கற்பட்டு தாலுக்கா தாழம்பூர் கிராமத்தில் நிறைவேற்றப்பட இருக்கும் ரிச்சஸ் திட்டம்

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களை குடியமர்த்தும் பொருட்டு, செங்கற்பட்டு மாவட்டம், தாழம்பூர் மற்றும் பொன்மார் கிராமங்களில் காலியாக இருக்கும் சுமார் 150 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களை சென்னை தொழில் நுட்பக் கல்லூரியினரால் நாராயணபுரத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கிராம வளர்ச்சி திட்ட அடிப்படையில், மைய அரசு நிதியுதவியுடன் உபயோகப்படுத்திக் கொள்ளப்படும்.

சென்னை, கிண்டியிலுள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவன இயக்குநர், பலதொழில்அதிபர்களுடன் கலந்துஆலோசித்து இதற்கு ஒரு திட்டம் தயாரித்து அதற்கு 'ரிச்சஸ்' என்று பெயரிட்டுள்ளார். அத்துடன் திட்டத்தின் முதல் ஆண்டான 1983–84 ஆண்டிற்கான 100 தாயகம்திரும்பிய குடும்பங்களை குடியமர்த்த முதல் ஆண்டிற்காக ரூ. 6 இலட்சம் செலவு பிடிக்கும் ஒரு திட்ட அறிக்கையும் அனுப்பியுள்ளார்.

மற்ற நடைமுறை வழிகள் முடிவு செய்யப்படுவதை எதிர்பார்த்து, இந்த நிலங்களில் பிரவேசித்து திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய இந்திய தொழில் நுட்ப நிறுவன இயக்குநருக்கு அனுமதி அளித்து மாநில அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. நிலங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தில் பலவகைப்பட்ட தொழில்துறை மற்றும் விவசாயம் சம்பந்தப்பட்ட மையங்கள் நிறுவப்பட்டு அவைகளில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்குப் பயிற்சியும் வேலை வாய்ப்பும் அளித்து நிரந்தரமாகக் குடியமர்த்தப்படுவர். நல்ல ''லே அவுட்'' அடிப்படையில் எல்லா அடிப்படை வசதிகளும் கொண்ட ஒரு நவீன வீட்டு குடியமைப்புத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

மைய அரசின் ஒப்புதல் பெற்றுக்கொண்டு தமிழக அரசு தனது ஆணை (பல்வகை) எண். 1419, வருவாய்த்துறை, நாள் 21–8–1984 இல் இந்தத் திட்டம் நிறைவேற தேவையான நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் அந்நிலையில் திட்டத்தை எடுத்து நடத்த வேண்டிய சென்னை தொழில்நுட்பக் கழகம் திட்டத்தை ஆரம்பித்து நடத்த தயக்கம் தெரிவித்து, மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே திட்டம் முடங்கியுள்ளது. இதன் மேல் எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கைகள் குறித்து ஆணைகள் கேட்டு மைய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

## கனரக வண்டி மெகானிக் ஓட்டுநர் பயிற்சி நிலையம் கும்மிடிப்பூண்டி



மத்திய பிரதேசத்தில் மானாவில் செயல்பட்டு வந்த கனரக வண்டிகள் மெகானிக், ஓட்டுநர் பயிற்சி நிலையம், கும்மிடிப் பூண்டி, இடைத்தாங்கல் முகாம் பகுதிக்கு 1978-ல் மாற்றப் பட்டது.

இந்தியாவிற்குத் திரும்பியவர்களில் முதல் தொகுதிக்கு 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டிலிருந்து பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிலையம் இதற்கு முன்பு மத்திய அரசு மறுவாழ்வுத் துறையின் கீழ் இயங்கி வந்தது. தாயகம் திரும்புவோரில் 15 மாத காலத்தில் 250 நபர்களுக்காவது ஓட்டுநர் (கனரக வண்டியில்) பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த நிலையம் மாநில அரசுக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளது. 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி முதல் இந்நிலையம் தமிழக சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் மேற்பார்வைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கையின் கண்டியிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனரிடம் விருப்பம் தெரிவித்துள்ளதைப் பொறுத்து இக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. விருப்பமுள்ள தகுதி வாய்ந்த குடும்பத் தலைவர் ஒவ்வொருவருக்கும் 32 வாரங்களுக்கு கனரக வண்டி மெகானிக், ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் மாநில போக்குவரத்து கழகங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவர். சென்னையிலுள்ள தாயகம் திரும்புவோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி மேற்படி பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதி வசதி தந்து உதவும். ஒவ்வொரு தாயகம் திரும்பிய குடும்பத்திற்காக ரூ. 25,000 வீதம் நிதி கடனாகக் கொடுத்து உதவும். இந்த பயிற்சிக்குரிய 250 இடங்களை புதியதாக வரும் குடும்பத் தலைவர்களைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில் ஏதேனும் இடங்கள் காலியானால் ஏற்கனவே தாயகம் திரும்பியோரின் குடும்பங்களில் உள்ளவர்களைத் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்படும்.

## பயிற்சித் திட்டம் :—

இது தவிர, சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் எண்ணத்துடன் ஏற்கனவே மறு வாழ்வுத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அக்குடும்பங்கள் மறுவாழ்வு நிதியுதவியை ஏற்கனவே பெற்றிருந்தாலும் பெறாவிட்டாலும், அவர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. இதற்கான மாநில தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 350 இடங்கள் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெறும் நபர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 82.50 வீதம் உதவித் தொகை அளிப்பதுடன், கட்டணம் செலுத்தாமல் விடுதியில் தங்க வசதியும் அளிக்கப்படுகிறது.

இணைப்பு

[1985 ஜூலை 12

தாயகம் திரும்பிய இளைஞர்களுக்கு மீன் பிடித்தல் மற்றும் சொதிகலன் உதவியாளர்கள் சம்பந்தமான பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இது தவிர 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இந்தியாவிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இதுவரை கடல் வழியாகவும், விமானம் மூலமாகவும் இலங்கையிலிருந்து 87,268 அகதிகள் தமிழகம் வந்துள்ளனர். இவர்களில் சிலர் இலங்கைக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். வசதி படைத்தவர் கள் தங்களது நண்பர்கள், உறவினர்களுடன் சேர்ந்து வசித்து வருகின்றனர். எந்த வித உதவியும் போக்கிடமும் இல்லாமல் நிர்க்கதியாக இருக்கும் மீதம் உள்ள 17,491 அகதிகள் இவர்களுக் கென்று அமைக்கப்பட்ட மண்டபம் முகாமிலும், திருச்சிக் கருகிலுள்ள கொட்டப்பட்டு முகாமிலும் மற்றும் இதர மாவட் டங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களிலும் சேர்க்கப்பட்டு அரசு செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். முகாம்களில் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி அன்று தங்கியுள்ள அகதிகளின் எண்ணிக்கை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| முகாம் உள்ள இடங்கள். | முகாமில் உள்ள நபர்கள். |
|---|---|
| மண்டபம் முகாம் | 7,135 |
| கொட்டப்பட்டு முகாம் | 1,459 |
| தஞ்சாவூர் மாவட்டம் | 816 |
| திருநெல்வேலி மாவட்டம் | 873 |
| சேலம் மாவட்டம் | 633 |
| தென் ஆற்காடு மாவட்டம் | 1,310 |
| மதுரை மாவட்டம் | 940 |
| புதுக்கோட்டை மாவட்டம் | 1,424 |
| செங்கல்பட்டு மாவட்டம் | 435 |
| தர்மபுரி மாவட்டம் | 699 |
| வட ஆற்காடு மாவட்டம் | 540 |
| பெரியார் மாவட்டம் | 598 |
| கோயம்புத்தூர் மாவட்டம் | 626 |
| மொத்தம் | 17,491 |

இதுவரை மத்திய அரசு ரூ. 69.36 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. அகதிகளுக்கு மொத்தம் ஜூலை 1983, முதல் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10-ஆம் தேதி வரை ரூ. 74.21 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.



985 ஜூலை 12]

(76-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

பல்வேறு நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கு கடன் கள், முன் பணங்கள் குறித்த நிதி ஒதுக்கீடுகள் கோரிக்கை 59-ல் சேர்க்கப்பட்டுள்ளன. பல்வேறு நோக்கங்களுக்காக நிதி உதவி அளிப்பதற்குரிய பொதுக் கோட்பாடு பல்வேறு துறைகளுக்கான வருவாய் செலவுக் கோரிக்கைகளை துவைக்கை யில் விளக்கப்பட்டுள்ளது. இம் மானியக் கோரிக்கையில் செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகளை மட்டுமே இக்குறிப்பு எடுத்துக்காட்டுகிறது. பல்வேறு துறைகளும் தத்தம் பணி களைப் பற்றிய முழு விவரத்தையும் அளிக்கும் போது இந்த நிதி ஒதுக்கீடுகளைக் கணக்கில் கொண்டுள்ளன. துறை வாரி யான செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வளர்ச்சித் துறை | 1984—85 வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு. | 1984—85 திருத்த மதிப்பீடு | 1985—86 வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| வேளாண்மை, சிறு பாசனம் மண் வளப் பாதுகாப்பு—பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள். | 834.07 | 481.08 | 478.46 |
| கால்நடை வளர்ப்பு .. | 0.01 | .. | .. |
| மீனளம் .. .. | 26.44 | 27.04 | 6.41 |
| உணவுத்துறை .. | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| கூட்டுறவு .. .. | 615.55 | 2,481.67 | 889.90 |
| தொழில்கள் .. | 481.14 | 2,013.13 | 1,246.16 |
| வீட்டுவசதி .. | 804.31 | 806.97 | 766.67 |
| நகர்ப்பகுதி வளர்ச்சி .. | 1,465.01 | 1,456.11 | 1,263.02 |
| மருத்துவம் .. .. | 0.15 | 0.15 | 0.15 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| பொதுச் சுகாதாரம் துப்புரவு, குடிநீர் வழங்கல். | 2,530.55 | 2,152.54 | 3,615.32 |
| மின்சக்தி .. .. | 19,000.00 | 19,000.00 | 24,000.00 |
| பொதுக்கல்வி .. .. | 32.02 | 37.02 | 32.02 |
| தொழில் நுட்பக் கல்வி .. | 10.20 | 5.40 | 10.27 |
| ஆதி திராவிடர், பழங்குடியினர். ஏனைய பிற்பட்ட வகுப்பினர் நலன். | 71.20 | 71.20 | 73.70 |
| மறுவாழ்வுத் திட்டங்கள் | 473.85 | 456.02 | 375.95 |
| சாலைகளும், பாலங்களும் | 52.25 | 56.00 | 69.75 |
| சாலைப் போக்குவரத்து—சுற்றுலா. | 10.15 | 54.59 | 0.16 |
| அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்கள். | 4,569.38 | 4,908.31 | 4,595.59 |
| ஏனைய கடன்கள் .. | 563.65 | 658.25 | 597.62 |
| மொத்தம் .. | 34,539.93 | 37,665.49 | 41,021.15 |

2. இந்தக் கோரிக்கையின் கீழ், 1985—86 ஆம் ஆண்டிற்காகச் செய்யும் நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி, மின்சார வாரியத்தின் மின் விசைத் திட்டங்களுக்கு அளிக்கும் நிதி உதவியாகும். இந்நோக்கத்திற்காக ரூ. 240.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக 1985—86 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 3,615.31 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கியமான நிதி ஒதுக்கீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



| | 1985–86 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| சென்னை மாநகராட்சி 3 | |
| மழைநீர் வடிகால் திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம். | 234.00 |
| நகராட்சிகள். | |
| வடிகால் திட்டம் .. .. .. .. | 192.00 |
| குடிநீர் வழங்கு திட்டங்கள் .. .. | 980.10 |
| கோயம்புத்தூர் நகராட்சிக்கு சிறுவாணி குடிநீர் வழங்கு திட்டங்கள். | 0.01 |
| தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். | |
| வடிகால் திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள் வழங்கல். | 74.21 |
| குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன்கள் வழங்கல். | 717.69 |
| வீராணம் திட்டம் குறித்த கடனுக்குரிய வட்டி செலுத்தக் கடன்கள். | 37.50 |
| குடிநீர் வழங்கல் திட்டங்கள் .. .. | 564.70 |
| சென்னை பெருநகர் குடிநீர் வழங்கு கழிவுநீரகற்று வாரியம். | |
| கழிவு நீரகற்று திட்டங்கள். .. | 235.99 |

ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம், உலக வங்கித் திட்டம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளும் குடிநீர் வழங்கு திட்டங்கள். 173.00

சென்னை குடிநீர் வழங்கல் செயல் திட்டம் 250.00

உள்ளாட்சி மன்றங்களுக்குக் குடிநீர் வழங்கு திட்டங்களின் செலவில் (33 1/3%) மூன்றில் ஒரு பகுதிச் செலவை குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்று திட்டங்கள் குறித்து தனது கடன் உதவியாகத் தமிழ்நாடு அரசு கொடுப்பதற்கு இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்றில் இரு பகுதித் தொகை (66 2/3%) இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடனுதவியாக, தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியத்தால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. 1982—83 ஆம் ஆண்டிலிருந்து பேரூராட்சிகளின் குடிநீர் வழங்கு திட்டங்களுக்குக் கிடைக்கும் நிதி உதவி, 50 சதவீதம் அரசு மானியமாகவும், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து 50 சதவீதம் கடனுதவியாகவும் கிடைக்கிறது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகையை முதற்கண் மாநில அரசு கொடுத்துவிட்டுப் பின்னர் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலித்துக்கொள்கிறது. 1985–86 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் நகராட்சி குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான ரூ. 136.08 இலட்சம் கடன் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

4. 1985–86 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் கழிவு நீரகற்று திட்டங்களுக்காக 756.21 இலட்சம் ரூபாயும், குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக 2,859.09 இலட்சம் ரூபாயும் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டங்களை தற்போது தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியமும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்று வாரியமும் செயற்படுத்தி வருகின்றது. சென்னைக் குடிநீர் வழங்கு செயல் திட்டத்திற்கான 250.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும்.

5. தொழில் துறையில் கடன் கொடுக்க 1,246.16 இலட்சம் ரூபாய் மொத்த நிதி ஒதுக்கம் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இத் துறையில் முக்கிய நிதி ஒதுக்கீடுகள் பற்றிய விவரம் வருமாறு :—

| | ரூபாய் இலட்சம். |
|---|---|
| தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம், சிப்காட் நிறுவனம். | 575.00 |
| தமிழ்நாடு சிறுதொழில் 'சிட்கோ' மேம்பாட்டு நிறுவனம். | 100.00 |



(தொடக்க நிதி உதவியாக ரூ. 50.00 லட்சம், விற்பனை வரிக்கான வட்டியில்லாக் கடனாக ரூ. 50.00 இலட்சம்).

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் .. 450.00 இலட்சம்

6. வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சிக்காக, 1985–86 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 2,029 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் விடுகள் கட்டுவதற்காக அரசுப் பணியாளர்களுக்கு ரூ. 650 இலட்சம் ரூபாயும், குறைந்த வருமானத் தொகுதியின் வீட்டு வசதித் திட்டத்திற்காக 75 இலட்சம் ரூபாயும் கடனாக வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. அரசுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகை முன்பணங்கள் வழங்க வரவு–செலவுத் திட்டத்தில் 4,595.59 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதி, அதாவது ரூ. 2,500 இலட்சம் அரசுப் பணியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு பணியாளர்களுக்கு வீடுகள் கட்ட முன்பணம் வழங்க 1985–86 வரவு–செலவுத் திட்டத்தில் 980 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர 1985–86 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் காவலருக்கு வீடுகட்டுவதற்காக ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. மானிய உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் வழங்கும் பல்வகை முன்பணங்களுக்காக 416.50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1985–86 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் நகராட்சிப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. பொது விநியோக முறையை நன்முறையில் செயற்படுத்தி வருவதில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் சிறந்த பணியாற்றிவருகிறது. மலிவான விலையில் அரிசி வழங்கப்படுவதால் 1985–86 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகப் பணிக்கு உதவியளிக்கும் பொருட்டு, 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. 1985–86 ஆம் ஆண்டில் மொத்தம் 410.21 கோடி ரூபாய் வரை கடன் வழங்கப்படலாமென்று எதிர்பார்க்கையில் கடந்த ஆண்டுகளில் கொடுத்த கடன் தொகையில் 97.56 கோடி ரூபாய் வசூலாகுமென்றும் மதிப்பிடப்படுகிறது. முக்கிய நிதி ஒதுக்கீடுகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு.

| | 1985–86 வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. வேளாண்மை | |
| மண் வளப் பாதுகாப்பு ... .. | 285.94 |
| 2. பால் பண்ணை. | |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் கடன்கள். | 0.01 |
| 3. தொழில்கள். | |
| தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) | 575.00 |
| தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ). | 100.00 |
| மாவட்ட தொழில் மையங்கள் ... ... | 56.00 |
| தனியார் துறையில் சிறுதொழில் தொடங்குவதற்கு உதவியாகக் கடன்கள். | 15.00 |
| தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ... | 450.00 |
| தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்) | 50.00 |
| 4. கைத்தறி | |
| நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி | 50.00 |
| கைத்தறிகளை நவீனப்படுத்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் .. | 14.00 |
| நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 46.32 |



| | |
|---|---|
| கைத்தறித் துணிகளை வாங்க அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் முன்பணங்கள். | 440.00 |
| 5. கதர். | |
| கடன் அடிப்படையில் கதர்த் துணிகளை வாங்க அரசுப் பணியாளர்களுக்கு முன்பணங்கள். | 150.00 |
| 6. வீட்டு வசதி—நகர் பகுதி வளர்ச்சி: | |
| வீடுகட்ட, அரசுப் பணியாளர்களுக்குக் கடன்கள் | 980.00 |
| தமிழ்நாடு அரசுப்பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டங்கள். | 650.00 |
| மொத்தமாக நில எடுப்பும் நில அபிவிருத்தியும் | 125.00 |
| குடிசை மாற்றுத் திட்டங்கள் .. .. | 35.00 |
| துணை நகரங்கள், புற நகர்கள் ஏற்படுத்த, சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்குக் கடன்கள். | 175.00 |
| கோயம்பேடு அங்காடித் தொகுதி அமைக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்குக் கடன்கள். | 50.00 |
| கிராம வீட்டு வசதிக்காகக் கடன்கள் .. | 275.00 |
| 7. மின் சக்தி: | |
| தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ஏனைய கடன்கள். | 20,000.00 |
| தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழி வகை முன் பணங்கள். | 4,000.00 |
| 8. கல்வி, கலை, பண்பாடு: | |
| தேசிய கடன்—படிப்புதவித் திட்டங்கள் .. | 32.0 |

| | |
|---|---|
| நிதியுதவிபெறும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்குக் கடன்கள். | 4.40 |
| வீடுகட்ட முன்பணம் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்குக் கடன்கள். | 15.00 |
| 9. ஆதி திராவிடர் நலனும், பிற்பட்ட வகுப்பினர் நலனும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலன். | |
| சிறுதொழில் நடத்த வணிகக் கடன்கள் .. | 10.50 |
| தொழில் படிப்பு பயில அளிக்கப்படும் கடன்கள். | 55.75 |
| 10. மறுவாழ்வுத் திட்டங்கள்: | |
| பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர் வீட்டு வசதிக் கடன்கள். | 3.23 |
| ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோர்: | |
| தொழில் கடன்கள் .. .. .. | 147.90 |
| வீட்டு வசதிக் கடன்கள் .. .. | 217.00 |
| 11. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல்—வடிகால் திட்டங்கள்) அல்லாத ஏனைய திட்டங்கள் நகராட்சிகள். | |
| நகராட்சிச் சாலைகள்: .. .. .. | 30.00 |
| சாலைகள் போடுதலும், பாலங்கள் கட்டுதலும் | 22.25 |
| 12. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல்வகைக் கடன்கள்: | |
| கிடங்குகள் கட்ட, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 19.55 |



| | |
|---|---|
| குளிர்பதன இயந்திரங்களை நிறுவ, மாவட்ட வழங்கல், விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள். | 15.75 |
| வேளாண்மைக் கடன் சமன் நிதிக்கு மேலும் நிதி சேர்க்க தமிழ்நாடு மாநில நிலவள வங்கிக்குக் கடன்கள். | 0.01 |
| 13. அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் கடன்கள்: | |
| மோட்டார் வண்டிகள் வாங்கக் கடன்கள் .. | 100.00 |
| ஏனைய வண்டிகள் வாங்கக் கடன்கள் .. | 130.00 |
| பண்டிகை முன்பணங்கள் .. .. | 2,500.00 |
| திருமணக் கடன்கள் .. .. .. | 85.00 |
| கல்லூரிகள்/பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் உயர் கல்வி பயிலக் கடன்கள். | 68.00 |
| வெப்ப (கம்பளி) உடைகளை வாங்கக் கடன்கள். | 40.00 |
| 14. ஏனைய கடன்கள்: | |
| தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கடன்கள். | 0.01 |

சென்னை-600 008.
136423